# தமிழ்நாடு காவல்துறை
# வரலாறு
# அமைப்பு
# நிர்வாகம்
# உள்ளூர் சட்டங்கள்

# Tamil Nadu Police
# History
# Organisation
# Administration
# Local Laws

# 1

# காவலர் கையேடு

## பயிற்சிக்காவலர் புத்தகம்

காவல் பயிற்சிப்பள்ளிகளுக்கு மட்டும்

(தனிச்சுற்றுக்குரியது)

முதற்பதிப்பு - 2009

இரண்டாம் பதிப்பு - 2011

மூன்றாம் பதிப்பு - 2013

நான்காம் பதிப்பு - 2017

(திருத்தப்பட்டது)

காவல் பயிற்சிக் கல்லூரி, அசோக் நகர், சென்னை-83

தமிழ்நாடு

அச்சிட்டோர்:

அரசு மைய அச்சகம், சென்னை-600 079

# AR PAPER-I

**தமிழ்நாடு காவல்துறை வரலாறு – அமைப்பு - நிர்வாகம் - உள்ளூர் சட்டங்கள்**


| வ.எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **I. காவல்துறை வரலாறு** | |
| 1 | a.பழங்கால இந்தியா | 1 |
| | b.ஆங்கிலேயர் வரவு மற்றும் நிர்வாகம் | 4 |
| | c.சுதந்திர இந்தியாவில் தமிழக காவல்துறை வரலாறு | 16 |
| | d.தமிழக காவல்துறை பயிற்சிப்பள்ளிகளின் வரலாறு ( History of Tamilnadu Police Recruits Schools) | 22 |
| | **II. காவல் துறை அமைப்பு** | |
| 1 | மாநிலக் காவல் துறை அமைப்பு – சட்டம், ஒழுங்குப் பிரிவு<br>மாவட்டங்கள், சரகங்கள், மண்டலங்கள், பெருநகரம்/ மாநகரங்கள்- (Districts, Ranges, Zones, Commissionrates) | 27 |
| 2 | **காவல்நிலை ஆணைகள் /**<br>**Introduction to Police Standing Orders** | 32 |
| 3 | **ஆயுதப்படை / தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (AR/TSP)**<br>**போக்குவரத்து காவல் மற்றும் குதிரைப்படை**<br>(Traffic Police / Mounted Police Branch) | 34 |
| 4 | குற்றப் புலனாய்வுத் துறை - குற்றப் பிரிவு (CB CID)<br>பொருளாதாரக் குற்றப் பிரிவு (EOW – CCIW, Idol Wing)<br>குற்றங்கள் (Crimes – ADC, NIB, VPC, SIT) | 42 |

| | | |
|---|---|---|
| 5 | **<u>நுண்ணறிவுப் பிரிவு–(Intelligence Wing)</u>**<br>தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை –Special Branch CID, தனிப்பிரிவு- (SB) Special Branch<br>க்யூ பிரிவு – Q Branch CID, சிறப்புப் பிரிவு – SB Special Division,<br>திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவு பிரிவு – (Organised Crime unit)<br>பாதுகாப்புப் பிரிவு – Security Branch CID | 44 |
| 6 | மாநில குற்ற ஆவணக் காப்பகம்- SCRB, தமிழ்நாடு கைவிரல் ரேகைக் கூடம் - TNFPB<br>தமிழ்நாடு காவல்துறை கணினிப் பிரிவு- Police Computer Wing<br>புள்ளிவிவரப் பிரிவு - Statistical Cell, | 48 |
| 7 | தமிழ்நாடு சிறப்பு இலக்குப்படை/ தமிழ் நாடு கமாண்டோ படை மற்றும் பயிற்சிப் பள்ளி<br>(TN STF / TNCF / TNCS) | 55 |
| 8 | சிறை நிர்வாகம் / Prison Administration | 57 |
| 9 | தமிழ்நாடு தடய அறிவியல் துறை<br>(TN Forensic Sciences Department) | 59 |
| 10 | **மத்திய காவல் அமைப்புகள் (Central Police Organization)** | 61 |
| 11 | இருப்புப்பாதை காவல் (Railway Police) | 70 |
| 12 | காவல் பயிற்சி கல்லூரி (Police Training College) | 71 |
| 13 | தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்<br>(Tamil Nadu Police Academy ) | 74 |
| 14 | காவல் தொலைத் தொடர்புப் பிரிவு<br>(Police Telecommunication Branch) | 77 |
| 15 | கடலோரப் பாதுகாப்பு குழுமம் (Coastal Security Group) | 81 |

| | | |
|---|---|---|
| 16 | மதுவிலக்கு அமலாக்கத்துறை (Prohibition Enforcement Wing) | 82 |
| 17 | குடிமைப்பொருள் வழங்கல் குற்ற புலனாய்வுதுறை (Civil Supplies CID) | 83 |
| 18 | சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு (Social Justice and Human Rights) | 83 |
| 19 | குற்ற வழக்குத்தொடர்வுத் துறை இயக்குனரகம் (Directorate of Prosecution) | 84 |
| 20 | தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை | 85 |
| 21 | தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்குழுமம் (TNUSRB) | 85 |
| 22 | ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு (VIGILANCE & ANTI CORRUPTION) | 86 |
| 23 | குடிமைப் பாதுகாப்பு மற்றும் ஊர்க்காவல் படை (Civil Defence & Home Guards) | 87 |
| 24 | தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் - TN Police Housing Corporation | 89 |
| 25 | பெண் காவலர் பிரிவின் அமைப்பு – தமிழ்நாடு, இந்தியா மற்றும் அயல் நாடுகள் | 90 |
| | **III. காவல் துறை நிர்வாகம்** | |
| 26 | காவல் துறையினரின் பதவிகளும், பதவிச் சின்னங்களும் (Ranks and Badges of Men and Officers in Police Department) | 96 |
| 27 | இந்திய தரைப்படை பதவிகளும் பதவிச்சின்னங்களும் (Ranks and Badges of Indian Army) | 101 |

| | | |
|---|---|---|
| 28 | இந்தியக் குடியரசுத் தலைவர், தமிழக மாநில ஆளுநர், முதல்வர், அமைச்சர்கள், சபாநாயகர்கள், காவல்துறை தலைமை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர், காவல்துறைத் தலைவர் மற்றும் காவல்துறை துணைத் தலைவர் ஆகியோரின் வாகன கொடிச் சின்னங்கள்<br>(Flags of Cars of President of India, State Governor, Chief Ministers, Ministers , Speakers DGP, ADGP, IGP and DIG of Tamil Nadu) | 104 |
| 29 | ஊதியம் மற்றும் இதர படிகள் (Pay and Allowances)<br>பயணப்படி எழுதும் முறை | 106 |
| 30 | பதக்கங்கள் (Medals) | 109 |
| 31 | உடைப்பொருட்கள் மற்றும் உடைமைப்பொருட்களைத் தணிக்கை செய்தல். (Kit and Kit Inspection)<br>அரசால் காவலர்களுக்கு வழங்கப்படும் உடைப்பொருட்களின் விபரம். | 113 |
| 32 | தளவாடங்கள் (Equipments)<br>படைக்கலம் மற்றும் தோட்டாக்கள் (Arms and Ammunition) | 116 |
| 33 | விடுப்பின் வகைகள் (Types of Leave) | 117 |
| 34 | தண்டனைகள் (Punishments) | 120 |
| 35 | கட்டுப்பாடு (Discipline),<br>நடத்தை விதிகள் (Conduct Rules)<br>குறை தீர்க்கும் முறையீடுகள் (Grievances) | 126 |
| 36 | மேல்முறையீடுகள் (Appeals),<br>பதவி உயர்வுகள் (Promotions)<br>வெகுமதிகள் (Rewards) | 130 |
| 37 | **மருத்துவ சிகிச்சை (Medical Treatment)**<br>காவல் அலுவலர்களுக்கான மருத்துவ பரிசோதனை | 132 |

| | | |
|---|---|---|
| 38 | **காவல் துறையினருக்கான நலத்திட்டங்கள் (Welfare Measures for the Police)**<br>தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம், பரிசுத் திட்டங்கள், தமிழ்நாடு அரசு சிறப்பு கல்வி உதவித் தொகை, கருணைத் தொகை, தமிழ்நாடு காவல் துறை பணியாளர் காப்பீட்டுத் திட்டம், புதிய காப்பீட்டுத்திட்டம், உணவு மானியத் திட்டம், தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி, காவல் மருத்துவமனைகள், காவல் அங்காடிகள்,<br>உங்கள் சொந்த இல்லம் திட்டம், | 134 |
| 39 | பணி ஓய்வுக் காலப் பயன்கள் (Retirement Benefits) | 139 |
| 40 | **பணிப் பதிவேடுகள் (Service Records)**<br>புகைப்பட அடையாள அட்டை,<br>மருத்துவ சரித்திர ஏடு, தவறுகைக் குறிப்பேடு,<br>சிறு பணிப் புத்தகம் | 140 |
| | **IV. உள்ளுர் சட்டங்கள்** | 143 |
| 41 | தமிழ்நாடு மாவட்டக் காவல் சட்டம் - 1859<br>Tamil Nadu District Police Act – 1859 | 144 |
| 42 | தமிழ்நாடு நகரக் காவல் சட்டம் - 1888<br>Tamil Nadu City Police Act – 1888 | 149 |
| 43 | தமிழ்நாடு போக்குவரத்து விதிகள் - 1940<br>Tamil Nadu Traffic Rules – 1940 | 154 |
| 44 | தமிழ்நாடு நகரத் தொல்லைகள் சட்டம் - 1889<br>Tamil Nadu Town Nuisances Act – 1889 | 156 |
| 45 | தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் - 1937<br>Tamil Nadu Prohibition Act – 1937 | 158 |
| 46 | தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் - 1989<br>Tamil Nadu Motor Vehicle Rules – 1989 | 165 |

| | | |
|---|---|---|
| 47 | தமிழ்நாடு கள்ளச்சாராய குற்றவாளிகள், கணினி வெளி சட்ட குற்றவாளிகள், மருந்து சரக்கு குற்றவாளிகள், வனக்குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப்பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொளித்திருடர்கள் ஆகியோரின் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் - 1982<br>TAMIL NADU PREVENTION OF DANGEROUS ACTIVITIES OF BOOTLEGGERS, CYBER LAW OFFENDERS, DRUG OFFENDERS, FOREST OFFENDERS, GOONDAS, IMMORAL TRAFFIC OFFENDERS, SAND OFFENDERS, SEXUAL OFFENDERS, SLUM GRABBERS AND VIDEO PIRATES ACT – 1982 | 173 |
| 48 | தமிழ்நாடு பெண்களை கொடுமை செய்வதை தடைசெய்யும் (திருத்தப்பட்ட) சட்டம் - 2002<br>Tamil Nadu Prohibition of Harassment of Women (Amendment) Act – 2002 | 176 |
| 49 | தமிழ்நாடு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் நலம் மற்றும் பாதுகாப்பு) விதிகள் - 2001<br>Tamil Nadu Juvenile Justice (Care and Protection of Children) Rules – 2001 | 180 |
| 50 | தமிழ்நாடு சூதாட்ட சட்டம் - 1930<br>Tamil Nadu Gaming Act - 1930 | 183 |
| 51 | தமிழ்நாடு பொது கேளிக்கை இடங்கள் சட்டம் - 1888<br>Tamil Nadu Places of Public Resorts Act – 1888 | 185 |
| 52 | தமிழ்நாடு வழக்கமான குற்றவாளிகள் கட்டுப்பாட்டு சட்டம் - 1948<br>Tamil Nadu Restriction of Habitual Offenders Act – 1948 | 187 |

| | | |
|---|---|---|
| 53 | தமிழ்நாடு பிச்சை எடுப்பு தடுப்பு சட்டம் - 1945<br>Tamil Nadu Prevention of Begging Act – 1945 | 193 |
| 54 | தமிழ்நாடு புகைபிடித்தல் மற்றும் துப்புதல் தடை செய்திடும் சட்டம் - 2002<br>Tamil Nadu Prohibition of Smoking and Spitting Act 2002 | 194 |
| 55 | தமிழ்நாடு கேலிவதை தடுப்புச் சட்டம் - 1997<br>Tamil Nadu Prohibition of Ragging Act – 1997 | 199 |
| 56 | தமிழ்நாடு கேலிவதை தடுப்பு விதிகள் - 1999<br>Tamil Nadu Prohibition of Ragging Rules – 1999 | 202 |
| 57 | தமிழ்நாடு வரம்பிகந்த வட்டி விதிப்பு தடுப்புச் சட்டம் - 2003<br>Tamil Nadu Prohibition of Charging Exhorbitant Interest Act – 2003 | 204 |

# I. காவல்துறை வரலாறு

## a.பழங்கால இந்தியா

| | |
|---|---|
| பழங்கால இந்தியா | பழங்கால இந்தியாவில் குற்றத்தைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டும் சமுதாயத்தில் நான்கு பிரிவுகள் அமைக்கப்பட்டிருந்தன. அவையாவன :<br>1.சமூகத்தின் பொறுப்பு,<br>2.கிராம பாதுகாவலர்கள்,<br>3.வேவுபார்த்தல்,<br>4.கடும் தண்டனை கொடுத்தல் மற்றும் விதிமுறைகள்<br>-----------<br>திருவள்ளுவர் ''ஒரு நியாயமான மன்னன் தன்னிடம் வரும் குற்றச்சாட்டுகளை யாருக்கும் பாரபட்சமின்றி விசாரித்து தீர்ப்பு அளிக்க வேண்டும் என்றும் தேவைப்பட்டால் தகுதியான நபர்களை கலந்தாலோசித்து அபராதம் விதிக்க வேண்டும்'' என்றும் கூறியுள்ளார்.<br>அக்காலத்தில் கிராமங்களை ஊர்க்காவலர்கள் (காவல்காரர்கள்) பாதுகாத்துள்ளார்கள். அவர்கள் தெருக்களில் இரவு நேரங்களில் தீப்பந்தங்களை வைத்துக்கொண்டு உலா வந்தும் தப்பட்டை அடித்தும் திருடர்கள் மற்றும் கொள்ளையரிடமிருந்து பொதுமக்களை காத்துள்ளனர். மேற்படி காவல் முறையைப்பற்றிய காவல்முறையானது 9ம் நூற்றாண்டிலேயே பல்லவர்கள் காலத்தில் இருந்துள்ளது. மேலும், 9 முதல் 14 ம் நூற்றாண்டு வரை சோழர்கள் முதல் பாண்டியர்கள் காலம் வரை இக்காவல் முறை பரவியதாகவும் தெரியவருகிறது. இதே போன்ற தலையாரி காவல் என்ற முறையும் இருந்துள்ளது.<br>மேலும், 14 ம் நூற்றாண்டில் முகலாய மன்னர்கள் காலத்தில் அவர்கள் முத்தாசிப் அல்லது பாஸ்தார் என்ற பதவிகளை உருவாக்கி கிராம பகுதிகளில் பாதுகாப்பு அலுவலுக்கு நியமித்ததாகவும் நகரப்பகுதிகளுக்கு கொத்துவால் |

| | |
|---|---|
| | என்ற பதவிகளை நியமித்ததாகவும், நகரப்பகுதிகளின் உட்பிரிவுகளுக்கு பாதுகாப்பு அளிக்க தானேதார் என்ற பதவிகளை உருவாக்கியதாகவும் அறியப்படுகிறது.<br><br>15ம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்கள் பல பாளையங்களை உருவாக்கி அவற்றின் பாதுகாப்பிற்கு பாளையக்காரர் (போலிகர்) என்பவர்களை நியமித்ததாகவும் கூறப்படுகிறது. |
| மௌரியர் காலம் | நாகரீகாஸ்-(பிற்காலங்களில் கொத்தவால்கள் என அழைக்கப்பட்டவர்கள்)-சட்டம் ஒழுங்கு, சிறைச்சாலைகளின் நிர்வாகம், நகரப்பாதுகாப்பை மேற்பார்வையிடல் மற்றும் நகரப்பகுதிகளில் காணாமல் போன பொருட்களைக் கண்டுபிடித்தல்- போன்ற பொது பராமரிப்புகளுக்கு பொறுப்புவகித்தனர்.<br><br>கிராமப்புறங்களில்,நாகரீகாக்களுக்கு இணையான பொறுப்பினை கோபாவினர் நிர்வகித்து வந்தனர். அவர்களுக்கு சம்பளமாக நிலங்கள் வழங்கப்பட்டன. அவர்கள் தங்களுக்குக்கீழ் கிராம பாதுகாவலர்களை உதவிக்கு வைத்திருந்தனர். |
| விஜயநகரபேரரசு | கிராமம், நகரம், மாநகரம் மற்றும் மாவட்டம் என ஒவ்வொன்றும், பல எண்ணிக்கையில் எல்லைகளையும், பல்வேறு நிலைகளில்-கீழ்படியும் காவில்கர் முதல், அதிக அதிகாரம் படைத்த போலிகர் வரையிலான காவல் அதிகாரிகளையும் கொண்டிருந்தன. உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் நாட்டின் அமைதியை நிலைநாட்டும் பணிகளுக்கு காவில்கர்கள் பொறுப்புவகித்தனர். அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு குடிமக்களிடமிருந்தும் அவர்களுக்கு குறிப்பிட்ட பொருளுதவி அளிக்கப்பட்டது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைத் தவிர திருட்டு, கொள்ளை அல்லது சேதாரம் போன்றவற்றிற்கு காவில்கர்களே பொறுப்பாளி ஆக்கப்பட்டிருந்தனர். |
| மொகலாயர் ஆட்சி | மாநகரங்களின் காவல் பணிகளுக்கு கொத்தவால்கள் பொறுப்பு வகித்தனர். இரவு நேரங்களில் சாலைகளில் ரோந்து சுற்றுதல் முக்கிய இடங்களைப் பாதுகாத்தல் ஆகியன கொத்தவால்களின் அன்றாட பணிகளாகும்.மாநகரின் ஒவ்வொரு மூலையிலும் பெரிய மனிதர்கள் வார்டன்களாக நியமனம் செய்யப்பட்டதன் மூலம், பொதுமக்களின் ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்றது. |

| | |
|---|---|
| | கிராமப்புற சமுதாய மக்களின் பணியாட்களாக இருந்து வந்த சௌக்கிதார்களிடம் கிராமக்காவல் பணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர்களுக்கு கிராம விளை நிலங்களிலிருந்து கிடைக்கும் விளைபொருட்களின் ஒரு பகுதியை கொடுத்து பராமரிக்கப்பட்டனர். அதன் மூலம் கிராம மக்களே அவர்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கும் சுற்றியுள்ள சாலைகளில் வந்து செல்லும் நபர்களின் பாதுகாப்பிற்கும் பொறுப்பாளியாக விளங்கினர்.<br><br>1564—ஆம் ஆண்டு கோல்கொண்டாவைச் சேர்ந்த முகலாய அரசர் விஜயநகரத்தை அழித்து அதன் ஆட்சியாளரைக் கொன்றார். விஜயநகர அரசரின் சகோதரர் அங்கிருந்து தப்பித்துச் சென்று மதராஸின் தென்கிழக்கே சந்தரகிரி என்ற இடத்தில் சிறிய அரசை நிர்மாணித்தார்.<br><br>22.08.1639 அன்று கிழக்கிந்திய கம்பெனியின் வியாபார பயன்பாட்டிற்காக மேற்படி கம்பெனியின் அதிகாரியான ஃபிரான்ஸிஸ் டே என்பவர் தற்போதைய சென்னையில் கூவம் ஆற்றிற்கும் எழும்பூர் ஆற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதியை அப்போதைய விஜயநகரப் பேரரசர் பெத்த வெங்கட ராய என்பவரை சென்னையிலிருந்து 500 கி.மீ தொலைவிலுள்ள ஆந்திர கடற்கரை அமைந்துள்ள மசூலிப்பட்டினத்திற்குச் சென்று சந்தித்தும் மானியமாகப் பெற்றார். அவ்வாறு பெறப்பட்ட மேற்படி நிலப்பகுதி நாளடைவில் முதிராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்டும் பின்னர் மருவி மதராசப்பட்டினம் என்று அழைக்கப்பட்டது.<br><br>1645—ஆம் ஆண்டு தனது அரசாட்சியையும், நகரின் நீதி பரிபாலனத்தையும் சந்திரகிரி அரசர் கிழக்கிந்திய கம்பெனியாரிடம் ஒப்படைத்தார். |

## b.ஆங்கிலேயர் வரவு மற்றும் நிர்வாகம்

| | |
|---|---|
| 1609 | ஆங்கிலேயா் : இங்கிலாந்து கிழக்கிந்திய கம்பெனிகளின் வியாபார நோக்கத்திற்காக ஜஹாங்கீா் அரசவைக்கு கேப்டன் ஹாக்கீன்ஸ் என்பவா் தாங்கள் சூரத்தில் வியாபாரம் செய்து கொள்ள அனுமதி பெற்றனா்.அதன் பின்னா் தங்களது வியாபார ஆதிக்கத்தினை சிறிது சிறிதாக இந்தியக் கண்டம் முழுவதும் விரிபடுத்தினா். |
| 1637 | அச்சமயத்தில் பரவலாகக் காணப்பட்ட கொத்தவால்களுக்கு இணையான பணிகளை மேற்கொண்டுவந்த தலைமுறை அலுவலர்கள் என அறியப்பட்ட பெத்தநாயக்குகளின் கீழ் இயங்கிய நிர்வாகத்தை கிழக்கிந்திய கம்பெனியார் அப்படியே ஏற்று நடத்தினர். திருட்டு அல்லது கொள்ளை மூலம் தங்களது உடமையை இழந்து நிற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டை பெத்தநாயக் அளிக்கக் கடமைப்பட்டிருந்தார். அதற்கென அவர் சுங்கவரி வசூலிப்பார். நாயக்கின் கீழ் 20 நபர்கள் கொண்ட தலையாரி (அ) பாதுகாவலர்படை உதவிபுரிந்தனர். |
| 1639 | செஞ்சி நாயக்கா் வம்சத்தில் உதித்த சென்னப்ப நாயக்கரிடமிருந்து ஆங்கிலேயா் சென்னையை விலைக்கு வாங்கி அங்கு தங்கள் குடியேற்றங்களை ஏற்படுத்தினா். |
| 1640 | புனித ஜார்ஜ்கோட்டை கட்டப்பட்டது. |
| 1653 | நடைமுறை வழக்கில் இருந்துவந்த “அதிகார்” எனப்படும் முறை ஒழிக்கப்பட்டு நீதி பரிபாலனம் செய்ய இரண்டு யூரோப்பியர்களைக் கொண்டு முதல் நீதியகம் நிர்மானிக்கப்பட்டது. |
| 1802 | தென்இந்தியா முழுவதிலும்,பெரும்பாலான போலிகர்கள்(அ) குறுந்தலைவர்கள்(அ) வருமானம் ஈட்டும் பண்ணையார்கள் ஆகியோரால் விதிமுறைகள் அமல்படுத்தப்பட்டு வந்தன. அவர்கள் திருட்டு சம்மந்தப்பட்ட குற்றங்களுக்கும் மற்றும் வரிவசூல் செய்வதற்கும் மாத்திரமே பொறுப்பேற்றிருந்தனர். காரன்வாலிஸ் |

| | |
|---|---|
| | என்பவர் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது போலிகர்களிடமிருந்து முற்றிலுமாக விடுவிக்கப்பட்ட காவல் நடைமுறை இருக்க வேண்டும் என விரும்பினார். 1802 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட விதிமுறைகளின்படி ஜில்லாஜட்ஜ் என அழைக்கப்பட்ட கண்காணிப்பாளரின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் நீதிமன்றம் அமைக்கப்பட்டது. ஜில்லா ஜட்ஜ் என்பவரே நீதிபதியாகவும், காவல்துறை கண்காணிப்பாளராகவும் பொறுப்பு வகித்தார். |
| 1806 | பொதுமக்களின் எண்ணங்கள் மற்றும் அவர்களது உணர்வுகளை எந்த அளவுக்கு கம்பெனியார் புரிந்து கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தனர் என்பதை வேலூர் கலகம் வெளிப்படுத்தியதையடுத்து பொது நீதி பரிபாலனத்திற்கு இடையூராக இருந்த போலிகர் அமைப்பும் அதன்கீழ் பணியாற்றிய பெத்தநாயக் அலுவலகமுறையும் உடனடியாக கலைக்கப்பட்டது. மதராஸில் மூத்த நீதிபதியான வால்டர் கிராண்ட் என்கிற ஐரோப்பிய கண்காணிப்பாளரின் கீழ் காவல்துறை நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. அவரது பணிக்கு உதவிட மாதம் 10 பகோடா சம்பளத்தில் காவலர் பொறுப்பில் 10 ஐரோப்பியர்களும், கணிசமான ஆய்வாளர்கள் அல்லது தரோகாஸ், 500 பியூன்கள், 30 குதிரைப்படை வீரர்கள் மற்றும் 20 ஹிர்காராஸ் (தபால் பட்டுவாடா ஊழியர்கள்)ஆகியோர் பணியமர்த்தப்பட்டனர். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, தரோகாஸ் பதவி கைவிடப்பட்டு, வரிவசூல் செய்யும் கலெக்டர் பொறுப்புடன் கூடிய காவல்கண்காணிப்பாளர் பதவி உருவாக்கப்பட்டது. |
| 1816 | மாவட்டங்களில் காவல்முறைக்கு அங்கீகாரம் கொடுப்பதற்காக, கிராமக்காவலை மாற்றியமைக்க வேண்டுமென மன்றோ குழு பரிந்துரைத்தது. 1816ஆம் ஆண்டின் XI ஆம் விதிமுறைப்படி, மாவட்ட நீதிபதியின் அதிகாரங்கள், நீதிபதியிடமிருந்து மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சியர்களும், வட்டாட்சியர்களும் அவரவர் எல்லைப்பகுதிகளில் நீதிபதிகளாகவும், காவல் துறைக்குத் தலைமை வகிப்பவர்களாகவும் அதிகாரம் பெற்றனர். குற்றச் சம்பவங்கள் பற்றிய தகவல் அளிப்பது மற்றும் குற்றவாளிகளைப் பிடிப்பது போன்ற பணிகளின் பொறுப்பு மீண்டும் கிராம தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 1833 | கம்பெனியாரின் முழு கட்டுப்பாட்டின் கீழ் இருந்த, ஆங்கிலேயர் அல்லது இந்தியர் என அனைவருக்கும் உரிய சட்டத்திட்டங்களை வகுக்கும் பொறுப்பு சார்ட்டர் சட்டத்தின்படி கவர்னர் ஜெனரலிடமும், கவுன்சிலரிடமும் ஒப்படைக்கப்பட்டது. |
| 1834 | திரு. மெக்காலே அவர்களை தலைவராகக் கொண்டு இயங்கக் கூடிய இந்திய சட்டக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு, வரைவு தண்டனை சட்ட விதிகளை வகுத்தது. |
| 1835 | கொடுஞ்செயல் குற்றங்கள் புரியக்கூடிய குற்றவாளிகளான தக் (Thugs) என்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தனித்துறை உருவாக்கப்பட்டு அதன் தலைமைப் பொறுப்பு அதிகாரியாக கர்னல் ஸ்லீமன் பொது கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் அவரது அந்தஸ்து ஆணையர் பதவிக்கு இணையாக உயர்த்தப்பட்டது. தக்குகளுக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு பென்டிங்க் குழுவால் நியமிக்கப்பட்ட ஏஜென்ட் ஜெனரல் FC ஸ்மித் அவர்களின் உதவியாளராக ஸ்லீமன் பணியாற்றினார். |
| 1849 | சுகாதாரத் துறையின் கீழ் மதராஸ் மாகாணத்தில் இரசாயன சோதனைக்கூடம் அமைக்கப்பட்டது. |
| 1854 | இந்துக்களை கட்டாய மத மாற்றம் செய்தல் மற்றும் இந்துக்களுக்கு எதிராகக் கொடுமையிழைத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்ட மொப்லா இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக கிழக்கிந்திய கம்பெனியால் மலப்புரத்தில் சிறப்புக் காவல் படை உருவாக்கப்பட்டது. |
| 1855 | டார்ச்சர் குழுவின் அறிக்கை : ஒட்டுமொத்த காவல் அலுவலர்களுக்கும் அளிக்கப்பட்ட ஊதியம் மிக குறைவு, பகிரங்கமான ஊழல் போக்கு, ஒழுங்குக் கட்டுப்பாடு, தன்மானம் ஏதுமில்லாத காவல் படை போன்ற ஆபத்துகள் பற்றி அறிக்கை அளிக்கப்பட்டது . |

| | |
|---|---|
| 1856 | 1856ஆம் ஆண்டு XIII சட்டத்தின் படி, மாகாணத்தின் அனைத்து நகரங்களிலும் காவல் ஆணையர் பதவி உருவாக்கப்பட்டு, அரசாங்க ஆணைக்கிணங்க ,அந்தந்த நகரங்களில் பணியாற்றும் காவல் படையை முழுக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பொறுப்பு அத்தகைய ஆணையருக்கு வழங்கப்பட்டது. மதராஸின் முதல் ஆணையராக லெ.ஃப்டினன்ட் கர்னல் G.C.பௌல்டர்சன் என்பவர் பதவியேற்றார். அவரின்கீழ், 732 பேர்கொண்ட காவல் அலுவலர் படை பணியாற்றியது.அவர்களில், 11 ஆய்வாளர்களுடன் கூடிய 533 அலுவலர்களைக் கொண்ட தடுப்புப் பிரிவும், 11 தரோகாஸ் உள்ளிட்ட 178 அலுவலர்களை கொண்ட புலனாய்வுப் பிரிவும் அடங்கும். |
| 1857 | மதராஸ் மாகாணம் முழுமைக்கும் ஒரு ஆணையரை நியமிப்பது என்றும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உதவி ஆணையர்களை நியமிப்பது என்றும் முடிவு மேற்கொள்ளப்பட்டதோடு மாவட்ட நீதிபதிகளின் கீழ் இயங்கி வந்த காவல் பணியைத் திரும்பப்பெற்று அந்தந்த கிராமக் காவல் பணிகளை மாவட்ட உதவி ஆணையரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. முதன்மை ஆணையராக G.W.ராபின்சன், என்பவர் பணி நியமனம் செய்யப்பட்டார். அப்பதவியின் பெயர் காவல் துறைத் தலைவர் என பிற்காலத்தில் அழைக்கப்பட்டது. அதே போன்று மாவட்ட உதவி ஆணையர் பதவியின் பெயர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் என மாற்றியமைக்கப்பட்டது. 1859-ஆம் ஆண்டின் XXIV- சட்டப்பிரிவில் இதற்கான ஆணை இடம்பெற்றது. பன்னிரெண்டு மாதங்களிலேயே இப்பதவிகள் 15 மாவட்டங்களிலிருந்து 20 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது |
| 1860 | இந்திய தண்டனைச் சட்டம் - 1860 IPC சட்டம் என இயற்றப்பட்டது |
| 1860 | ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள காவல் அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்கு ஆகும் மொத்தச் செலவு எவ்வளவு என்பதைக் கணக்கிட்டும், செலவினங்களைக் கட்டுப்படுத்தியும் காவல் துறை அலுவலர்களின் திறமையை மேம்படுத்த எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும் தெரிவிக்கக் கோரி இந்திய காவல் ஆணையம் அமைக்கப்பட்டது. கீழ்நிலைக் காவலர்களுக்கான மாதச் சம்பளம் |

| | |
|---|---|
| | குறைந்தபட்சமாக திறமையில்லா தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத்திற்கு இணையாகவாவது இருத்தல் வேண்டும். தலைமைக் காவலர்கள் மற்றும் சார்ஜென்ட்டுகளுக்கான சம்பளம், அவர்களை மனக்கிலேசத்திற்கு ஆட்படாதவர்களாக இருக்கும் வண்ணம் கொடுக்கப்பட வேண்டும் என ஆணையம் பரிந்துரைத்தது . இந்த ஆணையத்தின் பெரும்பாலான பரிந்துரைகளின் அடிப்படையில் 1861ஆம் ஆண்டு காவல் சட்டம் (V) இயற்றப்பட்டது. மதராஸ் மாகாணத்தில் ஏற்கனவே 1859ஆம் ஆண்டு சட்டம் அமலில் இருந்ததால், மேற்குறிப்பிட்ட 1861ஆம் ஆண்டு சட்டம் அமல்படுத்தப்படவில்லை. |
| 1861 | இந்தியா முழுவதும் ஒரே மாதிரியான குற்றவியல் நடைமுறைச்சட்டம் அமலில் இல்லை. ஒவ்வொரு Provinse மற்றும் Presedentilal town லும் ஒவ்வொரு மாதிரியான நடைமுறைச்சட்டங்கள் நீதிமன்றங்களில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தன. அதனால் ஒரே மாதிரியான பொது குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1861 ல் நடைமுறைக்கு வந்தது. பின்னர் 1872 ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. பின்னர் 1882 ஆம் ஆண்டு அனைத்து இந்திய அளவில் பொதுவான குற்றவியல் நடைமுறைச்சட்டமாக மேம்படுத்தப்பட்டது. பின்னர் 1898 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது. தொடர்ந்து இச்சட்டமானது பலமுறை சூழ்நிலைக்கேற்ப அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்டும், இறுதியாக 1973 ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டு 11.04.1974 அன்று முதல் அமலுக்கு வந்தது. |
| 1862 | மாகாணங்களில் உயர் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன |
| 1863 | ஒரு காவல் துறைத் தலைவர், ஒரு கூடுதல் காவல் துறைத் தலைவர், நான்கு காவல் துறைத் துணைத் தலைவர்கள் மற்றும் 38 காவல் துறைக் கண்காணிப்பாளர்கள்/ உதவி காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் - ஆகியோர் மதராஸ் மாகாணத்தில் பணியாற்றினர். |
| 1867 | மதராஸ் சட்டம் VIII மதராஸ் நகரக் காவல் படை மாகாணத்தின் பொது காவல்படைப் பிரிவில் கொண்டுவரப்பட்டது. நகர ஆணையர், காவல்துறைத் தலைவராகப் பொறுப்பு வகித்தார். ஆணையர் மாகாண நீதிபதியாகவும் பணியாற்றினார். ஆனால் அவர் நீதித்துறை செயலர் பொறுப்பைக் கொண்டவராக இருந்தார். |

| | |
|---|---|
| 1872 | இந்திய சாட்சிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 1877 | பிரத்யேக ஒப்பந்தத்தின்படி அமைக்கப்பெறாத உதவிகாவல் கண்காணிப்பாளர்கள் பதவிகள் உருவாக்கப்பட்டன. |
| 1878 | 1878ஆம் ஆண்டு, அரசியல் மற்றும் இராணுவம் சம்பந்தமான முக்கியத்துவம் வாய்ந்த நம்பகமான மற்றும் இரகசியத் தகவல்களைப் பெற்று அவற்றை அரசாங்கத் தலைமைக்கு சமர்ப்பிக்கும் பணிக்கென ஒவ்வொரு மாகாண அரசும் சிறப்பு அலுவலர் ஒருவரை நியமிக்க வேண்டும் என வைஸ்ராய் தெரிவித்தார். அதே போன்று தக்கீகளின் பொது கண்காணிப்பாளர் வைஸ்ராயின் நம்பத்தகுந்த ஏஜெண்டாக செயல்படவேண்டும். அவர் அயல்நாட்டு இரகசியத் தூதுவர்கள் குறித்த தகவல்கள், சதியாலோசனைகள், எதிர்பாரா அரசியல் மற்றும் சமூக மாற்றங்கள் ஆகியன குறித்த தகவல்களைச் சேகரிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும். மதராஸில் தலைமைச் செயலாளர் இத்தகையப் பொறுப்பை ஏற்றிருந்தார். |
| 1887 | ஒவ்வொரு மாநில அரசாங்கத்தின் தலைநகரிலும், காவல்துறையில் தனிப்பிரிவு ஒன்று அமைக்கப்படவேண்டும் என கவர்னர் ஜெனரல் கவுன்சில் வலியுறுத்தினார். மதராஸ் மாகாணத்தில் உதாரணமாக இத்தகைய தனிப் பிரிவில் உதவி அலுவலர் ஓர் ஆய்வாளரைக் கொண்ட ஒரு பிரிவு இயங்கலாயிற்று. இவ்விரு அதிகாரிகளும் தலைமைச் செயலர் அலுவலகத்தில் பணியாற்றினர். |
| 1887 | மாதிரி நுண்ணறிவுப்பிரிவு ஒன்று சென்னை நகர காவல்துறைக்கென உருவாக்கப்பட்டது. |
| 1892 | கீழ் வங்காளத்தின் காவல் துறைத் தலைவராக இருந்த எட்வர்டு ஹென்றி இந்தியக் குடிமைப் பணி (ICS ) அவர்கள் கை ரேகைகளை பகுத்தாய்வு செய்யும் முறையை மேம்படுத்தக்கோரி ஆவிஸ்-உல்-ஹக் மற்றும் ஹெம் சந்திர போஸ் ஆகிய உதவி ஆய்வாளர்களைப் பணியமர்த்தினார். |
| 1893 | காவல் துறைக்கான முதல் ஓபன் விளையாட்டுப் போட்டி இங்கிலாந்து நாட்டில் நடத்தப்பட்டது. அதில் வெற்றிபெற்ற முதல் 10 நபர்கள் தகுதிகாண் பருவ உதவி காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டனர். |

| | |
|---|---|
| 1895 | கொல்கத்தாவில் ஹென்றியிடம் பயிற்சி பெற்ற ஆய்வாளர் E.A. சுப்ரமணியம் அய்யர் என்பவரது பணியைக் கொண்டு மதராஸ் மாகாணத்தில் கை ரேகைக்கூடம் நிர்மாணிக்கப்பட்டது. |
| 1896 | உதவி காவல் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் உதவி- ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு வேலூரில் காவல் பயிற்சிப் பள்ளி நிறுவப்பட்டது. பயிற்சிக் காவலர்களுக்கான பள்ளிகள் நான்கு மையங்களில் துவக்கப்பட்டன. |
| 1898 | மதராஸ் நகரக் காவல் அலுவலகத்தில், ஓர் ஆணையர், ஒரு துணை ஆணையர், ஓர் உதவி ஆணையர் ( அமைச்சுப் பணியாாளர்களுக்கான தலைமை அதிகாரி), ஒரு முதன்மை ஆய்வாளர், 12 ஆய்வாளர்கள், 21 ஐரோப்பிய மற்றும் 9 இந்திய உதவி-ஆய்வாளர்கள், 14 ஐரோப்பிய மற்றும் 140 இந்திய தலைமைக் காவலர்கள் மற்றும் 1214 காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். |
| 1901 | இந்தியாவில் காவல் அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 1,63,116<br>(37 காவல் துறைத் தலைவர்கள் உட்பட) |
| 1902 | இந்திய காவல் நிர்வாகத்தை மேற்பார்வையிட ∴பிரேசர் ஆணையம் அமைக்கப்பட்டது.<br>அது காவல் பணிமுறையில் ஐந்து குறைபாடுகளைக் கண்டறிந்தது.<br>உயர் அதிகாரிகளைத் தேர்வு செய்வதிலும், அவர்களுக்கானப் பயிற்சியிலும் அதிருப்தி,<br>காவல் பணிகளில் நீதிபதிகள் மற்றும் ஆணையர்களின் தேவையற்ற தலையீடு,<br>போதுமான ஊழியர்கள் - பற்றாக்குறை,<br>ஆய்வாளர்கள் மற்றும் அதற்குக் கீழுள்ள அலுவலர்களுக்குப் போதிய ஊதியம் இல்லாமை மற்றும் கல்வியறிவு இல்லாத, தகுதியற்ற நபர்களைப் பணியமர்த்துதல் மற்றும்<br>கிராமப்புற காவலர்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமை. |

| | |
|---|---|
| | காவல் படையானது, திறமையற்றதாகவும், பயிற்சியிலும், அமைப்பிலும் குறைபாடு உடையதாகவும், போதிய கண்காணிப்பின்றியும், ஊழல் மற்றும் கடுமையானதாகவும், பொது மக்களின் சுமூகமான ஒத்துழைப்பையும், நம்பிக்கையையும் பெறத் தவறியதாகவும் விளங்கிற்று.<br><br>ஆணையம் எங்கு சென்றிடினும் காவல் அலுவலர்களுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுப் புகார்கள் தெரிவிக்கப்பட்டன.<br><br>ஆனால் காவலர்களுக்கு உள்ள அதிகாரபலத்தைக் கொண்டு கடுமையாக நடந்துகொள்ளுதல், கட்டாய வசூல் போன்றவற்றின் மூலம் காவலர்களின் ஊழல்போக்கு சகித்துக்கொள்ள முடியாத அளவிற்குப் போகலாயிற்று. காவலர்களுக்கு குறைந்த ஊதியம் வழங்குவதும், அவர்களின் தகுதிக்கு மீறிய செயல்களில் அவர்களை ஈடுபடுத்துவதும் தீயசெயல்களில் அவர்களை ஈடுபடுத்துவதாக ஆணையம் கண்டறிந்தது. காவலர்களுக்கு மாதம் ரூ.6/- அல்லது 7/- அளிக்கப்பட்டு சீருடைக்கென பிடித்தமும் செய்யப்பட்டதால் அவர்கள் நேர்மை தவறி நடக்கத் தூண்டப்பட்டுவிட்டனர். அதே நேரத்தில் தாணா முறையை ஒழிக்கவும் அல்லது அவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும் பரிந்துரைக்கப்பட்டபோது உள்ளூர்வாசிகளின் கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்ததாகவும் அந்த ஆணையம் குறிப்பிட்டுள்ளது. குறைந்தபட்சம் தங்கள் பகுதியில் தீய செயல்கள் நடைபெறாதவாறு காவலர்கள் பார்த்துக்கொள்கிறார்கள் என பொது மக்கள் கருதுவதாகவும் ஆணையம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. |
| 1904 | H.A. ஸ்டுவார்டு அவர்களை இயக்குநராகக் கொண்டு மத்தியக் குற்றப் புலனாய்வுத் துறை துவக்கப்பட்டது. முதலாம் உலகப் போருக்குப் பின்னர், அந்த அமைப்பிற்குப் புலனாய்வுக் கூடம் என பெயர் சூட்டப்பட்டது. |
| 1905 | 1902 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஆணையத்தின் பரிந்துரைகளின்படி இந்திய அரசாங்கம் கீழ்க்குறிப்பிட்ட முடிவுகளை எடுத்தது.<br><br>காவலர்கள் உள்ளூரில் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு வட்டாரப் பள்ளிகளில் பயிற்சி அளிக்க வேண்டும். அவர்களது சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். உதவி ஆய்வாளர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட வேண்டும். வட்டாரப் பணிகளை மேற்கொள்ள இந்தியர்களை அதில் துணைக் |

| | |
|---|---|
| | கண்காணிப்பாளர்களாக நியமிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட மாவட்ட நீதிபதியாக விளங்கும் ஒருவர் காவல்துறைத் தலைவர் பதவியில் அமர்த்தப்பட வேண்டும். தவிர்க்க முடியாத சமயங்களில் காவல் துறை அதிகாரிகள் நியமிக்கப்படலாம். மாவட்ட நீதிபதியாக இருப்பவருக்கு கேள்வி எழுப்பமுடியாத அளவுக்கு அதிகாரம் கொண்டவராக இருப்பதோடு அவரது கருத்துக்கு ஒத்த நபரை சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவும் குற்றச் செயல்களைக் கண்டுபிடித்து அவற்றைக் கண்காணிக்கவும் தகுந்த காவல் துறை அலுவலரை நியமிக்கும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டது. மாவட்ட நீதிபதியின் கீழ் உள்ள மாவட்டத்தில் குற்றத் தடுப்பு நிர்வாக அமைப்பு சம்பந்தப்பட்ட காவல் அலுவலரின் நன்னடத்தை மற்றும் தகுதியால் பாதிக்கப்படாதவரையில், அந்த நீதிபதி காவல்துறையின் நிர்வாகம் மற்றும் கட்டுப்பாட்டு முறையில் தலையிடக்கூடாது. ஒவ்வொரு மாகாணத்திலும் ரயில்வே காவல் துறைக்குத் தலைமைவகிக்கும் அதிகாரியே புலனாய்வுப் பிரிவின் பொறுப்பையும் வகிக்க வேண்டும்.<br><br>தலைமைக் காவலர்களின் பொறுப்பிலிருந்த அனைத்து காவல் நிலையங்களிலும், மாதச் சம்பளம் ரூ.50/- முதல் ரூ.100/- வழங்கபட்ட உதவி ஆய்வார்களை நியமிப்பது என்ற கருத்தை மதராஸ் அரசு ஏற்றுக் கொண்டது. காவல்துறை பரிசோதனைக் கூடம் நிர்மாணிக்கப்பட்டது. |
| 1906 | மதராஸில் 1906 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் குற்றப் புலனாய்வுத் துறைத் துவக்கப்பட்டது. அதில், ஒரு காவல்துறை துணைத் தலைவர், ஆறு ஆய்வாளர்கள் ஆறு உதவி ஆய்வாளர்கள் 12 தலைமைக் காவலர்கள் மற்றும் 12 காவலர்கள் பணியமர்த்தப்பட்டனர். அரசியல்சாரா குற்றச் செயல்களைக் கண்டுபிடிப்பதுதான் இதன் முக்கியப் பணியாக இருந்தது. வெகுகாலமாக வெளியிடப்பட்டு வந்த மதராஸ் காவல்துறை செய்திப் பத்திரிகையை தொடர்ந்து வெளியிடுவதும் இத்துறையின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டது. |

| | |
|---|---|
| 1907 | ஒரு மாநில செயலர் பொறுப்பிலுள்ள அதிகாரிகள் தங்களை துணைக் கண்காணிப்பாளர் மற்றும் மாநில செயலரின் மூலம் தேர்வு செய்யப்படாத அதிகாரிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்ட தங்களது சீருடையின் தோள்பட்டையில் I.P என்ற எழுத்துக்களைப் பொறுத்திக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர். இம்பீரியல் கிளை காவல் பணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் என அவர்கள் அடையாளம் காட்டப்பட்டனர். 1932 ஆம் ஆண்டு இந்திய காவல்துறை அலுவலர் சங்கத்தின் விருப்பத்திற்கேற்ப, service என்ற வார்த்தை கைவிடப்பட்டு, அதிகாரப்பூர்வமாக இந்திய காவல் (Indian Police) என்ற பதம் பயன்படுத்தப்பட்டது. |
| 1908 | கல்வியறிவில்லாத காவலர்களின் எண்ணிக்கை 10.9% ஆக குறைக்கப்பட்டது. |
| 1911 | இந்தியாவில் காவல் துறையினரின் மொத்த எண்ணிக்கை 51 காவல் துறைத் தலைவர்கள் உட்பட 1,89,993. |
| 1911 | இந்த ஆண்டில் மதராஸ் மாகாணத்தில் 33 துணை கண்காணிப்பாளர்கள் பணிநியமனம் செய்யப்பட்டு உட்கோட்டங்களின் பொறுப்பில் அமர்த்தப்பட்டனர். |
| 1911 | காவல் பணிகளின் விதிமுறைகள் மற்றும் இந்திய காவல் அலுவலர்களின் நலன்கள் குறித்து எடுத்துரைக்கும் பொருட்டு இந்திய காவல் அலுவலர் சங்கம் நிர்மாணிக்கப்பட்டது. இச்சங்கத்திற்கு இந்திய அரசாங்கம் முழு அங்கீகாரம் அளித்ததோடு ஒவ்வொரு மாகாணத்திலும் அதற்கான கிளைகள் தொடங்கப்பட்டன. |
| 1912 | மாநில காவல்துறை விளையாட்டுப்போட்டி தொடங்கப்பட்டது. |
| 1919 | மதராஸ் பிரசிடென்சியின் முதல் காவல்துறை தலைவராக P.B. தாமஸ் அவர்கள் நியமிக்கப்பட்டார். |
| 1919 | வேலூரில் காவல்துறை சுருக்கெழுத்துக்கூடம் தொடங்கப்பட்டது. |
| 1921 | மொ.ஃப்லா கலகம் வெடித்தது. இதில் இரு உதவி காவல்கண்காணிப்பாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். மூன்று தாலுக்காக்களில் உள்ள காவல் நிலையங்கள் சூரையாடப் பட்டதையடுத்து அங்கு இராணுவச்சட்டம் அமல்படுத்தப்பட்டது.சிறப்பு தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு அதனால் 175 நபர்களுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டதோடு, 400 நபர்கள் வாழ்நாள் முழுமைக்கும் நாடு கடத்தப்பட்டனர். 6000 நபர்கள் குறைந்த காலத்திற்கு நாடு கடத்தப்பட்டனர் மற்றும் சிறை வைக்கப்பட்டனர். |

| | |
|---|---|
| | காவல் பணியில் முதன்முறையாக ரேடியோ தொலைபேசி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 1921 | மலப்புரம் சிறப்புக் காவல்படை, மலபார் சிறப்பு காவல்படையாக விரிவாக்கம் செய்யப்பட்டது. 30.09.1921 ஆம் தேதியன்று மலபார் சிறப்புக்காவல் படையின் ஒரு அணி திருச்சியில் துவங்கப்பட்டது. பின்னர் மொழிவாரி மாகாண பிரிவினையின் போது 1947 ம் ஆண்டு (G.O No:4112/Home Dept/Dated 07.11.1947 ) சென்னை மாகாண மலபார் சிறப்புப்படை திருச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. 1972 ஆம் ஆண்டு முதல் இப்படைப் பிரிவு தமிழ்நாடு சிறப்புக் காவல்படை 1 ஆம் அணி என அழைக்கப்பட்டது. |
| 1924 | இந்திய காவல் பணிக்கு, 50 சதவீதம் ஐரோப்பியர்களையும், 30 சதவீதம் இந்தியர்களையும் திறந்தவெளித் தேர்வின் மூலமும் மீதம் 20 சதவீதம் வட்டாரப் பணியிலிருந்தவர்களுக்கு பதவி உயர்வு மூலமும் காவல் அலுவலர்கள் தேர்வு செய்யப்பட வேண்டும் என லீ ஆணையம் பரிந்துரைத்தது. |

| | |
|---|---|
| 1927 | காவல் துறைத் தலைவரால் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாநாடு நடத்தப்படும் முறை தொடங்கப்பட்டது. |
| 1929 | மதராஸ் நகர காவல்துறை ஆணையாளராக இருந்த சார்லெஸ் .B. கன்னிங்ஹாம் அவர்கள் நகரின் எல்லைப் பகுதியை மறுசீரமைப்பு செய்து, அதில் சட்டம் ஒழுங்கு பிரிவு, குற்றப் பிரிவு மற்றும் போக்குவரத்துப் பிரிவு என மூன்றுவிதமாக இயங்கக் கூடிய பிரிவுகள் முறையை அறிமுகப்படுத்தினார். |
| 1929 | புலனாய்வு பிரிவு, குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் தனிப் பிரிவு என இரண்டாகப் பிரிக்கப்பட்டு, அதற்கு காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர்களின் தலைமையில் இயங்க அறிவுறுத்தப்பட்டது. |
| 1931 | ரேஞ்ச் மற்றும் ரயில்வே பணிகளிலிருந்து காவல்துறைத் துணைத் தலைவர் (குற்றப் புலனாய்வுத் துறை) விடுவிக்கப்பட்டார். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓர் உதவி ஆய்வாளரைக் கொண்டு மாவட்ட நுண்ணறிவுப் பிரிவு தொடங்கப்பட்டதோடு, மத்திய நுண்ணறிவுப் பிரிவும் மாகாண C.I.D பிரிவில் தொடங்கப்பட்டது. |

| | |
|---|---|
| 1937 | ஒவ்வொரு மாகாணத்திலும் சுதந்திரமாக இயங்கிவந்த காவல்துறை அனைத்தும், உள்துறை அமைச்சகத்தின் கீழ் கொணரப்பட்டது. இருப்பினும் கவர்னர் ஜெனரல் அத்துறை மீதான பொறுப்பை பெற்றிருந்ததோடு, அவசரத் தேவையின்போது அதன் நிர்வாகத்தில் தலையிடவும் அதிகாரம் பெற்றிருந்தார். அமைச்சர்களை சார்ந்திராமல், தனக்கென தகவல் அளிக்கும் ஒரு பிரிவை கவர்னர்-ஜெனரல் வைத்திருக்க வேண்டியது அவசியமாயிற்று. இதற்கென, ஒவ்வொரு மாகாணத்திலும் மத்திய நுண்ணறிவுப் பிரிவு அதிகாரி ஒருவர் பணியமர்த்தப்பட்டார். |
| 1938 | இந்தியாவில் காவல் துறையினரின் மொத்த எண்ணிக்கை 64 காவல் துறை தலைவர்கள் உட்பட 2,02,882. |
| 1946 | காலாட்படைத் தலைவர் ஒருவரை முதல் அதிகாரியாகக் கொண்டு, மதராஸ் மாகாணத்தில் முதன் முதலாக காவல்துறை ரேடியோ பிரிவு திறக்கப்பட்டது. |

## C.சுதந்திர இந்தியாவில் தமிழக காவல்துறை வரலாறு

| | |
|---|---|
| 1951 | மதராஸ் நாய்ப் படைப் பிரிவு தொடங்கப்பட்டது. |
| 1959 | தடய அறிவியல் பரிசோதனைக்கூடம் நிர்மானிக்கப்பட்டது. |
| 1969 | தமிழ்நாட்டில் காவல்ஆணையம் அமைக்கப்பட்டது. |
| 1971 | தமிழ்நாடு காவல் துறையில் கணினி பிரிவு நிர்மானிக்கப்பட்டது. |
| 1977 | தேசிய காவல்ஆணையம் அமைக்கப்பட்டது. |
| 1979 | காவல் துறை இயக்குநா் பதவி அறிமுகப்படுத்தப்பட்டு, இறுதியாக I.G பதவியில் பணியாற்றிக்கொண்டிருந்த E.L. ஸ்ட்ரேசி அவர்கள் DGP பதவி உருவாக்கப்பட்டு DGPஆக பணிஅமர்த்தப்பட்டார். |
| 1981 | தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டது. |
| 1989 | தமிழ்நாட்டில் இரண்டாவது காவல்ஆணையம் அமைக்கப்பட்டது. |
| 1990 | மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஆணையர் அலுவலகம் துவங்கப்பட்டது. |
| 1991 | அரசிதழில் இடம்பெறாத சாா்நிலை காவல்துறை அலுவலா்கள், சிறைத் துறை அதிகாரிகள் மற்றும் தீயணைப்புத் துறை அதிகாரிகள் ஆகியோரை பணிநியமனம் செய்வதற்கென தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் குழுமம் (TNUSRB) துவங்கப்பட்டது. |
| 1993 | சந்தன மரக்கடத்தல் குற்றவாளி வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் பிடிக்க தமிழக காவல்துறையில் முதன் முதலாக சிறப்பு இலக்குப்படை (SPECIAL TASK FORCE) அமைக்கப்பட்டது. |
| 1997 | திருச்சி,சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் ஆணையாளர் அலுவலகம் துவங்கப்பட்டது. |
| 2000 | தடய அறிவியல் துறையில் ,மரபணுக்களை பகுத்தாய்வு செய்யும் (DNA) முறை அறிமுகப்படுத்தப்பட்டது. |

| | |
|---|---|
| 2002 | மாண்புமிகு தமிழக முதல்வா் அவா்களால் காவலா் குறைதீா்ப்பு நாள் முகாம் நடத்தப்பட்டது. |
| 2002 | சென்னை, கோயம்புத்துார், திருச்சி, மதுரை ஆகிய இடங்களை தலைமை இடமாக கொண்டு நான்கு காவல் மண்டலங்கள் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு காவல்துறை தலைவர்(IG) பொறுப்பு அலுவலராக நியமிக்கப்பட்டார். |
| 2003 | தேசிய நெடுஞ்சாலைகளில் கண்காணிப்பை மேம்படுத்தவும், விபத்துக்களை குறைக்கவும் ஒரு நடமாடும் காவல்நிலையம் மற்றும் 80 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்கள் நவீன கருவிகளுடன் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| 2003 | தமிழகம் முழுவதும் 117 காவல் கூட்டுக்குழுக்கள் (Police Clubs) திறக்கப்பட்டது. |
| 2004 | இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாடு சிறப்புக்காவல்படையில் பெண் காவல் அணி (women Police Battalion) உருவாக்கப்பட்டது. |
| 2004 | தற்போதைய மத்திய அரசின் நக்சல் ஒழிப்பு பிரிவின் சிறப்பு ஆலோசகரும் முன்னாள் தமிழக காவல்துறை இயக்குனருமான திரு.K.விஜயகுமாா் I.P.S அவா்களின் தலைமையில் இயங்கி வந்த தமிழக காவல்துறையின் சிறப்பு இலக்கு படையானது ( Special Task Force) 18.10.2004 அன்று Operation Cocoon என்ற நடவடிக்கையின் வாயிலாக, தமிழகத்தின் சத்தியமங்கலம் வனப்பகுதியில் பெரும் அளவிலான சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த சந்தனமர கடத்தல் குற்றவாளி வீரப்பனையும் அவனது கூட்டாளிகளையும் கைது செய்ய முயற்சித்த போது அவா்கள் சிறப்பு இலக்குப்படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட்டாா்கள். அவா்களை சிறப்பு இலக்குப்படையினா் தற்காப்பு நடவடிக்கையாக திருப்பி சுட்டதில் அவா்கள் குண்டடிபட்டு இறந்து போனாா்கள். |
| 2004 | ஒருங்கிணைக்கப்பட்ட நவீன காவல் கட்டுப்பாட்டு அறை சென்னை மாநகரில் திறக்கப்பட்டது. |
| 2005 | செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் சென்னை மாநகரோடு இணைக்கப்பட்டு சென்னை பெருநகர (Greater Chennai) காவல் |

| | |
|---|---|
| | துறையாக்கப்பட்டது. அதன் வட்டார வரம்பு 588.7 சதுர கி.மீ ஆகும். இதில் உள்ளடக்கிய மொத்த காவல் நிலையங்கள் 156. |
| | மாநில குற்ற பதிவேடுகள் கூடத்திற்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டது. விரல் ரேகை கூடம், காவல் கணிணி பிரிவு, குற்ற செய்முறை விளக்கக் கூடம் மற்றும் புள்ளியியல் பிரிவு ஆகிய அனைத்தும் உள்ளடக்கப்பட்டது. |
| 2006 | ஆசியாவிலேயே மிக பெரியதும் நவீனமானதுமான புழல் சிறைச்சாலை திறக்கப்பட்டது. 3 வது காவல் ஆணையம் 30.08.2006 நாளிட்ட தமிழக அரசின் ஆணைப்படி அமைக்கப்பட்டது. |
| 2006 | 25.10.2006 அன்று ஹுண்டாய் மோட்டார்ஸ் நிறுவனம் நல்லெண்ணத்தின் அடிப்படையில் சென்னை பெருருநகர காவல் துறையின் ரோந்து பணியை மேம்படுத்த 100 ஹுண்டாய அக்ஸன்ட் கார்களை வழங்கியது. இப்போது சென்னை பெருநகர காவல் துறையே இந்தியாவிலேயே அதிகமான ரோந்து வாகனங்களை கொண்டதாக உள்ளது. |
| 2006 | தமிழக காவல்துறையில் தலைமைக் காவலர்கள் சார்பு ஆய்வாளர்களாக பதவி உயர்வு பெறுவதற்கான சரகத் தேர்வு முறை (Range Promotion Board Selection System) நீக்கப்பட்டு அவர்கள் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு பெற வகை செய்யப்பட்டது.<br><br>பதவி உயர்விற்கான வயது உச்சவரம்பு 55 ஆக இருந்ததை நீக்கப்பட்டு பணி ஓய்வு பெறும் நாள் வரையிலும் பதவி உயர்வு பெற வகை செய்யப்பட்டது. |
| 2007 | சென்னை காவல்துறை உருவாகி 150 வது ஆண்டு (1856-2006) நிறைவு விழா கொண்டாடப்பட்டது. |
| 2008 | தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகம் மற்றும் காவல் வடக்கு மண்டல அலுவலகம் ஆகியவை 15.03.2008 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறக்கப்பட்டது.<br><br>மூன்றாவது காவல் ஆணையம் தனது அறிக்கையை 13.02.2008 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் சமர்ப்பித்தது.<br><br>சென்னை பெரு நகர காவல் வட்டார வரம்பு பிரிக்கப்பட்டு சென்னை புறநகர் காவல் ஆணையர் அலுவலகம் அமைக்கப்பட்டது. 23.07.2008. முதல் செயல்படத் துவங்கியது. |

| | |
|---|---|
| 2009 | தமிழ்நாடு காவல்துறை தனது 150வது ஆண்டு விழாவை கொண்டாடியது. |
| 2010 | சென்னை ஓமந்துூரார் அரசினர் தோட்டத்தில் மார்ச் 2010-ல் புதிய தலைமைச்செயலகம் மற்றும் சட்டசபை வளாகம் மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. |
| 2011 | சென்னை புறநகர் காவல் ஆணையரகம் சென்னைப் பெருநகர் காவல் துறையுடன் இணைக்கபட்டு 24.08.2011 முதல் செயல்பட்டு வருகிறது. |
| 2011 | 36 நில அபகரிப்பு தடுப்பு சிறப்புப்பிரிவுகள் (ALGSC)துவக்கப்பட்டன. |
| 2012 | உங்கள் சொந்த இல்லம் திட்டம் காவலர் முதல் DSP வரை (Your Own House) துவக்கப்பட்டது. மொத்தம் 36,000 வீடுகள் கட்ட திட்டம் வகுக்கப்பட்டது. |
| 2012 | 28.02.2012 அன்று தமிழக காவல்துறையில் முதன் முதலாக அனைத்து காவல் அலுவலர்களுக்கும் Canteen Service Department (CSD) –என்ற இந்திய முப்படையினருக்கு அளிக்கப்படுவதைப் போன்றே மானிய விலையில் பொருட்களை வாங்குவதற்காக Tamil Nadu Police Subsidiary Canteen அங்காடி சேவையை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தமிழகத்தில் 3 இடங்களில் (1.ஆவடி TSP BN , 2. திருச்சி TSP BN 3.மதுரை TSP BN) மலிவு விலை அங்காடிகள் திறக்கப்பட்டன. |
| 2013 | சென்னை எழும்பூரில் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்ட சென்னைப் பெருநகர் காவல் ஆணையரகத்தின் புதிய அலுவலகத்தின் 9 நிலைக் கட்டிடம் திறக்கப்பட்டது. |
| 2013 | திருப்பூர் மாநகர காவல் ஆணையாளர் அலுவலகம் துவங்கப்பட்டது. |
| 2013 | தமிழக காவல்துறையில் முதன் முதலாக மொத்தம் 10,500 இளைஞர்களைக் கொண்ட தமிழ்நாடு சிறப்புக்காவல் இளைஞர் படை ( TN Special Police Youth Brigade) என்ற அமைப்பு துவக்கப்பட்டது. |
| 2013 | 2009 ம் ஆண்டு முதல் அகில இந்திய அளவில் நடைமுறையில் இருந்து வந்த குற்றங்களையும் குற்றவாளிகளையும் தேடும் வலைபின்னல் முறையான CCTNS (CRIME AND CRIMINAL |

| | |
|---|---|
| | TRACKING NET WORK SYSTEM) என்ற திட்டமானது தமிழகத்தில் துவக்கப்பட்டது. |
| 2014 | தமிழக காவல்துறையில் முதன் முதலாக தகவல் தொடர்பினை மேம்படுத்த இலவச குழும அலைபேசி சேவை (CUG - Unified Closer User Group)– என்ற முறை தமிழ்நாடு காவல்துறையில் துவக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக காவலர் முதல் காவல்துறை இயக்குனர் வரை உள்ள அனைவரும் தங்களுக்குள் இலவசமாக பேசிக்கொள்வதற்காக SIM card-கள் வழங்கப்பட்டன. |
| 2014 | தமிழக காவல்துறையில் பணிபுரியும் அனைவரும் தங்களது ஆரோக்கியத்தை பேணவும் அதிகரித்துக்கொள்ளவும் 40 வயது நிரம்பிய அனைத்து காவல் அலுவலர்களுக்கும் The Master Health Check Up என்ற திட்டம் துவக்கப்பட்டது. |
| 2015 | தமிழக காவல்துறையில் முதன் முதலாக கணினி மூலம் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யும் CIPRUS திட்டம் காஞ்சிபுரம் மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக துவக்கப்பட்டது. நாளடைவில் இத்திட்டம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. |
| 2015 | தமிழகத்தில் குற்றத்தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக தீவிர மற்றும் கடும் குற்றங்களை கண்காணிக்க SERIOUS CRIME SQUAD என்ற அமைப்பு 20 மாவட்டங்களில் துவக்கப்பட்டது. |
| 2015 | தமிழக காவல்துறையில் 2012-ம் ஆண்டு 1.ஆவடி TSP BN , 2. திருச்சி TSP BN 3.மதுரை TSP BN ஆகிய இடங்களில் துவங்கப்பட்ட மலிவு விலை அங்காடிகளைத் தொடர்ந்து 14.09.2015 ல் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்கள் மற்றும் தசிகா பிரிவுகளிலும் (மொத்தம் 44 இடங்களில்) பல்பொருள் அங்காடிகள் துவங்கப்பட்டன. இந்த அங்காடிகளில் காவலர்களுக்கு மானிய விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. |
| 2017 | பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது (Rape, Dowry Death, Acid attack & Human trafficking) சிறப்புக்கவனம் செலுத்தி உடனடி மற்றும் விரைவான நடவடிக்கைகளை எடுப்பதற்காக 2015 –ம் ஆண்டு மத்திய அரசு பிறப்பித்த ஆணைப்படி தமிழகத்தில் Investigative Unit Of Crime Against Women என்ற காவல் அமைப்புகள் புதிதாக சென்னை, வேலூர், விழுப்புரம், தர்மபுரி, தஞ்சாவூர், மதுரை மற்றும் |

| | |
|---|---|
| | திருநெல்வேலி ஆகிய 7 மாவட்டங்களில் துவக்கப்பட்டது. இந்த அமைப்புகள் கூடுதல் காவல் துறை கண்காணிப்பாளர் (ADSP) தலைமையில் செயல்படுகின்றது. |
| 2017 | 01.07.2017- அன்று<br>1.தமிழக காவல்துறையின் மொத்த காவல் அலுவலர்களின் எண்ணிக்கை -1,23,602<br>2.காவல் மண்டலங்கள் - 4<br>3.காவல் மாநகரங்கள் - 7<br>4.காவல் சரகங்கள் - 12 (1 இரயில்வே சரகம் உட்பட)<br>5.காவல் மாவட்டங்கள் - 33 (2 இரயில்வே மாவட்டங்கள் உட்பட)<br>6.உட்கோட்டங்கள் - 246<br>7.காவல் நிலையங்கள் - 1,334<br>8.அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் - 200<br>9.புறக் காவல் நிலையங்கள்- 27 |

## d.தமிழக காவல்துறை பயிற்சிப்பள்ளிகளின் வரலாறு

## ( History of Tamilnadu Police Recruits Schools)

காவல் பணியில் பல்வேறு பதவிக்கான காவல்அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் மாவட்டப் பள்ளிகள் நிறுவப்பட்டன. அப்பயிற்சி அடிப்படைப் பயிற்சியாக மட்டுமே விளங்கியதுடன் பல்வேறு இடர்பாடுகளையும் சந்திக்க நேர்ந்தது. தற்போதைய தலைமைக் காவலர் பதவிக்கு இணையான பதவியிலிருந்த ஓர் அதிகாரிதான் அந்த காலகட்டத்தில் “நிலையப் பொறுப்பு அதிகாரி” – என அழைக்கப்படும் காவல் நிலைய அலுவலகப் பொறுப்பை வகித்தார். நிலையப் பொறுப்பு அதிகாரிக்கானத் தேர்வில் தேர்ச்சிபெற்ற ஒரு காவலருக்கு அத்தகைய பொறுப்பு அளிக்கப்பட்டு வந்தது. நிலையப் பொறுப்பு அதிகாரிக்கு மேல் உயர் பதவி வகித்த ஓர் ஆய்வாளர் ஐந்து அல்லது ஆறு காவல் நிலையங்களுக்குப் பொறுப்பு அதிகாரியாக விளங்கினார். காவல் நிலையப் பொறுப்பு அதிகாரிக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டவர் அல்லது காவல் துறைக்கு வெளியிலிருந்து ஒருவர் ஆய்வாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டனர். நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டோரின் பணி நிரந்தரமாக்கப்படும் வரையில் அவர்கள் “தகுதிகாண் பருவ ஆய்வாளர்கள்” என்றே அழைக்கப்பட்டார்கள்.

**1896:-**அப்போதைய காவல் துறைத் தலைவராகப் பணியாற்றிய திரு.ஹம்மிக், ஐசிஎஸ், காவல் அலுவலர்களுக்கானப் பயிற்சி தரமானதாக இல்லை என்பதை அறிந்து பயிற்சிப் பள்ளி திறக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அரசுக்கு அறிக்கை ஒன்றினை சமர்ப்பித்தார். அதன்படி வேலூரில் காவலர் பயிற்சிப் பள்ளி ஒன்றைத் திறக்க அரசு உத்தரவு பிறப்பித்தது (அரசாணை எண்: 773 (நிதித் துறை) நாள் 27 ஏப்ரல் 1896). இங்கிலாந்து நாட்டில் தேர்வு செய்யப்பட்ட உதவி காவல் கண்காணிப்பாளர்களும் பயிற்சி பெற வேண்டியிருந்தது. பின்னர் 1896 – ஆம் ஆண்டு தனியார் பயிற்சியாளர்களும் பயிற்சி பெறும்பொருட்டு, இக்காவல் பயிற்சிப் பள்ளி தனது பெருங்கதவினை திறக்க வேண்டியதாயிற்று. அவர்கள் ரூ.60/- பயிற்சிக் கட்டணமாகச் செலுத்தி

பயிற்சி பெற முடிந்தது. இவ்வாறு வெளியிலிருந்து தேர்வு செய்யப்பட்டு காவல் பயிற்சிப் பள்ளியில் வெற்றிகரமாகப் பயிற்சி முடித்தவர்கள் நிலையப் பொறுப்புத் தேர்வில் தேர்ச்சிபெற்ற தலைமைக் காவலர்களுக்குப் பதிலாக அப்பொறுப்பில் பணியமர்த்தப்பட்டனர்.

**1897:-** பின்னர் பயிற்சியின் வழிமுறைகள் உயர்த்தப்பட வேண்டுமென காவல் துறைத் தலைவர் பரிந்துரை செய்த குறிப்பினை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு அதன்படி நிலையப் பொறுப்பு அதிகாரி பதவிக்கான காவலர்களுக்கு, மாவட்ட பள்ளிகளில் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும் ஆய்வாளர்களுக்கும் நிலையப் பொறுப்பு அதிகாரிகளுக்கும் பயிற்சியளிப்பதற்கென வேலூர் மாவட்டத்தில் தற்காலிக ஒருங்கிணைந்த பயிற்சிப் பள்ளியொன்றை அமைக்க அரசு உத்தரவு பிறப்பித்தது. அங்கு அவர்கள் ஆறு மாதகாலப் பயிற்சி பெற்றனர்.

**1900:-** திரு.எச்.ஏ.ஸ்டுவார்ட், ஐசிஎஸ் அவர்கள் வேலூரில் நிரந்தர பயிற்சி மையம் அமைக்க வேண்டுமென வலியுறுத்தி கருத்துரு ஒன்றினை சமர்பித்தார். அந்த நேரத்தில் காவல் ஆணையம் தனது பணியினைத் துவக்கிவிட்டபடியால் மேற்குறிப்பிட்ட கருத்துரு நிலுவையில் வைக்கப்பட்டது. பின்னர் காவல் அலுவலர்களுக்குப் போதிய பயிற்சி அளிப்பதற்கான குறிப்பிடத்தக்கப் பல்வேறு பரிந்துரைகள் செய்யப்பட்டன. அவற்றில் சில பரிந்துரைகள் பின்வருமாறு:

- ❖ ஒவ்வொரு மாகாணத்திலும் உதவி ஆய்வாளர் மற்றும் அதற்குமேலுள்ள பதவிக்கான அலுவலர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கென போதிய வசதியுடன் கூடிய மாகாணப் பயிற்சிப் பள்ளி அமைத்தல் வேண்டும். தலைமைக் காவலர்களுக்குப் பதிலாக, உதவி ஆய்வாளர்கள் நிலையப் பொறுப்பு அதிகாரியாகப் பணியமர்த்தப்பட வேண்டும்.
- ❖ காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு, சுற்றிலுமுள்ள பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்று வரக்கூடிய வசதிகொண்ட நகரம் ஒன்றில், உதவி / துணைக் காவல் கண்காணிப்பாளரை முதல்வராகக் கொண்டு இயங்கக்கூடிய மையப் பயிற்சிப் பள்ளிகள் தொடங்கப்பட வேண்டும்.

- ❖ ஆறு மாதகாலத்திற்குப் பயிற்சி அளித்தல் வேண்டும். பள்ளிகள் ஆண்டு முழுவதும் இயங்கும் விதமாக, எந்தெந்த மாவட்டங்களில் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டார்களோ, அந்தந்த மாவட்டப் பள்ளிகளில் அவர்களுக்குப் பயிற்சி அளித்திட வேண்டும்.
- ❖ கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் கண்காணிப்பாளர் அப்பயிற்சிப் பள்ளியின் பொறுப்பாளராக இருப்பார்.

வேலூா் நகரில் பயிற்சிப் பள்ளியாக ஏற்கனவே இயங்கிவந்த அத்தகையதொரு பயிற்சி மையம், காவல் ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்று, நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளியாக நிறுவப்பட்டது, ஆய்வாளர்கள் மற்றும் நிலையப் பொறுப்பு அதிகாரிகள் (பதவி உயர்வு பெற்ற தலைமைக் காலவர்கள்) ஆகியோருக்கான அப்போதைய பயிற்சிப் பாடத் திட்டங்கள் கைவிடப்பட்டு, தகுதிகாண் பருவ உதவி ஆய்வாளர்களுக்கான புதிய பயிற்சிப் பாடத் திட்டங்கள் நடத்தப்பட்டன. இவ்விதமாக, உதவி ஆய்வாளர்களுக்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு காவல் பயிற்சி கல்லூரி தொடங்கப்பட்டது. முதன் முதலாக, 1905 – ஆம் ஆண்டு, 183 உதவி ஆய்வாளர்களைக் கொண்ட அணிக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**1908:-** ஏப்ரல் மாதத்தில் பயிற்சிக் காவலர்களுக்கென பயிற்சிப் பள்ளியொன்று வேலூரில் திறக்கப்பட்டது. அப்போதைய மதராஸ் மாகாணத்தின் - வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை மற்றும் மதராஸ் ரயில்வே காவல் ஆகிய ஒன்பது மாவட்டங்கள், தத்தமது பயிற்சிக் காவலர்களை, வேலூா் பயிற்சிப் பள்ளிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டன. அதேசமயம், கோயம்புத்தூர், மற்றும் தற்போது ஆந்திர பிரதேசத்தில் உள்ள விழியநகரம் மற்றும் அனந்தப்பூர் ஆகிய இடங்களில் மையப் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்க அரசு அனுமதி வழங்கியது.

**1909** காவல் துறைத் தலைவர் அலுவலகத்தில், 1901 – ஆம் ஆண்டு முதல் வைக்கப்பட்டிருந்த காவல் அருங்காட்சியகம், வேலூர் காவல் பயிற்சிப் பள்ளிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. 1908 – ஆம் ஆண்டு நூலக மையமும், படிப்பறையும் தொடங்கப்பட்டன.


**1909** – ஆம் ஆண்டு நூலகப் பராமரிப்பிற்கென ரூ.750/- மானியத் தொகையாக அரசு வழங்கியது. அப்போதைய காவல் துறைத் தலைவர் திரு.D.W.G.கோவ்வி (Cowie) அவர்களின் பெயர் அந்த நூலகத்திற்குச் சூட்டப்பட்டது.

**1912**-மைய பயிற்சிப் பள்ளி கோவையில் தொடங்கப்பட்டது.

இவ்விதமாக, தற்போதைய தமிழகத்தின் வேலூர் மற்றும் கோயம்புத்தூரில், இரண்டு நிரந்தர காவல் பயிற்சிப் பள்ளிகள் உருவாயின.


நாடு சுதந்திரமடைந்த பின்னர் 1947 முதல் தற்போது 2017 வரையிலான காலகட்டம் வரை தமிழகத்தில் ஆவடி, விழுப்புரம், சேலம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி ஆகிய இடங்களில் கூடுதலாக 6 நிரந்தர காவல் பயிற்சிப்பள்ளிகள் துவக்கப்பட்டும் தமிழகத்தில் தற்போது மொத்தம் 8 நிரந்தர காவல் பயிற்சிப்பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவை மட்டுமன்றி, புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் பயிற்சிக் காவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக இடவசதியைக் கருத்தில் கொண்டு தேவைக்கேற்ப அவ்வப்போது தற்காலிக காவல் பயிற்சிப்பள்ளிகள் மாவட்டங்கள் தோறும் அமைக்கப்படும்.


மேலும், காவல் பயிற்சிப்பள்ளிகள் மட்டுமன்றி தமிழக காவல்துறையில் பணியில் உள்ள சார்நிலை காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளினர்களுக்கு பணியிடைப்பயிற்சி அளிப்பதற்காக முதலில் 1976 –ம் ஆண்டு 5 இடங்களில் பணியிடைப்பயிற்சி மையங்கள் துவக்கப்பட்டன. பின்னர் தமிழகத்தில் மேலும் கூடுதலாக 8 இடங்களில் பணியிடைப்பயிற்சி மையங்கள் துவக்கப்பட்டும் தற்போது சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம், சேலம், திருச்சி, தஞ்சாவூர், கோவை, மதுரை, திண்டுக்கல், ராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய 13 இடங்களில் செயல்படுகின்றன. இந்த பணியிடைப்பயிற்சி மையங்கள் அனைத்தும் சரக அளவில் ஒரு துணைக்காவல் கண்காணிப்பாளர் தலைமையில் செயல்படுகின்றன.



காவலர் பயிற்சி பள்ளி – 1896,
வேலூர்

காவல் பயிற்சிக் கல்லூரி, சென்னை-1976



தமிழ்நாடு காவல் உயர்ப் பயிற்சியகம்
ஊனமாஞ்சேரி, வண்டலூர் - 2008

# II. காவல் துறை அமைப்பு
# (POLICE ORGANIZATION)

## 1.மாநிலக் காவல் துறை அமைப்பு
## ORGANIZATION OF THE STATE POLICE

**மாநிலக் காவல் துறை அமைப்பு ( State Police Organization)**

தமிழ்நாடு காவல் துறை ஒரு தலைமை இயக்குநரின் (Director General of Police) நிர்வாகப் பொறுப்பில் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக சில காவல் துறை கூடுதல் இயக்குநர்களும், காவல் துறை தலைவர்களும், காவல் துறைத் துணைத் தலைவர்களும் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களும் பணிபுரிகின்றனர்.

தமிழ்நாடு காவல் துறையின் சட்டம் - ஒழுங்குப் பிரிவு பெருநகரம் - 1, மாநகரங்கள் - 6, மண்டலங்கள் - 4, சரகங்கள் - 12 மற்றும் காவல் மாவட்டங்கள் - 33 என பிரிக்கப்பட்டுள்ளன.

நிர்வாக வசதிக்கென, சென்னை பெருநகரம் தவிர, இதர மாவட்டங்களின் சட்டம், ஒழுங்குப் பிரிவுகள் பின்வரும் 4 மண்டலங்களாகவும், 12 சரகங்களாகவும், 33 மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு மண்டலமும் ஒரு காவல் துறைத் தலைவரின் கீழும், ஒவ்வொரு சரகமும் ஒரு காவல் துறைத் துணைதலைவரின் கீழும், ஒவ்வொரு மாவட்டமும் ஒரு காவல்துறைக் கண்காணிப்பாளரின் கீழும் இயங்கி வருகின்றன.

| மண்டலங்கள் (Zones – 4) | சரகங்கள் (Ranges-12) | மாவட்டங்கள் (Districts-33) |
|---|---|---|
| 1. வடக்கு மண்டலம் (சென்னை) | 1. காஞ்சிபுரம் | 1) காஞ்சிபுரம்<br>2) திருவள்ளுர் |
| | 2. விழுப்புரம் | 3) விழுப்புரம்<br>4) கடலூர் |
| | 3. வேலூர் | 5) வேலூர்<br>6) திருவண்ணாமலை |
| 2. மேற்குமண்டலம் (கோயம்புத்தூர்) | 4. கோயம்புத்தூர் | 7) கோயம்புத்தூர்<br>8) ஈரோடு<br>9) நீலகிரி<br>10) திருப்பூர் |
| | 5. சேலம் | 11) சேலம்<br>12) நாமக்கல்<br>13) தர்மபுரி<br>14) கிருஷ்ணகிரி |
| 3. மத்திய மண்டலம் (திருச்சி) | 6. திருச்சி | 15) திருச்சி<br>16) கரூர்<br>17) புதுக்கோட்டை<br>18) பெரம்பலூர்<br>19) அரியலூர் |
| | 7. தஞ்சாவூர் | 20) தஞ்சாவூர்<br>21) நாகப்பட்டிணம்<br>22) திருவாரூர் |
| 4. தெற்கு மண்டலம் (மதுரை) | 8. மதுரை | 23) மதுரை<br>24) விருதுநகர் |
| | 9. இராமநாதபுரம் | 25) இராமநாதபுரம்<br>26) சிவகங்கை |
| | 10. திருநெல்வேலி | 27) திருநெல்வேலி<br>28) தூத்துக்குடி<br>29) கன்னியாகுமரி |
| | 11. திண்டுக்கல் | 30) திண்டுக்கல்<br>31) தேனி |
| 5. இருப்புப்பாதை (காவல் துறை தலைவர்) | 12. இருப்புப்பாதை | 32) சென்னை<br>33) திருச்சி |

ஒவ்வொரு காவல் சரகமும் 2 முதல் 5 காவல் மாவட்டங்களை உள்ளடக்கியதாகவும், ஒவ்வொரு காவல் மாவட்டமும் ஒரு காவல் கண்காணிப்பாளரின் பொறுப்பிலும் உள்ளது. இவருக்கு கீழ் இரண்டு காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர்கள் உள்ளனர். அதில் ஒருவர் மாவட்டத்தின் தலைமையிட கூடுதல் காவல் கண்காணிப்பாளராகவும் (ADSP-HQ) மற்றும் பொது தகவல் அலுவலராகவும் (Public Information Officer) செயல்படுகிறார். மற்றொருவர் மாவட்டத்தின் மதுவிலக்கு அமல் பிரிவின் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக செயல்படுகிறார். ஒவ்வொரு காவல் மாவட்டமும் சில உட்கோட்டங்களை உள்ளடக்கியதாகவும், ஒவ்வொரு உட்கோட்டமும் ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளரின் பொறுப்பிலும் உள்ளன.

உட்கோட்டங்கள் சில வட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வட்டத்திற்கும் வட்ட காவல் ஆய்வாளர்கள் (Circle Inspectors) பொறுப்பு வகிக்கிறார்கள். இவரது கட்டுப்பாட்டில் காவல் நிலைய உதவி ஆய்வாளர்களும், புறக்காவல் நிலையங்களில் தலைமைக் காவலர்களும் பணிபுரிகின்றனர். சென்னை போன்ற பெருநகரம், மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களிலுள்ள பெரிய காவல் நிலையங்களில் காவல் ஆய்வாளரே பொறுப்பு அதிகாரியாக இருக்கிறார்.

**சென்னை பெருநகர காவல் துறையின் அமைப்பு (Greater Chennai City Police Setup)**

சென்னைப் பெருநகர காவல் துறை, காவல்துறை இயக்குநர் / காவல்துறை கூடுதல் இயக்குநர் (DGP/ADGP) பதவி நிலையில் உள்ள காவல் ஆணையர் (Commissioner of Police) தலைமையில்

செயல்பட்டு வருகிறது. காவல் துறை தலைவர் (IG) பதவி நிலையில் கூடுதல் காவல் ஆணையர்களும் (Additional Commissioners of Police) பொறுப்பில் இருந்து வருகின்றனர். நிர்வாகத்தில் இவருக்கு உதவியாக காவல் துறை துணைத்தலைவர் (DIG) பதவி நிலையில் இணை ஆணையர்கள் (Joint Commissioners of Police) மற்றும் காவல் கண்காணிப்பாளர் பதவி நிலையில் (SP) துணை ஆணையர்களும் (Dy.Commissioners of Police) பணியாற்றுகின்றனர்.

**சென்னைப் பெருநகர காவல் துறையின் தற்போதைய அமைப்பு பின்வருமாறு**

1. கூடுதல் காவல் ஆணையர்-தலைமையிடம் (Addl.COP. H. Qrs)
2. கூடுதல் காவல் ஆணையர் (சட்டம் & ஒழுங்கு- வடக்கு) Addl. COP. (L&O) North
3. கூடுதல் காவல் ஆணையர் (சட்டம் & ஒழுங்கு-தெற்கு) Addl. COP. (L&O) South
4. கூடுதல் காவல் ஆணையர் (குற்றம்) Addl. COP. (Crime)
5. கூடுதல் காவல் ஆணையர் (போக்குவரத்து) Addl. COP. (Traffic)

**காவல் இணை ஆணையர்கள் (Joint Commissioners of Police)**

1. இணை ஆணையர் (தெற்கு) (JCOP. South)
2. இணை ஆணையர் (வடக்கு) (JCOP. North)
3. இணை ஆணையர் (கிழக்கு) (JCOP. East)
4. இணை ஆணையர் (மேற்கு) (JCOP. West)
5. இணை ஆணையர் (போக்குவரத்து வடக்கு) (JCOP. Traffic North)
6. இணை ஆணையர் (போக்குவரத்து தெற்கு) (JCOP. Traffic South)
7. இணை ஆணையர் (மத்திய குற்றப்பிரிவு) (JCOP. CCB)
8. இணை ஆணையர் (தலைமையிடம்) (J. COP. H.Qrs)

ஒவ்வொரு மண்டலமும் (Zone) மாவட்டங்களை உள்ளடக்கி மொத்தம் 12 துணை ஆணையர்கள் பொறுப்பில் செயல்பட்டு வருகின்றன. மேலும் போக்குவரத்து நிர்வாகம், மத்திய குற்றப்பிரிவு கட்டுப்பாட்டறை, நுண்ணறிவுப்பிரிவு, ஆயுதப்படை மோட்டார் வாகனப்பிரிவு மற்றும் தலைமையிடம் ஆகிய பிரிவுகளிலும் துணை ஆணையர்கள் பணிபுரிகின்றனர்.

காவல் சரகங்கள் அனைத்தும் துணைக் காவல் கண்காணிப்பாளர் (DSP) பதவி நிலையிலுள்ள உதவி ஆணையர்கள் (ACPs) பொறுப்பில் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு காவல் நிலையமும் காவல் ஆய்வாளர் பொறுப்பில் இயங்கி வருகின்றன. இவரது கட்டுப்பாட்டில் சார்பு ஆய்வாளர்கள், தலைமை காவலர்கள் மற்றும் காவலர்கள் இயங்கி வருகின்றனர். சென்னை போன்ற பெருநகரம், மாநகரங்கள் மற்றும் மாவட்டங்களிலுள்ள பெரிய காவல் நிலையங்களில் காவல் ஆய்வாளரே பொறுப்பு அலுவலராக இருக்கிறார்.

## சென்னை பெருநகரம் மற்றும் ஆறு மாநகரங்கள்

### பெருநகரம்

1. சென்னை

### மாநகரங்கள்

1. மதுரை 2. கோயம்புத்தூர் 3. திருநெல்வேலி 4.திருச்சி 5.சேலம் 6. திருப்பூர்.

---------

# 2. தமிழ்நாடு காவல் நிலை ஆணைகள் - அறிமுகம்

# (INTRODUCTION TO TAMILNADU POLICE STANDING ORDERS)

1859-ம் ஆண்டின் தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டப்பிரிவு 9-ன் படி- காவல்துறை தலைமை இயக்குனர், காவல் துறையினரின் இருப்பிடம், பதவிநிலை, பணி ஆய்வு, அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய படைக்கலன்கள், நுண்ணறிவு மற்றும் தகவல் சேகரிப்பு போன்ற காவல்துறையின் திறமையான செயல்பாட்டிற்கான உத்தரவுகள் மற்றும் விதிமுறைகளை மாநில அரசின் ஒப்புதலுடன் பிறப்பிக்கலாம். இதன்படி பிறப்பிக்கப்படும் அரசு ஆணைகள், தலைமை அலுவலக சுற்றறிக்கை மற்றும் குறிப்பாணைகள் அடங்கிய தொகுப்பு "தமிழ்நாடு காவல் நிலை ஆணைகள்" ஆகும்.

**<u>தமிழ்நாடு காவல் நிலை ஆணைகள் நான்கு தொகுதிகளாக (Volumes) அமைந்துள்ளது.</u>**

தொகுதி- I -1999-ம் ஆண்டு வரை திருத்தியமைக்கப்பட்ட 856 காவல் நிலை ஆணைகள் 7 பகுதிகளில் 47 அத்தியாயங்களாக தொகுக்கப்பட்டுள்ளது.

- பகுதி-I காவல் துறையில் பணிபுரியும் ஆளினர்களுக்கு பணியில் சேர்க்கை, பயிற்சி, தேர்வு முறை, தண்டனை பதிவேடுகள் இவைகள் சம்மந்தப்பட்ட உத்தரவுகள் அடங்கியுள்ளன.
- பகுதி-II அதிகாரிகளுக்குண்டான அதிகாரம், கடமைகள் மற்றும் அறிவுரைகள்.
- பகுதி-III காவலரின் பணிகள்.
- பகுதி-IV கிராமக் காவலர்கள் மற்றும் காவல் துறையில் பிற பிரிவுகள்.
- பகுதி-V காவல் நிலையம் மற்றும் குற்ற வழக்குகள் தொடர்பான வழிமுறைகள்.
- பகுதி-VI குற்றத்தடுப்பு, குற்றவாளிகளை கண்காணித்தல் மற்றும் கைவிரல் ரேகை.

பகுதி-VII சென்னை அல்லாத பிற நகரங்களின் காவல் அமைப்பு, மாநிலம் முழுவதும் உள்ள காவல் அதிகாரிகள் ADSPs, DSPs, Inspectors, SIs to PCs ஆகியோர்களுக்கு சிறப்பு புலனாய்வு, கலந்தாய்வு, கருத்தரங்கம் முதலியவற்றை நடத்துதல்.

தொகுதி- II - இத்தொகுதியில் சில பிற்சேர்க்கைகளும் (**APPENDIX**) தமிழ்நாடு மாநிலத்திற்கு தொடர்புடைய தனி மற்றும் உள்ளூர் சட்டங்களின் விபரங்களும் அடங்கியுள்ளன.

தொகுதி III - காவல் நிலையங்கள் மற்றும் காவல் அலுவலகங்களால் பயன்படுத்தப்படும் பதிவேடுகள் (**RECORDS**), படிவங்கள் (**FORMS**) மற்றும் காலமுறை அறிக்கைகள் (**PERIODICAL RETURNS**) ஆகியவற்றின் மாதிரிப் படிவங்கள் (**MODEL FORMS**) அடங்கியுள்ளன. இந்த ஆவணங்கள் இருப்பில் இல்லாத போது இத்தொகுதியில் உள்ள மாதிரி ஆவணங்களின் நகல்களை எடுத்து அவசர நிமித்தம் அலுவல் பணிக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

தொகுதி IV அலுவலக நடைமுறை ஆணைகள்
Office Manual Orders. (OMO)

----------

# 3. ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல்படை (ARMED RESERVE, TAMILNADU SPECIAL POLICE)

## ஆயுதப்படை (Armed Reserve)

ஆயுதப்படை சென்னை நகரத்தில் முதன் முதலாக துவக்கப்பட்டது. 1887 ஆம் ஆண்டு திரு. ஏ.எச்.கில்ஸ் (A.H. Giles) என்பவர் சென்னை நகரக் காவல் துறையின் கடமைகளைப்பற்றி அனுப்பிய அறிக்கையிலிருந்து பின்வரும் தகவல்கள் தெரிய வருகின்றது.

ஆயுதப்படை முதன் முதலில் 8 தலைமைக் காவலர்கள் மற்றும் 60 காவலர்களைக் கொண்டு அமைத்திருந்தது. புயல், தீ, மற்றும் கலகம் போன்ற அசாதாரண நிகழ்வுகளில் நொடிப்பொழுதில் விரைந்து சென்று பணியாற்றும் வகையில் பயிற்சியளிக்கப்பட்டு நியமிக்கப்பட்டனர். மேலும் சந்தை, மாதா கோயில்கள் மருத்துவமனைகள் போன்ற மக்கள் அதிகம் கூடும் இடங்களில சட்டம் ஒழுங்கினை பராமரிக்க உதவிப்புரிந்தனர். உள்ளூர் கலவரங்கள் போன்றவற்றை அடக்கவும் தலக்காவல் நிலையங்களால் நிறைவேற்றப்பட்ட காப்பு அலுவல் போன்ற பணிகளை செய்யவும் அவசர காலங்களில் அலுவலர்களுக்கு உதவி புரியவும் 1921 ஆம் ஆண்டு மாவட்டங்கள் தோறும் ஆயுதப்படை தோற்றுவிக்கப்பட்டது (Source – History of the Madras Police)

ஆயுதப்படை என்பது ஒரு மாவட்ட நிர்வாகத்தின் முதுகெலும்பு போன்றது. மாவட்ட கண்காணிப்பாளரின் ஆணைக்குட்பட்ட இப்படை திறமைக்கும், கட்டுப்பாட்டுக்கும், எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஒவ்வொரு மாவட்ட மக்கள் தொகைக்கு ஏற்ப ஆயுதப்படை பிரிவுகளாகப் (Platoon) பிரிக்கப்பட்டு விரைந்து செயல்படும் பிரிவு (Active Platoon) மற்றும் தலைமையகப்பிரிவு (Head Quarter Platoon) என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. விரைந்து செயல்படும் பிரிவினர் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படும் பொழுதும், மற்றும் காப்பு அலுவலுக்கும் (Guard Duty), வழிக்காவல் அலுவலுக்கும் (Escort Duty) பயன்படுத்தப்படுவர். தலைமையகப் பிரிவிலுள்ள காவலர்கள் மோட்டார்

வாகனப்பிரிவில் பணிபுரிவா். ஆயுதப்படை, ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளா் அல்லது காவல் துணைக் கண்காணிப்பாளா் பொறுப்பில் இயங்குகிறது.

ஒவ்வொரு ஆயுதப்படையும் ஒரு ஆய்வாளரின் (Inspector AR) பொறுப்பிலுள்ளது. ஒவ்வொரு பிரிவும் 2 சார்பு ஆய்வாளா்கள், 4 தலைமைக் காவலா்கள் (HC's), 8 முதல் நிலைக் காவலா்கள் (Grade I Naik), மற்றும் 48 காவலா்களைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவும் நான்கு பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு உட்பகுதியும் ஒரு தலைமைக் காவலரின் பொறுப்பிலிருக்கும். இவருக்கு உதவியாக 2 முதல் நிலைக் காவலா்களும் மற்றும் 12 காவலா்களும் உள்ளனா். விரைந்து செயல்படும் பிரிவு (Active Platoon) மட்டும் மேற்காணும் அளவு கோலில் அமைக்கப்படும். தலைமையக பிரிவின் (Head Quarters Platoon) அளவு கோல் மாறுபடும் இப்பிரிவில் மோட்டார் வாகனப்பிரிவு, ஆயுதப்பணிமனைப் பிரிவு மற்றும் மரத்தச்சா்கள் (Carpenters) தையலா் (Tailors) ஆகியோர் அடங்குவா்.

தலைமையகப் பிரிவு ஒரு ஆய்வாளா் அல்லது உதவி ஆய்வாளா் பொறுப்பில் செயல்படும். மோட்டார் வாகனப் பிரிவிற்கு ஒரு உதவி ஆய்வாளரும், ஆயுதப் பணிமனைப் பிரிவிற்கு ஒரு உதவி ஆய்வாளா் அல்லது முதுநிலை தலைமை காவலரும் பொறுப்பு அதிகாரியாக செயல்படுவார்கள்.

## மாவட்ட ஆயுதப்படையின் பணிகள் (Duties of the district Armed Reserve)

1. மாவட்டத்தில் ஏற்படும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளை சமாளிக்க காவல் துறையினருக்கு உதவுதல்.
2. கருவூல நிதிக்கு பாதுகாப்பாக செல்லுதல்
3. கைதிகளுக்கு காப்பு அலுவல் செய்தல்
4. குறிப்பிட்ட இடங்களில் காப்பு வேலை செய்தல்
5. வாகன பராமரிப்பு மற்றும் ஓட்டுனா் பணி செய்தல்
6. வழிக்காவல் பணிகளைச் செய்தல்
7. மாவட்டத்திற்கு முக்கியமானவா்கள் (VIPs) வரும்போதும், திருவிழாக் காலங்களிலும் பாதுகாப்பிற்கு செல்லுதல்.

**தமிழ்நாடு சிறப்புக்காவல்படை (Tamil Nadu Special Police)**

தமிழ்நாடு சிறப்புக்காவல் படை, சென்னையை தலைமையிடமாக கொண்டு காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது.

தமிழ்நாடு சிறப்புக்காவல் படை, இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டு சென்னையை தலைமையிடமாக கொண்டு சென்னை மண்டலமாகவும், திருச்சியை தலைமையிடமாக கொண்டு திருச்சி மண்டலமாகவும் இயங்கி வருகிறது. இவ்விரு மண்டலங்களும் தலா ஒரு காவல்துறை தலைவர் மற்றும் ஒரு காவல்துறை துணை தலைவர் தலைமையில் இயங்கிவருகின்றன.

**தமிழ்நாடு சிறப்புக் காவல்படைகளின் அமைப்பு – (Tamilnadu Special Police Battalions)**

மலபார் சிறப்புக் காவல் படை (**MSP** ) ஆனது 1921 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் இந்த மலபார் சிறப்பு படையானது கேரளா மற்றும் சென்னை மாகாணத்திற்கென இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 1947 ம் ஆண்டு (G.O No:4112/Home Dept/Dated 07.11.1947 ) சென்னை மாகாண மலபார் சிறப்புப்படை திருச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டது. அதன் பின்னர், சென்னை மாகாணமானது தமிழ்நாடு என்று (G.O Ms.No:2051 Dated 03.08.1972) பெயர் மாற்றம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து திருச்சியில் செயல்பட்டு வந்த மலபார் சிறப்புக் காவல்படை பிரிவானது தமிழ்நாடு சிறப்புப்படை 1-ம் அணி என்று 1972 ம் ஆண்டு முதல் அழைக்கப்பட்டு வருகிறது.

ஆந்திரா மற்றும் சென்னை மாகாணத்திற்காக 4 சிறப்பு ஆயுதப்படைப்பிரிவுகள் (SAP-1 Avadi, SAP-2 Palani, SAP -3 Gundakkal, SAP-4 Vijayawada) 1947 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டன (G.O No:4112/Home Dept/Dated 07.11.1947). இதில் ஆவடியில் உருவாக்கப்பட்ட சிறப்பு ஆயுதப்படைப்பிரிவு தமிழ்நாடு சிறப்புக் காவல்படை 2-ம் அணி என்று 1972 ஆம் ஆண்டு முதல் அழைக்கப்படுகிறது (G.O Ms.No:2051 Dated 03.08.1972).

இப்படை காவல்துறை இயக்குநரின் கையிருப்புப் படையாக தீவிரமான சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் பொழுது அவற்றைச் சமாளிக்க உபயோகப்படுத்தப்படுகிறது. இச்சிறப்புக் காவல்படை 15 பெரும் படைகளாகவும் (**Battalions**) மற்றும் ஒரு படைப்பயிற்சி மையத்தையும் (**Regimental Centre**) கொண்டு கீழ்காணும் இடங்களைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகின்றன.

| வ.எண் | அணி | தலைமையிடம் | துவக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|
| 1 | தசிகா 1ம் அணி | திருச்சி | 30.09.1921 |
| 2 | தசிகா 2ம் அணி | ஆவடி | 18.12.1947 |
| 3 | தசிகா 3ம் அணி | வீராபுரம் | 1948 |
| 4 | தசிகா 4ம் அணி | கோவைபுதூர் | 21.11.1962 |
| 5 | தசிகா 5ம் அணி | ஆவடி (வைஷ்ணவி நகர்) | 04.09.1965 |
| 6 | தசிகா 6ம் அணி | மதுரை | 02.04.1981 |
| 7 | தசிகா 7ம் அணி | போச்சம்பள்ளி (தர்மபுரி) | 01.04.1981 |
| 8 | தசிகா 8ம் அணி | புது டெல்லி | 04.11.1985 |
| 9 | தசிகா 9ம் அணி | மணிமுத்தாறு | 01.04.1986 |
| 10 | தசிகா 10ம் அணி | உளுந்தூர் பேட்டை | 13.03.1996 |
| 11 | தசிகா 11ம் அணி | ராஜபாளையம் | 24.07.1997 |
| 12 | தசிகா 12ம் அணி | மணிமுத்தாறு | 11.03.2006 |
| 13 | தசிகா 13ம் அணி | பூவிருந்தவல்லி- சிறப்புப்படை (Special Force) | 04.12.2002 |
| 14 | தசிகா 14ம் அணி | பழனி | 15.10.2005 |
| 15 | தசிகா 15ம் அணி | சேவூர் (வேலூர் மாவட்டம்) | 18.06.2007 |
| 16 | படைப் பயிற்சி மையம் (Regimental Centre) | ஆவடி | 20.02.1967 |

## தமிழ்நாடு சிறப்புக் காவல் படைகளின் அமைப்பு:-

சிறப்புக் காவல் படையின் ஒவ்வொரு அணியும் (Battalion) ஒரு தளவாய் (SP/CMT), ஒரு துணைத் தளவாய் (DCMT) மற்றும் மூன்று அல்லது நான்கு உதவித் தளவாய்கள் (DSP/ACMT) கீழ் இயங்கி வருகின்றது. ஒவ்வொரு அணியும் (Battalion) 6 முதல் 7 நிறுமங்களாக (Company) பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிறுமமும் 3 முப்பிரிவுகளாகவும் (Platoons) பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு முப்பிரிவும் 3 பிரிவுகளாக (Sections) பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு முப்பிரிவிலும் 1 உதவி ஆய்வாளர் 3 அவில்தார்கள், 6 நாயக்குகள், 27 காவலர்கள், சமையலர் 1 ஆகியோர் பணியாற்றுவார்கள். தலைமையகப்பிரிவின் பொறுப்பில் 1 முதுநிலை ஆய்வாளர் (Officer Commanding ) செயல்படுவார். ஒவ்வொரு பிரிவிலும் 1 அவில்தார், 2 நாயக்குகள் மற்றும் 9 காவலர்கள் இருப்பார்கள்.

| பிரிவு | | தலைமை அதிகாரி |
|---|---|---|
| அணி (Battalions) | - | தளவாய் (Commandant) காவல் கண்காணிப்பாளர் |
| கம்பெனி (Company) | - | கம்பெனி கமாண்டர் (Company Commander) ஆய்வாளர் |
| பிளட்டுன் (Platoon) | - | பிளட்டுன் கமாண்டர் (Platoon Commander) சார்பு ஆய்வாளர். |
| பிரிவுகள் (Sections ) | - | பிரிவு கமாண்டர் (Section Commander) அவில்தார் |

**கம்பெனி படை பலம் (Company Strength)**

| | |
|---|---|
| ஆய்வாளர் | 1 |
| சார்பு ஆய்வாளர் | 4 |
| அவில்தார்கள் | 12 |
| நாயக்குகள் | 18 |
| காவலர்கள் | 90 |
| சமையலர் | 4 |
| சலவையர் | 2 |
| நாவிதர் | 1 |
| மொத்தம் | 132 ஆகியோர் அடங்குவர் |

இப்படைகள் மாவட்டங்களுக்கு அனுப்பபடும்போது அவை அந்தந்த மாவட்ட கண்காணிப்பாளரின் செயல் குறிப்புகளின்படியும், செயல்படும் முறையில் அவர்களுடைய உயர் அலுவலர்களின் கட்டுபாட்டிலும் இயங்குகின்றன. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம். திருச்சி, திருநெல்வேலி, ஆகிய மாநகரங்களில் அந்தந்த காவல் ஆணையாளரின் ஆணையின்படி இயங்குகின்றன. இப்படைகள் அந்தந்த அணியின் தளவாயின் நிர்வாக் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன. இவர்கள் தங்கள் தலைமையகத்தில் இருக்கும்போது காவலருக்கான அதிகாரம் எதுவும் கிடையாது. ஆனால் மாவட்டங்களுக்கு, மாநகரங்களுக்கு பணியாற்ற செல்லும் பொழுது இவர்களுக்கு காவலர்களுக்கான எல்லா அதிகாரங்களும், சட்டப்படியான பாதுகாப்பும் உண்டு.

**Raising Day:** தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் ஒவ்வொரு அணியும் உருவாக்கப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்த பின்னர் மேற்படி அணி துவக்கப்பட்ட நாளை Raising Day ஆக கொண்டாடப்பட்டு வருகிறது.

**புது தில்லி திகார் சிறை பாதுகாப்பு அலுவல் :**

தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் 8 வது அணியானது புது தில்லி திகார் சிறையின் பாதுகாப்பு அலுவலை மேற்கொண்டு வருகிறது. அதுமட்டுமன்றி, வெளி மாநிலங்களில் தேர்தல் நேரங்களிலும், முக்கியமான சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படும் போதும், அகில இந்திய அளவில் நடைபெறும் கோவில் திருவிழாக்களின் போதும் பாதுகாப்பு அலுவல் செய்வதற்காக தமிழ்நாடு சிறப்பு காவல் படையின் அணிகள் நியமிக்கப்படுகின்றன.

**மற்ற மாநிலப் பணிகள் (OTHER STATE DUTIES)**

தமிழ்நாடு சிறப்புக் காவல் அணிகளின் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் தமிழகத்தில் மட்டுமின்றி இதர மாநிலங்களிலும் அவைகளின் வேண்டுகோளின் பேரில் பணிபுரிந்து வருகின்றனர். குறிப்பிட்டுக் கூற வேண்டுமெனில் இப்படைப்பிரிவினர் இந்திய சுதந்திரத்திற்கு முன்பு கலகங்களை அடக்குவதிலும் சுதந்திரத்திற்கு பின்பு தாய்நாட்டின் எல்லைப்புறங்களை காப்பதிலும் (1971 ல் நிகழ்ந்த இந்திய பாகிஸ்தான் போர் உட்பட) அருஞ்செயல்

புரிந்துள்ளனர். மிசோரம் தீவரவாதிகளினால் அசாம் மாநிலத்தில் குழப்பம் ஏற்பட்ட போதும், 1962 ல் நிகழ்ந்த இந்திய சீனப்போரின் போது மேற்கு வங்காளத்திலும் சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமையினை சீர்திருத்தும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

**போக்குவரத்துக்காவல் பிரிவு (Traffic Police)**

சாலைகளில் வாகனப் போக்குவரத்தினை ஒழுங்குபடுத்த 1934 ஆம் ஆண்டு முதன் முதலாக சென்னையில் இப்பிரிவு துவங்கப்பட்டது. பெருகி வரும் வாகனங்களின் போக்குவரத்தினை ஒழுங்கு செய்யவும், சாலை விபத்துக்கள் தொடர்பான விசாரணையினை மேற்கொள்ளவும், மாநகரங்கள் மற்றும் பெரிய நகரங்களில் போக்குவரத்து அமலாக்கப்பிரிவு மற்றும் போக்குவரத்து புலனாய்வு பிரிவு என இரு பிரிவுகளாக செயல்பட்டு வருகிறது. இவற்றில் போக்குவரத்து அமலாக்கப்பிரிவில் பணியாற்றுபவர்கள் போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியிலும், சாலைவிதிகளை மீறுபவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து புலன்விசாரணை செய்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் பணியில் மட்டுமே ஈடுபடுவார்கள். போக்குவரத்துப் புலனாய்வு பிரிவில் பணி செய்பவர்கள் வாகன விபத்து வழக்குகளில் விபத்து ஏற்படுத்தும் வாகன ஓட்டுனர்கள் மீது வழக்கு பதிவு செய்து புலனாய்வு மற்றும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தல் ஆகிய பணிகளில் ஈடுபடுவார்கள். மாநகரங்களைத்தவிர அனைத்து மாவட்டங்களிலும் போக்குவரத்து அமலாக்கப்பிரிவுகள் செயல்பட்டு வந்தாலும் போக்குவரத்துப் புலனாய்வு பணிகளை தாலுக்கா காவல் துறையினரே (Local Police) மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை பெருநகரக் காவல்துறையினை பொறுத்தமட்டில் போக்குவரத்துப் பிரிவுக்கென தற்போது 1 கூடுதல் காவல் ஆணையர் தலைமையில் 2 காவல் இணை ஆணையர்களும் 4 காவல் துணை ஆணையர்களும் (கிழக்கு, வடக்கு, மேற்கு மற்றும் போக்குவரத்து திட்டமிடுதல்) அவர்களுக்கு உதவியாக போக்குவரத்து அமலாக்கம் மற்றும் போக்குவரத்து புலனாய்வு ஆகிய பிரிவுகளில் தேவையான காவல் அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

## சென்னை குதிரைப்படை (Chennai Mounted Branch)

திரு.வால்டர் ஸ்காட் என்பவர் சென்னை மாகாணத்தின் காவல் கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்ட, 1800 ஆம் ஆண்டிலிருந்து குதிரைகள் சென்னைக் காவல்துறையின் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. 1856 ஆம் ஆண்டு பயன்பாட்டிலிருந்த குதிரைகளின் எண்ணிக்கை 30 லிருந்து 80 ஆக அதிகரித்தது. அதன் பின்னர், 1926-ஆம் ஆண்டு, ஒரு சார்ஜண்ட் தலைமையில் குதிரைப்படைப்பிரிவு என்ற தனிப்படைப்பிரிவு ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்பட்டது. சென்னையில் உள்ள புதுப்பேட்டையில் இப்படை செயல்பட்டது. இப்படையில் இடம் பெற்றுள்ள பயிற்சி பெற்ற குதிரைகள், பண்டிகைகள், பேரணிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றின் போது கூடும் கூட்டத்தினரை கட்டுப்படுத்தவும் மற்றும் நெறிமுறைப்படுத்தவும் பயன்படுகின்றது. மேலும், சுதந்திரத்திருநாள் மற்றும் குடியரசுத்திருநாள் கொண்டாட்டங்களின் போது, படை அணிவகுப்பில் இப்பிரிவின் குதிரைகள் கலந்து கொள்கின்றன.

கோயம்புத்தூர் மாநகரத்தில் 1991 ம் ஆண்டு 10 குதிரைகளுடன் குதிரைப்படை தொடங்கப்பட்டு, 2006 வரை செயல்பட்டது. இடையில் இப்பிரிவு தவக்கத்தில் இருந்தது. அதன் பின்னர் 2017 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் மீண்டும் 5 குதிரைகளுடன் துவக்கப்பட்டு ரோந்து பணிக்காக பயன்படுத்தப்படுகிறது.

மதுரை மாநகரத்தில் 1987 ம் ஆண்டு குதிரைப்படை தொடங்கப்பட்டு, தற்போது 10 குதிரைகளுடன் ரோந்து பணிக்காக பயன்படுத்தப்படுகிறது.

---------

# 4. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை, குற்றங்கள் மற்றும் பொருளாதார குற்றப்பிரிவு

## i. குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (CRIME BRANCH CID)

குற்றப்பிரிவு புலனாய்வுத் துறை காவல் நிலை ஆணை எண். 486-ன்படி சென்னையை தலைமையிடமாகக்கொண்டு செயல்படுகிறது. இப்பிரிவு ஒரு காவல்துறை கூடுதல் இயக்குநரின் கீழ் செயல்படுகிறது. இவருக்கு உதவியாக ஒரு காவல்துறைத் தலைவரும் ஒரு காவல்துறை துணைத்தலைவரும், மூன்று காவல் கண்காணிப்பாளர்களும் பணிபுரிகிறார்கள். அரசு மற்றும் காவல்துறை இயக்குநரின் உத்திரவின் பேரில் சிக்கலான மற்றும் பல மாநிலக் குற்றவாளிகள் சம்மந்தப்பட்ட வழக்குகளையும் இப்பிரிவு புலனாய்வு செய்து வருகிறது. கள்ள நோட்டு தயாரித்தல், நஞ்சிடுதலை தொழிலாகக் கொள்ளுதல், ஏமாற்றுதல் மற்றும் பல மாநிலங்களில் வசிக்கும் குற்றவாளிகள் தொடர்பான வழக்குகள் ஆகியவற்றில் சிறப்பு புலனாய்வினை மேற்கொள்கிறது. இப்பிரிவு நீதிமன்ற உத்தரவுப்படியும் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்கிறது.

## ii.குற்றங்கள் (Crimes –ADC, NIB, VPC & SIT)

இப்பிரிவுகள் காவல்துறைக் கூடுதல் இயக்குநர் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. அவருக்கு உதவியாக ஒரு காவல் துறைத் தலைவர் இரண்டு காவல்துறை துணைத் தலைவர்கள் மற்றும் நான்கு காவல் கண்காணிப்பாளர்கள் செயல்படுகிறார்கள். பல்வேறு வகையான குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் மற்றும் அவை சம்பந்தப்பட்ட வழக்குகளை புலனாய்வு செய்வதே இதன் முக்கியப் பணியாகும். கூட்டுக் கொள்ளைத் தடுப்புப் பிரிவு (Anti Dacoity Cell), போதைப் பொருள் புலனாய்வுப் பிரிவு (Narcotic Intellgence Bureau) திருட்டு வீடியோ தயாரிப்பு மற்றும் விற்பனைத் தடுப்புப் பிரிவு (Video Piracy

Cell) ஆகியன இதில் செயல்படுகின்றன. ஒவ்வொரு பிரிவும் ஒரு காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் செயல்படுகின்றன.

மேலும், சிறப்புப் புலனாய்வு பிரிவு (Special Investigation Team - SIT) என்பது கலைக்கப்பட்டு, 2014-ம் ஆண்டில் Special Investigation Division (SID) என்ற புதிய பிரிவு துவக்கப்பட்டது. இதன் பிரிவுகள் சென்னை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஐந்து இடங்களில் செயல்படுகின்றன. அல்-உம்மா இயக்க தீவிரவாதிகள் மற்றும் மதத்தீவிரவாதிகள், தமிழர் விடுதலை இயக்கம் போன்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் தொடர்புடைய குற்றச்சம்பவங்களில் புலனாய்வு செய்வதே இதன் முக்கிய பணியாகும்.

### iii.பொருளாதாரக் குற்றங்கள் பிரிவு (Economic Offences wing)

பொருளாதாரக் குற்றங்கள் பிரிவு (**Economic Offences wing**) ஒரு காவல்துறை கூடுதல் இயக்குநரின் தலைமையின் கீழ் செயல்படுகிறது. இப்பிரிவில், இரு காவல் துறைத் தலைவர்கள், ஒரு காவல்துறைத் துணைத் தலைவர் மற்றும் மூன்று காவல் கண்காணிப்பாளர்கள் பணிபுரிகிறார்கள். இவ்வலுவலகத்தில் மூன்று பிரிவுகள் உள்ளன.

**அ) பொருளாதாரக் குற்றங்கள் பிரிவு:** இப்பிரிவானது, வங்கிசாரா நிதி நிறுவனங்கள், சீட்டு கம்பெனி நிறுவனங்கள் போன்றவைகளின் பண மோசடி வழக்குகளை இப்பிரிவு புலனாய்வு செய்கிறது.

**ஆ) சிலை திருட்டு தடுப்பு பிரிவு (Idol Wing) :** இப்பிரிவானது, சிலை திருட்டு மற்றும் கடத்துதல் தொடர்புடைய வழக்குகளை புலனாய்வு செய்கிறது.

**இ) வணிகவியல் குற்றங்கள் புலனாய்வு பிரிவு (CCIW, CID) :** இப்பிரிவானது, கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் நடைபெறும் மோசடிகள் தொடர்பான வழக்குகளை புலனாய்வு செய்கிறது.

-----------

# 5. நுண்ணறிவுப் பிரிவு

# (INTELLIGENCE WING)

அ) மாநில அளவிலானது : நுண்ணறிவுப்பிரிவு என்பது ஆறு பிரிவுகளைக் கொண்டது (காவல் நிலை ஆணை எண்.494). இவைகள் கீழ்க்கண்டவாறு அழைக்கப்படுகின்றன :

| | | | |
|---|---|---|---|
| 1) | தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை | - | Special Branch CID (SB CID) |
| 2) | பாதுகாப்பு பிரிவு | - | Security Branch CID |
| 3) | உள் வளைய பாதுகாப்பு பிரிவு | - | Core Cell |
| 4) | கியூ பிரிவு | - | Q Branch CID |
| 5) | சிறப்பு பிரிவு | - | Special Division |
| 6) | திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவுப் பிரிவு | - | Organized Crime Intelligence Unit (OCIU) |

-----

இந்த ஆறு பிரிவுகளும் காவல்துறை இயக்குனர் / காவல்துறை கூடுதல் இயக்குனர், நுண்ணறிவு (DGP/ADGP Intelligence) தலைமையில் இயங்குகின்றன. இவருக்கு உதவிபுரிய இரண்டு காவல்துறை தலைவர்கள் (IGP Intelligence & IGP Internal Security), துணைத்தலைவர் நுண்ணறிவு (DIG, CID Intelligence) மற்றும் ஆறு காவல் துறை கண்காணிப்பாளர்கள் உள்ளனர். தனிப்பிரிவு புலனாய்வு துறையின் பிரிவுகள் (CID Detachments) காவல்துறை மாவட்டங்கள் தோறும் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆறு பிரிவுகளில் SB CID, OCIU, Security Branch CID மற்றும் உள் வளைய பாதுகாப்பு பிரிவு (Core Cell) ஆகியவை காவல் துறை தலைவர் (IGP Intelligence) தலைமையில் இயங்குகின்றன. இவருக்கு உதவி

புரிய காவல் துறை துணைத்தலைவர் (DIG, CID Intelligence) மற்றும் நான்கு காவல் துறை கண்காணிப்பாளர்கள் உள்ளனர்.

மீதமுள்ள இரண்டு பிரிவுகளான Q Branch மற்றும் SB Special Division ஆகியவை IGP Internal Security தலைமையில் இயங்குகின்றன. இவருக்கு உதவியாக இரண்டு காவல் துறை கண்காணிப்பாளர்கள் உள்ளனர்.

ஆ) மாவட்ட மற்றும் மாநகர அளவிலானவை : மாவட்ட அளவிலான தனிப்பிரிவு, அந்தந்த மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தலைமையில் இயங்குகிறது. சென்னைப் பெருநகரம் மற்றும் இதர 6 மாநகரங்களில் செயல்படும் தனிப்பிரிவுகளுக்கு நுண்ணறிவுப்பிரிவு (Intelligence Section-IS) என்று பெயர். இவை சம்பந்தப்பட்ட மாநகர காவல்துறை ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன.

இவ்விரு பிரிவைச்சேர்ந்தவர்கள் மாவட்ட மற்றும் மாநகர அளவில் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளையும், அரசு ஊழியர்களின் செயல்பாடுகளையும், தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளையும், மாணவர் அமைப்புகளின் செயல்பாடுகளையும் மற்றும் குறிப்பாக தேச விரோதக் கொள்கைகள் கொண்ட பிரிவுகளின் செயல்பாடுகளையும் கண்காணித்து பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் முதலிய சட்டம் ஒழுங்கைப் பாதிக்கக்கூடிய பிரச்சனைகளைப் பற்றியும் மற்றும் காவல் நிலையங்களில் நடக்கக்கூடிய நிகழ்வுகள் குறித்தும் முக்கிய வழக்குகள் குறித்தும் காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்களின் நடத்தை குறித்தும் முன்கூட்டியே காவல்துறை கண்காணிப்பாளருக்கும் மற்றும் மாநகர காவல் ஆணையருக்கும் தகவல் அளிக்கிறார்கள்.

## 1.தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை ( Special Brach CID - SBCID)

மாநிலத்தில் அன்றாடம் நடைபெறும் அரசியல் நிகழ்வுகளை அரசின் கவனத்திற்கு கொண்டுவரும் முக்கியப் பணியினை இப்பிரிவு செய்து வருகிறது. மாவட்டங்கள் தோறும் இப்பிரிவு செயல்படுகிறது. இதற்கென இப்பிரிவினர் அரசியல் கட்சிகளின் செயல்பாடுகளையும், அரசு ஊழியர்களின் செயல்பாடுகளையும், தொழிற்சங்கங்களின் செயல்பாடுகளையும், மாணவர்

அமைப்புகளின் செயல்பாடுகளையும் மற்றும் குறிப்பாக தேச விரோதக் கொள்கைகள் கொண்ட பிரிவுகளின் செயல்பாடுகளையும் கண்காணித்து பொதுக்கூட்டங்கள், மாநாடுகள், ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் முதலிய சட்டம் ஒழுங்கைப் பாதிக்கக்கூடிய பிரச்சனைகளைப் பற்றி முன்கூட்டியே அரசுக்குத் தகவல் அளிக்கிறார்கள்.

## 2. பாதுகாப்பு பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (SB CID Security)

மேதகு குடியரசுத் தலைவர் (ஜனாதிபதி), மேதகு குடியரசு துணைத் தலைவர் (துணை ஜனாதிபதி) மாண்புமிகு பிரதமர், மாநில ஆளுநர்கள், அயல்நாட்டு தூதர்கள் மாநில முதல்வர்கள், மத்திய, மாநில அமைச்சர்கள், சபாநாயகர்கள் மற்றும் நீதிபதிகள் போன்ற முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் இப்பிரிவு இரண்டு காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாட்டிற்கு அவ்வப்போது வருகை தரும் வெளி மாநிலங்களின் முக்கிய நபர்கள் மற்றும் வெளிநாடுகளின் முக்கிய நபர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் பணியினையும் இப்பிரிவு செய்து வருகிறது. இப்பிரிவின் தலைமையகம் சென்னையில் உள்ளது. இப்பிரிவின் அதிகாரிகளும் காவலர்களும் முக்கிய பிரமுகர்களின் வருகைக்கேற்ப மாநிலம் முழுவதும் சென்று பாதுகாப்பு அளிப்பார்கள். மேலும், தமிழக ஆளுநர், தமிழக அமைச்சர்கள், சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகியவர்கள் வெளிமாநிலங்களுக்குச் செல்லும்போதும் உடன் சென்று பாதுகாப்பு அளிப்பார்கள்.

## 3. உள் வளைய பாதுகாப்பு பிரிவு - Core Cell

இப்பிரிவினர் முதலமைச்சரின் பாதுகாப்பு பணியினை மேற்கொள்கிறார்கள். இப்பிரிவானது ஒரு காவல் கண்காணிப்பாளரின் தலைமையில் இயங்குகிறது. இளஞ்சிவப்பு நிற (PINK BooK) பாதுகாப்பு புத்தகத்தில் உள்ள சரத்துக்களின் அடிப்படையில் பாதுகாப்பு மேற்கொள்ளப்படுகிறது.

## 4.கியூ பிரிவு புலனாய்வுத் துறை (Q Branch - CID)

கியூ பிரிவு புலனாய்வுத் துறையானது நக்சலைட்டுகள், தீவிரவாத இயக்கங்கள் மற்றும் தடை செய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்தவர்களின் செயல்பாடுகளைக்

கண்காணித்து தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதும் மற்றும் அது தொடர்பான வழக்குகளைப் புலனாய்வு செய்வதும் இப்பிரிவின் அலுவலாகும். சென்னையில் ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையிலும், மாவட்டங்கள்தோறும் காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையிலும் இப்பிரிவின் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## 5.சிறப்புப் பிரிவு (Special Division)

இப்பிரிவு மதத் தீவிரவாதம், தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணித்தல், அது பற்றிய நுண்ணறிவுத் தகவல்களைச் சேகரித்தல் மற்றும் அத்தகவல்களை தேவைப்படும் போது சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தல் ஆகிய பணிகளை செய்து வருகிறது. இதன் மாவட்டப் பிரிவுகள், சிறப்பு நுண்ணறிவுப் பிரிவு (Special Intelligence Unit-SIU ) என அழைக்கப்படுகிறது. சென்னையில் ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையிலும், சரகங்கள் தோறும் காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையிலும் இப்பிரிவின் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

## 6.திட்டமிட்ட குற்றங்கள் நுண்ணறிவுப் பிரிவு (Organized Crime Intelligence Unit)

மாநில நுண்ணறிவுப் பிரிவில் இயங்கி வரும் இப்பிரிவு கொடுங்குற்றங்களில் ஈடுபடும் கும்பல்கள், போக்கிரிகள் (Rowdies) கூலிப்படையினர், போதைப் பொருட்கள் கடத்துவோர், ஆயுதம் மற்றும் வெடி பொருட்கள் கடத்துவோர், ஆட்கடத்துவோர், ஹவாலா பணப் பரிவர்த்தனை, கள்ளநோட்டுகளை புழக்கத்தில் விடுதல் மற்றும் கறுப்பு பணத்தை வெள்ளையாக்குதல் (Money Laundering) போன்ற திட்டமிட்ட குற்றங்களில் அமைப்பு ரீதியாக ஈடுபடுவோர்கள் குறித்த நுண்ணறிவினை சேகரித்து தொடர்புடைய மாவட்டக் காவல் துறையினருக்கு அளித்து வருகிறார்கள். சென்னையில் ஒரு காவல் துறைக் கண்காணிப்பாளர் தலைமையிலும், ஒரு மண்டலத்திற்கு ஒரு காவல் துணைக் கண்காணிப்பாளர் தலைமையிலும் இப்பிரிவின் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

# 6. மாநிலக் குற்ற ஆவணக் காப்பகம்


## (State Crime Records Bureau)

### தமிழ்நாடு கைவிரல் ரேகைக் கூடம் / காவல் துறை கணினிப் பிரிவு / புள்ளியியல் பிரிவு / குற்றசெய்முறை விளக்கக் கூடம்.

### (TNFPB/Police Computer Wing/Statistical cell/ MOB)

### (www.tnpolice.gov.in/scrbpcw@tn.nic.in)

இப்பிரிவு ஒரு காவல்துறை கூடுதல் இயக்குநர் தலைமையில், சென்னையில் செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் நடைபெறும் அனைத்து வகைக் குற்றங்களைப் பற்றியும், குற்றவாளிகளைப் பற்றியும், காணாமல்போன நபர்கள் பற்றியும் தகவல்கள், அனைத்து காவல் மாவட்டங்கள் மற்றும் காவல் ஆணையரகங்களிலிருந்து பெறப்பட்டு, இங்கு தகவல்கள் சேமித்து வைக்கப்படுகின்றன. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைப் பற்றிய விவரங்களைக் கணினியில், பதிவு செய்து அதனை



மாவட்டக் காவல் துறைகளுக்கிடையே பரிமாற்றம் செய்து கொள்ள இக்காப்பகம் பெரிதும் உதவுகிறது. மேலும் இப்பிரிவு, கணினிப் பயிற்சி, குற்ற ஒருங்கிணைப்பு, கள்ள நோட்டு அச்சடிப்பு, மோட்டார் வாகனத் திருட்டு, சிலை திருட்டு, ஆயுத திருட்டு போன்ற முக்கியமான தகவல்களை காலாண்டுக்கு ஒரு முறை பதிவிதழ்கள் மூலமாகவும், தமிழகத்தில் நடைபெறும் அனைத்து குற்றங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் மற்றும் ஒப்பீட்டு பட்டியல்களை ஆண்டு பதிப்பின் மூலமும் வெளியிட்டு உதவுகிறது. இதன் உட்பிரிவுகள் கீழ்கண்டவாறு:

## 1) தமிழ்நாடு விரல் ரேகைக் கூடம் (Tamilnadu Finger Print Bureau)

## (காவல் நிலை ஆணை எண்கள் : 801 to 820)

கைவிரல் ரேகையைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கலாம் என்று தெரிவித்தவர் Dr.ஹென்றி பால்ட்ஸ் என்பவராவார். கைவிரல் ரேகையினை வகைபாடு செய்யும் முறையை முதலில் கண்டுபிடித்தவர் சர்.E.R.ஹென்றி என்பவராவார். இதில் ஒருவிரல் ரேகையை வகைபாடு செய்யும் முறையை கண்டுபிடித்தவர் பாட்லி என்பவர் ஆவார்.

**<u>கைவிரல் ரேகை தத்துவம்</u>** :

a) கைவிரல் ரேகை ஒவ்வொருவருக்கும் மாறுபட்டு இருக்கும்

b) கருவிலிருந்து கல்லறை வரை ஒருவரது கைவிரல் ரேகை மாறாது எனும் இரு தத்துவங்களின் அடிப்படையிலேயே விரல் ரேகை கூடங்கள் செயல்படுகின்றன.

தமிழ்நாடு விரல் ரேகைக்கூடத்தின் (Finger Print Bureau) தலைமையகம் சென்னையில் அமைந்துள்ளது. இதைத்தவிர, ஒருவிரல் ரேகைக்கூடங்கள் (Single Digit Finger Print Bureau) ஒவ்வொரு மாவட்டத் தலைநகரங்களிலும் இயங்கிவருகின்றன.

தமிழ்நாடு விரல் ரேகைக்கூடத்தில் (10 விரல் ரேகைக்கூடம்) ஹென்றி வகைப்பாடு முறையை பின்பற்றுகிறார்கள். இதில் 10 விரல்களின் ரேகைப்பதிவுகளை ஒன்று சேர்த்து வகைபாடு செய்யப்படுகிறது. அதிகமான விரல் ரேகைப்பதிவுகள் இங்குள்ள பதிவுருவில் இருக்கின்றன.

இப்பிரிவின் அலுவலர்கள் விபரம் பின்வருமாறு.

1) விரல்ரேகைக் கூட இயக்குனர் (Director of Finger Print Bureau) - காவல் கண்காணிப்பாளர் (Supdt. of Police Finger Print)
2) விரல்ரேகைக் கூட இணை இயக்குநர் (Joint Director of F.P.B) - கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (Addl SP F.P)

3) உதவி இயக்குநர்கள் (Assistant Directors) - துணை காவல் கண்காணிப்பாளர் (Dy.Supdt of Police FP)

4) கைரேகை நிபுணர்கள் (Finger Print Experts) - காவல் ஆய்வாளர் (Inspector of Police F.P)

5) விரல் ரேகை தேடுநர்கள் (F.P. Searchers) - காவல் உதவி ஆய்வாளர் (Sub- Inspector Police F.P)

இவர்கள் அனைவரும் இந்திய சாட்சியச் சட்டம் (IEA) Section 45ன் படி நிபுணர்கள் எனப்படுவர். மாநில விரல் ரேகை கூடம் 10 விரல் ரேகை (10 Digits) அடிப்படையாகவும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ள ஒருவிரல் ரேகை பதிவுக்கூடங்கள் (Single Digit F.P. Bureau) ஒரு விரல் ரேகையை அடிப்படையாக கொண்டும் இயங்கி வருகின்றன.

## விரல் ரேகைக் கூடத்தின் பணிகள்

1) குற்ற வழக்குகளில் தண்டனை அடைந்த அனைத்து குற்றவாளிகளின் விரல்ரேகைப் பதிவுகளை தண்டனை குறிப்பாணை (Conviction memo) மூலம் பெற்று அவற்றை வகைப்படுத்தி விரல்ரேகை கூடத்தின் வரிசை எண் (Finger Print Bureau Serial Number) அளித்தல்.

2) மாவட்டங்களில் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்படும் அனைத்து நபர்களின் விரல் ரேகை பதிவுகளையும் (Daily Arrest Print Slips) பெற்று ஆராய்ந்து அதில் எவரேனும் முன்தண்டனை – (Previous Conviction) பெற்றுள்ளார்களா? என்பது பற்றி ஒரு விரல் ரேகைப்பிரிவிற்கு தகவல் அனுப்புகிறது.

3) குற்ற சம்பவ இடத்தில் இருந்து கிடைக்கப்பெறும் விரல்ரேகை பதிவுகளை (Scene of Crime Chance Prints) பெற்று, கூடத்தின் பதிவிலுள்ள விரல் ரேகையுடன் ஒப்பிட்டு அவர்களது முன் தண்டனை பற்றிய விவரங்களை அனுப்புகிறது. இதன்மூலம் ஒரு முன் தண்டனை பெற்ற குற்றவாளி மீண்டும் குற்றம் செய்து வழக்கில் பிடிபட்டால்

அவ்வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யும் போது பிரிவு – 75 IPC யின் படி அதிகரிக்கப்பட்ட தண்டனை அளிக்கப்பட வழிவகுக்கிறது.

4. கொல்கத்தாவில் உள்ள மத்திய விரல் ரேகை கூடத்துடன் (Central Finger Print Bureau) தொடர்பு கொண்டு நமது மாநிலத்தில் குற்றம் செய்யும் அனைத்து மாநில குற்றவாளிகள் (Inter State Criminals) மற்றும் சர்வதேச குற்றவாளிகளை (International Criminals) கண்டு பிடிக்க உதவுகிறது.

## 2. காவல் கணினிப் பிரிவு (Police Computer Wing)

காவல் நிலையங்களில் பதிவு செய்யப்படும் வழக்குகள் மற்றும் அவ்வழக்குகளில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைப் பற்றிய விபரங்களை சேகரித்து கணினியில் பதிவு செய்து மாநிலம் முழுவதற்குமான குற்ற வழக்குகள் குறித்த தகவல் களஞ்சியமாக இப்பிரிவு திகழ்கிறது. மேலும் குற்றவாளிகளின் உருவப்படத்தை வரைந்து அடையாளம் காணுதல், தமிழ்நாடு மாநில குற்ற மதிப்பாய்வுரை (TAMIL NADU STATE CRIME REVIEW) எனும் ஆண்டு வெளியீட்டினை தயார் செய்தல், காவல்துறை பணியாளர்களுக்கு தேவையான அடிப்படை மற்றும் நவீன கணினி அளவிலான பயிற்சியளிப்பது, 13.03.2013 முதல் மைய அரசின், குற்றம் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைபின்னல் திட்டத்தை (Crime And Criminal Tracking Network System) தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தியதோடு அந்த திட்டத்தை செம்மையாக மேற்பார்வையிடுவது மற்றும் தமிழ்நாடு காவல்துறை வலை தளத்தை (TAMIL NADU POLICE WEB SITE -tn.police.gov.in) பராமரிப்பது ஆகியவை இப்பிரிவின் முக்கிய பணிகளாகும். கணினிப் பிரிவு மாநிலக் குற்றப் பதிவேடுகள் கூடம் காவல்துறை தலைவரின் தலைமையில் இயங்கிவருகிறது. இவர் மாநிலக் குற்றப் பதிவேடு கூடத்தின் இயக்குநர் பதவியினையும் வகித்து வருகிறார். நிர்வாகத்தில் இவருக்கு உதவியாக ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (**ADSP**) ஒரு துணைக்

கண்காணிப்பாளர் (**DSP**) காவல் ஆய்வாளர்கள் (**Inspectors**) மற்றும் காவல் உதவி ஆய்வாளர்கள் (**Sub-Inspectors** ) உள்ளனர்.

## கணினியின் பயன்கள் (Use of Computers)

1. குற்றங்கள், குற்றவாளிகளை பற்றிய தகவல் சேகரித்தல்
2. விரல் ரேகைகளைப் பதிவு செய்தல்
3. மனித சக்தியைப் பயன்படுத்தும் தகவல்(**Man Power Utilization Data**)
4. காவல் துறை அதிகாரிகளின் பணிமுறைத் தகவல்கள் (**Police Personnel Information System**)
5. உருவப்படங்கள் வரையும் முறைமூலம் குறிப்பிட்ட குற்றவாளியின் படத்தை கணினியில் வரைந்து, வாதி மற்றும் சாட்சிகளின் மூலம் குற்றவாளிகளை அடையாளம் காணுதல் (**Portrait Analysis and Criminal Identification system**)
6. தமிழ் நாடு மாநில குற்ற மதிப்பீடு (**T.N State Crime Review** ) எனும் ஆண்டு வெளியீட்டினை குற்ற செய்முறை விளக்கக் கூடத்தின் (**MOB** ) உதவியுடன் தயார் செய்தல்.
7. 13.03.2013 முதல் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்காணிக்கும் வலைபின்னல் திட்டத்தை (CCTNS) நடைமுறைப்படுத்தும் மற்றும் மேற்பார்வையிடும் பணியை செய்து வருகிறது.
8. தமிழ்நாடு காவல்துறை வலைதளத்தை (tn.police.gov.in) பராமரித்து வருகிறது.

## 3. புள்ளிவிவரப் பிரிவு – Statistical Cell

மாநில குற்றப் பதிவேடுகள் கூடத்தின் ஓர் அங்கமான புள்ளிவிவரப் பிரிவு, மாநிலத்தில் நிகழும் அனைத்து வகையான குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய புள்ளிவிவரங்களைத் திரட்டும் பணியினை மேற்கொள்கிறது. தமிழ் நாட்டில் நிகழ்ந்த குற்றங்கள் சம்பந்தமான அனைத்துப் புள்ளிவிவரங்களையும், தேசிய குற்றப் பதிவேடுகள் கூடத்திற்கு (**National Crime Records Bureau -NCRB**) அளிக்கும் பணியினை செய்கிறது.

### 4. குற்ற செய்முறை விளக்கக் கூடம் (Modus Operandi Bureau)

இக்கூடம், மாநில குற்றப் பதிவேடுகள் கூடத்தின் கீழ் இயங்குகிறது. இதன் இயக்குநர் காவல் துறைத் தலைவர். இக்கூடம் குற்றங்கள், குற்றவாளிகளின் செயல்முறைகள் குறித்த விவரங்களைச் சேகரித்து மாதாந்திர குற்ற ஆய்வறிக்கை (**Monthly Crime Review**) தயார் செய்கிறது. அத்துடன், தமிழ்நாடு குற்ற நுண்ணறிவு இதழ் (**T.N Criminal Intelligent Gazette**) இதழினையும் வெளியிடுகிறது. இக்கூடம் கீழ்க்கண்ட பதிவேடுகளையும் பராமரிக்கிறது.

1. **காணாமல் போனவர்களின் பட்டியல்** - **(List of Missing Persons)**
2. **தேடப்படுபவர்களின் பட்டியல்** - **(List of Wanted Persons)**
3. **பொது விவரக் கோப்பு** - **(General Subject File)**
4. **இதர அட்டவணைகள்** - **(Indexes - E.g Namewar Index etc.)**

குற்றங்கள் பலவகை இருப்பினும், குற்றவாளிகள் ஒவ்வொருவரும், ஒரு குறிப்பிட்ட குற்றத்தை நிகழ்த்துவதில் கைதேர்ந்த குற்றவாளிகளாக இருப்பதால், அவற்றைக் கண்டுபிடிப்பது காவல் துறையினருக்குப் பெரும் சவாலாக உள்ளது. குறிப்பிட்ட சில குற்றங்கள் எப்படி நிகழ்த்தப்படுகின்றன. அதில் ஈடுபடக்கூடிய குற்றவாளிகள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பன பற்றிய ‘‘குற்ற செய்முறைகளை’’ காவல் துறையினர் தெளிவாக அறிந்திருந்தால் மாத்திரமே, இத்தகையக் குற்றச் செயல்களைத் தடுக்கவோ அல்லது நிகழ்ந்துவிட்ட குற்றங்களை விரைவில் கண்டுபிடிக்கவோ இயலும்.

காவல் நிலை ஆணை (Police Standing Order) எண். 741-ல் பல்வேறு வகைக் குற்றங்கள் ஒவ்வொன்றும் தனித் தனியே வகைப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு, சொத்து சம்பந்தமான குற்றங்கள் பற்றிய செய்முறை விளக்க (Modus Operandi ) வகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| I (m) | ஆதாயத்திற்காக கொலைபுரிதல் |
| I (d) | கூட்டுக் கொள்ளை |
| I (r) | வன்முறையுடன் கூடிய கொள்ளை |
| II (s) | சுவர் ஏறி குதித்து, வீடுபுகுந்து கொள்ளை |
| II (l) | பூட்டை உடைத்து, வீடுபுகுந்து கொள்ளை |
| II (k) | கள்ள சாவி பயன்படுத்தி வீடுபுகுந்து திருடுதல் |
| III (s4) | தூங்கிக்கொண்டிருந்த நபர்களிடம் திருட்டு |
| IV (c1) | மிதிவண்டித் திருட்டு |
| IV (p) | ஜேப்படி திருட்டு |
| IV (s1) | சங்கிலி பறிப்பு |

---------

# 7. தமிழ்நாடு சிறப்பு இலக்குப்படை, தமிழ்நாடு அதிவிரைவுப்படை மற்றும் அதிவிரைவுப்படை பயிற்சிப்பள்ளி. (TNSTF, TNCF & TNCS)

**தமிழ்நாடு சிறப்பு இலக்குப்படை** (Tamil Nadu Special Task Force)

இப்பிரிவு ஒரு காவல் துறை தலைவரின் (ADGP, STF) நேரடி மேற்பார்வையில் ஒரு காவல் கண்காணிப்பாளரின் தலைமையின் கீழ் செயல்படுகிறது.

வனக் குற்றவாளியான சந்தனக்கடத்தல் வீரப்பனின் நடவடிக்கைகளை ஒடுக்கி அவனை கைது செய்ய ஏற்படுத்தப்பட்ட பிரிவாகும். ஒரு காவல் துறைக் கூடுதல் இயக்குநர் தலைமையில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படுகிறது. கடந்த 18.10.2004 அன்று மேற்கண்ட வீரப்பனும் அவனுடைய 3 கூட்டாளிகளும் சிறப்பு இலக்குப்படையினரின் தேடுதல் வேட்டையின் போது காவல்துறையினரை நோக்கி சுட்டார்கள். காவல்துறையினர் தற்காப்பிற்காக திருப்பி சுட்டபோது குண்டடிபட்டு இறந்துவிட்டனர். அதன் பின்னர் இப்பிரிவு மேற்கு மண்டலம் மற்றும் தென் மண்டலத்தில் கர்நாடகா மற்றும் கேரளா மாநிலங்களை ஒட்டியுள்ள தமிழக காடுகளில் தொடர்ந்து ரோந்து சுற்றி மாவோயிஸ்ட் அமைப்பினர் மற்றும் வனக்கொள்ளையர்கள் தமிழக காடுகளில் செயல்படாத வண்ணம் கண்காணித்து வருகிறார்கள். மேலும் அதன் மூலம் தமிழக வனத்தின் சொத்துக்கள் அழியாதவண்ணம் காத்து வருகின்றார்கள். இப்பிரிவானது அப்பர் பவானி, பந்தலூர், அத்திக்கடவு, மாங்கரை, மேட்டூர், ராஜபாளையம், மணிமுத்தார், பழனி, சத்தியமங்கலம், பொன்னை ஆகிய இடங்களில் தற்காலிக முகாம்கள் அமைத்து செயல்பட்டு வருகின்றது.

## தமிழ்நாடு கமாண்டோ மற்றும் பயிற்சிப்பள்ளி

**(T.N. Commando Force and Training School)**

சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் மருதம் வளாகத்தில் ஒரு கூடுதல் காவல்துறை இயக்குநரின் நேரடி மேற்பார்வையில் இரண்டு காவல் கண்காணிப்பாளர்கள் (கமாண்டோ படை மற்றும் கமாண்டோ பயிற்சி பள்ளி) (SP -TNCF & SP -TNCS) தலைமையின் கீழ் செயல்பட்டு வருகிறது. ஆண் மற்றும் பெண் கமாண்டோ காவலர்களை தேர்ந்தெடுத்து அவர்களுக்கு கடுமையான பயிற்சி அளித்து, எத்தகைய சந்தர்ப்பங்களையும் எதிர் நோக்கும் வண்ணம் தயார் செய்துவருகிறது. மேலும் வெடி குண்டுகளைக் கண்டறிந்து அவற்றினை செயலிழக்கச் செய்யும் பயிற்சி, மற்றும் திறமையை வளர்க்கும் பயிற்சி (Bomb Detection and Disposal Squad and Trainning ) நவீன ஆயுதங்களை கையாளுதல் பயிற்சி,(AK-47, SLR, STENGUN, PISTOL, REVOLVER, MACHINE GUN) துப்பாக்கி சுடும் பயிற்சி(REFLEX SHOOTING, SNAP SHOOTING) ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

# 8.சிறை நிர்வாகம்

# (Prison Administration)

அரசுத்துறைகளில் சிறைத்துறை மிகவும் பழமையானதாகும். இந்திய விடுதலைக்கு பின் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின்படி சிறைத்துறை மாநில பட்டியலில் (State List) ஒதுக்கப்பட்டு அந்தந்த மாநில அரசுகளால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. எனவே சிறைத்துறையின் அமைப்பு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டு காணப்படுகிறது. காவல் துறையைப் போலவே சிறைத்துறையும் தமிழக உள்துறையின் கட்டுபாட்டில் செயல்பட்டு வருகிறது.

ஆயினும் சிறைகளை நவீனப்படுத்தும் திட்டங்களை தீட்டுவதில் மத்திய அரசின் உள்துறையின் கீழ் இயங்கும் (BPRD-Bureau Of Police Research and Development) பெரும் பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் சிறைத்துறையின் அமைப்பினை காண்போம்.

சிறைத்துறை தலைமையக அமைப்பு சிறைத்துறை இயக்குநரின் (கூடுதல் காவல் துறை இயக்குநர்-ADGP) கீழ் ஐந்து சரகமாக (திருச்சி, சென்னை, மதுரை, கோவை, தலைமையகம்) பிரிக்கப்பட்டு சிறைத்துறை துணைத் தலைவரின் (DIG) கண்காணிப்பில் செயல்படுகிறது.

தமிழகத்தில் சிறைத்துறையின் ஒரு பிரிவாக நன்னடத்தை பிரிவு இயங்கி வருகிறது. இதன் தலைவராக தலைமை நன்னடத்தை கண்காணிப்பாளர், இவருக்கு கீழ் மண்டல நன்னடத்தை அலுவலர், நன்னடத்தை அலுவலர் ஆகியோர் செயல்படுகிறார்கள். இவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) மூலம் நேரடி நியமனமும். சிறை அமைச்சுப் பணியாளர் தொகுப்பில் பட்டப்படிப்பு முடித்து ஐந்து வருடம் உதவியாளர் பதவி வகித்தவர்களிடம் இருந்து விருப்பத்தின் பேரில் பணிமாற்றம் மூலம் நியமிக்கப்படுகிறது.

மதுரை சிறைத்துறை துணை தலைவா் தலைமையின் கீழ் மதுரை மத்திய சிறை, பாளையங்கோட்டை மத்திய சிறை மற்றும் மாவட்ட சிறைகள், கிளைச் சிறைகள் (ஆண்) இயங்குகிறது. திருச்சி சிறைத்துறை துணை தலைவா் தலைமையின் கீழ் திருச்சி மத்திய சிறை, கடலூா் மத்திய சிறை மற்றும் புதுக்கோட்டை பாஸ்டல் பள்ளி ஆகியவை இயங்குகிறது. சென்னை சிறைத்துறை துணை தலைவா் தலைமையின் கீழ் வேலூா் மத்திய சிறை, சென்னை புழல் 1 மற்றும் கிளைச் சிறைகள் (ஆண்) இயங்குகிறது. கோவை சிறைத்துறை துணை தலைவா் தலைமையின் கீழ் கோவை மத்திய சிறை, சேலம் மத்திய சிறை, சிங்காநல்லூா் திறந்தவெளி சிறை மற்றும் கிளைச் சிறைகள் (ஆண்) இயங்குகிறது. தலைமையக சிறைத்துறை துணைத்தலைவரின் (Women DIG) கீழ் பெண்கள் தனிச்சிறை, பெண்கள் கிளைச்சிறை பாஸ்டல் பள்ளி, பெண்கள் தனிச்சிறை புழல் 2 ஆகியவை இயங்குகிறது.

ஒவ்வொரு மத்திய சிறையும் சிறைத்துறை கண்காணிப்பாளரின் கீழ் இயங்குகிறது. இவரின் கட்டுப்பாட்டில் கூடுதல் கண்காணிப்பாளா், சிறை அலுவலா், ஆண் சிறை அலுவலா், உதவி சிறை அலுவலா், முதல்நிலை தலைமைக் காவலா், முதல் நிலை சிறைக் காவலா், இரண்டாம் நிலை சிறை காவலா் ஆகியோா் பணியாற்றுகின்றனா்.

ஒவ்வொரு மாவட்ட சிறையும் கூடுதல் சிறை கண்காணிப்பாளரின் கீழும் மற்றும் கிளைச்சிறை உதவி சிறை அலுவலா் கீழும் செயல்படுகிறது. இவரின் கட்டுபாட்டில் முதல்நிலை தலைமைக் காவலா், முதல் நிலை சிறைச் காவலா், இரண்டாம் நிலை சிறைக் காவலா் ஆகியோா் பணியாற்றுகின்றனா். தமிழகத்தில் தற்போது 134 கிளைச் சிறைச்சாலைகளும் 9 மாவட்ட சிறைச்சாலைகளும் இயங்கி வருகிறது.

# 9.தமிழ்நாடு தடய அறிவியல் துறை

## TAMILNADU FORENSIC SCIENCES DEPARTMENT

## (www.tn.gov.in/tamilforensic/)

காவல் துறையினரின் புலன் விசாரணையின்போது, குற்றவாளிகள் மற்றும் குற்ற நிகழ்விடங்களில் இருந்து சேகரிக்கப்படும் தடயங்களை, அறிவியல் பூர்வமாகப் பரிசோதனை செய்து குற்றத்துடன் குற்றவாளியைத் தொடர்புபடுத்துவதற்காக இத்துறை நிறுவப்பட்டுள்ளது.

### பொருட்களின் பரிமாற்றக் கொள்கை (Principle of Exchange)

இருபொருட்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்ளும் போது, பரிமாற்றம் நிகழ்கிறது என பிரான்சு நாட்டு அறிவியல் அறிஞர் சர் எட்மண்ட் லோகார்டு என்பவர் கண்டறிந்தார். இது லோகார்டின் பரிமாற்றக் கொள்கை எனப்படும் (Locard's Principle of Exchange) இக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு தடய அறிவியல் துறை செயல்படுகிறது.

கொலை வழக்குகளில் கிடைக்கக் கூடிய இரத்தம், மற்றும் இரத்தம் தோய்ந்த கருவிகள், மண் ஆகியவற்றையும், துப்பாக்கி, தோட்டா, ஆவணங்கள். கால் தடங்கள். மண்டை ஓடு போன்ற தடயங்களை ஒப்பிட்டு நோக்கி நீண்ட ஆய்வுக்குப் பிறகு இத்துறையின் நிபுணர்கள் முடிவினை வெளியிடுகிறார்கள். இவர்களுடைய சாட்சியம் நீதிமன்றத்தில் பிரிவு 45 இந்திய சாட்சியச் சட்டப்படி ஏற்கப்படுகிறது. சென்னையில் அமைந்துள்ள இவ்வாய்வகம் இயக்குநர் தலைமையில் செயல்படுகிறது. தடய அறிவியல் துறையில் கீழ்காணும் பிரிவுகள் செயல்படுகின்றன.

1. துப்பாக்கியியல் பிரிவு - Ballistics Division
2. இயற்பியல் பிரிவு - Physics Division
3. மனித இயல் ஆராய்ச்சிப் பிரிவு - Anthropology Division
4. இரத்தப் பரிசோதனைப்பிரிவு - Serology Division
5. ஆராய்ச்சிப் பிரிவு - Research Division

6. ஆவணப் பிரிவு - Documents Division
7. நிழற்படப்பிரிவு - Photography Division
8. நஞ்சுப் பிரிவு - Toxicology Division
9. உயிரியல் பிரிவு - Biology Division
10. வேதியியல் பிரிவு - Chemistry Division
11. மதுவிலக்குப் பிரிவு - Prohibition Division
12. போதைப்பொருள் பிரிவு - Narcotics Division
13. வெடிப்பொருள் பிரிவு - Explosives Division
14. கணினி தடயவியல் பிரிவு - Computer Forensics Division

ஒவ்வொரு பிரிவும் ஒரு உதவி இயக்குநரின் பொறுப்பில், அறிவியல் அலுவலர்கள் (Scientific Officers) உதவியுடன் செயல்படுகின்றன. மாநிலம் முழுவதும் 33 நடமாடும் தடய அறிவியல் கூடங்கள், அறிவியல் அலுவலர் பொறுப்பிலும் மற்றும் வேலூர், விழுப்புரம், தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, சேலம், தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 10 மண்டல தடய அறிவியல் ஆய்வுக் கூடங்கள், உதவி இயக்குநர்கள் பொறுப்பிலும் செயல்பட்டு வருகின்றன. நடமாடும் தடய அறிவியல் கூடங்களில் பணிபுரியும் அறிவியல் உதவியாளர், புகைப்பட நிபுணர் மற்றும் விரல்ரேகை நிபுணர் ஆகியோர் குற்றம் நடந்த இடங்களுக்கு சென்று புலனாய்வு அலுவலர்களுக்கு உதவி புரிகின்றனர்.

----------

# 10. மத்திய காவல் அமைப்புகள்

# CENTRAL POLICE ORGANIZATIONS

இந்தியாவில், தேசிய அளவில் மத்திய அரசும் (Central or Union Government), மாநில அளவில் மாநில அரசும் (State Government) அரசியல் அமைப்பின் அடிப்படையில் அரசாட்சி செய்துவருகின்றன. காவல்துறை என்பது மாநில அரசுகளின் பொறுப்பில் உள்ள துறையாகும். எனினும் மாநில காவல் துறையின் செயல்பாடுகளையும், சட்டம் ஒழுங்கு நிலைபாடுகளையும் மத்திய அரசும் கண்காணித்து வருகிறது. உள்நாட்டு பாதுகாப்பை மனதில் கொண்டு மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் சில காவல்துறை அமைப்புகள் (Central Police Organizations) செயல்படுகின்றன. அவை பின்வருமாறு.

### i. மத்திய நுண்ணறிவுப் பிரிவு – Intelligence Bureau

1904 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது மத்திய அரசின் நுண்ணறிவு பிரிவு அரசின் கண்களாகவும் காதுகளாகவும் செயல்படுகிறது. இது ஒரு இயக்குனரின் தலைமையில் புதுதில்லியில் இயங்கி வருகிறது. இப்பிரிவு பல்வேறு மாநிலங்களின் சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றியும் இனக் கலவரங்கள் பற்றியும் முன்கூட்டியே இரகசிய தகவல்களை சேகரிக்கின்றது. மேலும் மாநிலங்களிலுள்ள அரசியல் நிலை குறித்தும் மிக மிக முக்கிய மற்றும் முக்கியமான நபர்களின் பாதுகாப்பு பற்றியும், கண்காணித்து செயல்படுகின்றது. ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு (RAW) மாநிலத்தின் தலைநகரிலும் இப்பிரிவின் அமைப்பு ஒரு துணை இயக்குநரின் கீழ் செயல்படுகின்றது. இவ்வமைப்புகள் உதவி நுண்ணறிவுப் பிரிவு (Subsidiary Intelligence Bureau-SIB) எனப்படும். துணை இயக்குநருக்கு உதவியாக மத்திய நுண்ணறிவு அலுவலர்களும் (Central Intelligence Officers) உதவி நுண்ணறிவு அலுவலர்களும் (Assistant Central Intelligence Officers) பணிபுரிகிறார்கள்.

### ii. ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு–Research and Analysis Wing-RAW

**இத்துறையானது செப்டம்பர் 1968ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.** இப்பிரிவின் தலைமையகம் புதுடில்லியில் ஒரு இயக்குநரின் தலைமையில் இயங்கி வருகின்றது. வெளிநாட்டவர் இந்தியாவில் ஒற்றுவேலை (Espionage Activities) செய்யாமல் கண்காணிக்கவும், நம் நாட்டு பாதுகாப்பு தகவல்கள் மற்றும் அரசு இரகசியங்கள் வெளிநாட்டவர் கையில் சிக்காமல் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கின்றது. இவ்வமைப்பின் பிரிவுகள் ஒரு சில மாநிலங்களின் தலை நகரங்களிலும் செயல்பட்டு வருகிறது. வெளிநாட்டிற்குச் சென்று நம் நாட்டிற்கு எதிராக ஏதேனும் சதிவேலை நடைபெறுகிறதா என்பதை ஒற்றறிந்து தெரிவிக்கும் பணியினையும் செய்து வருகிறது.

### iii. மத்திய புலனாய்வு துறை – Central Bureau of Investigation - CBI

மத்திய புலனாய்வுத் துறை என்பது இந்திய அரசின் தலை சிறந்த புலனாய்வு அமைப்பாக விளங்குகிறது. **இத்துறையானது 1963ஆம் ஆண்டு 21ம் தேதி உருவாக்கப்பட்டது.** இதன் தலைமையகம் புதுடில்லியில் உள்ளது. இதன் தலைவர் இயக்குநர் எனப்படுவார். இந்த அமைப்பின் புலனாய்வுப் பிரிவுகள் தலைமையகத்திலும் மாநிலத் தலை நகரங்களிலும் செயல்படுகின்றன. மிகவும் முக்கியமான, சிக்கலான மற்றும் பரபரப்பான வழக்குகளை விசாரணை செய்ய தலைமையகத்திலேயே பதினெட்டு புலனாய்வு குழுக்கள் உள்ளன.

மத்திய அரசு மற்றும் மாநில அரசு ஊழல்கள், பதுக்கி வைத்தல் மற்றும் பல மாநிலங்களில் முக்கியமான விளைவுகள் அல்லது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சிறப்பு வழக்குகளையும் புலனாய்வு செய்கிறது. குற்றப் புலனாய்வு சம்பந்தப்பட்ட விஷயங்களில் இது மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையில் ஒருங்கிணைப்புப் பணியைச் செய்கிறது. மத்திய புலனாய்வுத் துறை சில நேரங்களில் நீதிமன்றங்களின் உத்திரவின் பேரில் மாநிலங்களில் உள்ள சில முக்கியமான வழக்குகளையும் புலனாய்வு செய்கிறது.

**மத்திய புலனாய்வு துறை விசாரணை மேற்கொள்ளும் வழக்குகளின் வகைகள்**

1. மத்திய அரசு ஊழியர்கள் கையூட்டு பெறும் வழக்கு.
2. ஏற்றுமதி இறக்குமதி போன்ற அந்நிய செலவாணி மோசடி சம்மந்தப்பட்ட வழக்குகள்
3. நாட்டின் எல்லைப் பகுதிகளில் நடைபெறும் சிக்கலான வழக்குகள்
4. நிதிநிலை சட்டங்களை மீறும் வழக்குகள்.
5. மாநில அரசுகளின் வழக்குகள் உயர்நீதி மன்றங்கள் மற்றும் உச்ச நீதிமன்றங்களின் வேண்டுகோளின்படி புலனாய்வு செய்யப்படுகின்றன.
6. அகில உலக காவல்துறை அமைப்புடன் (Interpol) தொடர்புடையது. அகில உலகக் குற்றவாளிகள் (International Criminals) சம்பந்தப்பட்ட விவரங்கள் தொடர்பான அனைத்து பணிகளும் மத்திய புலனாய்வு துறையின் அகில உலக காவல்துறை அமைப்புப் பிரிவு (CBI-Interpol Wing) மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

## iv. மத்திய சேமக் காவல்படை – Central Reserve Police Force - CRPF

இப்படை 1939 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு இந்தியாவின் ஆயுதப்படைகளுக்கு துணையாக உள்நாட்டு பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படுகிறது. இதன் தலைமையகம் புதுடில்லியில் ஒரு இயக்குநரின் கீழ் செயல்படுகிறது. இப்படையின் பிரிவுகள் ஒவ்வொரு மாநிலத்தின் தலைநகரிலும் செயல்படுகின்றது. கடுமையான சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்படும்பொழுது மத்திய அரசின் அனுமதியுடன் மாநில அரசு இப்படையைப் பயன்படுத்தலாம். மேலும் வெள்ளம், புயல் போன்ற இயற்கையின் சீற்றங்கள் தாக்கும் போது, இப்படையினரின் சேவை பயன்படுத்தப் படுகிறது. இப்படையின் நிர்வாகம் மத்திய சேமக் காவல்படை சட்டம் 1949ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது.

## v. எல்லை பாதுகாப்புப் படை – Border Security Force – (BSF)

இப்படை 1965ம் ஆண்டிலிருந்து ஒரு தலைமை இயக்குநரின் கீழ் புதுடெல்லியை தலைமையகமாக கொண்டு இயங்கி வருகிறது. இவ்வமைப்பு இராணுவப் படையின் தன்மை கொண்டது. தானியங்கி ஆயுதங்களை (Automatic

Weapon) குதிரைப்படை மற்றும் ஒட்டகப் பிரிவு ஆகியவை இப்படையில் அடங்கி உள்ளன.

இப்படையின் அலுவல்கள் :

1. போர் பற்றிய செய்தி மற்றும் தகவல்கள் சேகரித்தல்
2. எல்லைப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் உயிருக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பு அளித்தல்.
3. கள்ளக் கடத்தல் சம்பந்தமான நடவடிக்கைகளை தடுத்தல்.
4. நாட்டிற்கு அழிவு ஏற்படுத்தும் அந்நிய நாட்டினரின் ஊடுருவலை தடுத்தல் மற்றும் கண்காணித்தல்.
5. போர்க் காலங்களில் நம் நாட்டில் உள்ள விமானப் படைத்தளங்கள், எரிபொருள் கிடங்குகள் மற்றும் போர்க் கருவி கிடங்குகள் போன்றவற்றை பாதுகாத்தல்.
6. மாநிலங்களில் சட்டம் ஒழுங்கு நிலைமை கடுமையாக சீர்குலையும் காலங்களிலும் மற்றும் இயற்கையின் சீற்றங்களிலிருந்தும் பொதுமக்களை மீட்டு காப்பாற்றுதல் போன்ற பணிகளையும் இப்படையினர் செய்து வருகின்றனர்.

### vi. இந்திய திபெத்து எல்லை பாதுகாப்புப் படை – Indo-Tibetan Border Police-(ITBP)

இப்படை ஒரு காவல்துறை இயக்குநரின் தலைமையின் கீழ் புது டில்லியினை தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இந்திய திபெத்து எல்லைப் பகுதியில் கள்ளக் கடத்தல், போதை மருந்துகள் கடத்தல் மற்றும் அந்நியர்களின் ஊடுருவலை தடுப்பதற்காக இப்படை பயன்படுத்தப்படுகிறது.

### vii. காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கூடம்– Bureau of Police Research and Development – BPR & D

இவ்வமைப்பு புதுடில்லியை தலைமையகமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இந்திய காவல் துறையின் அமைப்பு, தேவைகள், வளர்ச்சிகள், பயிற்சி இடர்பாடுகள் மற்றும் அவற்றின் வழிமுறைகளை ஆராய்ந்து காண பயன்படுகிறது. மேலும் குற்றங்களை கட்டுப்படுத்தவும், சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலை நாட்டவும் அறிவியல் வாயிலான அறிவுரைகளை வழங்குகிறது. இப்பிரிவின் கீழ்

மத்திய துப்பறியும் பயிற்சி பள்ளிகள் (Central Detective Training Schools) முறையே கொல்கத்தா, சண்டிகார் மற்றும் ஐதராபாத் ஆகிய இடங்களில் அமைந்து உதவி ஆய்வாளர்களுக்கு அறிவியல் முறைப்படி புலனாய்வு செய்து குற்றங்களையும், குற்றவாளிகளையும் கண்டுபிடிக்க பயிற்சி அளிக்கப்படுகிறது.

### viii. தேசிய குற்ற ஆவணக் காப்பகம் – National Crime Records Bureau - (NCRB)

இப்பிரிவு காவல்துறை இயக்குநர் தலைமையில் புதுடில்லியை தலைமையகமாகக் கொண்டு 1986 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றது. இந்தியாவில் நடைபெறும் அனைத்து வகை குற்றங்களைப் பற்றியும் குற்றவாளிகளைப் பற்றியும் மாநிலங்களுக்கு இடையே ஒருங்கிணைந்த தகவல்களை பரிமாறிக் கொள்ள இப்பிரிவு உதவுகிறது. குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைப் பற்றிய விவரங்களை கணினியில் பதிவு செய்து அதனை மாநில காவல் துறைகளுக்கிடையே பரிமாற்றம் செய்து கொள்ள இக்காப்பகம் பெரிதும் உதவுகிறது. மேலும் கணினிப் பயிற்சி, குற்ற ஒருங்கிணைப்பு, கள்ள நோட்டு அச்சடிப்பு, மோட்டார் வாகனத் திருட்டு, சிலை திருட்டு, ஆயுத திருட்டு போன்ற முக்கியமான தகவல்களை காலாண்டுக்கு ஒருமுறை பதிவிதழ்கள் மூலமாகவும், இந்தியாவில் நடைபெறும் அனைத்து குற்றங்களைப் பற்றிய புள்ளி விபரங்கள் மற்றும் ஒப்பீட்டு பட்டியல்களை இந்தியாவில் குற்றங்கள் (Crime in India) என்ற ஆண்டு பதிப்பின் மூலமும் வெளியிட்டு உதவுகிறது.

### ix. இருப்புப்பாதை பாதுகாப்பு படை–Railway Protection Force-(RPF)

இரண்டாம் உலகப் போரின் போது இருப்புப்பாதை துறைக்குச் சொந்தமான பொருட்கள் பெருமளவில் களவாடப்பட்டன. அப்போது இருந்த பாதுகாப்பு அமைப்பு போதுமானதாக இல்லாததால் நீண்ட ஆராய்ச்சிக்கு பின் 1957 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி இருப்புபாதை பாதுகாப்புப்படைப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. இப்படை இருப்புப்பாதை சொத்துக்களையும் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களையும் காக்க பணியாற்றுகிறது. இருப்புப்பாதை தொடர் வண்டிகளில் பயணிகளுக்கு பாதுகாப்பாக

செல்லவும், இருப்புப்பாதை நிலையங்களில் சுற்றுக்காவல் செய்யவும் இப்படை பிரிவினர் பயன்படுத்தப்படுகின்றனர். இந்தியாவின் இருப்புப்பாதை வழித்தடங்கள் 9 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவும் ஒரு தலைமை காப்பு அதிகாரி பொறுப்பின் கீழ் இயங்கி வருகிறது. இவர் இருப்புப்பாதை காப்பு படை மற்றும் மாநில இருப்புப் பாதை காவல்துறை ஆகியவை இணைந்து செயல்பட உறுதுணையாக விளங்குகிறார். இருப்புப்பாதை துறையின் சொத்துக்களை எவரேனும் சட்ட விரோதமாக வைத்திருந்தால், அவர்களை விசாரிப்பதற்கு முழு அதிகாரமும் இருப்புப் பாதை சொத்துக்கள் (சட்ட விரோதமாக வைத்திருத்தல்) சட்டம் 1966ன்படி உள்ளது.

## X. மத்திய தொழில் பாதுகாப்புப் படை – Central Industrial Security Force - (CISF )

இப்படைப்பிரிவு 1969 ஆம் ஆண்டு மத்திய தொழிற் பாதுகாப்பு படைச் சட்டம் 1969-ன்படி அமைக்கப்பட்டது. இத்துறை சென்னை துறைமுக பொறுப்புக் கழகம், கல்பாக்கம் அணு சக்தி நிலையம், கூடங்குளம் அணு சக்தி நிலையம், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம், பாரத் கனரக மின்னணு நிறுவனம் போன்ற நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாக்க பயன்படுத்தப்படுகின்றது. இது வெறும் பாதுகாப்பு படையே ஆகும். கைது செய்யக்கூடிய குற்றங்கள் நிகழும் பொழுது புலனாய்வு செய்யும் அதிகாரம் இப்படைக்குக் கிடையாது. சம்ந்தப்பட்ட காவல் நிலையங்களில் புலனாய்வினை மேற்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பிரிவு 2000 ஆம் ஆண்டு முதல் விமான நிலையப் பாதுகாப்புப் பணியினையும் செய்து வருகிறது.

## xi. தேசிய காவல் பயிற்சிக் கழகம்–National Police Academy

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு இந்திய காவல் துறையில் பணிபுரிந்த அலுவலர்களுக்கு அந்தந்த மாநிலங்களிலேயே பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. பல்வேறு மாநிலங்களுக்கு இவ்வலுவலர்கள் பணிசெய்ய மாறுதல் செய்யப்பட்டதால் சீரான பயிற்சி அளிக்கப்பட வேண்டி இருந்தது. எனவே 1948 ஆம் ஆண்டில் இந்திய காவல் பணி (IPS) துவக்கப்பட்டு மத்திய காவல் பயிற்சி கல்லூரி, இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அபு மலையில் (Mount Abu) ஒரு

முதல்வரின் பொறுப்பின் கீழ் துவக்கப்பட்டது. பின்னர் 1956-ஆம் ஆண்டு முதல் இக்கல்லூரி பயிற்சிக் கழகமாக உயர்த்தப்பட்டு ஒரு இயக்குநரின் கீழ் செயல்பட்டு வந்தது. 1975-ஆம் ஆண்டு முதல் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஐதராபாத்தில் இப்பயிற்சிக் கழகம் சர்தார் வல்லபாய் பட்டேல் தேசிய காவல் பயிற்சி கழகம் (SVP National Police Academy) எனும் பெயரில் செயல்பட்டு வருகிறது.

இப்பயிற்சிக் கழகத்தில் கீழ்க்காணும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

1. இந்திய காவல் பணி அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி
2. மத்திய புலனாய்வுத்துறை அலுவலர்களுக்கான பயிற்சி
3. உயர் அலுவலர்களுக்கான பல்வேறு வகையான பயிற்சிகள்

இப்பயிற்சி மையம் காவல்துறை இயக்குநர் பதவி நிலையிலுள்ள ஓர் இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இவருக்கு உதவியாக பயிற்சி மற்றும் நிர்வாகத் துணை இயக்குநர்கள் உள்ளனர். நீதித்துறை அலுவலர்கள், தடய அறிவியல் அலுவலர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் ஆகியோர் உதவி இயக்குநர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

### xii. தேசிய பாதுகாப்பு காவல்படை–National Security Guard-NSG

தீவிரவாதிகளின் அச்சுறுத்தலுக்கு இலக்காகும் ஒரு சில மிக மிக முக்கிய நபர்களுக்கும் மற்றும் சிறப்பு பிரிவு அலுவலர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்தோடு ஏற்படுத்தப்பட்ட படையாகும். இது காவல் துறை இயக்குநரின் பதவி நிலையிலுள்ள ஒரு இயக்குநரின் தலைமையில் புது டில்லியில் உள்ளது. “X” “Y” and “Z” வகையைச் சார்ந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டிய நபர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதே இக்காவல் படையின் தலையாய பணியாகும். மிக மிக முக்கிய நபர்களுக்கு 24 மணி நேரமும் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. புலனாய்வு செய்யும் அதிகாரம் இல்லாத போதும் CISF-ன் சட்டம் 1969-ன் படி கைது மற்றும் சோதனையிடுதல் போன்ற அதிகாரங்கள் உள்ளன. ஐதராபாத்தில் ஒரு பயிற்சிக் கல்லூரியும், பிலாயில் ஒரு பயிற்சி நிலையமும் உள்ளன. இவை அனைத்தும் ஒரு காவல்துறை துணைத்

தலைவர் (DIG) அல்லது காவல் கண்காணிப்பாளரினால் (SP) நிர்வகிக்கப்படுகின்றன.

### xiii. குற்றவியல் மற்றும் தடய அறிவியல் நிறுவனம்–Institute of Criminology and Forensic Science-(ICFS)

இப்பிரிவு 1971 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு மத்திய உள்துறை அமைச்சகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் புதுடில்லியில் இயங்கி வருகிறது. இந்நிறுவனத்தில் காவல்துறை அலுவலர்கள், தடய அறிவியல் துறை நிபுணர்கள், நீதித்துறை அலுவலர்கள் மற்றும் சீர்திருத்தத் துறை அலுவலர்கள் ஆகியோர்களுக்கு குற்றவியல் மற்றும் தடய அறிவியல் ஆகியவற்றில் பயிற்சி அளித்து முதுநிலைப் பட்டமும், பட்டயமும் அளிக்கப்படுகிறது. தற்பொழுது அனைத்து மாநிலங்களுடனும் கணினி மூலம் தொடர்பு கொண்டுள்ளது.

### xiv. மத்திய விரல் ரேகைப் பதிவுக்கூடம்–Central Finger Print Bureau

விரல் ரேகைப்பதிவுக்கூடமானது 1897 ஆம் ஆண்டு கொல்கத்தாவில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர், இது 1955 ஆம் ஆண்டு மத்திய விரல் ரேகைப்பதிவுக்கூடமாக மாற்றப்பட்டது. இது ஒரு இயக்குநரின் கீழ் செயலாற்றி வருகிறது. மாநிலங்களில் செயல்படும் விரல் ரேகைக் கூடங்களின் பணியினை ஒருங்கிணைத்து மாநிலங்களுக்கிடையே செயல்படக் கூடிய குற்றவாளிகளின் விரல் ரேகை மூலம் அவர்களை அடையாளம் கண்டு புலனாய்வில் உதவி வருகிறது.

### xv. தேசிய புலனாய்வு பிரிவு–National Investigation Agency

இவ்வமைப்பு 2009 ஆம் ஆண்டு முதல் புது தில்லியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு காவல்துறை இயக்குநர் தலைமையில் இயங்கி வருகிறது. 2008-ஆம் ஆண்டின் தேசிய புலனாய்வு பிரிவு சட்டத்தின் படி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்பு மாநிலங்களில் நிகழும் மற்றும் மாநிலங்களில் பதிவு செய்யப்படும் தீவிரவாதம் தொடர்பான குற்றங்களைப் புலனாய்வு செய்து வருகின்றது. மேலும் இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 121 முதல் 130

வரையிலானவற்றையும் மற்றும் 489(A) முதல் 489(E) வரையிலான குற்றங்களையும் மத்திய அரசின் உத்தரவின்படி புலனாய்வு செய்து வருகிறது.

xvi. எல்லை ஆயுதப்படை (Sashastra Seema Bal-SSB)

இந்த அமைப்பு 1963-ம் ஆண்டு மார்ச் மாதம், சிறப்பு சேவைப்பிரிவு (Special Service Bureau) என்ற அமைப்பு இந்திய எல்லைகளில் அதன் நிலப்புற அமைப்பிற்கு ஏற்ற வகையில் சிறப்பு பயிற்சி பெற்ற பாதுகாப்பு பிரிவாக செயல்படும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. இப்பிரிவின் தற்போதைய பெயர் Sashastra Seema Bal ஆகும். இது சற்றேரக்குறைய 9917 கி.மீ. தூரத்திற்கு எல்லையில் பாதுகாப்பு பணியினை மேற்கொள்கிறது. தற்சமயம் காவல்துறை இயக்குனர் பதவியிலுள்ள அதிகாரியின் கீழ் இயங்கிவருகிறது.

----------

# 11. இருப்புப்பாதை காவல்

# RAILWAY POLICE

**இருப்புப்பாதை காவல்:**

இருப்புப்பாதை காவல் தமிழ்நாடு காவல்துறை நிர்வாகத்தின் கீழ் பணிபுரிகிறது. காவல்துறை கூடுதல் இயக்குநர் (ADGP Railways) இந்த அமைப்பிற்குப் பொறுப்பு வகிக்கிறார். இவருக்கு உதவியாக ஒரு காவல் துறை தலைவர் (IG Railways) மற்றும் ஒரு காவல் துறை துணைத் தலைவர் (DIG Railways) பணிபுரிகிறார்கள். இவர்களது தலைமையகம் சென்னையில் உள்ளது. மேலும் சென்னையைத் தலைமையகமாகக் கொண்டு ஒரு இருப்புப் பாதை காவல் கண்காணிப்பாளரும் (SP Railways, Chennai), திருச்சியை தலைமையகமாக கொண்டு ஒரு இருப்பாதை காவல் கண்காணிப்பாளரும்**(SP Railways, Trichy)** பணிபுரிகின்றனர். இவர்களின் கீழ் 5 இருப்புப்பாதை உட்கோட்டங்களும், 47 காவல் நிலையங்களும் 10 புறக்காவல்நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு முறையே இருப்புப்பாதை துணை கண்காணிப்பாளர்கள் (DSP Railways) இருப்புப்பாதை காவல் ஆய்வாளர்கள் (Inspector Railways) மற்றும் உதவி ஆய்வாளர்களும் (SI Railways) பொறுப்பு வகிக்கின்றனர். இருப்புப்பாதை காவல் படைக்கென தனிப்பிரிவு (Railways Special Branch) சென்னையையும், இருப்புப்பாதை குற்றப் பதிவேடுகள் கூடம் (RCRB) திருச்சியையும் தலைமையிடமாக கொண்டு இயங்கி வருகின்றன. இருப்புப்பாதை தொடர்வண்டி நிறுத்தும் மேடைகளில் (Railway Platforms) காவல் புரிந்தும், ஓடும் தொடர் வண்டிகளில் சுற்றுக் காவல் புரிந்தும், குற்றங்கள் நடவாமல் தடுப்பதே இருப்புப்பாதை காவலர்களின் முக்கிய அலுவல்கள் ஆகும். இருப்புப்பாதை மீது நடக்கின்ற குற்ற வழக்குகள், விபத்தினால் ஏற்படும் மரணம் முதலியவற்றை இருப்புப்பாதை காவல் துறையினரும் மற்றும் இருப்புப்பாதைக்கு வெளியே நடக்கின்ற குற்றங்களை சம்மந்தப்பட்ட தாலுக்கா காவல்துறையினரும் புலன் விசாரணை செய்கின்றனர்.

----------

# 12. காவல் பயிற்சிக் கல்லூரி
# (POLICE TRAINING COLLEGE)

**முன்னுரை :**

1896-ல் வேலூரில் முதன் முதலாகக் காவலர் பயிற்சிப் பள்ளி துவங்கப்பட்டது. தற்காலிக காவலர் பயிற்சிப் பள்ளியாக இருந்த வேலூர், 1900-ல் நிரந்தரக்காவலர் பயிற்சிப் பள்ளியாக மாற்றப்பட்டது. நிரந்தரக்காவலர் பயிற்சிப் பள்ளியாக இருந்த வேலூர் 1905-ல் காவல் பயிற்சிக் கல்லூரியாக மாற்றப்பட்டது. வேலூரில் இருந்த காவல் பயிற்சிக் கல்லூரி 1976-ல் சென்னை அசோக்நகருக்கு மாற்றப்பட்டது. 1990-ஆம் வருடத்திய 2-வது தமிழக காவல் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் 2008 ஆம் ஆண்டு மார்ச் 15ம் தேதியிலிருந்து தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம், வண்டலூர் - ஊனமாஞ்சேரியில் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**காவல் பயிற்சிக் கல்லூரி – Police Training College**

சென்னை, அசோக் நகரில் சுமார் ஆறு ஏக்கர் பரப்பளவில் இயங்கி வந்த காவல் பயிற்சிக் கல்லூரியில் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள், துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கான ஓராண்டுகால அடிப்படைப் பயிற்சி மற்றும் ஐதராபாத் தேசிய காவல் பயிற்சியகத்தில் (National Police Academy) பயிற்சி முடிந்து, தமிழ்நாட்டிற்கு பணியமர்த்தப்படும் ஐ.பி.எஸ். தகுதிகாண் பருவத்தினருக்கு (IPS Probationers) ஆறு வார காலப்பயிற்சி ஆகியன இதுவரையில் நடைபெற்று வந்தன.

மேற்குறிப்பிட்ட பயிற்சிகள் அனைத்தும் தற்போது தமிழ்நாடு காவல்துறை உயர்பயிற்சியகத்தில் நடைபெற்று வருகிறது.

இக்காவல் பயிற்சிக் கல்லூரி தற்போது காவல்துறைக் கூடுதல் இயக்குநர் (ADGP-Training) தலைமையில் ஒரு காவல்துறைத் தலைவர் (IGP-Training), ஒரு காவல் கண்காணிப்பாளர்(SP-Training)/முதல்வர்(Principal), ஒரு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (ADSP-Training) மற்றும் இரண்டு காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது.

இக்காவல் பயிற்சிக் கல்லூரியின் கீழ் - தமிழ்நாட்டில் கீழ்கண்ட 8 இடங்களில் நிரந்தரக் காவலர் பயிற்சிப் பள்ளிகள் (Permanent PRS) இயங்கி வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. வேலூர் | 2. கோயம்புத்தூர் | 3. தூத்துக்குடி | 4. திருச்சி |
| 5. ஆவடி | 6. விழுப்புரம் | 7. மதுரை | 8. சேலம் |

மேற்படி அனைத்து 8 காவல் பயிற்சிப்பள்ளிகளிலும் வருடத்திற்கு ஒரு முறை அல்லது இருமுறை தமிழகம் முழுவதும் உள்ள காவல் நிலையங்களில் பணியாற்றும் தலைமைக்காவலா்கள் மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளா்களுக்குப் புலனாய்வு பற்றி ஒரு வார கால புத்தாக்கப்பயிற்சிகள் (Refresher Course) நடத்தப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் அவ்வப்போது பணியில் அமர்த்தப்படும் காவலர்களுக்கான தற்காலிக காவலர் பயிற்சிப் பள்ளிகளும் (Temporary PRSs) இயங்கி வருகின்றன. புதிய காவலர்கள் தேர்வு செய்யப்படுவதற்கு ஏற்ப, இத்தகைய தற்காலிக காவலர் பயிற்சிப் பள்ளிகள் அவ்வப்போது மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு, அவை அனைத்தும் காவலர் பயிற்சிக் கல்லூரியின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இக்காவல் பயிற்சிக் கல்லூரியின் கீழ் - தமிழ்நாட்டில் 13 மாவட்டங்களில் காவல்துறை பணியிடைப் பயிற்சி மையங்களும் (In-Service Training Centres) செயல்பட்டு வருகின்றன.

**காவல் பயிற்சிக்கல்லூரி கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்கிறது :**

i. புதிதாக தேர்வு செய்யப்படும் இரண்டாம் நிலை காவலர்களுக்கு காவல் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி அளித்தலுக்கு தேவைப்படும் உதவி சட்ட போதகர்களையும், கவாத்து போதகர்களையும், அமைச்சுப் பணியாளர்களையும் மாவட்டங்களில் பெற்று தற்காலிக காவலர் பயிற்சிப் பள்ளிகளுக்குத் தருதல்.

ii. நிரந்தரக் காவல் பயிற்சிப் பள்ளிகளில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கும், அமைச்சுப் பணியாளர்களுக்கும், பயிற்சி காவலர்களுக்கும் ஊதியம் மற்றும் இதரப் படிகளைப் பெற்றுத் தருவது.

iii. பணியிடைப் பயிற்சி மையங்களில் (In-Service Training Centres) நடைபெறும் பயிற்சி வகுப்புகளை தீர்மானித்தல், கண்காணித்தல் மற்றும் நிர்வகித்தல்.

iv. மாவட்ட அளவில் காவல் ஆணையர்கள் மற்றும் காவல் கண்காணிப்பாளர்களால் நடத்தப்படும் பயிற்சிகளை மேற்பார்வையிடுதல்.

v. இதர பயிற்சிமையங்களில் நடைபெறக்கூடிய பயிற்சிகளுக்கு காவல்துறை அலுவலர்களை அனுப்பி வைத்தல்.

vi. நிரந்தர காவல் பயிற்சிப்பள்ளிகள் அமைப்பதற்கு தேவையான நிலம் கையகப்படுத்துதல் மற்றும் கட்டிடப்பணிகளை மேற்கொள்ளுதல்.

vii. உயர் அதிகாரிகளால் தேர்வு செய்யப்படும் தலைப்புகளில் பயிற்சி வகுப்புகள் நடத்துதல் அதில் கலந்துக் கொள்வதற்கு அதிகாரிகளை நியமித்து அனுப்ப மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள், சரக காவல்துறை துணைத் தலைவர்கள், மண்டல காவல்துறைத் தலைவர்கள் மற்றும் மாநகரக் காவல் ஆணையர்கள் ஆகியோர்களுக்கு தகவல் அனுப்புதல்.


viii. TOT Course (Training of Trainers) நடத்துவதற்கு பாடத்திட்டத்தை வகுத்தல் (Both Indoor and Outdoor) காவல் அதிகாரிகளைத் தேர்வு செய்து அவர்களை சிறந்த போதகர்களாக ஆக்குதல்.

ix. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து காவலர் பயிற்சிப் பள்ளிகளிலும் நடைபெறும் காவலர் பயிற்சிக்கான பாடத்திட்டத்தை (Syllabus) வகுத்தல், பயிற்சியை நடத்துவதற்குண்டான வழிகாட்டுதலை (Guidelines) வகுத்தல், பயிற்சிக்கான செலவினங்களை அரசிடம் பெற்றுத்தருதல், அந்தந்த காவலர் பயிற்சிப் பள்ளிக் கட்டிடங்களை பராமரித்தலைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல், காவலர் பயிற்சி பள்ளிகளின் அதிகாரிகளுக்கு அவ்வப்போது ஆலோசனை மற்றும் அறிவுரைகள் வழங்குதல் மற்றும் கண்காணித்தல்.

----------

# 13. தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம்

# (TAMILNADU POLICE ACADEMY)



2008 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகம், வண்டலூர் அருகில் ஊனமாஞ்சேரி என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. காவல் துறை கூடுதல் இயக்குநர் (ADGP), காவல்துறைத் தலைவர் (IGP) ஒரு காவல்துறைக் கண்காணிப்பாளர் (SP) நான்கு காவல்துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள் (ADSP) ஏழு துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் (DSP) ஆகியோருடன் இயங்கி வருகிறது.

இந்த வளாகம் 129 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. கட்டுமான மதிப்பீடு சுமார் ரூபாய் 48.23 கோடி ஆகும். இதன் கட்டிடப் பரப்பு (Plinth Area) 4,93,000 சதுர அடி ஆகும். (இதுவரை 3,66,000 சதுர அடி பரப்பளவு கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கட்டடப் பரப்பு, இரண்டாம் கட்டத்தில் (Phase-II) முடிக்கப்பட உள்ளது). வளாகத்தின் உள்ளே 2 கி.மீ. நீளத்திற்குக் காங்கிரீட் சாலை போடப்பட்டுள்ளது.

இவ்வாளகத்தில் நேரடியாக தேர்வு செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்கள் மற்றும் துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கான ஓராண்டு கால அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படும். மற்றும் ஐதராபாத் தேசிய காவல் பயிற்சியகத்தில் (National Police Academy) பயிற்சி முடித்து, தமிழ்நாட்டிற்கு பணியமர்த்தப்படும் ஐ.பி.எஸ். தகுதிகாண் பருவத்தினருக்கு (IPS Probationers) ஆறு வாரகாலப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும் தமிழ்நாட்டில் பணியில் இருக்கும் அனைத்து நிலையிலான காவல் அலுவலர்களுக்கு 9 வாரகால பயிற்சியான (Pre Promotion Training) என்ற பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இது மட்டுமல்லாமல் உயர் அலுவலர்களால்

தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கியமான சில தலைப்புகளில் குறுகிய கால பயிற்சி (Capsule Course) தமிழகத்தில் உள்ள அனைத்து நிலை அலுவலர்களுக்கும் இரண்டு அல்லது மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

இங்கு உதவி-ஆய்வாளர்களுக்கான அறைகள் 408-ம், துணை கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கான அறைகள் 40-ம் மற்றும் உயர் அலுவலர்களுக்கான அறைகள் 18-ம் அடங்கிய தங்கும் விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. பயிற்சியளிக்க எட்டு வகுப்பறைகளும், நான்கு கவாத்து மைதானங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், நூலகம், கணினி மையம், மாதிரி காவல் நிலையம், தடயவியல் மையம், தொழில்நுட்பவியல் மையம், உடற்பயிற்சிக் கூடம், தியான மண்டபம் முதலிய வசதிகளும் அமைந்துள்ளன. இவ்வளாகத்தைச் சுற்றி உள்ள மலைகளில் மலை ஏற்றம் போன்ற பயிற்சிகள் அளிக்கவும் வசதி உள்ளது.

பயிற்சி அளிக்கும் அலுவலா்கள் 88 பேருக்கான குடியிருப்புகள் கலையரங்கம், மருந்தகம் முதலிய வசதிகளும் உள்ளது.

இவ்வளாகத்தில் அனைத்து வேலைகளையும் தமிழ்நாடு காவல் வீட்டுவசதிக் கழகம் மேற்கொண்டுள்ளது. சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் விதத்தில் கட்டட வேலை செய்யப்பட்டுள்ளது. கழிவு நீரைத் தூய்மைப்படுத்தும் நிலையமும், தூய்மைப் படுத்தப்பட்ட நீர்த்தேக்க நிலையும் அமைக்கப்பட்டுள்ளன. கதிரியக்க சக்தியில் (Solar Power) இயங்கும் விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. மரம் நடுதல் மற்றும் மழை நீர் சேகரிப்பு ஆகிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சுற்றுப்புற மாசற்ற வளாகமாக இது இயங்கி வருகிறது.

சுமார் 800 பேர் வரை காவல்துறை அலுவலர்கள் பயிற்சி பெறக்கூடிய அளவில், நாட்டின் காவல் துறைப் பயிற்சி நிறுவனங்களுள் மிகப் பெரியதாக மட்டுமின்றி, மற்ற பயிற்சி நிறுவனங்களுக்கு எடுத்துக் காட்டாக தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் திகழ்கிறது.


கணினி ஆய்வுக்கூடம் (Cyber Lab) என்றழைக்கப்படும் கணினி குற்றங்கள் பற்றி விசாரணை செய்ய பயிற்சியளிக்க ஆய்வுக் கூடம் ஒன்று கட்டப்பட்டு சிறப்பாக பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த உயர்பயிற்சியகத்தில் சமீபத்தில் 2016-ம் ஆண்டு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 1013 உதவி ஆய்வாளர்கள் (ஆண்கள்,பெண்கள் மற்றும் ஒரு திருநங்கை உட்பட) ஓராண்டு அடிப்படைப்பயிற்சியினை முடித்துள்ளனர். தற்போது, இங்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர்களுக்கான அடிப்படைப்பயிற்சி நடைபெற்று வருகிறது.

----------

# 14. காவல் தொலை தொடர்பு பிரிவு

# POLICE TELECOMMUNICATION BRANCH



காவல் தொலை தொடர்பு பிரிவு, காவல் துறை கூடுதல் இயக்குனர், தொழில்நுட்பம் (ADGP – Technical Services) அவர்கள் கட்டுப்பாட்டில் காவல் துறைத் தலைவர், தொழில்நுட்பம் (IGP – Technical Services) தலைமையில், ஒரு காவல்துறைத் துணைத்தலைவர் (DIG-Technical Services), காவல்துறைக் கண்காணிப்பாளர் (SP-Technical) ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகிறது. காவல்துறை சரகங்களில் காவல் துணைக் கண்காணிப்பாளர்களும் (DSP Technical) மாவட்டந்தோறும் தொழில்நுட்ப ஆய்வாளர்கள் மற்றும் உதவி-ஆய்வாளர்களும் (Inspectors and Sub-Inspectors – Technical) காவல்துறையின் தகவல் தொடர்பு தொழில் நுட்பப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தொலைத் தொடர்பு தொழில் நுட்பத்தை முதன்முதலாக காவல்துறை பயன்பாட்டிற்காக அறிமுகப்படுத்தி, இந்திய நாட்டின் மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக விளங்குவது தமிழ்நாடு காவல்துறை தான். 1921 ஆம் ஆண்டிலேயே தமிழகக் காவல் துறையினர் கம்பியில்லா தொலைபேசி என்றழைக்கப்படும் ‘wireless’ கருவிகள் மூலம், வான் அலைகளைப் (Radio Waves) பயன்படுத்தி தங்களுக்குள் தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர்.

காவல் தொலைத் தொடர்பு பிரிவு, தமிழ்நாடு காவல்துறையினர் பயன்பாட்டிற்கென கீழ்க்குறிப்பிட்ட பல்வேறு தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்பக் கருவிகளை அறிமுகப்படுத்தி, பராமரித்து வருகிறது (Information Communication Technology Initiatives in TN Police) :

**மிக அதி நுண்ணலை தொலைத் தொடர்பு கருவிகள் (VHF Sets)**

மாநகரங்கள், நகரங்கள் மற்றும் மாவட்டங்களில் காவல்துறை தொலைத் தொடர்பு வசதிக்கென நிலையான தொலைத் தொடர்பு கருவிகள் (Static Sets), வாகன தொலைத் தொடர்பு கருவிகள் (Mobile Sets), கையில் எடுத்துச் செல்லும் கருவிகள் (Handheld Sets) முறையே காவல் நிலையங்கள், வாகனங்கள் மற்றும் ரோந்து காவலர்களிடையே தகவல் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

**அதி நுண்ணலை தொலைத் தொடர்பு கருவிகள் (HF Sets)**

இக்கருவிகள், சிறப்புக் காவல்படை அணிகளில் அதனுடைய முகாம் பிரிவுகள் மற்றும் தலைமையிடங்களுக்கிடையே தகவல் பரிமாற்றத்திற்குப் பயன்படுகிறது.

**நுண்ணலை தொலைத் தொடர்பு (Microwave)**

நுண்ணலை தொலைத் தொடர்பு, மாநில தலைமையிடம் மற்றும் மாவட்ட தலைமையிடங்களுக்கிடையே தொலைபேசி வசதிக்காகவும், எழுத்துவழி தகவல் (Data) பரிமாற்றத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது. தற்போது இந்தத் தொலைத்தொடர்பு பயன்பாட்டில் இல்லை.

**கம்பியில்லா தொலைபேசி தொடர்பு. (WILL) – Wireless in Local Loop**

சென்னை மாநகரிலுள்ள காவல்துறை அலுவலகங்கள் மற்றம் காவல் நிலையங்களுக்கிடையே தொலைபேசி வசதிக்காகவும் எழுத்து வழி தகவல் (Data) பரிமாற்றத்திற்காகவும் மற்றும் நுண்ணலை தொலைத் தொடர்பு வழியே மற்ற மாவட்டங்களுடன் பேசுவதற்காகவும் பயன்படுத்தப்பட்டது. தற்போது இந்தத் தொலைத்தொடர்பு பயன்பாட்டில் இல்லை.

**காவல் இணையம் (POLNET)**

மாநில, மாவட்டக் காவல் தலைமையகங்கள் மற்றும் மத்திய சிறப்புக் காவல் அணிகளின் தலைமையிடங்கள் ஆகியவற்றை செயற்கைக்கோள் தகவல் தொடர்பு (VSAT) மூலம் இணைக்கப்பட்டு இக்காவல் இணையம் (POLNET)

தகவல் தொடர்புக்காக உபயோகப்படுத்தப்படுகிறது. மேலும் இத்தகவல் இணையத்தில் காவல் நிலையங்கள், பல்முனை தொலைத் தொடர்பு கருவிகள் (MART-Multi Access Radio Telephone) வழியாக மாவட்டத் தலைமையிடத்துடன் இணைக்கப்பட்டும் பயன்படுத்தப்பட்டது. தற்போது இந்தத் தொலைத்தொடா்பு பயன்பாட்டில் இல்லை.

**காட்சிக் கலந்தாய்வு (Video Conferencing)**

காவல்துறை இயக்குநர், கூடுதல் காவல்துறை இயக்குநர்கள் குற்றப்பிரிவு, நுண்ணறிவுப் பிரிவு, மண்டல காவல்துறைத் தலைவர்கள், சரகக் காவல்துறைத் துணைத் தலைவர்கள், மாநகர காவல் ஆணையர்கள் மற்றும் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோர்-அவர்களுக்கிடையே காட்சி கலந்தாய்வு நடத்த, காட்சி கலந்தாய்வுக் கருவிகள் (Video Conferencing Facilities) பொருத்தப்பட்டு இயங்கி வருகிறது.

**நவீன காவல் கட்டுப்பாட்டறைகள் (Modern Control Rooms)**

சென்னை, கோவை மற்றும் மதுரை ஆகிய மாநகரக் காவல் கட்டுப்பாட்டு அறைகளில், தானியங்கி தொலைபேசி அழைப்பு பங்கீட்டுக் கருவிகள் (Automatic Call Distribution System – ACD) புவியியல் இடக்குறிப்பு கருவிகள் (Geographical Positioning System – GPS) தானியங்கி வாகன இருப்பிடங்களைத் தெரிவிக்கும் கருவிகள் (Automatic Vehicle Location System) ஆகிய கருவிகள் இலக்க வரைபடங்களுடன் இணைக்கப்பட்டு, நவீன காவல் கட்டுப்பாட்டறைகளாக இயங்கி வருகின்றன.

**காவல் நிலையங்களுக்கு அகண்ட இணையதள இணைப்பு வசதி (Broad Band for Police Stations)**

இவ்வசதியை காவல் நிலையங்களுக்கு வழங்க அரசு ஆணை பெறப்பட்டுள்ளது.

**உள் இணைக்கப்பட்ட செல்லிடை தொலைபேசி குழுமம் (Cellphone Close User Group)**

தற்போது சென்னை மற்றும் சில மாவட்டங்களில் காவல் நிலையங்கள் மற்றும் காவல் அலுவலகங்களில் உள்ள தொலைபேசிகள் உள் இணைக்கப்பட்டு இவைகளுக்குள் மேற்கொள்ளப்படும் அழைப்புகளுக்கு தொலைபேசி தொடர்பகத்தால் கட்டணம் கணக்கிடப்படுவதில்லை. இம்மாதிரியான உள் இணைக்கப்பட்ட செல்லிடை தொலைபேசி வசதியை காவல்துறை இயக்குநர் முதல் காவல் உதவி ஆய்வாளர்கள் வரை வழங்கப்பட்டுள்ளது.

காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ் (MPF Schemes) கணினிகள், நகல் எடுக்கும் இயந்திரங்கள், வாகனங்கள், பாதுகாப்புப் பணிக்குத் தேவையான உபகரணங்கள் போன்ற காவல் துறைக்குத் தேவையான அனைத்து வகையான உபகரணங்களையும் வாங்கும் முக்கியப் பணியை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது.

# 15. கடலோரப் பாதுகாப்புக் குழுமம்
# (COASTAL SECURITY GROUP)

கடற்கரையிலிருந்து 12 கடல் மைல் (Nautical mile or sea mile ) ( 1 கடல் மைல் - 1852 மீட்டர்) வரை ஒரு நாடு தன்னுடைய இறையாண்மையைக் கொண்டுள்ளது. கடற்பரப்பில் ஒரு நாட்டின் பாதுகாப்பினை கடற்படையும், கடலோர பாதுகாப்புப்படையும் (COASTAL SECURITY GUARD) மேற்கொள்கின்றன. ஆனால், இந்தியத் திருநாட்டின் கடல் எல்லையில் நிகழ்த்தப்படும் குற்றங்கள் தொடர்பான விசாரணையைத் தமிழகத்தில் கடலோர பாதுகாப்புக் குழுமம் (COASTAL SECURITY GROUP) மேற்கொள்கிறது.

கடலோரப் பாதுகாப்பு குழுமம் 1994 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு (G.O.(Ms) 718, Home ( pol.15)Dept.dt.27.06.1994) செயல்பட்டு வருகிறது. இதன் கீழ், 5 மண்டல அலுவலகங்கள் முறையே நாகப்பட்டினம், வேதாரண்யம், பட்டுக்கோட்டை, இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

தீவிரவாதிகள் மற்றும் அனுமதியற்ற வெளிநாட்டவரின் ஊடுருவலைத் தடுப்பதற்காகவும் தமிழ்நாடு கடலோர மாவட்டங்களின் கடலோரப் பாதுகாப்பினை உறுதிசெய்யவும் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. இதன் தலைவர் கூடுதல் காவல்துறை இயக்குநர் (ADGP) ஆவார். கடலோர மாவட்டங்களில் இப்பிரிவின் காவல் ஆளினர்கள் செயல்பட்டு வருகின்றனர். இப்பிரிவில் 42 கடலோர காவல் நிலையங்கள், 100 சோதனைச் சாவடிகள், 10 புற காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு கடலோர காவல் நிலையத்திற்கும் தலா 2 ரோந்து படகுகள் இயங்கி வருகின்றன. கடலோர கிராமங்களில் மொத்தம் 441 கடலோர கிராம கண்காணிப்புக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன (Village Vigilance Committee) மேலும் தீவிரவாதிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்கும், முறியடிப்பதற்கும் அவ்வப்போது ஹாம்லா (Operation Hamla) என்ற தடுப்பு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கடலோர காவல் படையின் எல்லையின் மொத்த நீளம் 1076 கி.மீ, ஆகும். இதில் மொத்தம் 591 மீனவ கிராமங்கள் உள்ளன. தமிழ்நாட்டில் தற்போது ஒவ்வொரு கடலோரக் காவல் நிலையத்திற்கும் தலா

இரண்டு ALL TERRAIN VEHICLEs, வழங்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி தேவைக்கேற்ப சில கடலோர காவல் நிலையங்களுக்கு INTERCEPTOR BOAT –ம் வழங்கப்பட்டுள்ளது.

**கடலோர காவல் மாவட்டங்கள்**

1. நாகப்பட்டினம் 2. புதுக்கோட்டை 3. தஞ்சாவூர் 4. தூத்துக்குடி 5.கன்னியாகுமரி 6.இராமநாதபுரம் 7. திருநெல்வேலி

# 16. மதுவிலக்கு அமலாக்கத்துறை

# (Prohibition Enforcement Wing)

கள்ளசாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல், அயல்நாட்டு மதுவகைகள் கடத்தல் போன்ற மதுவிலக்கு குற்றங்களைத் தடுத்தல் மற்றும் புலனாய்வு செய்தல் இப்பிரிவின் முக்கிய அலுவலாகும். இப்பிரிவு ஒரு கூடுதல் காவல் துறை இயக்குநரின் தலைமையில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகத்தில் இரண்டு உட்பிரிவுகள் உள்ளன. அவை, முறையே 1. அமலாக்கம் மற்றும் 2. மத்திய புலனாய்வுப்பிரிவு (CIU). மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களிலும் இப்பிரிவின் அலுவலர்கள் செயல்பட்டு வருகின்றனர். தமிழகம் முழுவதும் கள்ளச்சாராய குற்றங்கள் சம்பந்தப்பட்ட தகவல்களை உடனடியாக காவல்துறைக்குத் தெரிவிக்கும் வண்ணம் 10581 என்ற இலவச தொலைபேசி எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கள்ளச் சாராய குற்றங்களை பற்றி யார் வேண்டுமானாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வாய்ப்பாக அமைந்துள்ளது. வெளிமாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்குள் வெளிமாநில மது மற்றும் கள்ள மதுவை கடத்தி வராமல் தடுப்பதற்காக தமிழ்நாட்டின் எல்லை மாவட்டங்களில் மொத்தம் 45 மதுவிலக்கு சோதனைச்சாவடிகள் இயங்கி வருகின்றன.

---------

# 17. குடிமைப்பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத்துறை

# (Civil Supplies CID)

இப்பிரிவு ஒரு காவல் துறை இயக்குநர் /காவல் துறை கூடுதல் இயக்குநர் (DGP/ADGP) தலைமையில் இயங்கி வருகிறது. இப்பிரிவின் துணை அலுவலகங்கள் தமிழகம் முழுவதும் (26) செயல்பட்டு வருகின்றன. இதன் முக்கிய பணி, பொது வினியோகத் திட்டத்தின் ( Public Distribution System-PDS) கீழ் நியாயவிலைக் கடைகளுக்கு அரசால் வழங்கப்படும் உணவுப்பொருட்களை கள்ளசந்தையில் விற்பது, கடத்துவது மற்றும் பதுக்கி வைத்தலை தடுப்பது ஆகும்.

# 18. சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு

# (Social Justice and Human Rights)

ஒரு காவல்துறை இயக்குனர் அல்லது ஒரு காவல்துறை கூடுதல் இயக்குனரின் (ADGP) தலைமையில் இப்பிரிவு இயங்கி வருகிறது. இப்பிரிவு, வன்கொடுமைகள் தடுப்புச்சட்டம் 1989 மற்றும் திருத்தச் சட்டம் 2015 மற்றும் மனித உரிமைகள் மீறல் குடியுரிமை பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை கண்காணிக்கிறது. மேலும், இப்பிரிவைச் சேர்ந்த துணைக்காவல் கண்காணிப்பாளர்களுக்கு மேற்கண்ட வழக்குகளில் புலனாய்வு செய்திடுவதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தின், அனைத்து மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களிலும் இப்பிரிவின் அலுவலர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

**<u>மனித உரிமைகள்:</u>** இந்தியாவில் 1993 ஆம் ஆண்டில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் (National Human Rights Commission) ஆரம்பிக்கப்பட்டது. தமிழகத்தில் 17.04.1997 அன்று மாநில மனித உரிமைகள் ஆணையம் (State Human Rights Commission) ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி தலைமை பொறுப்பு (Chair Person) வகிக்கிறார். மேலும் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள், ஓய்வு பெற்ற மாநில அரசு அதிகாரிகள் மற்றும் வழக்கறிஞர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மனித உரிமைகள் மீறல் சம்மந்தமான புகார்களின் மீது நடவடிக்கை எடுக்கும் பணியினை செய்து வருகிறது.

# 19. குற்ற வழக்கு தொடர்புத் துறை இயக்குனரகம்

# (DIRECTORATE OF PROSECUTION)

1. தமிழ்நாடு அரசின் குற்ற வழக்கு தொடர்பு துறை இயக்குனரகம் முன்பு மாவட்ட ஆட்சியரின் கட்டுப்பாட்டில் செயல்பட்டது. தற்போது தமிழ்நாடு உள்துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

2. 17.04.1995ம் தேதி முதல், முதன்முதலில் ஒரு காவல்துறை தலைவர் பதவி நிலைக்கு குறையாத, இணையான பதவி நிலையில் உள்ள நீதித்துறை, குற்றம்சாட்டும் துறை இயக்குநரின் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

3. 25.05.1995ம் தேதி முதல் நீதித்துறை, குற்றம் சாட்டும் துறை இயக்குநரின் கீழ் இயங்கி வருகிறது.

4. அரசுத் தரப்பில் தொடரப்படும் வழக்குகளையும் மற்றும் நீதிமன்றம் CJM, JM களில் பணியாற்றும் அரசுத் தரப்பு வழக்கறிஞரின் பணியை கூர்மையாக ஆராய்ந்தும் அவர்களைக் கண்காணித்தும் அவர்களின் பணியை மேம்படுத்தி சீரமைப்பதும் இதன் வேலையாகும்.

5. ஒவ்வொரு மாதமும் மாவட்டங்களில் நடைபெறும் காவல் கண்காணிப்பாளரின் குற்ற விவாத கூட்டத்தில் கலந்து கொண்டு தேங்கியுள்ள வழக்குகளை விரைந்து முடிப்பதற்கும், பாதிக்கப்பட்ட அப்பாவிகளை வழக்குகளில் இருந்து விடுவிக்கவும் நீதித்துறையும், காவல்துறையும் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கு ஏதுவாக ஒருங்கிணைந்த கூட்டமாக அமைத்துத் தருகிறார்.

--------

## 20. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
## TAMILNADU FIRE AND RESCUE SERVICES DEPARTMENT

காவல் துறை இயக்குநர் / காவல் துறை கூடுதல் இயக்குநர் (DGP/ADGP) தலைமையில் இப்பிரிவு இயங்கி வருகிறது. தீ விபத்துக்கள் பற்றிய தகவல்கள் கிடைத்தவுடன் நீர் நிரம்பிய வாகனங்களுடன் சம்பவ இடங்களுக்கு சென்று தீயினை அணைப்பதும் மேலும் அது பரவாமல் தடுப்பதும் இப்பிரிவின் தலையாய பணியாகும். மேலும் வெள்ளம், புயல் போன்ற இயற்கை பேரிடர்கள் நிகழும்போது காவல் துறையினருடன் இணைந்து அதில் சிக்கிக் கொண்டோரை மீட்கும் பணியிலும் இத்துறை ஈடுபட்டு வருகிறது.

---------

## 21. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு குழுமம்
## TAMILNADU UNIFORMED SERVICES RECRUITMENT BOARD

தமிழக காவல்துறை, சிறைத்துறை, மற்றும் தீயணைப்புத்துறை போன்ற துறைகளில் அவ்வப்போது ஏற்படும் காலி பணியிடங்களுக்கும் மற்றும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர்களை தேர்ந்தெடுக்கும் பிரிவாகவும் செயல்பட்டு வருகிறது. காவல்துறை இயக்குநர் (DGP) மேற்ப்பார்வையில் காவல் துறை கூடுதல் இயக்குநர் (ADGP) காவல்துறை தலைவர் (IGP) மற்றும் காவல் கண்காணிப்பாளர் (SP) ஆகியோரைக் கொண்டு இவ்வாணையம் இயங்கி வருகிறது.

காவல் துறையினைப் பொறுத்தவரையில் சார்பு ஆய்வாளர்கள் மற்றும் இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோர் இவ்வாணையத்தின் மூலம் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

# 22. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
# VIGILANCE & ANTI CORRUPTION

அரசு அலுவலர்கள் மற்றும் பொது ஊழியர்கள் மீது சுமத்தப்படும் ஊழல் புகார்கள் பற்றி விசாரணை செய்வது இப்பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

தற்சமயம் இப்பிரிவு காவல் துறை இயக்குநர் / காவல்துறை கூடுதல் இயக்குநர் (DGP/ADGP)அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. மேலும் சென்னையில் இரண்டு காவல்துறைத் தலைவர்களும், ஒரு காவல்துறைத் துணைத் தலைவரும், ஐந்து காவல் கண்காணிப்பாளர்களும், இப்பிரிவில் பணியாற்றுகிறார்கள். இப்பிரிவின் காவல் கண்காணிப்பாளர்களின் அலுவலகங்கள் சென்னையில் உள்ளது. அந்தந்த மாவட்டங்களில் காவல் துணை கண்காணிப்பாளர்கள் (DSP) தலைமையில் இப்பிரிவு செயல்பட்டு வருகிறது. இரண்டு காவல்துறை தலைவர்களில் ஒருவர் சிறப்பு புலனாய்வு பிரிவுக்கு (Special Investigation Cell) பொறுப்பு அதிகாரி ஆவார். இவரின் கீழ் இரண்டு காவல் கண்காணிப்பாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இப்பிரிவு அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் (VIP) தொடர்பான சொத்து குவிப்பு மற்றும் முறைகேடுகள் சம்மந்தமான வழக்கு பதிவு செய்து நடவடிக்கை மேற்கொள்கிறது.

மற்றொரு காவல்துறை தலைவர் கீழ் இயங்கும் பிரிவு, லஞ்சம் வாங்கும் அரசு அதிகாரிகளை பொறி வைத்துப் பிடித்தல் (Trap Cases) அரசு அதிகாரிகள் வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்குகள் (Disproportionate Assets Cases) மற்றும் அரசு அலுவலகங்களில் திடீர் சோதனை செய்து முறைகேடுகளை கண்டுபிடித்தல் (Surprise Checks) ஆகிய பணிகளை மேற்கொள்கின்றனர். தமிழ்நாட்டில் மொத்தம் 3 மண்டலங்களாக இப்பிரிவு செயல்பட்டு வருகிறது.

---------

# 23. குடிமைப் பாதுகாப்பு மற்றும் ஊர்க் காவல் படை
# CIVIL DEFENCE & HOME GUARDS

ஊர்க் காவல் படை என்பது ஒரு சேவை இயக்கம். இவர்களுக்கு மாத ஊதியம் கிடையாது. இப்படையினர் காவல் துறையினருக்கு உதவியாக சுற்றுக் காவல், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு திருவிழா, முக்கிய நபர்களின் பாதுகாப்பு, புயல் வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்கள் நிகழும் போது காவல் துறையினருக்கு உதவியாக ஊர்க் காவல் படையினர் செயல்படுகின்றனர். இப்படையினரை தேர்ந்தெடுத்து பயிற்சி அளித்து பகுதி நேர அலுவலர்களாக செயலாற்றச் செய்வது இப்பிரிவின் முக்கிய அலுவலாகும். இப்பிரிவு காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

ஊர்க் காவல் படையினர் கவாத்து பயிற்சி, போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் அலுவல் ஆகியவற்றிற்கும் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொரு அலுவலுக்கு அழைக்கப்படும் பொழுதும் அழைப்புப்படி (Call Out Allowance) ரூ. 150 அளிக்கப்படுகிறது. மேலும் இவர்கள் கவாத்து பயிற்சிக்கென அழைக்கப்படும் பொழுது ஒன்றரை மணியிலிருந்து இரண்டரை மணி நேரம் வரை ரூ. 50 ம் வாராந்திர சலவைப்படி (Weekly Washing Allowance) ரூ. 5ம் வழங்கப்படுகிறது. இப்படையில் பணிபுரியும் ஆண் மற்றும் பெண் உறுப்பினர்கள் காக்கி நிற உடையினை அணிகிறார்கள். இப்படை ஒரு கூடுதல் காவல்துறை இயக்குநர் (ADGP. Civil Defence and Home Guards) தலைமையில் சென்னையிலும், பிரிவு அலுவலகம் காவல் துறை துணைத் தலைவர் தலைமையில் திருச்சியிலும் இயங்கி வருகிறது.

ஊர்க்காவல் படையினரது பயிற்சி 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன

1. அடிப்படைப் பயிற்சி (Basic Training)
2. மேல்நிலைப் பயிற்சி (Advanced Training)
3. புதுப்பிக்கும் பயிற்சி (Refresher Training)
4. தலைமைப் பயிற்சி (Leadership Training)


இவர்கள் தங்கள் நிரந்தர தொழிலுக்கு அப்பாற்பட்ட நேரத்தில் தான் இப்பணியில் ஈடுபடுகின்றனர். இவர்களுக்கு ஆயுதத்துடனும், ஆயுதமில்லாமலும் கவாத்துப்பயிற்சி, தீயணைக்கும் பயிற்சி, கூட்டத்தை கட்டுப்படுத்தும் பயிற்சி, போர் முனைப் பயிற்சி (Field Craft). சுற்றுக் காவல் அலுவல், வரைபடம் பார்த்து இடம் கண்டுபிடித்தல் (Map Reading) ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் பொதுமக்கள் பாதுகாப்பு (Civil Defence ) பயற்சிக்கான தீயனைத்தல், ஆபத்திலுள்ளவர்களை மீட்டல், முதலுதவி, வெள்ளப் பெருக்கிலிருந்து காப்பாற்றுதல் ஆகிய பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

**ஊர்க்காவல் படையினரின் கடமைகள் - Duites of Home Guards**

1. உள்நாட்டு பாதுகாப்பு பணியில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.
2. விமானத் தாக்குதல், தீ, வெள்ளம், தொற்று வியாதிகள் ஆகிய அவசர சூழ்நிலைகளில் அனைத்து தரப்பு மக்களுக்கும் உதவி செய்கிறார்கள்.
3. காவல்துறைக்கு உதவியாக பணிபுரியும் இப்படையினர், போக்குவரத்துக் கட்டுப்பாடு, சுற்றுக் காவல் முதலிய அலுவல்களில் ஈடுபடுத்தப்பட்டு, பொது மக்களின் நல்லெண்ணத்தையும் மதிப்பையும் பெறுகிறார்கள்.
4. வேலை நிறுத்தத்தை உடைக்கும் முயற்சிகள், அரசு நிலத்தில் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்தலை தடுத்தல், உரிமம் இல்லாது சிறு வணிகம் செய்வோரை கைது செய்தல் ஆகிய பணிகளில் ஊர்க் காவல் படையினரை ஈடுபடுத்தக் கூடாது. ஏனெனில் இது அவர்களை பொது மக்களிடம் இருந்து விலகிச் செல்ல வழிகோலும், ஆனால் இத்தகைய சந்தர்ப்பங்களில் ஊர் காவல் படையினார், காவல் துறையினரை அவர்களது வழக்கமான கடமைகளான போக்குவரத்து கட்டுப்பாடு, சுற்றுக் காவல் முதலியவற்றிலிருந்து விடுவிக்கலாம். இதன் மூலம் மேற்சொன்ன அலுவல்களுக்கு கூடுதலாக காவலர்கள் கிடைப்பார்கள், காவல் துறையினா் ஊர்க்காவல் படையினருடன் வேற்றுமை காணாமல் சகோதர பாசத்துடன் ஒத்துழைத்து பணியாற்ற வேண்டும்.

-------

# 24. தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகம்
# TAMIL NADU POLICE HOUSING CORPORATION



இப்பிரிவு காவல்துறை இயக்குநர் / கூடுதல் காவல்துறை இயக்குநர் (DGP/ADGP) அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. காவல் நிலையங்கள் (Police Stations), மாவட்டக் காவல் அலுவலகங்கள் (District police Offices) மற்றும் காவல் அலுவலர்களுக்குத் தேவையான குடியிருப்புகள் (Quarters) மற்றும் சொந்தவீடு கட்டும் திட்டத்தின் கீழ் வீடுகளை கட்டித்தரும் பணிகளை நிறைவேற்றி வருகிறது. மேலும் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட காவல்துறைக்குச் சொந்தமான கட்டிடங்கள், குடியிருப்புகளைப் புதுப்பித்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகளையும் இக்கழகம் மேற்கொள்கிறது.

வண்டலூர் அருகிலுள்ள ஊனமாஞ்சேரி கிராமத்தில் 129 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தில் தமிழ்நாடு காவல்துறை உயர்ப்பயிற்சியக வளாகத்திற்கான மிகப்பெரிய கட்டுமானப் பணி ஒன்றை தமிழ்நாடு காவல்துறை வீட்டுவசதிக் கழகம் கட்டி முடித்துள்ளது.

**உங்கள் சொந்த இல்லம் திட்டம் (Own Your House Scheme)**

கடந்த 03.05.2012 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் காவல் துறையினருக்கு (காவலர் முதல் துணைக்காவல் கண்காணிப்பாளர் வரை) உங்கள் சொந்த இல்லம் (Own Your House Scheme) திட்டத்தின் கீழ், வீடு கட்ட மாவட்டம் தோறும் 10 ஏக்கர் அரசு நிலத்தினை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மேலக்கோட்டையூர் எனும் இடத்தில் 100 ஏக்கர் நிலம் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. இந்த இடத்தில் தமிழ்நாடு காவலர்

வீட்டு வசதி கழகத்தின் மூலமாக 2673 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு கடந்த 25.02.2016 அன்று முன்னாள் தமிழக முதல்வர் அவர்களால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. மேலும் தஞ்சாவூர், கிருஷ்ணகிரி, நாமக்கல், விருதுநகர் போன்ற மாவட்டங்களில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவல் வீட்டு வசதிக் கழகத்தின் (TNPHC) மூலம் இவ்வீடுகள் கட்டப்பட்டு தகுதியுள்ளவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

------------

# 25. பெண் காவலர் பிரிவின் அமைப்பு - அயல் நாடுகள், இந்தியா மற்றும் தமிழ்நாடு

## (WOMEN POLICE SET UP IN FOREIGN COUNTRIES, INDIA AND TAMILNADU)

### a) அயல் நாட்டு காவல் துறையில் பெண்கள் (Women police in Foreign Countries)

இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் சமூக நல அமைப்பினர் சிறுமிகள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் காவல் துறையினரின் விசாரணையில் ஈடுபடுத்தும் பொழுது அவர்களை பெண் காவல் அதிகாரிகளே விசாரித்து பாதுகாக்க வேண்டும் என ஆலோசனை தெரிவித்ததின்பேரில் 1916 ஆம் ஆண்டு முதல் முதலாக லண்டன் நகர் காவல் துறையில் 30 பெண்கள் நியமிக்கப்பட்டனர். பின்னர் படிப்படியாக மற்ற மேலை நாடுகளிலும் காவலர்களுக்கு சமமான அதிகாரங்கள் கொடுக்கப்பட்ட பெண் காவலர் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. 1930 ஆம் ஆண்டு அனைத்துலக காவல் ஆணையத்தினால் இயற்றப்பட்ட ஓர் தீர்மானத்தில் ஒவ்வொரு நாடும் காவல் துறையில் பெண்களை நியமித்து அவர்களை பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று கூறியிருந்தது. இதன்

படி அனைத்து நாடுகளிலும் பெண்களை காவல் துறை பணிகளில் அமர்த்தி வருகின்றனர்.

## b) இந்தியாவில் பெண் காவல்துறை – **Women police in India**

1937 ஆம் வருடம் கேரளா மாநிலம் திருவாங்கூர் சமஸ்தானம் முதல் முதலில் பெண்களை காவல் துறையில் பணிக்கு அமர்த்தியது. 1948 ஆம் ஆண்டு தலைநகரமான புதுடில்லியில் பெண் உதவி ஆய்வாளர்கள், தலைமைக்காவலர்கள் மற்றும் காவலர்கள் அடங்கிய பெண் காவல் பிரிவு தொடங்கப்பட்டது. தொடர்ந்து 1973 ஆம் ஆண்டு முழுவதும் பெண் காவலரைக் கொண்ட மகளிர் காவல் நிலையம் ஒன்று கேரள மாநிலம் கொல்லங்கோட்டில் செயல்படத்துவங்கியது.

1972 ஆம் ஆண்டு முதல் இந்திய காவல் பணிக்கு (IPS) பெண் அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண் காவல் அலுவலர்களுக்கு இணையாக பணிபுரிந்து வருகின்றனர். சமீபத்தில் மத்திய அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் மத்திய சேமக் காவல் படையில் (CRPF) பெண்களுக்கென தனிப்பிரிவு ஏற்படுத்தியுள்ளது. மேலும் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் எல்லைப்பாதுகாப்புப்படையிலும் (BSF) பெண்களுக்கென தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## c) தமிழ்நாடு பெண் காவலர் பிரிவின் அமைப்பு

## Women police Setup in Tamilnadu

தமிழ்நாட்டில் முதல் முதலாக 1973 ஆம் ஆண்டு 1 பெண் உதவி ஆய்வாளர்,1 பெண் தலைமைக் காவலர் மற்றும் 20 பெண் காவலர்கள் பணியில் அமர்த்தப்பட்டு பெண் காவலர் பிரிவு துவக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் சென்னை நகரில் முதல் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆயிரம் விளக்கு பகுதியில் 13.04.1992 அன்று துவக்கப்பட்டது. தற்பொழுது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து காவல் உட்கோட்டங்களிலும் முக்கிய நகரங்களிலும் பெண்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகளை பெண்களே

விசாரணை செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு 200 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் இந்தியாவிலேயே முதல் முதலாக முழுவதும் பெண் காவலர்களைக் கொண்ட பெண் கமாண்டோ படை (Women commando Force) தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டு 2-6-2003 முதல் செயல்பட்டு வருகிறது.

## பெண் காவலரின் பணிகள்

1. பெண் கைதிகள், இளங்குற்றவாளிகள் ஆகியோரை நீதிமன்றம், மருத்துவமனை மற்றும் சிறைச்சாலை ஆகிய இடங்களுக்கு வழிக்காவல் செய்தல்.
2. பெண்கள், சிறுமிகள், இளங்குற்றவாளிகள் ஆகியோர் சம்பந்தப்பட்ட வழக்குகளில் புலன் விசாரணைக்கு உதவி செய்தல்.
3. பெண்களை கைது செய்தல் மற்றும் சோதனை செய்தல்.
4. பெரிய திருவிழா, சந்தை போன்றவை நடைபெறும் இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாத்தல்.
5. போராட்டம் மற்றும் ஆர்பாட்டம் நடைபெறும் நேரங்களில் சட்டத்திற்குப் புறம்பாக நடக்கும் பெண்களை அப்புறப்படுத்துதல்.
6. வரதட்சணை மற்றும் பெண்களுக்கு ஏற்படும் குடும்ப சம்மந்தமான பிரச்சனைகளை விசாரித்து நிவாரணம் அளித்தல்.
7. வரதட்சணைக் கொடுமை மற்றும் வரதட்சணைக் கொடுமையால் நிகழும் இறப்பு வழக்குகளில் புலனாய்வு அலுவலர்களுக்கு உதவி செய்தல்.

தமிழக பெண்காவல் அலுவலர்களுக்கான பாலின நிகர்நிலைப் பயிலரங்கம் காவல் துறை தலைமை அலுவலக ஆனை எண். 158272/g 2-2001-யின் படி தொடங்கப் பெற்று 20-08-2001 தேதியிலிருந்து அணி அணியாக காவல் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள சுமார் 4800 பெண் காவல் அலுவலர்கள் 42 அணிகளாக பிரிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பெண் காவல் அலுவலர்களுக்கு கீழ்கண்ட பிரிவுகளில் பாடங்கள் நடத்தப்பட்டன. யோகா மற்றும் தியானம், பாலின பணி பகர்வுகள், வரலாற்றில் பெண்கள்,

குற்றவியல் சட்டங்கள், பெண்கள் மீதான வன்முறைகள், ஆற்றல் மேம்பாடு, திறமை வளர்ப்பு, சிறப்புச் சட்டங்களும் மகளிர் நலமும், குடும்ப நீதிமன்றம் மற்றும் சிறார் நீதிமன்றம், ஆளுமை வளர்ச்சி, திடம் கொள்ளல், மாறும் மதிப்பீடுகள்,கொள்கையும் திட்டமும், பாலின சிக்கல்களும் எடுத்துக்காட்டுகளும், நலத்திட்டங்கள், காவல்துறையில் பெண்கள், இலட்சியப் பெண் காவலர், முகம்மதிய பெண்களும் சட்டங்களும், பாதிக்கபட்டவர்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளுதல், குற்றப் புலனாய்வில் தடய அறிவியல், மனம் மற்றும் உடல்நலம் பேணல், உரிமையியல் சட்டங்களும் மனித உரிமைகளும், உணவும் ஆரோக்கியமும், மகளிர் நலனும் மருத்துவமும், பாலினவரைவும் நிறைவும் போன்ற தலைப்புகளில் மிகச் சிறந்த விரிவுரையாளர்கள் மூலம் கருத்துகள் போதிக்கப்பட்டன. இவற்றைத் தவிர கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன.

தற்பொழுது சட்டம் மற்றும் ஒழுங்கு துறையிலும் பெண் உதவி ஆய்வாளர்கள், பெண் ஆய்வாளர்கள் மற்றும் பெண் துணைக் காவல் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு ஆணுக்குப் பெண் சரிநிகர் சமம் என்ற வாக்கினுக்கேற்ப பணிபுரிந்து வருகின்றனர்.




-------------





# III. காவல்துறை நிர்வாகம்





# (Police Administration)

# 26. காவல் துறையினரின் பதவிகளும் பதவிச் சின்னங்களும்




# RANKS AND BADGES OF MEN AND OFFICERS IN POLICE DEPARTMENT

| | | |
|---|---|---|
| 1 | காவல் துறை தலைமைஇயக்குநருக்கு (Director General of police) தோள்பட்டையில் ஐ.பி.எஸ் எழுத்தும் அதற்கடுத்து குறுக்காக வைக்கப்பட்ட வாளும் குறுந்தடியும் அதற்கடுத்து அசோக சின்னமும் இருக்கும் தொப்பியில் வெள்ளி ஜரிகை ஆலிவ் இலை வடிவ ஐ.பி.எஸ். எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem) இருக்கும். |  |
| 2. | காவல் துறைக் கூடுதல் இயக்குநருக்கு (Additional Director General of police) தோள்பட்டையில் ஐ.பி.எஸ் எழுத்தும், அதற்கடுத்து குறுக்காக வைக்கப்பட்ட வாளும் குறுந்தடியும் அதற்கு அடுத்து அசோக சின்னமும் இருக்கும்.<br><br>தொப்பியில் வெள்ளி ஜரிகை, ஆலிவ் இலை வடிவ ஐ.பி.எஸ் எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem)இருக்கும். |  |
| 3. | காவல் துறைத் தலைவர்<br>(Inspector General of police)<br>தோள்பட்டையில் ஐ.பி.எஸ் எழுத்தும், அதற்கடுத்து குறுக்காக வைக்கப்பட்ட வாளும் குறுந்தடியும் அதற்கு அடுத்து ஐந்து முனைத் தாரகை ஒன்றும் இருக்கும். தொப்பியில் வெள்ளி ஜரிகை ஆலிவ் இலை வடிவ ஐ.பி.எஸ் எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem) இருக்கும் |  |
| 4. | காவல் துறைத் துணைத் தலைவர்<br>(Deputy inspector General of police)<br><br>காவல் துறைத் துணைத் தலைவருக்கு தோள்பட்டையில் ஐ.பி.எஸ்.எழுத்தும் அதற்கடுத்து முக்கோண வடிவில் ஐந்துமுனைத் தாரகைகள் (Stars) மூன்றும் அதற்குஅடுத்து அசோக சின்னம் ஆகியவை இருக்கும் தொப்பியில் ஆலிவ் இலை வடிவ ஐ.பி.எஸ் எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem) இருக்கும் |  |

| | | |
|---|---|---|
| 5. | தேர்வு நிலை காவல் கண்காணிப்பாளருக்கு<br>Superintendent of police Selection Grade)<br>தோள்பட்டையில் ஐ.பி.எஸ். (I.P.S) எழுத்தும் அதற்கடுத்தடுத்து ஐந்துமுனைத் தாரகைகள் (Stars)<br>இரண்டும் அதற்கு அடுத்து அசோக சின்னம் ஆகியவை இருக்கும் தொப்பியில் ஆலிவ் இலை வடிவ ஐ.பி.எஸ் எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem) இருக்கும். |   |
| 6. | காவல் கண்காணிப்பாளர்<br>(Superintendent of police)<br><br>தோள்பட்டையில் ஐ.பி.எஸ். அல்லது டி.பி.எஸ் எழுத்தும் அதற்கடுத்து ஐந்து முனைத் தாரகைகள் (Stars) ஒன்றும் அதற்கு அடுத்து அசோக சின்னம் ஆகியவை இருக்கும். தொப்பியில் ஐ.பி.எஸ்.(I.P.S) அல்லது டி.பி.எஸ் (T.P.S) எழுத்துடன் கூடிய அசோக சின்னம்(Emblem) இருக்கும் |   |
| 7. | காவல் இணைக் கண்காணிப்பாளருக்கு<br>(Joint Superintendent of police)<br><br>தோள்பட்டையில் ஐ.பி.எஸ். (IPS) எழுத்தும் அதற்கடுத்து அசோக சின்னம் ஆகியவை இருக்கும் தொப்பியில் ஐ.பி.எஸ் (IPS) எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem) இருக்கும் |   |
| 8. | காவல் கூடுதல் கண்காணிப்பாளருக்கு<br>(Additional Superintrndent of police)<br>தோள்பட்டையில் டி.பி.எஸ். (T.P.S) எழுத்தும் அதற்கடுத்து அசோக சின்னம் ஆகியவை இருக்கும் தொப்பியில் டி.பி.எஸ். (T.P.S) எழுத்துடன் கூடிய அசோகசின்னம் (Emblem) இருக்கும் |   |

| | | |
|---|---|---|
| 9. | **உதவி கண்காணிப்பாளர்**<br>(Assistant Superintrndent of police)<br><br>தோள்பட்டையில் ஐ.பி.எஸ்.(IPS) எழுத்தும் அதற்கடுத்து ஐந்து முனைத் தாரகைள் (Stars) மூன்றும் இருக்கும். தொப்பியில் ஐ.பி.எஸ். (IPS) எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem) இருக்கும். |  |
| 10. | **துணைக் கண்காணிப்பாளர்**<br>(Deputy Superintendent of police)<br><br>தோள்பட்டையில் டி.பி.எஸ். (TPS) எழுத்தும். அதற்கடுத்தடுத்து ஐந்து முனைத் தாரகைகள் (Stars) மூன்றும் இருக்கும் தொப்பியில் டி.பி.எஸ். (TPS) எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem) இருக்கும். |  |
| 11. | உதவி கண்காணிப்பாளர்(பயிற்சி)<br>(Assistant Superintendent of police probationer)<br><br>தோள்பட்டையில் ஐ.பி.எஸ் (IPS) எழுத்தும் அதற்கடுத்து ஐந்து முனைத் தாரகை (Star) ஒன்றும் இருக்கும் தொப்பியில் ஐ.பி.எஸ் (IPS) எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem) இருக்கும். |  |
| 12. | காவல் துணைக் கண்காணிப்பாளருக்கு (பயிற்சி)<br>(Deputy Superintrndent of police)<br>(Under Training)<br><br>தோள்பட்டையில் டி.பி.எஸ் (TPS) எழுத்தும், அதற்கடுத்து ஐந்து முனைத் தாரகை (Star) ஒன்றும் இருக்கும் தொப்பியில் டி.பி.எஸ் (TPS) எழுத்துடன் கூடிய அசோக சின்னம் (Emblem) இருக்கும். |  |

**மேலே குறிப்பிட்ட அனைத்து அதிகாரிகளும் இடது தோள் பட்டையில் கருநீல ஊதல் கயிறு அணிவார்கள். (Dark Blue Whistle Cord)**



| | | |
|---|---|---|
| 13. | காவல் ஆய்வாளர்- (Inspector of police)<br><br>தோள்பட்டையில் த.கா (TP) எழுத்தும், அதற்கடுத்து கருநீலம் மற்றும் சிகப்பு நிற ரிப்பன் அதற்கடுத்தடுத்து ஐந்து முனைத் தாரகைகள் (Stars) மூன்றும் இருக்கும் தொப்பியில் அசோக சின்னம் (Emblem) இருக்கும். | <br> |
| 14. | காவல் உதவி ஆய்வாளர்<br>(Sub – Inspector of police)<br><br>தோள்பட்டையில் த.கா (TP) எழுத்தும், அதற்கடுத்து கருநீலம் மற்றும் சிகப்பு நிற ரிப்பன் அதற்கடுத்தடுத்து ஐந்துமுனைத் தாரகைகள் (Stars) இரண்டும் இருக்கும். தொப்பியில் அசோக சின்னம் (Emblem) இருக்கும். | <br> |
| 15. | காவல் உதவி ஆய்வாளர் (பயிற்சி)<br>(Sub- inspector of police – (Probationer)<br><br>தோள்பட்டையில் த.கா (TP) எழுத்தும், அதற்கடுத்து கருநீலம் மற்றும் சிகப்பு நிற ரிப்பன் அதற்கடுத்து ஐந்துமுனைத் தாரகை (Star) ஒன்றும் இருக்கும். தொப்பியில் அசோக சின்னம் (Emblem) இருக்கும். | <br> |

காவல் ஆய்வாளர்களும் உதவி ஆய்வாளர்களும் (Taluk) இடது தோள் பட்டையில் காக்கி நிற ஊதல் கயிறு அணிவார்கள்(Khaki Whistle Cord)

ஆயுதப்படை ஆய்வாளர்களும், உதவி ஆய்வாளர்களும் (AR) இடது தோள் பட்டையில் கரும் பச்சைநிற ஊதல் கயிறு அணிவார்கள் (Drak Green Whistle Cord)

இவர்கள் போக்குவரத்து பிரிவில் பணியாற்றும் போது சிவப்பு நிற ஊதல் கயிறு அணிவார்கள்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையைச் சார்ந்த காவல் ஆய்வாளர் மற்றும் காவல் உதவி ஆய்வாளர் ஆகியோர் TSP என்ற எழுத்துக்களும், காக்கி நிற ஊதல் கயிறும் அணிவார்கள்.

| | | |
|---|---|---|
| 16. | தலைமைக் காவலர் -Head Constable<br><br>சீருடையின் இடது கையில் கரு நீல பார்டரில் வெள்ளை நிறத்தில் மூன்று பட்டைகள் இருக்கும்.<br><br>ஆயுதப் படை தலைமைக் காவலருக்கு (Head Constable AR) சீருடையின் இடது கையில் சிவப்பு பார்டரில் வெள்ளை நிறத்தில் மூன்றுபட்டைகள் இருக்கும். |  |
| 17. | முதல் நிலைக் காவலர்<br>(Police Constable Grade 1 Taluk)<br><br>சீருடையின் இடது கையில் கருநீல பார்டரில் வெள்ளை நிறத்தில் இரண்டு பட்டைகள் இருக்கும்<br><br>ஆயுதப் படை முதல் நிலை காவலருக்கு (Grade 1 Police Constable AR) சீருடையில் சிகப்பு பார்டரில் வெள்ளை நிறத்தில் இரண்டு பட்டைகள் இருக்கும். |  |





சார்பு ஆய்வாளரிலிருந்து காவல்துறை இயக்குநர் வரை உள்ள அலுவலர்கள் தங்கள் பதவிக் கேற்ப அசோகச் சின்னமுடைய பழுப்பு நிற (Brown) இடைக்கச்சைகளும் (Belt) அதே நிறமுடைய காலணிகளும் (SHOES) அணிகிறார்கள். இடைக்கச்சைகளில் அவரவர் தகுதிக்கு உரிய சின்னங்களை (IPS,TPS, அசோக சின்னம்) அணிகிறார்கள். தலையில் தலை அணி தொப்பி (PEA CAP) அல்லது பெரே தொப்பி (BERET) அணிகிறார்கள்.





நீல நிற செர்ஜ் தொப்பி தலைமைக் காவலர் தொப்பியில் வெளீர் நீல நிற ரிப்பன் சுற்றப்பட்டிருக்கும். முதல் நிலைக் காவலரும் தலைமைக் காவலரும் பக்கிள் உடைய நீல நீற இடைக்கச்சையும் அணிகின்றனர். காவலர் முதல் தலைமைக் காவலர் வரை கருப்பு நிற காலணி அணிய வேண்டும்.



--------

## 27. இந்திய தரைப்படை பதவிகளும் பதவிச் சின்னங்களும்

# Ranks and Badges of Indian Army

| | | |
|---|---|---|
| 1. | படைத் தளபதி –Field Marshal |  |
| 2. | தளபதி – General |  |
| 3. | உதவி தளபதி –<br>Lieutenant General |  |
| 4. | படைத் தலைமைத் தலைவர்<br>Major General |  |


| | | |
|---|---|---|
| 5. | அணித் தலைவர் - Brigadier |  |
| 6. | தளகர்த்தர் - Colonel |  |
| 7. | உதவி தளகர்த்தர்<br>-Lieutenant Colonel |  |
| 8. | படைத் தலைவர் - Major |  |

| | | |
|---|---|---|
| 9. | தலைவர் - Capatian |  |
| 10. | உதவி தலைவர் - Lieutenant |  |

**28. இந்திய குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர், மாநில ஆளுநர், முதல்வர், அமைச்சர்கள், சபாநாயகர்கள், காவல்துறைத் தலைமை இயக்குநர், காவல்துறை கூடுதல் இயக்குநர், காவல்துறைத் தலைவர், மற்றும் காவல்துறைத் துணைத் தலைவர் ஆகியோரின் வாகனக் கொடிச் சின்னங்கள்**

**(FLAGS OF CARS OF PRESIDENT OF INDIA, STATE GOVERNOR, CHIEF MINISTERS, MINISTERS & SPEAKERS, DGP, ADGP IGP & DIG OF TAMIL NADU)**

| | | |
|---|---|---|
| 1. | மேதகு இந்திய குடியரசுத் தலைவர்,The President of India,<br>மேதகு குடியரசுத் துணை தலைவர், பிரதமர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, நாடாளுமன்ற சபாநாயகர், அசோக சின்னம், தேசிய கொடி சுழலும் சிவப்பு வண்ண விளக்கு<br>மேதகு மாநில ஆளுநர், (The Governor of the State) அசோக சின்னம், மற்றும் தேசிய கொடி. |  |
| 2. | மாண்புமிகு தமிழக முதலமைச்சர்(Hon'ble Chief Minister)<br>மாண்புமிகு மாநில அமைச்சர்கள் மற்றும் சபாநாயகர்கள் (Hon'ble State Ministers, Speakers) தேசியக் கொடி, மற்றும் தமிழக அரசு சின்னம் |  |
| 3. | காவல் துறைத் தலைமை இயக்குநர்-Director General of Police<br>வாகனத்தின் முன்னும், பின்னும் மூன்று தாரகைகள் மையத்தில் "P" என்ற எழுத்துடன் கூடிய கருநீல வண்ணக் கொடி, ஆகியவை இருக்கும் |  |
| 4. | காவல் துறை கூடுதல் இயக்குநர் (Additional DGP)<br>வாகனத்தின் முன்னும், பின்னும் மூன்று தாரகைகள் மையத்தில் "P" என்ற எழுத்துடன் கூடிய கருநீல வண்ணக் கொடி, ஆகியவை இருக்கும் |  |

| | | |
|---|---|---|
| 5. | காவல் துறைத் தலைவா்-Inspector General of Police<br>வாகனத்தின் முன்னும், பின்னும் இரண்டு தாரகைகள் மையத்தில் “P” என்ற எழுத்துடன் கூடிய உள்வாங்கிய நிலையில் கருநீல வண்ணக் கொடி, ஆகியவை இருக்கும் |  |
| 6. | காவல் துறைத் துணைத்தலைவா்<br>Deputy Inspector General of Police<br>வாகனத்தின் முன்னும், பின்னும் ஒரு தாரகையும், மையத்தில் “P” என்ற எழுத்துடன் கூடிய கருநீல வண்ணக் கொடி, முக்கோணவடிவில், ஆகியவை இருக்கும் |  |

மாலை ஆறு மணிக்குப் பிறகு தேசியக் கொடியினை பறக்கவிடக்கூடாது என்பதால், எந்தெந்த கார்களில் தேசியக் கொடிகள் கட்டப்படுமோ, அவை மாலை ஆறுமணிக்குப் பிறகு கழற்றப்பட்டுவிடும். மேலும் வாகனத்தின் முன்னும், பின்னும் பொருத்தப்பட்டிருக்கும் அரசுச் சின்னமும் மூடப்பட்டு விடும்.

# 29. ஊதியம் மற்றும் இதர படிகள்

## PAY AND ALLOWANCES

1. **திருத்தி அமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தின்படி இரண்டாம் நிலைக்காவலரின் ஊதிய விகிதம் பின்வருமாறு:**

| | |
|---|---|
| பணி ஊதியம் ( Duty Pay) | ரூ. 5.200 /- |
| பதவி நிலை ஊதியம் (Grade Pay) | ரூ. 1.900 /- |
| அகவிலைப்படி (Dearness Allowance ) | அரசு அறிவிப்பிற்கிணங்க |
| வீட்டு வாடகைப்படி (House Rent Allowance) | பணியிடத்தைப் பொறுத்து |
| நகர ஈட்டுப்படி(City Compensatory Allowance) | பணியிடத்தைப் பொறுத்து |
| மருத்துவபடி ( Medical Allowance) | ரூ. 100 /- |
| இடர்படி (Risk Allowance) | ரூ. 800 /- |
| சீருடை பராமரிப்புப்படி (Kit Maintenance Allowance) | ரூ. 350 /- |

**பயிற்சி காலங்களில் பயிற்சி காவலர்களுக்கு வீட்டு வாடகைப்படியும் இடர்படியும் வழங்கப்படமாட்டாது.**

**2. மிகை நேர அலுவல் ஊதியம்** (Extra Time Remuneration-ETR) **காவல் நிலை ஆணை (409-C )**

ஆயுதப்படையில் பணிபுரியும் காவலர்கள், முதல் தலைமைக் காவலர்கள் வரை ஒவ்வொரு வாரத்திலும் ஒரு நாள் ஓய்வு அளிக்கப்பட வேண்டும். பொதுநலனைக் கருதி இவர்களுக்கு வாரத்தின் எந்தவொரு நாளிலும் ஓய்வு

அளிக்க இயலாவிட்டால் அந்த அதிகப்படியான அலுவல் நாளுக்கென மிகை நேர அலுவல் நேர ஊதியமாக ரூ.200- அளிக்கப்படும்.

**3. பயணப்படி**

அலுவல் புரியும் இடத்தில் இருந்து 8 கிலோமீட்டர் தூரத்திற்கு மேல் அரசு அலுவல் தொடர்பாக பயணம் செய்தால் பயணப்படி வழங்கப்படும். மேலும் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பணிமாற்றல் (Transfer) காரணமாக சென்றால் இடமாற்றல் பயணப்படி (Transfer T.A) அளிக்கப்படுகிறது. காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரை அரசு அலுவலாக பயணம் செய்ய வேண்டியிருப்பின் அவர்களுக்கு இரயில் பயண ஆணையும் (Railway Warrant) பேருந்துப் பயண ஆணையும் (Bus Warrant) வழங்கப்படும். இரட்டை படிவங்களில் உள்ள இந்த ஆணைகளை இருப்புப்பாதை பயண சீட்டு வழங்கும் அலுவலகம் அல்லது பேருந்து நடத்துனரிடம் கொடுத்து ஒரு படிவத்தில் பயண விவரங்களை குறித்து பெற்றுக் கொள்ளவேண்டும். அலுவல் முடிந்து திரும்பிய பிறகு இப்படிவத்தினை மாதாந்திர பயணப்படி பட்டியலுடன் (Monthly T.A.Bill) இணைத்து மாவட்ட காவல் அலுவலகத்திற்க்கு அனுப்ப வேண்டும். பயணப்படியுடன் அன்றாடப்படியும் (Daily Allowance) வழங்கப்படுகிறது.

## பயணப்படி எழுதும் முறை

1. பயணப்படி என்பது 8 கி.மீட்டர், அதற்கு மேல் அலுவல் சம்மந்தமாக பயணம் செய்யும் போது பெறப்பட வேண்டும்.
2. ஒரு நாளைக்கு 12 மணிநேரத்திற்கு மேல் பயணம் செய்யும் போது முழுபயணப்படி பெறலாம். இது அனைத்து காவல் பிரிவுகளுக்கும் (T.S.P, A.R., LOCAL) பொருந்தும்.
3. ஓரு நாளைக்கு மேல் போனால் இரவு தங்க நேர்ந்தால் தங்குமிடத்தில் உள்ள பொறுப்பு அதிகாரியிடம் கடவுச் சீட்டில் எழுதி வாங்கவேண்டும்.
4. புறப்படும் தேதி, மணி, இடம் குறிப்பிடப்படவேண்டும்.

5. போய் சேருமிடம் , தேதி, நேரம் இவற்றை குறிப்பிடவேண்டும்

6. அலுவலின் தன்மை, விவரம் இவைகள் குறிப்பிட வேண்டும்.

7. பிரயாணம் செய்யும் வாகனம் பற்றி குறிப்பிடப்பட வேண்டும்.

8. பிரயாணம் செய்யும் தூரம். அதாவது செல்லும் இடம் நிலைய வரவு இவற்றுக்கு இடையே உள்ள தூரம் குறிப்பிடப்பட வேண்டும்.

9. பயணப்படி நாள், எண்ணிக்கை குறிப்பிடவேண்டும்.

10. பஸ், இரயில் இவற்றில் பயணம் செய்தால் இவற்றுக்கான கட்டண ரசீது கண்டிப்பாக பயணப்படியுடன் வாரண்டின் ஒரு பகுதியுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

11. பஸ் வாரண்ட், இரயில் வாரண்ட் எண் குறிப்பிடப்பட வேண்டும்

12. முக்கியமாக பஸ் வாரண்ட், இரயில் வாரண்ட் இவற்றில் ஆய்வாளர் அல்லது உதவி ஆய்வாளரின் கையெழுத்து இருக்க வேண்டும்

13. பயணப்படியில் எழுதி உள்ள பயண விவரமும், சம்மந்தப்பட்ட காவலர்களின் கைப் புத்தகத்தில் எழுதிய விவரமும் கண்டிப்பாக ஒரே மாதிரி இருக்கவேண்டும் .

14. முடிவில் சான்றிதழ் எழுதப்பட வேண்டும்.

    1. பயணம் செய்த தூரம் 8.கி.மீ க்கும் அதிகம்

    2. கோரியுள்ள பயணப்படி எதுவும் இதற்கு முன்பு பெறப்படவில்லை.

    3. படிகள் அனைத்தும் என் சொந்த பணத்தில் செலவிடப்பட்டுள்ளது


    4. முன் தொகை எதுவும் பெறப்படவில்லை

    5. சிறுவிடுப்பு மற்றும் மருத்துவ விடுப்பு ஆகியவை பெற்ற நாட்களில் பயணப்படி எழுதப்படவில்லை.

---------------

# 30. பதக்கங்கள் - MEDALS
# (காவல் நிலை ஆணை எண் 59)

காவல் துறையினரின் சீரிய பணிகளைப் பாராட்டி, அவா்களது பணியிணை மேலும் சிறப்படையச் செய்யும் நோக்குடன் பலவித பதக்கங்கள் அளிக்கப்படுகிறது. சிலவகைப் பதக்கங்கள் பெற்ற காவல் அலுவலா்களுக்கு ரொக்கப் பரிசும், மாதாந்திர ஊதியத்துடன் இணைத்து வழங்கப்படும் பதக்கப் படியும் ( Medal Allowance ) அளிக்கப்படுகின்றன.



a). **முதலமைச்சர் பதக்கம் / அண்ணா பதக்கம்**
(Chief minister's Medal / Anna Medal )

தமிழக முன்னாள் முதல்வர் திரு. சி.என். அண்ணாதுரை அவர்களின் பிறந்த தினமான செப்டம்பர் 15 ஆம் நாள் சிறப்பாக பணிபுரிந்த காவலர் முதல் துணைக் காவல் கண்காணிப்பாளர் வரையிலான அலுவலர்களுக்கு 1969 ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் இப்பதக்கம் அணிவகுப்பு விழாவின்போது முதலமைச்சரே இப்பதக்கத்தை அணிவிக்கிறார். பதக்கத்துடன் ரொக்கப்பரிசும் கீழ்கண்டவாறு வழங்கப்படுகிறது.

1. துணைக் காவல் கண்காணிப்பாளர் - ரூபாய். 5000/-
2. காவல் ஆய்வாளர் / உதவி ஆய்வாளா் - ரூபாய். 3000/-
3. தலைமைக் காவலர் / காவலர் - ரூபாய். 2000/-

வீரதீரச் செயலுக்கான அண்ணா விருது / பதவி வேற்றுமை இல்லாது அனைத்துக் காவல் அலுவலர்களுக்கும் வழங்கப்படுகிறது. பதக்கத்துடன் ரொக்கப்பரிசாக ரூ.3000 – மற்றும் பதக்கப்படியாக (Medal Allowance) ரூ.100/- மாதந்தோறும் ஊதியத்துடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

b). **முதலமைச்சர் காவலர் பதக்கம் (Chief Minister's Constabulary Medal)**

காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள் 10 ஆண்டுகள் தண்டனை ஏதுமின்றி மாசு மருவற்ற வகையில் பணிபுரிந்திருந்தால் முதலமைச்சர் காவலர் பதக்கம் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜனவரித் திங்கள் 26-ஆம் நாள் (குடியரசு தினத்தன்று) அந்தந்த மாவட்ட ஆட்சியாளர்களால் வழங்கப்படுகிறது. பதக்கமும் தலைமைக் காவலர்களுக்கு ரூ.100 மற்றும் காவலர்களுக்கு ரூ.100 மாத ஊதியத்தில் பதக்கப்படியாக சேர்த்து வழங்கப்படுகிறது. காவல் துறைக்கு விசுவாசம் இன்றி பணியாற்றினாலோ அல்லது பணியில் கவனக்குறைவாக நடந்து உயர்அலுவலர்களின் கவனத்திற்கு வந்து தண்டனை பெற்றாலோ இப்பதக்கம் பெற்றவர் அதனை இழக்க நேரிடும். இதனை தொடர்ந்து மாதந்தோறும் வழங்கப்படும் படித்தொகையும் நிறுத்தப்படும்.

**c). ஆளுநரின் கண்காணிப்பு பதக்கம்** (Governor's Vigilance Medal)

காவல்துறையின் கண்காணிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புப் பிரிவில் (Vigilance & Anti – Corruption) சிறப்பாக பணியாற்றும் காவல் அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் இப்பதக்கம் அளிக்கப்படுகிறது.

**d). காந்தியடிகள் காவல் பதக்கம்** (Gandhiadikal Police Medal)

கள்ளச் சாராயம் மற்றும் மதுவகைகளை ஒழிக்கும் பணியில் சிறந்து விளங்கும் காவல் அலுவலர்களை ஊக்கப்படுத்தும் நோக்குடன் ஆண்டு தோறும் காந்தியடிகள் காவல் பதக்கத்துடன் ரூ. 20 ஆயிரம் பண முடிப்பும் சேர்த்து வழங்கப்படுகிறது.

e). **தமிழக முதல்வரின் காவல் புலன் விசாரணை சிறப்புப்பணி பதக்கம்** ( TN Chief Ministers Police Medal for Excellence in Investigation)

புலனாய்வு சீரிய திறமை படைத்த புலனாய்வு அலுவலர்களுக்காக 2002ம் ஆண்டு முதல் முதலமைச்சரால் வழங்கப்படும் பதக்கம் ஆகும். கடுமையாகப் பணியாற்றி, சிக்கலான வழக்குகளில் சீரிய முறையில் புலனாய்வு செய்த உதவி ஆய்வாளர் முதல் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பதவி நிலையில் உள்ள

10 காவல் அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும். 8 கிராம் தங்க பதக்கத்துடன் ரூ.5000- ரொக்கப் பரிசும் வழங்கப்படுகிறது.

**f). கென்டால் பதக்கம்** ( Kendal's Medal)

ஆபத்திலிருக்கும் பிறர் உயிரினை தன்னுயிரையும் பொருட்படுத்தாமல் வீரதீரச் செயல் மூலம் காக்கும் காவல் அலுவலர்களின் செயலுக்கென **கென்டால் பதக்கம்** வழங்கப்படுகிறது.

**g).உயிரை காப்பாற்றியதற்காக வழங்கப்படும் இந்திய பிரதமர் பதக்கம்**

(Prime Ministers Medal for Life Saving) (காவல் நிலை ஆணை எண் 50)அபாயகரமான சூழ்நிலைகளில் ஆபத்திலிருக்கும் ஒரு உயிரை தன்னுயிரையும் பொருட்படுத்தாமல் காப்பாற்றும் காவல் அலுவலர்களின் செயலுக்கென பிரதமர் பதக்கம் வழங்கப்படுகிறது.

**h) இந்தியக் காவல் பதக்கம் (Indian Police Medal)**

(காவல் நிலை ஆணை எண் 59)

15 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ச்சியாகப் பாராட்டும் படியான பணி புரிந்த இந்தியக் காவல் அலுவலா்களுக்கு பதவி வேறுபாடின்றி இப்பதக்கம் வழங்கப்படுகிறது.

**i) குடியரசுத் தலைவரின் காவலா் பதக்கம் (Presidents Police Medal)**

(காவல் நிலை ஆண எண் 59)

மெச்சத்தகுந்த முறையில் நீண்ட காலம் திறமையான வகையில் பணி புரிந்த மாசு மருவற்றப் பணிப் பதிவு உள்ள காவல் அலுவலா்களின் கடமை உணா்வினை பாராட்டி அளிக்கப்படும் பதக்கம் குடியரசு தலைவரின் காவல் பதக்கம் ஆகும்.

### j) வீரதீரப் பதக்கம் (Gallantry Medal)

காவல் துறையினர் பணியாற்றும் நேரத்தில் ஆபத்துகளை வீரதீரத்துடன் எதிர் கொண்டு செயல்பட்டாலும், அதனால் விழுப்புண்களோ அல்லது வீர மரணமோ அடைந்தாலும் இவ்வீர தீரப்பதக்கம் ரொக்கத் தொகையுடன் வழங்கப்படுகிறது. விழுப்புண் பெற்றவர்களுக்கு அவரது ஆயுட்காலம் முழுவதும் குறிப்பிட்ட தொகை வழங்கப்படுகிறது. மேலும் இருப்புப்பாதை வண்டிகளிலும் விமானத்திலும் பயணச்சலுகை தற்போது அளிக்கப்படுகின்றது.

----------

# 31. உடைப்பொருட்கள் மற்றும் உடைமைப் பொருட்களை தணிக்கை செய்தல்

# KIT AND KIT INSPECTION

**(காவல் நிலை ஆணை எண் 247) (G.O.Ms.No.1029/Home (Pol.XIV), dt.6.5.1988)**

காவலர் முதல் ஆய்வாளர் வரை காக்கி முழுக்கால்சட்டை, காக்கி சட்டை, இடைக்கச்சை (Belt), காலணிகள், கைத்தடி, தொப்பி, கால் உறைகள் மற்றும் பல பொருட்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும் அவ்வப்போது புதிய பொருட்களும் வழங்கப்படுகின்றன. இது தவிர துணிகளை சலவை செய்து சீராக அணிவதற்கு ஒவ்வொரு காவலருக்கும் சலவைப்படி (Kit Maintenance Allowance) வழங்கப்படுகிறது. இவ்வாறு வழங்கப்படும் பொருட்களின் விபரங்கள் காவலருக்குரிய சிறு பணிப் புத்தகத்தில் (Small Service Book) பதிவு செய்யப்படும். சீருடைகளும் மற்ற பொருட்களும் காணாமல் போய் விட்டால் உடனே உயர் அலுவலருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இல்லையெனில் இப்பொருட்களை திருடிய நபர் இந்த உடைகளை அணிந்து கொண்டு போலி காவலராக சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடும்.

காவலர் பயிற்சி பள்ளி, ஆயுதப்படை மற்றும் காவல் நிலையம் ஆகிய இடங்களில் உயர் அலுவலர்கள் காவலர்களின் உடைப்பொருட்களை தணிக்கை செய்வர். அந்த சமயம் உடைப் பொருட்களை உடை பொருள் தணிக்கை வரைபடத்தில் (Kit Inspection Diagram) கண்டுள்ளபடி காவலர்கள் பார்வைக்கு வைக்க வேண்டும்.

1. வேறு ஒருவர் உடையையோ அல்லது அரசாங்க உடைக்கு பதிலாக சொந்தமாய் வாங்கி வந்த உடைகள் மற்றும் பொருட்களை பார்வைக்கு வைக்கக் கூடாது.
2. குறிப்பிட்ட காலத்திற்கு முன்பு பொருட்களை சேதப்படுத்தக் கூடாது. அவ்வாறு செய்தால் தண்டனை அளிக்கப்படும்.

உடைப்பொருட்கள் தணிக்கையின் போது குறைவாக இருக்கும் மற்றும் வீணாக்கப்பட்ட பொருட்களின் எண்ணிக்கையை உயர் அலுவலர்கள் கணக்கெடுத்து காவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உடைப்பொருட்கள் பண்டகசாலையிலிருந்து வழங்கிட ஆவண செய்வதோடு வீணாக்கப்பட்ட பொருட்களுக்கானத் தொகையை சம்மந்தப்பட்ட காவலர்களின் மாதச் சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்வார்கள். அதன் பின்னரே புதிய பொருட்கள் வழங்கப்படும்.

காவல் நிலையங்களில் காவல் உதவிஆய்வாளரும், மாவட்ட ஆயுதப்படைகளில் காவல் உதவிஆய்வாளரும் (ஆயுதப்படை), காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுடைய உடைப்பொருட்களை ஒவ்வொரு வருடமும் முதல் மற்றும் மூன்றாம் காலாண்டின் முதல் மாதத்தின் முதல் வாரத்தில் தவறாது தணிக்கை செய்ய வேண்டும். காவல் ஆய்வாளர்கள் ஒவ்வொரு ஆண்டும், இரண்டாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் காவலர்களுடைய உடைப்பொருட்களைத் தணிக்கை செய்ய வேண்டும். (G.O.Ms.No.1029, Home (Pol.XIV) dt. 6.5.1988), காவல் ஆய்வாளர் பதவி நிலைக்கு மேற்பட்ட உயர் காவல் அலுவலர்கள் காவல் நிலையத்திற்கு வருகை தரும் போது காவலர் எவரும் உடைப்பொருட்கள் ஆய்வுக்கு வராதிருப்பின் அதே சரகத்தைச் சேர்ந்த வேறு காவல் நிலைய உடைப்பொருட்கள் தணிக்கையின் போது உடைமைகளைத் தணிக்கைக்கு ஆஜர் செய்ய வேண்டும்.

**காவலர்களுக்கு அளிக்கப்படும் உடைப்பொருட்களின் விவரம்:**

| | | |
|---|---|---|
| 1. Beret cap Khaki | - | 1 No. |
| 2. State Emblem for Beret Cap | - | 1 No. |
| 3. T.C. Khaki Full Pant (2 Sets) | - | 6 Mts. |
| 4. T.C. Khaki Shirt (2 Sets) | - | 6 Mts. |
| 5. Whistle with chain | - | 1 No. |
| 6. Metal Button with rings (7 Nos) | - | 7 Nos. |
| 7. Brown Leather Belt | - | 1 No. |

| | | |
|---|---|---|
| 8. Web Belt | - | 1 No. |
| 9. Ammunition Boot (Black) (1Pr.) | - | 1 Pr. |
| 10. Leather Shoe (1Pr.) (Black) | - | 1 Pr. |
| 11. Khaki Socks Woolen (1 Pr.) | - | 1 Pr. |
| 12. Khaki Socks Nylon (1 Pr.) | - | 1 Pr. |
| 13. Brown Canvas (1 Pr) | - | 1 Pr. |
| 14. Dhurry | - | 1 Pr. |
| 15. Black Polish Tin | - | 1 No. |
| 16. Brown Polish Tin | - | 1 No. |
| 17. Ground Sheet | - | 1 No. |
| 18. Lathi with Thong | - | 1 No. |
| 19. White Cotton Banian | - | 2 No. |
| 20. T.C Cloth for Khaki Half Pant | - | 2 Mts (S/W) |
| 21. White Popline Cloth (for Women only) | - | 4 Mts. |
| 22. Frog (Web) | - | 1 No. |
| 23. Frog (Leather) | - | 1 No. |
| 24. Sling (Web) | - | 1 No. |
| 25. Pouch Leather | - | 1 Pr. |
| 26. Blanco (1 Cake Per Month) | - | 1 x 7 |
| 27. Plumes | - | 1 No |
| 28. Sannad | - | 1 No |

**உடைப்பொருட்கள் தொலைந்துவிட்டால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை**

காவலர்களுக்கு அளிக்கப்படும் உடைபொருட்கள் ஏதாவது தொலைந்து விட்டால் அதை உடனே சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்துமூலமாக அந்த

காவலர் தெரிவிக்க வேண்டும். மேலும் அந்த உடைப் பொருளின் மதிப்பீட்டினை சம்மந்தப்பட்ட அதிகாரி மதிப்பீடு செய்து அதற்குண்டான தொகையினை சம்மந்தப்பட்ட காவலரின் மாதச்சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்து மாவட்ட பண்டகசாலையில் செலுத்த வேண்டும். உயர் அதிகாரிகளின் ஆய்வின்போது காவல் ஆளினர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட உடைப் பொருட்களை, வரைப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளது போல் தணிக்கைக்கென பரப்பி வைக்க வேண்டும்.

# 32. தளவாடங்கள் - EQUIPMENTS

தமிழ்நாடு சிறப்புக் காவல்படை மற்றும் ஆயுதப்படை காவலர்களுக்கு சீருடை மற்றும் இதர பொருட்கள் தவிர தலைக் கவசம் (Helmet) துப்பாக்கி தொங்க விடும் பட்டை (Rifle Sling) சாம்பல் நிற இடுப்பு கச்சை (Web Belt) படைத் தளவாட காலணி (Ammunition Boot) ஆகியவை வழங்கப்படுகின்றன. இவற்றை பத்திரமாக பாதுகாப்பது காவலருடைய முக்கிய பொறுப்பாகும்.

### படைக்கலம் மற்றும் தோட்டாக்கள் - ARMS AND AMMUNITION

தமிழ்நாடு சிறப்பு காவல் படை, மாவட்ட ஆயுதப்படை, அனைத்து நிரந்தர காவல் பயிற்சி பள்ளிகள் மற்றும் தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகம் ஆகிய இடங்களில் படைக்கலம் மற்றும் தோட்டாக்களைச் சேமித்துப் பாதுகாக்க ஆயுதக் கிடங்கு (Bell of Arms) அமைந்துள்ளன. காவல் நிலையங்களிலும் துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் அரசு சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. தேவையான சந்தர்ப்பங்களில் இப்படைக்கலன்களை காவலர் மற்றும் அலுவலர்கள் உபயோகிக்க நேர்ந்தால் அவர்களுக்கு ஒப்புகையின் கீழ் வழங்கப்பட்டு பணி முடிந்தவுடன் மீண்டும் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றன. A.K.47, LMG, Insas, Carban, 7.62 mm SLR, Pistol 9 mm, Clock 17 மற்றும் .380 Revolver ஆகிய நவீன ரக ஆயுதங்கள் உட்பட தமிழக காவல் துறையில் பயன்படுத்தப்படுகின்றது.

--------

# 33. விடுப்பின் வகைகள்

# TYPES OF LEAVE

(அடிப்படை விதிகள் மற்றும் தமிழ்நாடு விடுப்பு விதிகள் 1933-ன்படி முறைப்படுத்தப்பட்டது.)

1. **தற்செயல் விடுப்பு (Casual Leave):** தற்செயல் விடுப்பு காவலா் உட்பட அனைத்து அரசு ஊழயா்களுக்கும் ஆண்டிற்கு 12 நாட்கள் அனுமதிக்கப்படுகிறது. தமிழ்நாடு சிறப்புக் காவல்படைப் பிரிவில் பணிபுரியும் காவலா்களுக்கு ஆண்டிற்கு 22 நாட்கள் தற்செயல் விடுப்பு அனுமதிக்கப்படுகிறது. இவ்விடுப்பு எடுத்த விபரங்கள் பணிப்பதிவேட்டில் பதியப்படுவதில்லை. அவசரமான மற்றும் சொந்த அலுவல்களுக்கென இவ்விடுப்பினை பயன்படுத்தலாம். மேலும் அரசு விடுமுறை நாட்களை அனுமதி விடுப்பாக இத்துடன் சேர்த்து அனுபவிக்கலாம். எனினும் தற்செயல் விடுப்பு மற்றும் விடுமுறை அனுமதியுடன் 10 நாட்களுக்கு மிகாமல் அளிக்கப்படும். (GO Ms No.502 (Pub), 7.3.1951)

2. **சிறப்புத் தற்செயல் விடுப்பு (Special Casual Leave)**: ஒரு அரசு அலுவலரின் மனைவி கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டாலும், ஆண் அலுவலா் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டாலும் 7 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு அரசு அலுவலருக்கு அளிக்கப்படும்.

   பெண் அலுவலா் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டாலும் அல்லது கருச்சிதைவு ஏற்பட்டாலும் 45 நாட்கள் சிறப்புத் தற்செயல் விடுப்புப் பெறலாம். ஆனால் பெண் அலுவலா் மகப்பேறைத் தொடா்ந்து இதனை செய்து கொண்டால் இவ்விடுப்பு கிடையாது. துறையின் சாா்பில் அல்லது அரசின் சாா்பில் தேசிய மற்றும் அகில உலக விளையாட்டு போட்டிகளில் கலந்து கொண்டால் 30 நாட்கள் வரை சிறப்புத் தற்செயல் விடுப்பு பெறலாம்.

தொற்று நோயினால் (அம்மை, பிளேக், காலரா போன்றவை) பாதிக்கப்பட்டால் 21 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு வழங்கலாம்.

3. **ஈட்டிய விடுப்பு (Earned Leave):** அரசு அலுவலர்களுக்கு ஆண்டுதோறும் ஜனவரியிலிருந்து 6 மாதங்களுக்கு 15 நாட்களும் மற்றும் ஜுலையிலிருந்து 6 மாதங்களுக்கு 15 நாட்களும் ஈட்டிய விடுப்பு கணக்கிடப்பட்டு அவர்களது கணக்கில் சேர்க்கப்படுகிறது. ஈட்டிய விடுப்பினை அதிகபட்சமாக (240+15) நாட்கள் கையிருப்பில் வைத்திருக்கலாம். 5 ஆண்டுகாலம் பணிமுடித்த பிறகு ஆண்டிற்கு 15 நாட்கள் இவ்விடுப்பினை அரசிற்கு சரண் செய்து அதற்கான தொகையினை பெற்றுக்கொள்ளலாம். (Surrender Leave Salary)

   மேலும் 2 ஆண்டிற்கு ஒரு முறை ஒரு வழிப் பயணச் சலுகையும் 4 ஆண்டிற்கு ஒரு முறை இரு வழிப்பயணச் சலுகையும் (Leave Travel Concession) ஈட்டிய விடுப்பிலிருந்து மற்றும் சிறு விடுப்பிலிருந்தும் அனுமதி பெற்று உபயோகிக்கலாம்.

4. **மருத்துவ விடுப்பு (Medical Leave):** இது மருத்துவச் சான்றின் அடிப்படையில் ஈட்டா விடுப்பில் (Unearned Leave on Medical Certificate) இருந்து அளிக்கப்படுகிறது. பணிக்கால அளவினைக் கொண்டு இவ்விடுப்பினை பயன்படுத்தலாம். தகுதிகாண் பருவத்தினருக்கு முதலிரண்டு ஆண்டுகள் இந்த விடுப்பு எடுப்பின் தகுதிகாண் பருவம் நீட்டிப்பு செய்யப்படும்.

   2 முதல் 5 ஆண்டுகள் வரை 90 நாட்கள் (தகுதி காண் பருவம் முடித்தவருக்கு)

   5 முதல் 10 ஆண்டுகள் வரை 180 நாட்கள்.

   10 முதல் 15 ஆண்டுகள் வரை 270 நாட்கள்

   15 முதல் 20 ஆண்டுகள் வரை 360 நாட்கள்.

   20 ஆண்டுகளுக்கு மேல் 540 நாட்கள்.

இவ்விடுப்பு கோரி மூன்று தினங்களுக்குள் விண்ணப்பம் அனுப்பாவிடில் இவ்விடுப்பு ஈட்டிய விடுப்பிலிருந்து கழிக்கப்படும். ஈட்டிய விடுப்பு இருப்பு இல்லை எனில் சம்பளப் பிடித்தம் செய்யப்படும். மருத்துவ விடுப்பினை 60 நாட்களுக்கு மேல் பெற்றாலும், இடமாற்றத்தைத் தொடர்ந்து மருத்துவ விடுப்பு எடுத்தாலும் மருத்துவக் குழுவின் (Medical Board) சோதனைக்கு அனுப்பப்படுவர். உள் நோயாளியாயிருந்தால் மருத்துவமனையில் விடுப்பு கொடுக்கப்படும். கடவுச் சீட்டின் பேரில் விடுப்பில் செல்ல அனுமதிக்கப்பட்ட காவல் அலுவலர்கள் மருத்துவ விடுப்பு எடுக்க நேர்ந்தால் அருகிலுள்ள காவல் நிலையத்தில் பிணியறிக்கை செய்து கடவுச்சீட்டில் மேல்வரைவு பெற்ற பின்னரே மருத்துவ விடுப்பினை அனுபவிக்க முடியும். தற்செயல் விடுப்பு கடவுச்சீட்டில் விடுப்புப் பெற்று சென்று மருத்துவ விடுப்பு பெறுவது அறவே தவிர்க்கப்பட வேண்டும்.

5. **ஊதியம் இல்லா விடுப்பு (Leave Without Pay):** ஊதியம் இல்லா விடுப்பினை 2 ஆண்டுகளுக்கு மிகாமல் எடுக்கலாம். இவ்விடுப்பு காலத்தில் ஊதியம் கிடைக்காது. வேறுவிதமான விடுப்புகளை வழங்க முடியாதபோது (அல்லது) குறிப்பிட்ட அலுவலரின் விருப்பத்தின் பேரில் இவ்விடுப்பு அளிக்கப்படுகிறது.

## 6. மகப்பேறு விடுப்பு ( Maternity Leave)

காவல் துறையில் பணி புரியும் பெண் அலுவலர்களுக்கு மகப்பேறு கால விடுப்பு (MATERNITY LEAVE) 6 மாதத்திலிருந்து 9 மாதகாலமாக நீட்டிக்கப்பட்டுள்ளது. G.O.(MS) NO.105 நாள் 07.11.2016

# 34. தண்டனைகள்

# PUNISHMENTS

தண்டணைகளை 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

1. மிகச் சிறு தண்டணைகள் (Orderly Room Punishments)
2. சிறிய தண்டணைகள் (Minor Punishments)
3. பெரிய தண்டணைகள் (Major Punishments)

**a). மிகச் சிறு தண்டனைகள் / ஒழுங்கறைத் தண்டனைகள்.**

**(Orderly Room Punishments)**

தினசரி அலுவலின் போது காவலர்கள் செய்யும் சிறு தவறுகளான காலதாமதம், சீருடைகள் சரியாக அணியாமல் இருத்தல், முடிவெட்டாமல் இருத்தல், முகச்சவரம் செய்யாமல் இருத்தல், வேலையில் கவனக்குறைவாக இருத்தல் போன்றவற்றிற்கு அளிக்கப்படும் தண்டணை மிகச் சிறு தண்டணைகள் எனப்படும். காவல் ஆய்வாளருக்கு மேற்பட்ட அலுவலர்கள் தவறு செய்யும் காவலர்களை ஒழுங்கு அறைக்கு (Orderly Room – O.R.) வரவழைத்துத் தண்டனை வழங்கலாம். இத்தவறுகளை மீண்டும் மீண்டும் செய்தால் காவல் ஆய்வாளர் உயர் அதிகாரிகளுக்கு அதனை அறிக்கையாக சமர்ப்பிப்பார். அதனடிப்படையில் காவல் கண்காணிப்பாளர் உரிய தண்டனை வழங்குவார். மிகச் சிறு தவறுகளுக்கு கீழ்காணும் தண்டனைகள் வழங்கப்படும்.

1. அதிக நேர கவாத்து (Extra Drill)
2. அதிக நேர காப்பு அலுவல் (Extra Guard Duty)
3. அலுப்பு அலுவல் (Fatigue Duty)

தண்டனைகளை வழங்குவதற்கு முன் சம்மந்தப்பட்ட காவலரின் விளக்கத்தை அலுவலர்கள் கேட்பார்கள். தண்டனையின் விபரங்கள் மிகச் சிறு

தண்டனை பதிவேட்டில் (Orderly Room Punishment Register) பதிவு செய்யப்படும். மிகச் சிறு தண்டனைகளுக்கு மேல் முறையீடு (Appeal) கிடையாது. இத்தண்டனைகளை உடனுக்குடன் நிறைவேற்ற வேண்டும். இவற்றை செய்ய மறுத்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

b). **சிறு தண்டனைகள் (Minor Punishments) :**

சிறு தண்டனைகள் தமிழ்நாடு காவல்துறை சார்பு நிலை பணியாளர்கள் ஒழுக்கம் மற்றும் மேல் முறையீடு விதிகள் 3(அ) (Tamilnadu Police Subordinate Service Discipline and Appeal Rules 1955 3(a) அடிப்படையில் வழங்கப்படும். எழுத்து மூலமாக செய்த தவறை விளக்கி குறிப்பிட்ட காலத்திற்குள் விளக்கம் கேட்கப்பட்டு அதன் பின்பு தண்டனை வழங்கப்படும். குறிப்பிட்ட காலத்திற்குள் தவறு செய்த அலுவலர் பதிலளிக்காவிட்டால் காலம் முடிந்தவுடன் தண்டனை தரப்படும். சிறு தண்டனைகள் பிரிவில் கீழ்காணும் தண்டனைகளைத் தரலாம்.

1. கரும்புள்ளி (Black Mark) (காவலர்கள் மற்றும் தலைமைக் காவலர்கள்) (காவல் நிலை ஆணை எண் 93)
2. கடுமையாக எச்சரித்தல் (Reprimand) (சார்பு ஆய்வாளர் அதற்கு மேல் உள்ள அலுவலர்களுக்கு) (காவல் நிலை ஆணை எண் 91)
3. நிந்தனை செய்தல் (Censure) (அனைவருக்கும் உண்டு) (காவல் நிலை ஆணை எண் 92)
4. ஆண்டுக்கான ஊதிய உயர்வை ஒத்தி வைத்தல் (Withholding of Annual Increment)
5. 15 நாட்களுக்கு மேற்படாத தற்காலிக வேலை நீக்கத்தைத் தண்டனையாக வழங்குதல் (Suspension as a Specific Punishment)

இத்தண்டனைகள் பணிப் புத்தகத்தில் (Service Book) பதிவு செய்யப்படும். இவை பதவி உயர்வைப் பாதிக்கும். இவற்றிற்கு உயர் அலுவலர்களிடம் மேல் முறையீடு (Appeal) செய்ய வழி உண்டு.

**ஒத்திப் போடப்படும் தண்டனைகள் (Deferred Punishments) காவல் நிலை ஆணை எண் 97)**

சிறு தவறுகள் செய்பவர்கள் மன்னிப்பதற்காகவும் அவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பு அளிப்பதற்காகவும், நிர்ணயிக்கப்பட்ட தண்டனையை 3 முதல் 6 மாதத்திற்கு மேற்படாமல் ஒத்தி போடலாம். இந்த குறிப்பிட்ட காலத்தில் தவறு செய்த அலுவலர் மீண்டும் தவறு செய்யாமல் இருந்தால் இத்தண்டனை முழுவதும் அழிக்கப்பட்டு விடும். ஆனால் மீண்டும் தவறாக நடந்து கொண்டால் ஒத்தி போடப்பட்ட தண்டனை உறுதி செய்யப்படும். ஒத்தி போடப்பட்ட தண்டனைகள் பணிப்பதிவேட்டிலும் தண்டனைக் குறிப்பேடிலும் பென்சிலால் எழுதப்படும் அந்த காலம் முடிந்த பின்பு அழிக்கப்படும். உறுதி செய்யப்பட்டால் பேனாவினால் எழுதப்படும். ஒத்தி போடப்பட்ட தண்டனைக்கு மேல் முறையீடு கிடையாது. கரும்புள்ளி, கடுமையாக எச்சரித்தல், நிந்தனை செய்தல் ஆகியவை மட்டுமே ஒத்தி போடக்கூடிய தண்டனைகள் ஆகும்.

**c) பெரிய தண்டனைகள் (Major Punishments)**

பிரிவு 3(ஆ) (Tamilnadu Police Subordinate Service Discipline and Appeal Rules 1955 3(b) அடிப்படையில் கீழ்க்கண்ட தண்டனைகள் வழங்கப்படலாம்.

1. இறக்கம் செய்தல் (Reduction)
   (அ) பதவி இறக்கம் செய்தல், ஊதியத்தில் பிடித்தம் செய்தல் (Reduction in Rank / Recovery From Pay)
   (ஆ) ஊதியத்தில் இறக்கம் செய்தல் (Reduction in Scale of Pay)
2. தற்காலிக வேலை நீக்கம் / கட்டாய ஓய்வு (Suspension / Compulsory Retirement)

3. நிரந்தர வேலை நீக்கம் (Dismissal)

பெரும் தண்டனைகள், கையூட்டு பெறுதல், பொய்வழக்கு போடுதல், பொது மக்களை துன்புறுத்தல், அரசாங்க பொருட்களை திருடுதல், மற்றும் வீணாக்குதல், குணக்கேடாக நடந்து கொள்ளுதல், சரிவரக் கடமையை செய்யாதிருத்தல், மற்றும் வேலையை விட்டு ஓடிப்போதல் ஆகிய தவறுகளுக்கு அளிக்கப்படும்.

### d) தண்டனை அளிக்கும் போது கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் (Procedure to be adopted while awarding punishment)

ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு முதன் நிலை விசாரணை (Preliminary Enquiry) நடத்தப்படும். அதன் பிறகு குற்றச்சாட்டு குறிப்பாணை (Charge Memo) கொடுக்கப்படும். தவறு செய்த அலுவலர் விளக்கம் (Explanation) அளித்த பிறகு குற்றம் சாட்டுபவர் தரப்பு சாட்சிகளும் (Prosecution Witnesses) பின்பு தவறு செய்தவர் தரப்பு சாட்சிகளும் (Defence Witnesses) விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்படுவர். இரு தரப்பிற்கும் தேவையான ஆவணங்களும் கோப்புகளும் வழங்கப்படும். பின்பு நடவடிக்கை குறிப்பு (Minutes) எழுதப்பட்டு, மறுமுறை விளக்கம் கேட்ட பின்பு ஆணை வழங்கப்பட்டு தண்டனை நிறைவேற்றப்படும். இத்தண்டனைகளுக்கு மேல் முறையீடு செய்யலாம். அந்த முறையீட்டினை பரிசீலனை செய்யும் அலுவலர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையை அதிகரிக்கவும், குறைக்கவும், உறுதி செய்யவும் மற்றும் நீக்கம் செய்யவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதிகபட்ச தண்டனையாக நிரந்தர வேலை நீக்கம் அளிக்கப்படலாம்.

### e) “விட்டோடி” மற்றும் பதவி விலகுதல் அவற்றின் விளைவுகள் Desertion, Resignation and its consequences)

**(காவல் நிலை ஆணை எண் 95)**

முறையான விடுப்பினை பெறாமல் அல்லது அனுமதி பெறாமல் அல்லது பதவி விலகுதல் ஏற்றுக் கொள்ளாமல் இருக்கும் போது தொடர்ந்து 21 நாட்கள் வரை பணிக்கு செல்லாமல் இருந்தால் விட்டோடுதல் எனக் கருதப்படும். எனவே எக்காரணத்தை முன்னிட்டும் தன்னிச்சையாக பணிக்கு செல்லாமல் இருக்கக்

கூடாது. விட்டோடியாக கருதப்படும் ஒருவருக்கு அவர் பணிக்கு வராத நாளிலிருந்து 2 மாதத்திற்குள் வந்து சேருமாறு எச்சரிக்கை அறிக்கை (Warning Notice) அனுப்பப்படும். குறிப்பிட்ட நாட்களுக்குள் காவல் கண்காணிப்பாளரிடம் அறிக்கை செய்து கொண்டு பணிக்கு வர இயலாமைக்கான தக்க காரணங்களைக் கொடுத்தால் அவர் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்படுவார். கொடுக்கப்படும் விளக்கம் பொருத்தமாக இல்லை என்றால் மீண்டும் பணிக்கு அமர்த்தப்படமாட்டார். பணியில் அமர்த்தப்பட்டாலும், அமர்த்தப்படாவிட்டாலும், அவர் மீது 3(b) பிரிவின் கீழ் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு தண்டனை வழங்கப்படும். பொதுவாக விட்டோடுபவர்கள் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்படுவர்.

### f) பதவி விலகுதல் (Resignation) (Fundamental Rule 56)

**(காவல் நிலை ஆணை எண் 84)**

பயிற்சிக் காவலர் உட்பட காவல்துறை அலுவலர் எவரும் பணியை விட்டு தக்க அனுமதியின்றி விலகக் கூடாது. அவ்வாறு விலக நினைத்தால் பதவி விலகுவதின் காரணத்தை எழுத்து மூலம் உயர் அலுவலர்களுக்கு அனுப்ப வேண்டும். அதனை பணியில் அமர்த்தும் அலுவலர் ஏற்றுக்கொண்ட பிறகே அது செல்லத் தக்கதாகும். ஒரு முறை உயர் அலுவலர் பதவி விலகுதலை ஏற்றுக் கொண்ட பிறகு அதனை மாற்றவோ திரும்பப் பெறவோ இயலாது.

### g) தற்காலிகப் பணி நீக்கம் (Suspension) (காவல் நிலை ஆணை எண் 90)

ஒரு காவல் துறை அலுவலர் ஒரு பெரிய தவறை செய்திருந்தாலோ அல்லது செய்திருப்பார் என்று சந்தேகப்பட்டாலோ அல்லது தொடர்ந்து பணியில் இருந்தால் மேலும் தவறு செய்வார் எனக் கருதினாலோ ஒழுங்கு நடைமுறை விசாரணை செய்வதற்காக அவரைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்யலாம். இது ஒரு தண்டணையாகவும் வழங்கப்படுகிறது.

**தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்ட ஒரு காவல் அலுவலர்**

1. சீருடையை உடனே ஒப்படைக்க வேண்டும். சீருடையை அணியக் கூடாது.
2. அடையாள அட்டையை (Identity Card) உடனே ஒப்படைக்க வேண்டும்.

3. அரசு அலுவல் ஏதும் செய்யக் கூடாது. அலுவலகக் கோப்புகளை பயன்படுத்துதல் கூடாது. உயர் அலுவலரின் உத்திரவின்றி அலுவலகத்திற்குள் செல்லக் கூடாது.

4. முழு ஊதியம் அளிக்கப்பட மாட்டாது. வாங்கும் ஊதியத்தில் 2-ல் 1 பங்கு ஊதியமும், பிழைப்பு உதவிப்படியும் (Subsistence Allowance) வழங்கப்படும். தற்காலிகப் பணிநீக்க உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் தான் வசிக்க வேண்டும். உயர்அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்து மூலமான முன் அனுமதியின்றி வேறிடங்களுக்கு செல்லக் கூடாது.

---------

# 35. கட்டுப்பாடு – Discipline

ஒருவர் மற்றொருவரிடம் தன்னிச்சையாக கட்டுப்பட்டு நடப்பது கட்டுப்பாடு எனப்படும்.

உயர் பதவியிலுள்ள ஓர் அலுவலருக்குக் கட்டுப்பட்டு நடந்தால் அதனால் நன்மை பிறக்கும் என்று உணர்வதே சரியான கட்டுப்பாடு எனப்படும். கட்டுப்பாடு என்பது தண்டனைக்கு பயந்து நடப்பது அல்ல.

காவல்துறை போன்ற அமைப்புகளில் அலுவலர்களின் பதவி நிலைப்படி அமைப்பு உள்ளது. உயர் அலுவலர்களின் அறிவுரைகள் மற்றும் உத்தரவுகளுக்கு அவரிடம் பணிபுரியும் அலுவலர்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். எனவே உத்தரவு இடுபவருக்கும் அதனை கீழ்படிபவருக்கும் கட்டுப்பாட்டின் மேன்மை அவசியம் தெரிந்து இருக்க வேண்டும். மேலும் உத்தரவிடும் உயர் அலுவலர் தேவையானால் தன் கீழ் பணிபுரியும் அலுவலர்களையும் கலந்து ஆலோசிக்க வேண்டும். உயர் அலுவலர்களின் கட்டளைக்கு கீழ்படியாமல் இருந்தால் அது ஒழுங்கீனமாகக் கருதப்பட்டு கடும் தண்டனை விதிக்கப்படும். காவல் துறையைப் பொறுத்தவரை ஒழுங்கீனமாக நடப்பது பொறுத்துக் கொள்ள முடியாத குற்றமாகும். எனவே இதனை கருத்தில் கொண்டு அனைத்து காவல் துறை அலுவலர்களும் கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்.

## நடத்தை விதிகள் - CONDUCT RULES

அரசு ஊழியர்களின் நடத்தை விதிகள் என்பது பொதுவாக தமிழ்நாடு அரசில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் பொருந்தும். இருப்பினும் காவல் துறை அலுவலர்கள் கட்டுப்பாடான துறையில் பணிபுரிவதால் அவர்களுக்கென சார்பு நிலைக் காவல் அலுவலர்கள் நடத்தை விதிகள் இயற்றப்பட்டு உள்ளன.

காவல் துறையில் பணிபுரியும் அனைத்து சார்பு நிலை அலுவலர்களும் நடத்தை விதிகளைப் பின்பற்ற வேண்டும். விதிகளை மீறி நடப்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு கடுமையாக தண்டிக்கப்படுவர். அவ்விதி முறைகள் பின்வருமாறு.

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் நடத்தை விதிகள் 1973-வது ஆண்டு பிறப்பிக்கப்பட்டன. அதன் பிறகு தொடர்ந்து பல ஆண்டுகள் இந்த விதிகளில் பல திருத்தங்கள் செய்யப்பட்டு அந்த திருத்தங்களும் அரசாணைகளாக வெளியிடப்பட்டன. அந்த நடத்தை விதிகளும் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட திருத்தங்களும் அமலில் இருக்கிறது என்பதை தெரிவிப்பதற்காக 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த விதிகள் மீண்டும் மீண்டும் அரசிதழில் (Government Gazette) வெளியிடப்படுவது வழக்கம்.

1. எந்த அரசு ஊழியர்களும் அரசின் முன் அனுமதியின்றி ஆயிரம் ரூபாய்க்கு மேலான பரிசு பொருட்களை பெறுவதோ அல்லது அவரது மனைவி மற்றும் அவரது குடும்பத்தில் யாரும் பெறுவதை அனுமதிக்க முடியாது. ஆனால் திருமணம், ஆண்டு விழாக்கள், இறுதிச்சடங்குகள், மத விழாக்கள் போன்ற விசேஷ நிகழ்ச்சிகளில் நெருங்கிய நண்பர் அல்லது உறவினர்களிடம் இருந்து ரூபாய் ஐந்தாயிரத்துக்கு மேற்படாத பரிசு பொருட்களை பெற்றுக்கொள்ள அரசு அனுமதி தேவை இல்லை.

2. அரசு ஊழியர்கள் வரதட்சணை கொடுப்பதோ பெறுவதோ கூடாது.

3. எந்த ஒரு அரசு ஊழியரும் அரசின் முன் அனுமதி இல்லாமல் ரூபாய் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொகையை கடனாக வாங்கவோ, கொடுக்கவோ கூடாது.

4. கல்வி கற்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள், மாணவர்களோடு பண லாபம் பெறும் வகையில் எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளக்கூடாது.

5. அரசு நிலத்தை அரசு ஊழியர்கள் ஆக்கிரமிக்கக் கூடாது.

6. அரசு பணியில் சேர்ந்த மூன்று மாதங்களுக்குள் அரசு ஊழியர்கள் தங்கள் சொத்து கணக்கை தாக்கல் செய்ய வேண்டும். அதன் பிறகு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தங்கள் சொத்து கணக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

7. தனக்கு அசையா சொத்துக்கள் உரிமையாக உள்ள ஒரு மாவட்டத்துக்காவது அரசு ஊழியர்கள் மாற்றப்பட்டால் உடனடியாக அந்த சொத்து விவரங்களை மேல் அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும்.
8. தான் பணிபுரியும் மாவட்டத்தில் வீட்டு மனையோ ஏற்கனவே கட்டப்பட்ட வீட்டையோ தவிர வேறு எந்த நிலமும் வாங்க அரசு ஊழியர்களுக்கு அனுமதி இல்லை. அந்த மாவட்டத்திலிருந்து அவர் மாற்றப்பட்ட பிறகும் இரண்டு ஆண்டுகள் வரை இந்த உத்தரவு அமலில் இருக்கும்.
9. அரசின் முன் அனுமதி இல்லாமல் எந்த அரசு ஊழியரும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ வர்த்தகம், வியாபாரம் எதிலும் ஈடுபடக் கூடாது. எந்த பணியையும் மேற்கொள்ளவும் கூடாது.
10. எந்த ஒரு அரசியல் கட்சியிலோ, அரசியல் தொடர்பான அமைப்புகளிலோ, அரசு ஊழியர்கள் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது. எந்த ஒரு அரசியல் இயக்க நடவடிக்கைகளுக்கும் உதவி செய்யக் கூடாது. அவர் அரசியல் நடுநிலை உள்ளவராக இருக்க வேண்டும். தேர்தலில் எந்த ஒரு அரசியல் கட்சிக்கோ, வேட்பாளருக்கோ சாதகமாக இருக்கிறார் என்ற சந்தேகத்துக்கு இடம் அளிக்கக் கூடாது.
11. எந்த அரசு ஊழியரும் இருதார திருமணம் செய்யக் கூடாது.
12. வீட்டு வேலைக்காக 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை சேர்க்க கூடாது.
13. பணியில் இருக்கும் போது குடி போதையில் இருக்கக் கூடாது.
14. வேலை நிறுத்தத்தில் அரசு ஊழியர்கள் ஈடுபடக்கூடாது.அலுவலக வளாகத்திலோ அதற்கு அருகில் உள்ள இடத்திலோ எந்த ஒரு கூட்டமும் நடத்தக் கூடாது. பேரணியும் நடத்தக் கூடாது.

## குறை தீர்க்கும் முறையீடுகள் - GRIEVANCES

பொதுவாக அனைத்து அரசு ஊழியர்களும் குறிப்பாக காவல்துறை அலுவலர்களும் தங்களது பணிக்காலத்தில் ஏற்படக்கூடிய குறைபாடுகள் குறித்து சம்மந்தப்பட்ட உயர் அலுவலர்களிடம் முறையீடு (புகார்) செய்யலாம். இவை

ஊதியம் கிடைக்காமை, ஊதியத்தில் ஏற்படும் முரண்பாடுகள், முறையாக கிடைக்க வேண்டிய கடன் மற்றும் முன்பணம், அரசு வீட்டு வசதி போன்ற அத்தியாவசிய தேவைகள் கிடைக்கப் பெறாத அல்லது மறுக்கப்படுகின்ற சமயங்களில், அது குறித்து உயர் காவல் அலுவலர்களுக்கு முறையீடு செய்து நிவாரணம் பெறலாம்.

மேலும் தற்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின் படி காவல் அலுவலர்களின் குறைகேட்பு நாள் (Grievance Day) உயர் அலுவலர்களால் நடத்தப்படுகின்றது. இதன்படி மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் வெள்ளிக்கிழமை தோறும் மாவட்ட ஆயுதப்படை அலுவலர்களுக்கும், செவ்வாய்கிழமை தோறும் தாலுகா காவல் துறை அலுவலர்களுக்கும் குறை கேட்பு நாள் நடத்த வழிவகுக்கப்பட்டுள்ளது. இதே போன்று ஒவ்வொரு மாதமும் சரக காவல் துறை துணைத் தலைவர்களும், மண்டல காவல் துறைத் தலைவர்கள் மற்றும் சிறப்புப் பிரிவுகளின் காவல் துறைத் தலைவர்கள் இரண்டு மாதங்களுக்கொருமுறையும், கூடுதல் காவல் துறை இயக்குநர்கள் மற்றும் காவல் துறை இயக்குநர் அவர்கள் மூன்று மாதத்திற்கு ஒரு முறையும் குறைகேட்பு நாள் நடத்தி காவல் அலுவலர்களின் முறையீடுகளை செவியுற்று துயர் களைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (தலைமை அலுவலக சுற்றிக்கைகள் Rc No:166358/Genl-1/2001 நாள் 09.10.2001 & Rc No:099228/Genl/2017 நாள் 06.07.2017)

---------

# 36. மேல் முறையீடுகள் - APPEALS

## (காவல் நிலை ஆணை எண் 103)

காவல் துறை அலுவலர்கள் தங்களுக்கு உயரலுவலர்களால் அளிக்கப்பட்ட துறை ரீதியான தண்டனைக்காகவோ அல்லது நீதி மன்றங்களால் அளிக்கப்பட்ட தண்டனைகளுக்காகவோ மேல் முறையீடு செய்யலாம்.

எல்லா தண்டனைகளுக்கும் மேல்முறையீடு செய்ய இயலாது. ஒரு சில தண்டனைகளுக்கும் பெரிய தண்டனைகளுக்கும் மேல் முறையீடு செய்ய வழி உண்டு. நீதி மன்றத்தால் அளிக்கப்பட்ட தண்டனைக்கு, தண்டனை அளித்த நீதிமன்றத்திற்கு மேற்பட்ட அதிகாரம் உள்ள நீதிமன்றத்தில்தான் மேல்முறையீடு செய்ய இயலும், ஊதிய முரண்பாடு, பதவி உயர்வு போன்ற நியாயமாகக் கிடைக்கக் கூடிய சலுகைகள் மறுக்கப்படும் போது தொடர்புடைய உயர் அலுவலர்களுக்கு மேல் முறையீடு செய்து நிவாரணம் பெறலாம்.

### பதவி உயர்வுகள் - PROMOTIONS

காவலருக்கு அடுத்த கட்ட பதவி உயர்வு முதல் நிலைக் காவலர் (Gr.I PC). இந்த பதவி உயர்வு ஒவ்வொரு மாவட்டக் காவல் கண்காணிப்பாளரால், தகுதியின் அடிப்படையில், நல்ல பணிப்பதிவும், தண்டனை எதுவுமின்றி பணிபுரிந்த காவலர்களுக்கு மட்டுமே இப்பதவி உயர்வு கிடைக்கும்.

### வெகுமதிகள் - REWARDS

**(காவல் நிலை ஆணை எண் 46)**

காவல் துறையினரது அயராத பணிகளைப் பாராட்டி, அவர்களை மேலும் சிறப்பாக பணி செய்ய உற்சாகப்படுத்தும் நோக்குடன் வெகுமதிகள் அளிக்கப்படுகின்றன.

சிக்கலான வழக்குகளில் திறம்பட புலனாய்வு செய்தல், தீவிர முயற்சியின் விளைவாக குற்றவாளிகளைக் கைது செய்தல், களவாடப்பட்டப் பொருட்களை

மீட்டுத்தருதல், சீரிய புலனாய்வின் விளைவாக குற்றவாளிக்குத் தக்க தண்டனை கிடைக்க வழி வகுத்தல் போன்ற நற்பணிகளுக்கு வெகுமதிகள் வழங்கப்படுகின்றன. வெகுமதிகளை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. நற்பணிப் பதிவு – (Good Service Entry – GSE)(காவல் நிலைய ஆணை எண் 58)
2. மெச்சத்தகுந்தப் பணிப் பதிவு – (Meritorious Service Entry – MSE) (காவல் நிலை ஆணை எண் 58)
3. பண வெகுமதி – (Money Reward) (காவல் நிலை ஆணை எண் 47)
4. பாராட்டுக் கடிதம் - (Letter of Commendation) (காவல் நிலை ஆணை எண் 56)

நற்பணிப் பதிவு காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான அலுவலர்களுக்கு உயர் அலுவலர்களால் வழங்கப்படுகிறது.

மெச்சத்தகுந்த பணிப்பதிவு ஆய்வாளர்களுக்கு மட்டும் காவல்துறை தலைவர் மற்றும் இயக்குநரால் வழங்கப்படுகிறது.

பண வெகுமதி காவலர் முதல் உதவி ஆய்வாளர் வரையிலான காவல் துறை அலுவலர்களுக்கும், காவல் துறையினருக்கு தகவல் மற்றும் உடனிருந்து உதவி செய்யும் தனி நபர்களுக்கும் துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் உயர் அலுவலர்களால் வழங்கப்படுகிறது.சமூக நிலையில் உயர்ந்துள்ள தனி நபர்கள் காவல் துறையினருக்கு நல்கும் சீரிய உதவிகளைப் பாராட்டியும் துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவரது பதவி நிலைக்கு மேற்பட்ட காவல் அலுவலர்களின் சிறப்பான பணியினைப் பாராட்டியும், பாராட்டுக் கடிதங்கள் காவல் உயர் அலுவலர்களால் வழங்கப்படுகின்றன.

---------

# 37. மருத்துவ சிகிச்சை

# MEDICAL TREATMENT

## காவல்நிலை ஆணை எண் 385

1. காவல் அலுவலர்களுக்கு காவல் மருத்துவமனைகளிலும் (Police Hospitals) மற்றும் அரசு மருத்துவமனைகளிலும் (Government Hospitals) இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.
2. காவலருக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டால் அதற்கான பிணி கடவுச் சீட்டு (Sick Passport) பெற்று மருத்துவ சரித்திர ஏடுடன் (Medical History Sheet) மருத்துவ மனைக்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.
3. உள்ளிருப்பு நோயாளியாக (In patient) அனுமதிக்கப்பட்டால் மருத்துவரின் அனுமதி பெற்றுதான் வெளியில் செல்ல வேண்டும்.
4. சிகிச்சை முடிந்த பின்னர் கடவுச் சீட்டில் சிகிச்சை பெற்ற விபரங்களைப் பதிவு செய்து பின்னர் காவல் நிலையம் சென்று அறிக்கை செய்து கொள்ள வேண்டும்.
5. மருத்துவமனை சென்று வர பேருந்து பயண ஆணை (Bus Warrant) உபயோகிக்கலாம்.
6. மாவட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றும் 10 நாட்களுக்கு மேல் நோய் குணமாகவில்லையெனில் தலைமை மருத்துவமனைகளுக்கு மருத்துவரால் அனுப்பப்படுவார்.

**காவல் அலுவலர்களுக்கான மருத்துவ பரிசோதனை**

**(Biennial Medical Examination)**

**காவல் நிலை ஆணை எண் 385 (1)**

1.இந்திய காவல் பணி அலுவலர்களை தவிர அனைத்து தமிழ்நாடு சார்பு நிலைக் காவல் பணியாளர்களும் தமிழ்நாடு காவல் பணியின் கீழுள்ள காவல்

கண்காணிப்பாளர் வரை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்டாய மருத்துவ பரிசோதனை (Biennial Medical Examination) செய்துகொள்ள வேண்டும். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தன் கீழ் பணிபுரியும் காவல் அலுவலர்களுக்கு இப்பரிசோதனையினை அரசு மருத்துவ அலுவலர் மூலம் நடத்த வேண்டும். மேலும் இந்திய காவல் பணியின் கீழுள்ள காவல் கண்காணிப்பாளர்கள் தவிர மற்ற அனைத்து காவல் கண்காணிப்பாளர்களும் இப்பரிசோதனையினை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தங்களுக்கும் செய்து கொள்ள வேண்டும். இத்தகைய பரிசோதனை இலவசமாக செய்யப்படுதல் வேண்டும்.

மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்ட விவரங்களை குறிப்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் ஒரு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும். அதில் ஒவ்வொரு காவல் அலுவலர்களுக்கும் தனித்தனியே பக்கங்கள் ஒதுக்கப்பட்டு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்ட விவரங்களை அதில் குறிக்க வேண்டும்.

ஒவ்வொரு ஆண்டு முடிவிலும் குறிப்பிடப்பட்ட கால வரையறைக்குள் அனைத்து காவல் அலுவலர்களுக்கும் மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது என்பதை காவல் கண்காணிப்பாளர் உறுதி செய்ய வேண்டும்.

2. G.O.(Ms) 142, Home ( pol.IX) Dept. dt.24.02.2014-ன் படி 40 வயது முடிவுற்ற காவல்அலுவலர்கள் அனைவருக்கும் முழு உடற்பரிசோதனை (Master Health Check up) அரசினால் ஆண்டு தோறும் இலவசமாக செய்யப்பட்டு வருகிறது. இதனால் காவல் அலுவலர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

---------

# 38. காவல் துறையினருக்கான நலத்திட்டங்கள்

# (Welfare Measures for the Police)

1. **தமிழ்நாடு காவல்துறை கருணைக் கொடைத் திட்டம் (Tamil Nadu Police Benevolent Fund)**

இந்நல நிதித்திட்டத்தின் கீழ் மாதந்தோறும் மாத ஊதியத்தில் ஆய்வாளர்களுக்கு ரூ.150/-ம், உதவி ஆய்வாளர்களுக்கு ரூ.120/-ம், தலைமை காவலர்களுக்கு ரூ.100/-ம் காவலர்களுக்கு ரூ.80/- ம் பிடித்தம் செய்யப்படுகிறது. தமிழக காவல்துறையில் பணிபுரியும் அரசிதழில் பதிவுபெறா பணியாளர்கள் மற்றும் அவர் தம் குடும்பத்தினருக்கு நிதி உதவி மற்றும் இதர நிவாரண உதவிகளை வழங்கும் நோக்கத்திற்காக இத்திட்டம் 1957 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. காவல் பணியாளர்கள் மற்றும் காவல்துறையில் பணியாற்றும் அமைச்சுப் பணியாளர்களிடமிருந்து மாதந்தோறும் பெறப்படும் சந்தாவைக் கொண்டு இந்த நிதியம் செயல்படுகிறது.

அ) இதனைக் கொண்டு குடும்ப நிவாரணம் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது:-

- உறுப்பினர் இறக்க நேரிட்டால் ரூ.15,000-ம்
- உறுப்பினரின் குடும்ப உறுப்பினர் இறக்க நேரிட்டால் ரூ.5,000-ம் நிவாரணத் தொகையாக வழங்கப்படுகிறது.

ஆ) காவல்துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு, கல்லூரிகள் அல்லது தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து மேற்படிப்பை மேற்கொள்ள தமிழ்நாடு காவல் நூற்றாண்டு கல்வி உதவித்தொகை ரூ.4,200 முதல் 12,000 வரை வழங்கப்படுகிறது.

மேலும் இந்நிதியத்திற்கு அரசு அளிக்கும் மானியத்திலிருந்து கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**1) பரிசுத் திட்டங்கள் (Prize Scheme)**

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் ஒவ்வொரு மாவட்டத்தில், முதல் 10 இடங்களில் தேர்ச்சிப் பெறும் காவல் துறை பணியாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்படுகின்றன. பத்தாம் வகுப்பு தேர்வில் முதல் 3 இடங்களுக்கு முறையே, ரூ.6500, ரூ.4500 மற்றும் ரூ.2500 எனவும்; நான்கு முதல் பத்து இடங்களை பெறும் மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.2000 எனவும்; பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில், முதல் மூன்று இடங்களுக்கு முறையே ரூ.7500, ரூ.5500 மற்றும் ரூ.3000 எனவும், நான்கு முதல் பத்து இடங்களைப் பெறும் மாணவ, மாணவியர்களுக்கு தலா ரூ.2500 எனவும் பரிசுத் தொகையாக வழங்கப்படுகிறது.

**2) தமிழ்நாடு அரசு சிறப்பு கல்வி உதவித் தொகை (Tamil Nadu Govt. Special Shcolarship)**

இத்திட்டத்தின்படி காவல் துறை பணியாளர்களின் குழந்தைகளை ஊக்கப்படுத்தி அவர்கள் மேற்படிப்பினை தொடரும் வகையில் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 100 மாணவ, மாணவியர்களுக்கு முன்னர் ரூ.20000 வழங்கப்பட்டு வந்தது. தற்போது ரூ.25000 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

**3) கருணைத் தொகை (Ex-gratia Payments)**

காவல் துறையினர் பணியில் நிகழ்த்தும் வீர தீரச் செயல்களுக்கு ஒரு அங்கீகாரமாக, அனைத்து காவல் பணியாளர்களுக்கும் எவ்வித பாகுபாடுமின்றி, ஒரே அளவில், கீழ்கண்டவாறு நிதி உதவி வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | உயிரிழப்பு ஏற்பட்டால் | ரூ. 5 லட்சம் |
| 2. | நிரந்தர ஊனம் ஏற்பட்டால் | ரூ. 2 லட்சம் |
| 3. | பணியில் ஈடுபட இயலாதவாறு ஒரு கை/ கால் / கண் இழப்பு/ பாதம் மற்றும் விரல்கள் இழப்பு போன்றவை ஏற்பட்டால் | ரூ. 1 லட்சம் |
| 4. | தீக்காயம், குண்டடி காயம், எலும்பு முறிவுகள் ஏற்பட்டால் | ரூ. 50 ஆயிரம் |
| 5. | சிறு காயம் ஏற்பட்டால் | ரூ. 10 ஆயிரம் |

பணியின் போது வீர தீரச் செயல்களினால் உயிரிழக்க நேரிடும் காவல் பணியாளரின் வாரிசுதாரர்களுக்கு மேலே குறிப்பிடப்பட்ட தொகையுடன், பணியாளர் கடைசியாக பெற்ற ஊதியம் அவரது பணிக்காலம் முடியும்வரையில் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

### 4) தமிழ்நாடு காவல் துறை பணியாளர் காப்பீட்டுத் திட்டம் (Tamil Nadu Police Insurance Scheme)

இரண்டாம் நிலை காவலர் முதல் காவல்துறை தலைமை இயக்குநர் வரை இத்திட்டத்தின் கீழ் காப்பீடு பெறுகின்றனர். பணியின் போது உயிரிழப்பு நிகழ்ந்தாலோ அல்லது நிரந்தர ஊனம் அல்லது பகுதி ஊனம் ஏற்பட்டாலோ, நிதி உதவி வழங்கப்படுகிறது. காவலர் முதல் ஆய்வாளர் வரை பணியின் போது உயிரிழக்க நேரிட்டால் ரூ.2 லட்சம் வரையிலும் காவல் துணைக்கண்காணிப்பாளர்களுக்கு மேல்நிலையில் உள்ளவர்கள் ரூ.4 லட்சம் வரையிலும் இத்திட்டத்தின் கீழ் காப்பீடு பெறலாம்.

### புதிய உடல் நல காப்பீட்டுத் திட்டம் - New Health Insurance Scheme

தற்போது அமலில் உள்ள புதிய உடல் நல காப்பீட்டுத் திட்டத்தின்படி ( United India Insurance Company Limited/G.O.Ms.202/dt:30.06.2016.) ஒவ்வொரு காவல் துறை ஊழியர்களுக்கும் மாதா மாதம் அவர்களுடைய ஊதியத்தில் இருந்து ரூ.180 வீதம் பிடித்தம் செய்து காப்பீட்டுத்திட்டத்திற்கு கட்டணம் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து காவலர்களும் மற்றும் அவர்களது கணவன்/மனைவி குழந்தைகள் இத்திட்டத்தின் பலனை அனுபவிக்கத்தகுதியானவர்கள். இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் நான்கு ஆண்டுகளுக்குள் ரூ.7,50,000/- மிகாமல் இலவசமாக சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

### 5) உணவு மானியத் திட்டம் (Food Subsidy Scheme)

காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரையிலான பணியாளர்களுக்கு காக்கி நிற குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு பொது விநியோகத்திட்டத்தின் கீழ், நியாய விலைக்கடைகளில் அரிசி விலையில்லாமலும்,

கோதுமை, சர்க்கரை, மைதா மற்றும் பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்கள் ஐம்பது சதவீத மானியத்துடனும் வழங்கப்படுகின்றன.

### 6) தமிழ்நாடு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி (Grant from the Tamil Nadu Chief Minister's Public Relief Fund)

பணியின்போது உயிரிழக்க நேரிடும் காவல் பணியாளரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் **ரூ.3 லட்சம்** வழங்கப்படுகிறது.

### 7) காவல் மருத்துவமனைகள் (Police Hospitals)

காவல் பணியாளர்களுக்கான அடிப்படை மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஏற்கனவே மாவட்டங்கள் மற்றும் நகரங்கள் அடங்கிய 12 இடங்களில் காவல் மருத்துவமனைகள் செயல்படுகின்றன (சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சேலம், கடலூர், விருதுநகர், வேலூர், புனித தாமஸ்மலை, ஆவடி. மணிமுத்தாறு, திருநெல்வேலி). தற்போது 26 ஆயுதப்படை தலைமையிடங்களிலும் 10 தமிழ்நாடு சிறப்பு காவல் படை தலைமையகங்களிலும் ஆக மொத்தம் 36 இடங்களில் புற நோயாளிகள் மருத்துவ சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆயுதப்படை மற்றும் சிறப்பு காவல் படையில் பணியாற்றும் காவல் அலுவலர்கள் தொடர்ந்து பல இடங்களுக்கு அலுவல் நிமித்தமாக செல்லும் போது அவர்களது குடும்ப உறுப்பினர்கள் உடனடி மருத்துவ சேவை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### 8) காவல் அங்காடிகள் (Police Canteens)

தற்பொழுது தமிழ்நாடு காவல் துறை மற்றும் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை மற்றும் தமிழ்நாடு சிறைத் துறையின் சீருடைப் பணியாளர்களுக்கு மலிவு விலையில் பொருட்கள் பெற அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் முதல் முறையாக அன்றாட தேவைகளுக்கான பொருட்களை வழங்குவதற்கு காவல் துறையினருக்கென சிறப்பு அங்காடிகள் தமிழ்நாட்டில் ஆவடி, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. பின்னர்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவு படுத்தப்பட்டு தற்போது அனைத்து மாவட்டங்களிலும் காவல் அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன. காலஞ்சென்ற, ஓய்வுப் பெற்ற மற்றும் பணிபுரியும் காவல் துறையினரின் குடும்பத்தினா் இந்த அங்காடிகளில் வழங்கப்படும் சலுகைகளைப் பெறலாம். இவற்றில் வழங்கப்படும் பொருட்கள் மதிப்பு கூட்டு வரியிலிருந்து (VAT) விலக்களிக்கப்பட்டு வந்ததால் பொருட்களின் விலை சந்தை விலையைக் காட்டிலும் மிகக் குறைவானதாக இருந்தது.

**9) உங்கள் சொந்த இல்லம் திட்டம் (Own Your House Scheme)**

கடந்த 03.05.2012 அன்று மாண்புமிகு தமிழக முதல்வா் அவா்கள் காவல் துறையின் காவலா் முதல் துணைக் காவல் கண்காணிப்பாளா் வரையிலான பதவி நிலை அலுவலா்களுக்கு உங்கள் சொந்த இல்லம் (Own Your House Scheme) திட்டத்தின் கீழ், வீடு கட்ட மாவட்டம் தோறும் 10 ஏக்கா் அரசு நிலத்தினை ஒதுக்கீடு செய்துள்ளாா்கள். காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள மேலக் கோட்டையூா் எனுமிடத்தில் 100 ஏக்கா் நிலம் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு காவல் வீட்டு வசதிக்கழகத்தின் (TNPHC) மூலம் இவ்வீடுகள் கட்டப்பட்டு தகுதியுள்ளவா்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

---------

# 39. பணி ஓய்வுக் காலப் பயன்கள்

# RETIREMENT BENEFITS

தற்போது விதிகளின்படி ஒரு காவல் அலுவலா் 58 வயது முடிந்த பின்னா் பணியிலிருந்து ஓய்வு பெறவேண்டும். ஓய்வு பெறும் சமயம் குறிப்பிடும் அளவு மொத்த தொகை, ஓய்வூதியமாகக் கிடைக்கும். ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை (Commutation) தொகுத்துப் பெறலாம்.

**பணி ஓய்வுப் பயன்கள் (Retirement Benefit)**

அரசாணை G.O. Ms No.259 Dated 06.08.2003 of Finance (Pension) Dept – ன்படி 01.04.2003 க்கு பின்னா் பணி நியமனம் செய்யப்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியா்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (Contributory Pension Scheme) அமல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி காவலா்களின் மாத ஊதியத்தில் பணி ஊதியம் (Duty Pay) பதவி ஊதியம் (Grade Pay) மற்றும் அகவிலைப்படி (Dearness Allowance) ஆகியவற்றின் கூட்டுத் தொகையில் 10 சதவீதத்தினை பிடித்தம் செய்து அதற்கு சமமான அரசு பங்களிப்பு தொகையினையும் சோ்த்து இத்திட்டத்தின் நிதியில் சேமிக்கப்படுகிறது. இத்தொகை காவல்துறையில் பணிக்கமா்த்தப்பட்ட ஒவ்வொரு காவல் அலுவலருக்கும் முதல் மாத ஊதியத்திலிருந்தே பிடித்தம் செய்வது துவங்கப்படும்.

# 40. பணிப் பதிவேடுகள் - SERVICE RECORDS

பணிக்கு நியமிக்கப்பட்ட அனைத்து காவலர்களுக்கும் கீழ்க்காணும் ஆவணங்கள் கொடுக்கப்படும்.

1) புகைப்பட அடையாள அட்டை (Photo Identity Card)
2) மருத்துவ சரித்திர ஏடு (Medical History Sheet)
3) தண்டனை பதிவேடு (Defaulter Sheet)
4) சிறு பணிப் புத்தகம் (Small Service Book)
5) குறிப்பேடு (Note Book)

**1. புகைப்பட அடையாள அட்டை – Photo Identity Card (காவல் நிலை ஆணை எண்.294)**

இந்த அடையாள அட்டை சன்னத் எனப்படும் அட்டைக்குப் பதிலாக தற்போது வழங்கப்படுகிறது. இதில் காவலரின் பெயர், பொது எண், புகைப்படம், மாவட்டம் மற்றும் பணிபுரியும் பிரிவு பதவி நிலை, பணிக்கு அமர்த்தப்பட்ட நாள், பிறந்த தேதி, குருதி வகைப்பிரிவு, அங்க மச்ச அடையாளக் குறிகள், அட்டை வழங்கப்பட்ட நாள் - ஆகியவை குறிக்கப்பட்டு வழங்கும் அலுவலரின் கையொப்பத்துடன் இருக்கும். பணியிலிருந்து தற்காலிக அல்லது நிரந்தர நீக்கம் செய்யப்பட்டால் அடையாள அட்டையை உடன் ஒப்படைக்க வேண்டும். சீருடை அணியாத நேரத்தில் பணியாற்றுகையில் காவல்துறை அலுவலர் என அடையாளம் காண இந்த அட்டை பயன்படுகிறது. இப்போது இந்த அட்டையானது மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து காவல் துறை ஊழியர்களுக்கும் காவல் துறை இயக்குநர், சென்னை அவர்கள் அலுவலகம் மூலமாக வழங்கப்பட உள்ளது. மேலும் தற்போது வழங்கப்பட உள்ள புதிய அடையாள அட்டையில் காவல் அலுவலரின் விபரங்கள் சேர்க்கப்பட உள்ளன.

**2. மருத்துவ சரித்திர ஏடு – Medical History Sheet (காவல் நிலை ஆணை எண் 295)**

மருத்துவ சரித்திர ஏட்டில் காவலரின் பெயர், எண், பதவிநிலை மற்றும் முகவரி குறிப்பிடப்பட்டிருக்கும். உடல் நலக்குறைவிற்கென மருத்துவமனைக்கு சிகிச்சை பெறச் செல்லும் போது இதனை நிலைய பொறுப்பு அலுவலரிடமிருந்து

பெற்றுச் செல்ல வேண்டும். இதில் மருத்துவ அலுவலர் காவலரின் நோய், அதன் தன்மை போன்ற விபரங்களை பதிவு செய்வார். இரண்டாண்டுக்கு ஒரு முறை மருத்துவ பரிசோதனை (Biennial Medical Examination) செய்து கொண்டு அதன் விவரங்களையும், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை சுகாதார ஆய்வாளர் அம்மை தடுப்பு ஊசி போடும்போதும் இப்புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

**3. தண்டனை பதிவேடு – Defaulter Sheet (காவல் நிலை ஆணை எண்.290)**

இதில் தவறுகளையும் அதற்காக அளிக்கப்பட்ட தண்டனைகளையும் பதிவு செய்ய வேண்டும். மிகச் சிறு தண்டனைகளையும், நிறுத்தி வைக்கப்பட்ட, தண்டனைகளையும் (Deferred Punishment) இப்புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டியதில்லை.

**4. சிறு பணிப் புத்தகம் (படிவ எண் 40) – Small Service Book (காவல் நிலை ஆணை எண் 293)**

இப்பதிவேட்டில் காவலரின் பெயர், எண், பதவிநிலை, முகவரி, சாதி, வயது, முன்னர் செய்து வந்த பணி, பணியில் சேர்ந்த நாள், உடல் அளவுகள், ஊதிய விபரங்கள், அதிகரிப்பு ஊதியம், நற்பணிப் பதிவுகள், வெகுமதிகள், இடமாற்றம், பதவி உயர்வு விபரங்கள், அரசு உடைமைப்பொருட்கள் வழங்கிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட விபரங்கள் பதியப்படும்.

**5. குறிப்பேடு – Note Book (காவல் நிலை ஆணை எண் 710 & 711)**

அலுவலில் ஈடுபடுத்தப்படும் ஒவ்வொரு காவலருக்கும் இத்தகைய குறிப்பேடு வழங்கப்படும். இதில் காவலர் தான் பணிபுரிந்த இடங்கள், சேகரித்த தகவல்கள் போன்ற விபரங்களை உடனுக்குடன் எழுத வேண்டும். அலுவலுக்குச் செல்லும் போது இதனை எடுத்துச் சென்று விவரங்களை எழுதிய பின்னர் நிலைய எழுத்தரிடம் ஒப்படைக்க வேண்டும். அலுவலுக்கு அனுப்பும் பொழுதும், திரும்ப வந்து அறிக்கை செய்யும் பொழுதும் அலுவலர் கையொப்பம் இட வேண்டாம். குறிப்பேட்டினை காவலர் பத்திரமாக பாதுகாக்க வேண்டும். குறிப்பேட்டினை வழங்கும் போது குறிப்பேட்டின் எண், மொத்த பக்கங்களின் எண்ணிக்கை

ஆகியவற்றைக் குறித்து நிலைய பொறுப்பு அலுவலர் சான்றொப்பம் அளிக்க வேண்டும்.

பூர்த்தியான அல்லது பயன்படுத்தி நிறுத்தப்பட்ட குறிப்பேடுகள் காவல் நிலையத்தில் ஐந்து ஆண்டுகள் வரை பாதுகாப்பாகப் பராமரிக்கப்பட வேண்டும். அதன் பிறகு உரிய ஆணை பெற்று அழித்துவிடலாம். புலனாய்வு அலுவலர்கள் பணியிட மாறுதலில் செல்லும்போது தங்கள் குறிப்பேடுகளை காவல் நிலையத்தில் பாதுகாப்பாகப் பராமரிக்க விட்டுச் செல்ல வேண்டும்.

# IV. உள்ளூர் சட்டங்கள் - Local Laws

# 41. தமிழ்நாடு மாவட்டக் காவல் சட்டம் - 1859

## TAMILNADU DISTRICT POLICE ACT – 1859

தமிழக காவல்துறையை ஒழுங்குபடுத்தி, குற்றங்களைத் தடுத்து, கண்டுபிடித்து திறம்படச் செயலாற்றுவதற்கென ஏற்படுத்தப்பட்ட சட்டம்.

இச்சட்டத்தில் உயர்நிலைக்காவல் அலுவலர்கள் என்பது காவல் துறைத் தலைமை இயக்குனர், காவல் துறைத் தலைவர், காவல் துறைத் துணைத்தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், துணை காவல் கண்காணிப்பாளர் ஆகியோரைக் குறிக்கும்.

சார்புநிலைக் காவல் அலுவலர்கள் என்பது ஆய்வாளர் மற்றும் அந்நிலைக்குக் குறைந்த நிலையில் உள்ள அனைத்துக் காவல் அலுவலர்களையும் குறிக்கும். காவலர் என்பது இச்சட்டத்தின்படி நியமிக்கப்பட்டுள்ள அனைவரையும் குறிக்கும். சொத்து என்பது அசையும் பொருள், பணம், பண மதிப்புள்ள காப்பீடு இவற்றைக் குறிக்கும்.

**பிரிவு-5**: காவல் துறை இயக்குனரின் கீழ் மாவட்டக் காவல்துறை செயல்படும்.

**பிரிவு-9:** காவல் துறை இயக்குனர், காவல் துறையினரின் இருப்பிடம், பதவி நிலை, பணி ஆய்வு அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய படைக்கலன்கள், நுண்ணறிவு மற்றும் தகவல் சேகரிப்பு மற்றும் காவல் துறை திறமையாக செயல்படத் தேவையான உத்தரவுகள் மற்றும் விதிமுறைகளை மாநில அரசின் ஒப்புதலுடன் பிறப்பிக்கலாம்.

**பிரிவு-10:** காவல் துறை துணைத் தலைவர் அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், தமக்குக் கீழ் பணிபுரியும் காவல் அலுவலர் கடமையிலிருந்து தவறினாலோ அல்லது ஏதேனும் குறைபாடு கண்டாலோ அல்லது கடமையாற்றத் தகுதியற்றவர் என்று கருதினாலோ இந்திய அரசியல் சட்டத்தின் 311வது பிரிவுக்கும், இந்தச் சட்டத்தின் கீழ் மாநில அரசு உருவாக்கும் விதிமுறைகளுக்கும் உட்பட்டு அத்தகைய அலுவலரை எந்த நேரத்திலும்

பதவியிலிருந்து நீக்குவதற்கும், பதவிக் குறைப்பு அல்லது ஊதியக் குறைப்பு செய்வதற்கும் அதிகாரம் உண்டு.

**பிரிவு-11:** காவல் துறையைச் சேர்ந்த அனைவருக்கும் பணியில் சேர்ந்தவுடன் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை (PHOTO IDENTITY CARD) வழங்கப்படும். பெயர், எண், பதவி நிலை, பணிபுரியும் பிரிவு, பிறந்த தேதி, பணிக்கு சேர்ந்த தேதி ஆகியவற்றுடன் உடல் குறி அடையாளங்கள், குருதிப் பிரிவு, அட்டை வழங்கப்பட்ட நாள் இவற்றைக் குறிப்பிட்டு, வழங்கும் அலுவலரின் கையொப்பம் இருக்கும். அவ்வட்டையை காவல் துறையிலிருந்து நீக்கப்பட்டாலோ, தாமாகவே வேலையிலிருந்து விலகிக் கொண்டாலோ அல்லது தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டாலோ தமக்கு மேல்நிலையில் உள்ள அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

**பிரிவு-16 (சிறப்புக் காவல் அலுவலர்கள்)** பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய அல்லது கலகம் செய்யக் கூடிய அல்லது சட்ட விரோதமானக் கூட்டம் கூடியுள்ளது அல்லது கூடலாம் என்ற அச்சம் ஏற்படும்பொழுது அந்தப் பகுதியில் அமைதி காப்பதற்கு போதுமான படைபலம் இல்லை என்ற கருத்துத் தோன்றினால், அந்தப் பகுதியில் உள்ள பொது ஊழியர்களை அல்லது கிராம ஊழியர்களை அல்லது குடியிருப்பவர்களை ஒரு குறிப்பிட்டக் காலத்துக்கு ஒரு குறிப்பிட்ட முறையில் காவல் பணியாற்றுவதற்காகச் சிறப்புக் காவல் அலுவலர்களாக நியமிக்க வேண்டும் என்று அருகில் உள்ள ஆய்வாளர் தகுதிக்குக் குறைவில்லாத ஒரு காவல் அலுவலர் விண்ணப்பிக்கலாம். அந்தக் குற்றவியல் நடுவரும் அந்த வேண்டுகோளை நிறைவேற்றக் கடமைப்பட்டவர்.

**பிரிவு-17:** இவ்வாறு நியமிக்கப்படும் காவல் அலுவலர்கள் மற்றக் காவல் அலுவலர்களுக்குரிய அதிகாரங்கள், உரிமைகள், காப்புகள் ஆகியவற்றைப் பெறுவதுடன் அவர்களைப் போன்றே கடமை ஆற்றுவதற்கும், கட்டுப்படுவதற்கும், தவறு செய்யும்போது தண்டனை பெறுவதற்கும் உரியவராவர். அவ்விதம் நியமிக்கப்படும் அலுவலருக்கு, அவரை நியமிக்கும் குற்றவியல் நடுவரின் கையொப்பமுள்ள சான்றிதழ் வழங்கப்படும்.

**பிரிவு-18:** இவ்விதம் நியமிக்கப்படும் சிறப்புக் காவல் அலுவலா்கள் தக்க காரணமின்றி கடமையாற்ற மறுத்தாலும் ஆணைக்குக் கீழ்ப்படிய மறுத்தாலும் அக்குற்றத்திற்கு ஐம்பது ரூபாய்க்கு மேற்படாது அபராதம் விதிக்கப்படும்.

**பிரிவு-19:** காவல்துறையைச் சோ்ந்த எவரும் தமது உயா் அலுவலரிடம் இரண்டு மாதங்களுக்கு முன்னதாக அறிவிப்பு தராமல் பணியிலிருந்து விலகக் கூடாது. காவல் துறைத் தலைவரின் முத்திரையிடப்பட்ட உத்தரவை எழுத்து மூலமாகப் பெற்றிருந்தாலன்றி காவல் துறையைச் சோ்ந்த எவரும், இந்தச் சட்டப்படி தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளைத் தவிர வேறு எந்தத் தொழிலிலும் அல்லது வேலையிலும் ஈடுபடக் கூடாது.

**பிரிவு-20:** காவலா் அல்லாத எவரேனும் காவலரின் கடமையை அல்லது அதிகாரத்தை அல்லது சீருடையை பயன்படுத்தி அதன் மூலம் குற்றம் ஏதேனும் புரிந்திருந்தால் அத்தகைய குற்றத்திற்கென விதிக்கப்பட்டுள்ள தண்டனை மட்டுமின்றி இருநூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதமும் ஆறு மாதங்களுக்கு மிகாமல் சிறைத்தண்டனையும் சோ்த்தோ அல்லது அபராதம் மட்டும் அல்லது சிறைத் தண்டனை மட்டும் அளிக்கப்படும்.

பணி நீக்கம் செய்யப்பட்ட அல்லது பணியிலிருந்து விலகிய காவலா் தமக்கு அளிக்கப்பட்ட உடை மற்றும் உபகரணங்களையும் அடையாள அட்டையுடன் சோ்த்து ஒப்படைத்து விடவேண்டும்.

**பிரிவு-21:** ஒவ்வொரு காவல் அலுவலரும் 24 மணிநேரமும் அலுவலில் இருப்பதாகக் கருதப்படுவா். அவா் குற்றங்களையும் பொது ஒழுங்கீனங்களையும் தடுப்பதற்கும், அமைதியைக் காப்பதற்கும், சந்தேகத்திற்கு உரியவா்களை தடுப்பதற்கும், சந்தேகத்திற்கு உரியா்வா்களையும், ஒழுங்கீனமானவா்களையும் கண்டறிவதற்கும், குற்றம் புரிந்தோரைக் கண்டுபிடித்து நீதிமன்ற நடுவரின் முன்நிறுத்துவதற்கும், பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய செய்திகளைத தொகுப்பதற்கும், தொடா்பு கொள்வதற்கும், தமக்கு அழைப்பாணைகளையும், பிடியாணைகளையும் உடனுக்குடன் நிறைவேற்றுவதற்கும் தம் முழு முயற்சியையும் திறமையையும் பயன்படுத்த வேண்டிய கடப்பாடு உடையவராவாா்.

**பிரிவு-42 - தீ விபத்துகள்**

தீ விபத்து நிகழும் போது காவலா் நிலைக்கு மேற்பட்ட எந்தக் காவல் அலுவலரும் அல்லது தீயணைக்கும் படையில் தீயணைப்போரின் நிலைக்கு மேற்பட்ட எவரும், தீயை அணைக்கவோ அல்லது உயிர் அல்லது சொத்துக்களைக் காத்து மீட்பதற்கோ தடையாக உள்ள எந்த நபரையும் அந்த இடத்தைவிட்டு அப்புறப்படுத்தலாம் அல்லது அப்புறப்படுத்த உத்தரவிடலாம்.

1. தீவிபத்து நேர்ந்துள்ள இடத்துக்கு அருகில் உள்ள தெரு அல்லது வழியை அடைக்கலாம்.
2. தீயணைப்பதற்காகத் தேவைப்படும் குழாய் அல்லது மற்றக் கருவிகளை விபத்து நேர்ந்த இடத்துக்குக் கொண்டு செல்வதற்காக மிக மிகக் குறைந்த அளவு சேதத்தை ஏற்படுத்தி எந்தக் கட்டிடத்தையும் உடைப்பதற்கும் உள்ளே நுழைவதற்கும் அதிகாரம் உண்டு.
3. தீப்பற்றி எரியும் இடத்தில் உள்ள குழாயில் தண்ணீர் வேகமாகவும் சீராகவும் வருவதற்காக வேறு முக்கிய குழாய்களின் நீர்ப் போக்குவரத்தைத் தடை செய்யலாம்.
4. தீயணைக்கும் இயந்திரத்தின் பொறுப்பில் உள்ளவர்களையும் உதவிக்கு அழைக்கலாம்.
5. உயிரையும் சொத்துக்களையும் மீட்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கலாம்.
6. தீயை அணைக்கும் போது ஏற்படும் சேதத்தை தீ விபத்துக்காக எடுக்கப்படும் காப்பீட்டின்படி (INSURANCE) தீ விபத்தினால் நிகழ்ந்த சேதமாகவே கொள்ள வேண்டும். தக்க காரணமின்றி சேதம் ஏற்படுத்தப்பட்டிருந்தால் அதற்கான பொறுப்பிலிருந்து காவல் அலுவலர்களோ அல்லது தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை அலுவலர்களோ விடுபட முடியாது.

**பிரிவு – 44:** கடமையைச் செய்யத் தவறினாலோ, புறக்கணித்தாலோ, முன்னறிவிப்பின்றி தாமாக வேலையிலிருந்து நீங்கினாலோ, விலகினாலோ, அனுமதியின்றி வேறு தொழில் செய்தாலோ, அல்லது தம் அதிகார வரம்பினை மீறி நடந்தாலோ, அல்லது தக்க காரணமின்றி குரோதமாக எந்த நபர் மீதேனும், பொய்யான குற்றச்சாட்டை சுமத்தினாலோ, அல்லது தம்முடைய பொறுப்பில் உள்ள ஒரு நபரை சட்டப்படி குற்றவியல் நடுவரின் முன் கொடுக்கப்பட்ட அவகாசத்திற்குள் கொண்டு செல்லாமல் இருந்தாலோ, அல்லது அந்நபருக்கு ஏதேனும் உடலளவில் தீங்கு இழைத்தாலோ, இச்செய்கைகள் குற்றமெனக் கருதப்பட்டு மூன்று மாதங்களுக்கு மிகாமல் சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்து வழங்கப்படும்.

**பிரிவு-45:** எந்தக் காவல் அலுவலரேனும் எக்காரணம் கொண்டும் நேராகவோ அல்லது மறைமுகமாகவோ யாரிடமிருந்தேனும் ஏதேனும் ஊதியம், இனாம், பதவி உயர்வுக்காகப் பணம், அல்லது ஏதேனும் படி பெற்றால் அக்குற்றத்திற்காக ஆறு மாதங்களுக்கு மிகாமல் சிறைத்தண்டனையும் அல்லது ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஊதிய இழப்பினையும் அல்லது இரண்டும் சேர்த்தும் தண்டனையாக விதிக்கப்படும்.

**பிரிவு-46**: எந்தக் காவல் அலுவலரேனும் நேராகவோ அல்லது மறைமுகமாகவோ தனது சட்ட விரோதமான நடிப்பால் அல்லது மிரட்டலால் தான் செய்ய வேண்டிய செயலைப் புரிவதற்கு அல்லது செய்யாமல் விடுவதற்கு ஏதேனும் கையூட்டு பெற்றால் அக்ககுற்றத்திற்கு பன்னிரண்டு மாதங்களுக்கு மேற்படாமல் ஊதிய இழப்பு அல்லது 12 மாதங்களுக்கு மிகாமல் சிறைத் தண்டனை அல்லது இவ்விரண்டும் சேர்த்தும் விதிக்கப்படும்.

---------

# 42. தமிழ்நாடு நகரக் காவல் சட்டம் 1888
# (THE TAMILNADU CITY POLICE ACT 1888)

சென்னைப் பெருநகரில் காவல் துறையின் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவும் குற்றங்களைத் தடுக்கவும் கண்டுபிடிக்கவும் ஏற்படுத்தப்பட்ட சட்டம், இச்சட்டம் மதுரை, கோவை, திருச்சி, நெல்லை, ஈரோடு, திருப்பூர் மற்றும் சேலம் ஆகிய மாநகரங்களிலும் தமிழக அரசால் அனுமதிக்கப்பட்ட மற்ற இடங்களிலும் அமலில் இருக்கும்.

**பிரிவு-3:** இச்சட்டத்தில் ஆணையாளர் என்பது மாநகரக் காவல் ஆணையாளரைக் குறிக்கும். சார்பு நிலைப் பணி என்பது உதவி ஆணையாளர் பதவிக்குக் கீழுள்ள பதவிகளைக் குறிக்கும்.

**பிரிவு-7:** ஆணையாளருக்கு 1973 ஆம் ஆண்டின் குற்ற விசாரணை முறை சட்டத்தின்படி செயல்துறை நடுவர் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வதிகாரம் மாநில அரசு அவ்வப்போது பிறப்பிக்கும் ஆணையின்படி அமையும்.

**பிரிவு-11:** காவல் படையின் சார்பு நிலை ஊழியர்களைப் பதவியில் இருந்து நீக்குவது, தற்காலிக வேலை நிறுத்தம் செய்வது, பதவிக்குறைப்பு அல்லது சம்பளக் குறைப்புச் செய்வது ஆகியவற்றை அரசியல் சாசனத்தின் 311-வது விதிக்கு உட்பட்டும், மாநில அரசின் அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டும் காவல் ஆணையர் செய்யலாம்.

**பிரிவு-23:** ஒவ்வொரு காவல் அலுவலரும் இந்தச் சட்டத்தின் கீழ் 24 மணி நேரமும் அலுவலில் இருப்பதாகக் கருதப்படுவர் தமக்குரிய பணி தவிர வேறு எந்தப் பணியிலும் ஆணையாளரின் எழுத்து மூலமான அனுமதியின்றி செயலாற்றக் கூடாது. குற்றங்களைத் தடுக்க ஒழுங்கீனமானவர்களை அல்லது சந்தேகத்துக்குரியவர்களை அல்லது குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு தம் திறன் முழுவதையும் பயன்படுத்த வேண்டும். குற்றவாளியை நீதிமன்ற நடுவரின் முன் கொண்டு வரவும் உரிமை கொண்டாடாத சொத்துக்களுக்குப் பொறுப்பேற்கவும் கட்டுப்பாடின்றித் திரியும் கால்நடைகளைக் கைப்பற்றவும் அடைத்து வைக்கவும் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய

செய்திகளை முன்கூட்டியே அறிவதற்கும், தமக்கிடப்படும் ஆணைகளுக்கும் பிடியாணைகளுக்கும் பணிந்து தம் சக்தி முழுவதையும் ஈடுபடுத்திச் செயல்படவும் வேண்டும். இந்தச் சட்டப்பிரிவில் விளக்கப்பட்டுள்ள கடமைகளை ஆற்றுவதற்காக பிடியாணையின்றி மது விற்கும் கடைகள், சூதாட்டக் கிடங்குகள் அல்லது ஒழுங்கீனமான நபர்கள் கூடும் இடங்கள் ஆகியவற்றினுள் நுழைந்து ஆய்வு நடத்துவது சட்டப்படி ஏற்கத்தக்கச் செயலாகும்.

**பிரிவு – 24:** இந்தச் சட்டத்தின் படி தண்டிக்கத்தக்க குற்றத்தைத் தம் கண்முன்னே யார் புரிந்தாலும் எந்தக் காவல் அலுவலரும் மாநில அரசால் அதிகாரம் வழங்கப்பட்ட விலங்குகள் வதை தடுப்புச் சங்க முகவரும் பிடியாணையின்றி அவரைக் கைது செய்யலாம்.

**பிரிவு – 27:** ஒருவரிடம் உள்ள ஒரு பொருள் அல்லது சொத்து ஒரு குற்றத்தை விளைவிக்க இருப்பது என்று ஒரு காவல் அலுவலருக்குச் சந்தேகம் ஏற்படுமானால் அப்பொருளைக் கைப்பற்றி உடனே ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும். அப்பொருள் யாருடைய பொறுப்பில் இருக்க வேண்டும் என்பதற்கு ஆணையாளர் ஆணை பிறப்பிப்பார்.

**பிரிவு – 34 (அ)**: பொழுது போக்குத் திரையரங்குகளில் அனுமதிச் சீட்டை உரிமையாளரின் அனுமதியின்றி விற்பது குற்றமாகும். தலைமைக் காவலர் நிலையில் உள்ளோரும் அதற்கு மேற்பட்டோரும் அத்தகைய குற்றம் புரியும் நபரை பிடியாணையின்றிக் கைது செய்யலாம்.

**பிரிவு – 42:** காவலர் பதவி நிலைக்கு மேலேயுள்ள காவல் அலுவலர், ஆணையாளரின் உத்தரவுப்படி பிடியாணை பெற்று சூதாடும் இடம் என்று சந்தேகிக்கப்படுகின்ற இடத்தில் நுழைந்து அங்குள்ள நபர்களையும் சூதாட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகளையும் கைப்பற்றலாம் தேவைப்பட்டால் பலப்பிரயோகம் செய்தும் அத்தகைய இடத்திற்குள் நுழையலாம்.

**பிரிவு – 64: பொழுது சாய்ந்து பொழுது புலர்வதற்குள் யாரேனும்**

1. குற்றம் புரியும் நோக்கத்துடன் ஆபத்தை உண்டாக்கத்தக்க ஆயுதம் வைத்திருந்தாலும்,

2. குற்றம் செய்யும் நோக்கத்துடன் தன் முகத்தை மறைத்துக் கொண்டு அல்லது மாறுவேடம் பூண்டிருந்தாலும்,
3. குடியிருப்பு அல்லது கட்டிடம் அல்லது கப்பல், படகு ஆகிய இடங்களில் இருப்பதற்குத் தகுந்த காரணம் கூற முடியாமல் இருந்தாலும்,
4. கெட்ட நடவடிக்கையாளர் என்று பெயர் பெற்ற நபர் தக்க காரணமின்றி கடைத்தெருவில் அல்லது ஏதேனும் பொது இடத்தில் திரிந்து கொண்டிருந்தாலும்,
5. கன்னம் வைப்பதற்குத் தேவையான கருவிகளை தகுந்த காரணமின்றி தன்னிடத்தில் வைத்துக் கொண்டிருந்தாலும், எந்தக் காவல் அலுவலரும் அந்நபரைக் கைது செய்யலாம்.

**பிரிவு – 65:** திருட்டுப் பொருள் அல்லது திருடப்பட்ட பொருள் என்று சந்தேகிக்கப்படும் பொருளை ஒரு நபர் தகுந்த காரணம் இல்லாமல் வைத்திருந்தால் அந்நபரைக் கைது செய்யலாம்.

**பிரிவு – 71:** பொது இடங்களில் கீழ்க்காணும் குற்றங்களில் எதனைப் புரிந்தாலும் இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படாத தொகையினை அபராதமாகவோ அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறைக்காவல் தண்டனையோ விதிக்கப்படும்.

i. அசட்டையாகவும், அபாயகரமாகவும் விலங்குகள் மற்றும் வாகனங்களை ஓட்டிச் சென்று அதன் மூலம் தீங்கிழைப்பது.
ii. கால்நடைகளை அபாயகரமாக ஓட்டிச் சென்று தடங்கல் மற்றும் அழிம்பு செய்தல்.
iii. ஆணையாளரின் அனுமதியின்றி யானை மற்றும் ஒட்டகங்களை ஓட்டிச் செல்லுதல், அதன் மீது சவாரி செய்தல்.
iv. நீக்கப்பட்டது.
v. சாலை விதிகளுக்கு மாறாக வாகனங்களை ஓட்டிச் செல்லுதல் மற்றும் போக்குவரத்து காவல் அலுவலர்களின் கட்டளைக்கு கீழ்ப்படியாமலிருத்தல்.

vi. சாலை அல்லது தெருக்களின் ஓரம் தவிர்த்து சாலை அல்லது தெருக்களில் சுருள்வில் அல்லாத வாகனங்களை ஓட்டிச் செல்லுதல்.

vii. நடைப்பாதையில் வாகனங்களை அல்லது விலங்குகளை ஓட்டிச் செல்லுதல்.

viii. பன்னிரண்டு வயதுக்குக் குறைந்த ஒரு குழந்தையின் பொறுப்பில் ஒரு விலங்கு அல்லது வாகனத்தை விட்டு வைப்பது.

ix. கட்டுப்பாடில்லாமல் வாகனம் அல்லது கால்நடையை விட்டு செல்லுதல்.

x. அதற்கென அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் அல்லாமல் மற்ற இடங்களில் வண்டி அல்லது மிருகங்களை விட்டு வைப்பது, கழுவுவது, விற்பனை செய்வது, பயிற்சி அளிப்பது.

xi. பொது வழியில் தடை ஏற்படுத்துவது.

xii. குதிரைகள் மற்றும் மூர்க்கத்தனமுள்ள நாய்களை கட்டுப்பாடில்லாமல் விடுதல்.

xiii. ஒண்ணரை மீட்டர் நீளத்திற்கு மேல் வெளியில் நீட்டிக்கொண்டிருக்குமாறு பொருட்களை வாகனங்களில் எடுத்துச் செல்லுதல்.

xiv. போக்குவரத்துக்கு இடையூறு செய்யும் வகையில் காற்றாடி விடுவது மற்றும் குதிரைகளை பயமுறுத்துவது போன்றவை.

xv. ஆணையரின் அனுமதியில்லாமல் பொது இடங்களில் முரசு கொட்டுதல் மற்றும் இசை கருவிகளை பயன்படுத்துதல்.

xvi. உரிமையாளர் மற்றும் குடியிருப்பவரின் அனுமதியில்லாமல் வீட்டுச் சுவற்றின் மேல் விளம்பரங்களை ஒட்டுதல் மற்றம் அசுத்தம் செய்தல்.

xvii. பொது இடத்தில் குளித்தல் அல்லது விலங்குகளை குளிப்பாட்டுதல்.

xviii. குளியலுக்கென நிர்ணயிக்கப்பட்ட இடங்களை அசுத்தப்படுத்துதல்.

xix. அச்சுறுத்தும் மற்றும் அநாகரிகமான சொற்களை உபயோகித்தல்.

xx. மின் விளக்குகளுடன் பெட்ரோமாக்ஸ் விளக்கில்லாமல் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

**பிரிவு – 71 (A):** ஆணையாளரின் அனுமதியின்றியோ அல்லது அனுமதியில் கூறப்பட்ட நிபந்தனைகளை மீறியோ ஒலிபெருக்கியைப் பயன்படுத்தினால் தலைமைக் காவலர் பதவி நிலைக்கு மேற்பட்ட எந்த காவல் அலுவலரும் அத்தகைய ஒலி பெருக்கி சாதனங்களை கைப்பற்றலாம். இத்தகைய குற்றம் புரிவோருக்கு 3 மாதம் வரையிலான சிறை தண்டனையோ அல்லது ரூ.500/-க்கு மிகாத அளவு அபராதமோ விதிக்கப்படலாம்.

**பிரிவு - 72:** பொது இடத்தில் சூதாடுவதும் சேவல்களைச் சண்டைக்கு விடுவதும் அல்லது அந்த இடத்தில் இருப்பதும் குற்றமாகும்.

**பிரிவு – 74:** அனுமதிக்கப்படாத இடங்களில் எந்தப் பொருளையும் தீயிட்டுக் கொளுத்துவது, கொடும்பாவி இழுப்பது, எரிப்பது ஆகியன குற்றமாகும்.

**பிரிவு – 75:** பொது இடத்தில் குடி போதையில் காணப்பட்டாலும் அல்லது பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் அநாகரீகமாக உரத்த குரலில் அச்சுறுத்தி அல்லது அவதூறு சொற்களைப் பேசினாலும் அக்குற்றத்திற்கு ஆறு மாதங்களுக்கு மேற்படாத சிறைக்காவல் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும். குடிபோதை வன்முறை அல்லது அநாகரீகமாக பொது மக்களுக்குத் தொல்லை தரும் வகையில் காணப்பட்டாலும் குடிபோதையில் வண்டி ஓட்டினாலும் குற்றமாகும்.

---------

# 43. தமிழ்நாடு போக்குவரத்து விதிகள் - 1940 (TAMILNADU TRAFFIC RULES – 1940)

போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி, விபத்துக்களைத் தடுக்க, வாகன ஓட்டுனர்கள் கடைபிடிக்க வேண்டிய ஒரு சில விதிகள் பின்வருமாறு:

**பிரிவு-2:** வாகனம் என்பது சக்கரம் உள்ள வாகனங்களைக் குறிக்கும். மிதிவண்டி மற்றும் மூன்று சக்கர மிதி வண்டியைக் குறிக்காது. மலைப்பாதை என்பது தமிழக அரசிதழில் வெளியிடப்பட்ட சாலைகளைக் குறிக்கும். சாலை என்றால் தெருக்களைக் குறிக்கும். வாகனம் ஓட்டிச் செல்லும்போது, இடது புறமாகவே ஓட்டிச் செல்ல வேண்டும். வலது புறம் செல்லும் வாகனங்களுக்கு இடையூறு இல்லாமல் ஓட்டிச் செல்ல வேண்டும். போக்குவரத்துக் காவல் அலுவலரின் உத்தரவு மற்றும் சைகைகளுக்குக் கட்டுப்பட்டு வாகனம் ஓட்ட வேண்டும்.

**பிரிவு-22:** போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஒரு மிருகத்தையோ அல்லது வாகனத்தையோ ஒரே இடத்தில் நிலையாக நிறுத்தி வைத்தல் கூடாது.

**பிரிவு-39:** தடை (Brake) மற்றும் மணி (Bell) இல்லாமல் வண்டி ஓட்டக் கூடாது. அமர்வதற்கென்று உள்ள இருக்கைகளைத் தவிர வண்டியின் வேறெந்த பாகத்திலும் உட்கார்ந்து சவாரி செய்யக் கூடாது. மிதி வண்டி ஓட்டிச் செல்லும் போது, ஒருவர் பின் ஒருவராகச் செல்ல வேண்டும். பரவலாக ஓட்டிச் செல்லக் கூடாது.

**பிரிவு-42:** மோட்டார் வண்டிகளைத் தவிர மற்ற வண்டிகளில் ஒலிப்பானைப் பயன்படுத்தக் கூடாது.

**பிரிவு-43:** மோட்டார் வண்டிகளைத் தவிர மற்ற வண்டிகளில் கீழ்க்கண்ட விதிகள்படி விளக்கு வைக்க வேண்டும். முன்புறம் வெள்ளை நிற வெளிச்சமும், பின்புறம் சிவப்பு வெளிச்சம் அளிக்கும் விளக்கு இருத்தல் வேண்டும். முன்புறம் ஒரு சக்கரம் உள்ள மிதிவண்டி மற்றும் அவ்வகையான வண்டிகளில் முன்புறம் வெள்ளை வெளிச்சமும் பின்புறம் சிவப்பு வெளிச்சத்தினை பிரதிபலிக்கக்கூடிய விளக்கும் (REFLECTOR) இருத்தல் வேண்டும். வாகனம் ஓட்டிச் செல்லும் போது முன்பக்கமாக சிவப்பு வெளிச்சம் தெரியும்படி ஓட்டிச் செல்லக்கூடாது.

**பிரிவு-44:** நடைபாதை போடப்பட்டிருக்கும் சாலைகளில் நடந்து செல்பவர்கள் அதன் மீது தான் நடக்க வேண்டும். நடைபாதை இல்லாத சாலைகளில் சாலையின் ஓரத்தில்தான் நடக்க வேண்டும்.

**பிரிவு-53:** இச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் விதிகளுக்குப் புறம்பாக நடப்பவர்களுக்கு 100 ரூபாய்க்கு மேற்படாத அபராதமும் மீண்டும் மீண்டும் செய்யும் குற்றங்களுக்கு 300 ரூபாய் அபராதம் விதிக்கப்படலாம். குற்றம் செய்பவர்களின் பெயர் மற்றும் முகவரி தெரிந்து கொண்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். பெயர், முகவரி கொடுக்க மறுப்பவர்களையும், பொய்யான பெயர், முகவரி கொடுப்பவரையும் காவலர்கள் காவல் நிலைய பொறுப்பு அலுவலர் முன்பு ஆஜர் செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

---------

# 44. தமிழ்நாடு நகரத் தொல்லைகள் சட்டம் 1889 (THE TAMILNADU TOWN NUISANCES ACT 1889)

நகரங்களில் போக்குவரத்து மற்றும் வாகனங்களால் ஏற்படும் இடையூறுகளையும், தொந்தரவுகளையும் அபாயத்தையும் தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டமாகும்.

இந்த சட்டம் அனைத்து நகராட்சிக்கு உட்பட்ட இடங்களிலும் அரசாங்கத்தால் அறிவிப்பு செய்யப்பட்ட மற்ற சில இடங்களிலும் மற்றும் சில சிறப்பான காலங்களிலும் அமலில் இருக்கும்.

**காவல் அலுவலர்களின் அதிகாரங்கள்**

இச்சட்டத்தின் கீழ் காவலர் தம் முன்னே தண்டனைக்குரிய குற்றத்தை யார் செய்தாலும் அவர்களை பிடியாணையின்றி கைது செய்யலாம். கைது செய்த நபர்கள் மீது அந்தந்த பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

**பிரிவு - 3: பொது இடத்தில் எவரேனும்**

1. அஜாக்கிரதையாக வண்டி ஓட்டிச் செல்லுதல்
2. கால் நடைகளை பொது மக்களுக்கு அபாயம் ஏற்படும் விதத்தில் ஓட்டுதல்
3. இடையூறு ஏற்படும் விதத்தில் சாலையின் வலதுபுறம் வண்டியை ஓட்டுதல்.
4. வாகனம் அல்லது கால்நடைகளை அடக்க முடியாமல் விரட்டி விடுதல்.
5. வாகனங்களை நிறுத்துமிடம் தவிர வேறு இடங்களில் நிறுத்துவது.
6. போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படும் வகையில் வியாபாரம் செய்தல்.
7. குதிரை அல்லது நாயை மற்றவர் மீது பாய விடுதல்.
8. கட்டிடம் கட்டத் தேவையான பொருட்கள் மற்றும் குப்பைகளை சாலையில் கொட்டி வைத்தல்.
9. அருவருப்பு உண்டாகும்படி நிர்வாணமாகத் திரிதல், பொது இடங்களில் காலைக் கடனைக் கழிக்க விடுதல்.
10. குடி போதையில் தகாத முறையில் நடத்தல், பேசுதல்

இவ்வாறான குற்றங்களை எந்தக் காவல் அலுவலரேனும் தம் கண் முன் யாரேனும் செய்வதைக் கண்டால், இந்தச் சட்டம் அவ்விடத்தில் அமலில் இருக்கும் போது உடனே கைது செய்து நடவடிக்கை எடுக்கலாம்.

**பிரிவு- 3(A): ஒலிபெருக்கி**

காவல் ஆய்வாளர் பதவி நிலைக்கு குறையாத ஒரு காவல் அலுவலரால் தரப்பட்ட அனுமதியின்றி ஒலிபெருக்கியை பயன்படுத்தினால் 3 ஆண்டுகள் வரையிலான சிறை தண்டனையும் ரூ.500/- மிகாத அபராதமும் விதிக்கப்படும்.

**பிரிவு – 4:**

1. கிணறு, குளம் மற்றும் அபாயமான இடங்களைத் தக்க பாதுகாப்பு இல்லாமல் விட்டு வைத்தல்.
2. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை பொது இடங்களில் கொட்டுதல் குற்றம்.
3. இக்குற்றத்திற்கு ரூ.50 அபராதம் அல்லது ஒரு மாதத்திற்க்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.
4. **பிரிவு – 5:** சக்தியற்ற பிராணியை அடித்தல், துன்புறுத்தல் மற்றும் அதன் மீது சவாரி செய்தல் குற்றமாகும். நெசவாளர்கள் மற்றும் தறிவேலை செய்பவர்கள் தங்களுடைய நூல் பாவுகளை பொது இடத்தில் பரப்பி வைத்திருப்பது பற்றி நகராட்சி மன்ற அலுவலரால் அல்லது பொது மக்கள் புகார் கொடுத்தாலன்றி காவலர் யாரும் இச்சட்டத்தின் கீழ் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது. இக்குற்றத்திற்கு ரூ.50 அபராதம் அல்லது ஒரு மாதத்திற்க்கு மேற்படாத சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

**பிரிவு 8:** இச்சட்டத்தில் தண்டிக்கக்கூடிய குற்றம் எதனையும் செய்யும் நபரை எந்த காவல் அலுவலரும் பிடியாணையின்றி கைது செய்யலாம். இச்சட்டப் பிரிவு 5ல் கூறப்பட்டுள்ளவாறு விலங்குகளுக்கு கொடுமை செய்யும் எந்த நபரையும் விலங்குகள் கொடுமை செய்வதை தடுக்கும் சங்கத்தின் முகவர் பிடியாணையின்றி கைது செய்யலாம்.

---------

# 45. தமிழ்நாடு மது விலக்குச் சட்டம் 1937 (THE TAMILNADU PROHIBITION ACT 1937)

மது வகைகளையும் போதையூட்டும் மருந்துப் பொருட்களையும் அறிவியல் வாயிலான மருத்துவப் பயன்பாட்டுக்காக அன்றி வேறு காரணங்களுக்காக உற்பத்தி செய்வதையும் விற்பனை செய்வதையும், பருகுவதையும் தடை செய்வதற்கென உருவாக்கப்பட்ட சட்டம்.

அயல்நாட்டு மது என்பது (பிரிவு 21-ல் சொல்லப்பட்ட காரணங்களுக்காகவன்றி) இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல்நாட்டு மதுவகைகள், இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் அயல்நாட்டு மதுவகைகள் (ஆனால் சாதாரண சுத்திகரிக்கப்பட்ட ஸ்பிரிட் மற்றும் இயல்பு மாற்றப்பட்ட (Denatured) ஸ்பிரிட் மெதிலேட் ஸ்பிரிட் ஆகியவற்றை உள்ளடக்காது).

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல் நாட்டு மது வகைகள் என்பது இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் ஜின், பிராந்தி, விஸ்கி, அல்லது ரம் ஆகியவற்றைப் போன்றது நிறம், மணம் ஆகியவை ஒத்திருக்கும் வகையில் இந்தியாவில் தயாரித்துக் கலக்கப்படும் மதுவகைகளையும் மற்றும் ஆல்கஹால் அடங்கியுள்ள மில்க் பஞ்ச் (MILK PUNCH) மற்றும் விஷ மது வகைகளையும் குறிக்கும்.

மதுவகை என்பது கள். சாராயம், ஸ்பிரிட் அல்லது ஒயின், பீர் மற்றும் ஆல்கஹால் அடங்கிய திரவப்பொருள் அனைத்தையும் குறிக்கும்.

**விளக்கம்:**

இயல்பு மாற்றப்பட்ட (DENATURED) ஸ்பிரிட் என்பது மாநில அரசால் விதிக்கப்பட்ட செயல்முறைப்படி தயார் செய்வதன் மூலம் மனிதர் பருகுவதற்கு உகந்ததல்ல என்று அறிவிப்பு செய்யப்பட்டவற்றைக் குறிப்பதாகும்.

தயாரித்தல் என்பது ஸ்பிரிட்டில் உள்ள புளிக்க வைக்கப்பட்ட அல்லது போதையூட்டும் மதுவகை அல்லது மருந்து வகை ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கான செய்முறை ஒவ்வொன்றையும் குறிக்கும். வெல்லப்பாகு என்பது

வெல்லம் அல்லது சர்க்கரை தயாரிக்கும் போது இறுதியில் வடித்தெடுக்கப்பட்டதும், புளிக்க வைக்கப்படுவதற்காகப் பயன்படுத்தக் கூடியதும் சர்க்கரை அடங்கியதும் ஆகிய கறுப்புநிறத் திரவத்தைக் குறிக்கும்.

நீரா அல்லது பதனி என்பது தென்னை, பனை, ஈச்சம் அல்லது வேறு வகையான மரங்களிலிருந்து சட்டிகளில் இறக்கப்பட்டு, புளிப்படைவதைத் தடுப்பதற்கான வழிவகை செய்யப்பட்டவற்றைக் குறிக்கும்.

சுத்திகரிப்பு என்பது மணம், நிறம் தருவதற்காக அல்லது சுத்தப்படுத்துவதற்காக வேறு பொருளைக் கலப்பதன் மூலம் ஸ்பிரிட்டை சுத்தப்படுத்தும் முறையையும், விற்பனை அல்லது விற்றல் என்பது பரிசாகவும் வேறு விதமாகவும் பிறருக்குக் கொடுப்பது அனைத்தையும் குறிக்கும்.

ஸ்பிரிட் என்பது சுத்திகரித்தல், வடிகட்டல் ஆகியவற்றின் மூலமாகப் பெறப்படும் ஆல்கஹால் அடங்கிய திரவம் அல்லது அப்படியில்லாத சாராய வகைகளையும் குறிக்கும்.

**பிரிவு-4:**

(1) **எவரேனும்**

**a)** எந்த மதுவகை அல்லது போதை மருந்து ஆகியவற்றை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்தாலும் அல்லது எடுத்துச் சென்றாலும் அல்லது வைத்திருந்தாலும் அல்லது

**aa)** ஐம்பது லிட்டருக்கு அதிகமாகவும் நூறு லிட்டருக்கு குறைவாகவும் உள்ள மது வகைகளை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்தாலும் அல்லது வைத்திருந்தாலும் அல்லது எடுத்துச் சென்றாலும்,

**aaa)** நூறு லிட்டருக்கு அதிகமாக உள்ள மது வகைகளை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்தாலும் அல்லது வைத்திருந்தாலும் அல்லது எடுத்துச் சென்றாலும்

**b)** ஏதேனும் மதுவகை அல்லது போதை மருந்தைத் தயாரித்தாலும்

c) ஏதேனும் போதை மருந்தை தயாரிக்கப் பயன்படக்கூடிய செடியின் பாகங்களைச் சேகரித்தாலும் அல்லது மாநில அரசால் அதற்காக உருவாக்கப்பட்டுள்ள விதிமுறைகளை மீறி அத்தகைய செடிகளைப் பயிரிட்டாலும்.

d) ஏதேனும் மரத்திலிருந்து கள் இறக்கினாலும் அல்லது தமக்குச் சொந்தமான அல்லது தமது வசத்திலுள்ள மரத்திலிருந்து கள் இறக்கப்படுவதை அனுமதித்தாலும்.

e) கள் இறக்க மரத்தின் பாளையை சீவி வைத்தாலும் அல்லது சீவ அனுமதித்தாலும்.

f) மது காய்ச்சும் பணியில் ஈடுபட்டாலும் அல்லது அதற்கான இடத்தைக் கட்டினாலும்

g) மது காய்ச்சுவதற்குத் தேவையான சாதனங்களை வைத்திருந்தாலும்.

h) விற்பனைக்காக மதுவகை எதனையேனும் பாட்டில்களில் அடைத்தாலும் அல்லது

i) மதுவகை அல்லது போதை மருந்து ஆகியவற்றை விற்பனை செய்தாலும் அல்லது வாங்கினாலும்.

j) மது அல்லது போதை மருந்து ஆகியவற்றை அருந்தினாலும், வாங்கினாலும்.

jj) (a) முதல் (j) வரை உள்ள செயல்கள் ஏதேனும் புரிவதற்கு உதவியாக இருந்தாலும் அறிந்திருந்தும் பணம் செலவிட்டாலும் அல்லது பயன்படுத்தினாலும்.

k). தன்வசம் உள்ள கட்டிடத்தில் மேலே குறிப்பிட்டுள்ள செயல்கள் நடைபெறுவதற்கு அனுமதித்தாலும் அவைகள் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

(1) கிளைப் பிரிவுகள் (aaa), (b), (f) and (h) ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ள குற்றங்களாயின் மூன்று ஆண்டுகள் வரை சிறை

தண்டனையும் அல்லது ரூபாய் 10,000/- வரை அபராதமும் தண்டனையாகவும்.

(2). கிளைப் பிரிவில் கூறப்பட்டுள்ள குற்றம் (aa) புரிந்திருப்பின் ஆறு மாத காலம் வரை மிகாமல் சிறைத் தண்டனையும் ரூபாய். 2,000/- வரை அபராதமும்.

(3). மற்றப் பிரிவுகளில் வரும் குற்றங்களுக்கு மூன்று மாத காலம் வரை மிகாத சிறைத் தண்டனையும் ரூ. 1,000/- வரையிலான அபராதமும் விதிக்கப்படலாம்.

**பிரிவு – 4 (1-A):**

1-வது கிளைப் பிரிவின் a, aa, aaa, b, h, and l பிரிவுகளில் சொல்லப்பட்ட குற்றத்திற்கு, அதில் சம்பந்தப்பட்ட மது அல்லது போதை மருந்து ஆகியவற்றில் கலந்துள்ள பொருள் அதனை நுகர்வோருக்கு மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிக்கக் கூடியதாக இருந்தால் அந்தக் குற்றம் புரிந்தவருக்கு.

(1). அதனை நுகர்வதால் மரணம் ஏற்பட்டிருந்தால், ஆயுட்காலம் கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் 5,000/- ரூபாய்க்குக் குறையாத அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.

(2). வேறு நிலைகளில் பத்து ஆண்டுகள் வரை கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் 7,000/- ரூபாய் வரை அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.

(3). பிற பிரிவுகளில் கண்டுள்ள குற்றங்களுக்கு மூன்று மாத கால வரையிலான சிறைத் தண்டனையும் ரூபாய் 1,000/- வரையிலான அபராதமும் விதிக்கப்படலாம்.

**பிரிவு – 4 A:** எவரேனும் குடிபோதையில் ஒரு பொது இடத்தில் காணப்பட்டாலும், மது அருந்துவதற்கான அனுமதி இல்லாதவர் ஒரு தனியார் இடத்தில் போதை மயக்கத்தில் காணப்பட்டாலும் அந்த நபருக்கு 3 மாதங்கள் வரை கடுங்காவல் சிறை மற்றும் 1,000/- ரூபாய் வரை அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.

**பிரிவு – 6 A:**

வெல்லப்பாகினை உரிமம் பெறாமல் தம் வசம் வைத்திருப்பதும், ஏற்றுமதி இறக்குமதி செய்வதும் எடுத்துச் செல்வதும் குற்றமாகும்.

**பிரிவு – 13:**

இந்தச் சட்டத்துக்கு விரோதமாக ஒரு குற்றம் செய்யப்பட்டிருந்தால், அத்தகைய குற்றத்திற்குப் பயன்பட்ட மது, மருந்து, சாதனம், பண்டம், அடுப்பு அல்லது கருவிகள் ஆகிய அனைத்தும் மற்றும் அவற்றை வைத்திருக்கும் பண்டம், பெட்டி, மூடிகள், விலங்குகள், பாத்திரங்கள், வண்டிகள் அல்லது வேறு வாகனங்கள் ஆகிய அனைத்தும் பறிமுதல் செய்யக் கூடியவையாகும்.

**பிரிவு – 14 A :**

இச்சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்கள் வண்டிகள் அல்லது இதர வாகனங்கள் அல்லது விலங்குகள் இவற்றின் உரிமையாளரும் குற்றம் புரிந்ததாகக் கருதப்படுவார்.

**பிரிவு – 15:**

இச்சட்டத்தின் கீழ் வரும் அனைத்து குற்றங்களும் பிடியாணையின்றி கைது செய்யக் கூடியவையாகும்.

**மது விலக்கை பொது மக்கள் மற்றும் கிராம கண்காணிப்பு குழு (Village Vigilance Committee) உறுப்பினர்கள் ஒத்துழைப்புடன் அமல்படுத்துதல்.**

மதுவினால் சமுதாயத்திற்கு ஏற்படும் தீமைகளைப் பற்றி பொது மக்கள் நன்கு அறிந்து கொள்வதற்காக கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து, தீமைகளை எடுத்துக் கூற வேண்டும். இந்தச் சட்டத்தின் நோக்கம் நிறைவேற வேண்டுமெனில் பொது மக்களின் ஒத்துழைப்பு இருந்தால் மட்டுமே முடியும். பொதுமக்கள் குடிப்பழக்கத்தில் ஈடுபடுவதைத் தடுக்க ஏற்படுத்தப்பட்ட சட்டத்தை சரியான முறையில் அமல்படுத்தவே கிராம கண்காணிப்புக் குழுவினர் உதவுகின்றனர். ஒவ்வொரு காவல் நிலைய எல்லையிலும் நடக்கும் குற்றங்களைப் பற்றி தகவல் கொடுக்கவும் உதவுகின்றனர். இவர்கள் காவல் அலுவலர்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு அந்தந்தக் காலங்களுக்கேற்ப நடந்து கொள்ளும் வழி முறைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். குற்றவாளிகளால் இவர்களுக்கு ஏதேனும் தீங்கு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் இவர்களைப் பற்றிய விபரங்கள் ரகசியமாக வைக்கப்பட வேண்டும்.

**மது விலக்குக் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் விதம்:**

கள்ளத்தனமாய் மதுவைக் காய்ச்சுபவர்களும் விற்பவர்களும் பொதுவாக இரவில் தான் தொழில் செய்கின்றனர். அவ்விதம் செய்பவர்கள் தகுந்த ஆயுதங்கள் வைத்திருப்பர். அதனால் அவ்விடங்களுக்கு சோதனைக்காகச் செல்லும் போது, அந்த இடம், சூழ்நிலை, அந்தக் குற்றம் புரிபவரின் தன்மை இவற்றை மனதில் கொண்டு அதற்கேற்றவாறு தகுந்த காவலர், பலத்துடனும் ஆயுதத்துடனும் தேவையான மற்ற முன்னேற்பாடுகளுடன் செல்ல வேண்டும்.

சில நேரங்களில் வாகனங்களில் மது வகைகள் கடத்தப்படும் போது அங்கு சாலையில் நின்று வாகனங்களைத் தணிக்கை செய்யும்

அலுவலர்கள் தகுந்த பாதுகாப்புடனும் தேவையான வாகன வசதியுடனும் செயல்பட வேண்டும்.

**குடிகாரர்களை நடத்தும் முறை:**

குடிகாரர்களைப் பிடித்தவுடன் அவர்களைத் துன்புறுத்தக் கூடாது. குடிபோதையில் தான் என்ன செய்கிறோம், என்ன பேசுகிறோம் என்பது தெரியாமல் பேசுவார்கள். அதனால் கோபம் கொண்டு அவர்களை அடிக்க நேரிட்டால் சில சந்தர்ப்பங்களில் அவர்கள் இறந்து விடுவதும் உண்டு. அதனால் அவர்களிடம் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும்.

**மது விலக்கு சம்மந்தமான வழக்குகளில் அறிக்கை எழுதும் முறை:**

காவலர்கள் இச்சட்டத்தின் கீழ் குற்றம் செய்பவர்களைப் பிடிக்க நேரிட்டால், காவல் நிலைய சார்பு ஆய்வாளருக்கு தனி அறிக்கை மூலம் யாரை, எங்கே, எப்போது, எப்படி, யாரால் எந்த சந்தர்ப்பத்தில் பிடிக்கப்பட்டது கைப்பற்றப்பட்ட பொருள்களின் விபரம் மற்றும் மகஜரில் கையெழுத்திட்ட சாட்சிகளின் பெயர், முகவரி போன்ற அனைத்துக் குறிப்புகளையும் விவரமாக எழுதி சிறப்பு அறிக்கையினை சமர்ப்பிக்க வேண்டும்.

**வேதியியல் பரிசோதனைக்கு பொருட்களை சேகரித்தலும் அவைகளை அனுப்பும் முறையும்:**

மது விலக்குக் குற்றங்களில் சம்பந்தப்பட்ட பொருட்களையும் மற்றும் இரத்தம், சிறுநீர் இவைகளையும் வேதியியல் பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும். வேதியியல் பரிசோதனைக்குரிய சான்றிதழ் பெறப்பட வேண்டும். காவல் அலுவலரால் கைப்பற்றப்பட்ட பொருட்கள் இச்சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் தான் என்பதை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டியது காவல் அலுவலரின் கடமை என்பதால் நீதிமன்றம் மூலம் அப்பொருட்களை பரிசோதனைக்கு அனுப்ப வேண்டும்.

---------

# 46. தமிழ்நாடு மோட்டார் வாகன விதிகள் - 1989
## (Tamil Nadu Motor Vehicle Rules – 1989)

மோட்டார் வாகன சட்டம் 1988-னை சரியான முறையில் அமல்படுத்த தமிழக அரசு சில விதிகளை 1989-ல் ஏற்படுத்தியது. சட்டப்படி இவ்விதிகள் கடைபிடிக்கப்படுகின்றனவா என்பதை ஆராயக் காவல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு

**விதி – 4:**

மோட்டார் வாகன ஓட்டுனர் உரிமம் வழங்குதல் அதற்கான அதிகாரம் உள்ள அலுவலரைப் பற்றி தெரிவிக்கிறது. இந்த விதிகளின்படி மண்டல போக்குவரத்து அலுவலர் அல்லது உதவி மண்டல போக்குவரத்து அலுவலர் ஆகியோர் மோட்டார் வாகன உரிமம் வழங்கும் அதிகாரம் படைத்தவர்கள் ஆவார்கள்.

**விதி – 5:**

மோட்டார் வாகன ஒட்டுனர் உரிமம் வழங்கும் உதவி அலுவலர்களைப் பற்றி தெரிவிக்கிறது. இப்பிரிவின்படி மோட்டார் வாகன ஆய்வாளர்கள் நிலை I மற்றும் II ஆகியோர் மோட்டார் வாகன ஒட்டுநர் உரிமம் வழங்கும் உதவி அலுவலர்கள் (சில குறிப்பிட்ட இடங்களுக்கு) ஆவார்கள். அதே போல் மண்டல போக்குவரத்து அலுவலரின் நேர்முக உதவியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர் உதவி மோட்டார் வாகன உரிமம் வழங்கும் அலுவலர்களாவார்கள். மேற்கூறிய உரிமம் வழங்குவது, விண்ணப்பத்தாரர்களை சோதனை செய்யத் தகாத சந்தர்ப்பங்களில் மட்டும் பொருத்தும்.

**விதி – 10:**

ஓட்டுநர் உரிமம் வழங்குவதைப் பற்றி தெரிவிக்கிறது. ஓட்டுநர் உரிமம் வழங்கும் அலுவலர் ஒரு எண் பொருந்திய அட்டையை கையொப்பம் செய்து அதனை ஓட்டுனர் உரிமம் பெற்றவருக்கு வழங்க வேண்டும்.

**விதி – 12:**

ஒவ்வொரு மோட்டார் வாகன ஓட்டியும் வாகனம் ஓட்டும் உரிமத்துடன் வாகனத்தின் உரிமையாளரின் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு சான்றிதழும் வைத்திருக்க வேண்டும்.

**விதி – 14:**

ஓட்டுநருக்கான தேர்வு முறையினைப் பற்றி தெரிவிக்கிறது. ஓட்டுனர் தேர்வுக்கான குறிப்பிட்ட நாளில் தகுதியானவர் வண்டியுடன் ஆஜராக வேண்டும்.

**விதி – 15:**

மோட்டார் வாகனம் சம்பந்தமான மேல் முறையீடுகள் பற்றியும் அதனை விசாரணை செய்யும் அலுவலரின் பதவி நிலையையும் பற்றி தெரிவிக்கிறது. இந்தப் பிரிவின்படி துணை போக்குவரத்து ஆணையாளர் மேல் முறையீடுகளை விசாரணை செய்யலாம்.

**விதி – 17:**

மோட்டார் வாகன மேல் முறையீடுகள் சம்பந்தப்பட்ட படிவங்களைப் பற்றி தெரிவிக்கிறது.

**விதி – 21:**

வாகன ஓட்டி தன் பெயர் பொறிக்கப்பட்ட ஒரு தகட்டை தன் சட்டையில் இடதுபுறம் சட்டைப்பைக்கு மேல் குத்தியிருக்க வேண்டும்.

**விதி – 25:**

ஓட்டுநர் உரிமம் தொலைந்து போனாலோ அல்லது அழிந்து விட்டாலோ, சம்பந்தப்பட்ட நபர் அதற்கென நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் உரிமம் வழங்கும் அலுவலருக்கு தெரிவித்தல் வேண்டும்.

**விதி – 26:**

இரண்டாம்படி மோட்டார் வாகன ஓட்டுனர். உரிமம் (DUPLICATE DRIVING LICENSE) பற்றி தெரிவிக்கிறது. அதற்குண்டான கட்டணம் அட்டவணையில் பிரிவு 49-இல் கூறப்பட்டுள்ளது.

**விதி – 37:**

மோட்டார் வாகன ஓட்டுநர் அலுவலில் இருக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடத்தை முறைகளைப் பற்றி தெரிவிக்கிறது.

1. இதன்படி ஓட்டுநர் அலுவலில் உள்ளபோது புகை பிடித்தல் கூடாது.
2. நிர்ணயிக்கப்பட்டுள்ள தூய்மையான சீருடையில் இருக்க வேண்டும்.
3. பயணிகளிடம் பணிவாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.
4. பேருந்தை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.
5. குறிப்பிட்ட நேரப்படி, குறிப்பிட்ட வேகத்தின்படி பேருந்தை செலுத்த வேண்டும்.

**விதி – 43:**

பொதுச் சேவை வாகனங்களின் ஓட்டுனரோ அல்லது நடத்துனரோ தன் வேலை நேரத்தில் பொது மக்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் சரியான காரணம் இல்லாமல் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது.

**விதி – 49:**

மோட்டார் வாகன சம்பந்தப்பட்ட அனைத்து செயல்களுக்கும் உரிய கட்டணங்களைப் பற்றி தெரிவிக்கிறது.

**விதி – 52:**

நடத்துனர் உரிமம் மற்றும் அது தொடர்பான மருத்துவச் சான்றிதழ் படிவங்களைப் பற்றி தெரிவிக்கிறது.

**விதி – 55:**

நடத்துனர் உரிமம் பெறுவதற்குரிய கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேறியிருக்க வேண்டும். இந்த விதிமுறை நடத்துநர் உரிமங்களை புதுப்பித்தலின் போது பின்பற்ற முடியாது.

**விதி – 58:**

நடத்துனர் உரிமம் இல்லாத எந்த ஒரு நபரும் பொது மக்கள் பயன்படுத்தும் பேருந்தின் நடத்துனராக பணிபுரிய முடியாது. அதே போல் எந்த ஒரு நபரும் அவரை நடத்துனராக நியமிக்க இயலாது.

**விதி – 78:**

நடத்துனர் உரிமம் புதுப்பித்தலைப் பற்றியும் அதற்கான படிவத்தினைப் பற்றியும்

**விதி – 83:**

1. உரிமை கோரப்படாத பொருட்கள் எவையேனும் பயணிகள் வாகனத்தில் இருந்தால் பயணிகள் இறங்கியபின் அதனை ஓட்டுனரோ அல்லது நடத்துனரோ பயணம் முடிந்தவுடன் அருகிலுள்ள காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.

2. அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளைப் பொறுத்தவரை அத்தகையப் பொருட்களை காவல் நிலையத்தில் ஒப்படைப்பதற்கு பதிலாக மேலாண்மை இயக்குனர் அலுவலகத்தில ஒப்படைக்க வேண்டும். பிரிவு 87 முதல் 98 வரையிலானவை வாகனப் பதிவு மற்றும் அதற்கான வழிமுறைகளைப் பற்றி தெரிவிக்கிறது.

**விதி – 187:**

இறந்தவர்களின் உடலை எடுத்து செல்வதற்காக சில கட்டுபாடுகள் விதிக்கப்பட்டு அதற்குகென்று தனி வாகனங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

**விதி – 236:**

பொருட்கள் ஏற்றிச் செல்லும் வாகனத்தில் ஓட்டுனருடன் சேர்ந்து 6 பேருக்கு மேல் ஏற்றிச் செல்லக் கூடாது.

**விதி – 243:**

வாகனத்தில் ஓட்டுனரின் அருகில் எந்த நபரும் பொருளும் இருக்க கூடாது.

**விதி – 245:**

வாகனங்கள் நிறுத்துமிடங்களை சார்பு ஆய்வாளர் மற்றும் அவரது தகுதிக்கு மேற்பட்டவர்கள் தணிக்கை செய்யலாம்.

**விதி – 259:**

பயணப் பட்டியலை (TRIP SHEET) வாகனத்தின் நடத்துனரோ அல்லது நடத்துனர் இல்லாத வாகனத்தில் ஓட்டுனரோ வைத்திருக்க வேண்டும். அதனை தலைமைக் காவலருக்கு குறையாத பதவிநிலையிலுள்ள காவல் அலுவலர்கள் தணிக்கை செய்யலாம்.

**விதி – 262:**

வாகனம் சென்றடையும் இடத்தின் பெயர் எழுதிய பலகை நன்கு ஒளியூட்டப்பட்டு பெயர் நன்கு தெரியும்படி வாகனத்தின் முன்புறமும் பின்புறமும் பொருத்தப்பட வேண்டும்.

**விதி – 274:**

பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களை தணிக்கை செய்ய சார்பு ஆய்வாளரும் அதற்கு மேல் உள்ள அதிகாரிகளும் அதிகாரம் பெற்றவர்கள்.

**விதி – 296:**

பின்னால் வரும் வாகனங்களைப் பார்க்கும்படி கண்ணாடி ஒவ்வொரு வாகனத்திலும் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்.

**விதி – 330:**

பொது மக்கள் பயணம் செய்வதற்காக உள்ள வாகனங்களின் உட்புறம் சரியான அளவு ஒளியூட்டப்பட்டிருக்க வேண்டும்.

**விதி – 373:**

குறிப்பிடப்பட்ட அளவுக்கு அதிகமான சுமையை வாகனத்தில் ஏற்றிச் செல்லக் கூடாது.

**விதி – 374:**

பதிவுச் சான்றிதழைத் தணிக்கை செய்ய தலைமைக் காவலருக்குக் குறையாத பதவி நிலையில் உள்ளவர்களுக்கு அதிகாரம் உண்டு.

**விதி – 376:**

இச்சட்டத்தின் கீழ் ஏதேனும் குற்றம் புரிந்ததாக கருதப்படும் வாகன ஓட்டுனரிடம் பெயர், முகவரி மற்றும் ஓட்டுனர் உரிமம் பற்றி விசாரணை செய்ய சார்பு ஆய்வாளருக்குக் குறையாத பதவி நிலையிலுள்ள அலுவலருக்கு அதிகாரம் உண்டு.

**விதி – 379:**

சென்னை மாநகரத்தில் காவல் துறை ஆணையாளரால் வாகனங்கள் நிறுத்தப்படும் இடம் என்று அறிவிக்கப்பட்ட இடங்களைத் தவிர மற்ற இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைக்கக் கூடாது.

**விதி – 380:**

மோட்டார் வாகனங்களை நிறுத்துவதற்கென குறிப்பிடப்பட்ட இடங்களைத் தவிர மற்ற இடங்களில் போக்குவரத்துக்கு இடையூறாகவும். அபாயகரமான முறையிலும் நிறுத்தப்பட்டிருக்கும் எந்த வாகனத்தையும் அந்த சரக பொறுப்பில் உள்ள சீருடை அணிந்த காவல் அலுவலர், அவ்விடத்தை விட்டு அப்புறப்படுத்தி பாதுகாப்பான இடத்தில் நிறுத்தி வைக்கலாம்.

**விதி – 381:**

மோட்டார் வாகனங்களை நிறுத்தக் கூடிய இடமென குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 6 மணி நேரத்திற்கு மேல் தக்க காரணங்களின்றி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் எந்த வாகனத்தையும் எந்த காவல் அலுவலரும், போக்குவரத்து துறையின் ஆய்வாளரும் பாதுகாப்பான இடத்திற்கு அப்புறப்படுத்தலாம்.

**விதி – 390:**

ஓடும் மோட்டார் வாகனத்தில் எந்த நபரும் ஏறவும் இறங்கவும் கூடாது. அவ்விதம் ஏறவும் இறங்கவும் வாகன ஓட்டுனர் அனுமதிக்கக் கூடாது.

**விதி – 400:**

பொது மக்கள் பயணம் செய்யும் மோட்டார் வாகனங்களில் வெடிமருந்து எளிதில் தீப்பிடிக்கக் கூடிய பொருட்கள் அல்லது அபாயகரமான பொருட்கள் இவற்றை ஏற்றிச் செல்லக் கூடாது.

**விதி – 405:**

மோட்டார் வாகனத்தில் கண்ணைக் கூசும் ஒளி ஏற்படுத்தும் முகப்பு விளக்குகளைப் பயன்படுத்தக் கூடாது.

**விதி – 411:**

சாலை விதிகளையும், போக்குவரத்து விதிகளையும் மோட்டார் வாகன ஓட்டுனர் மதித்து அதன்படி நடக்க வேண்டும்.

**விதி – 416:**

மோட்டார் வாகன ஓட்டுநர் பணியில் இருக்கும் போது மது அல்லது போதைப் பொருட்களை உட்கொள்ளக் கூடாது.

---------

## 47. தமிழ்நாடு கள்ளச்சாராய குற்றவாளிகள், கணினி வெளி சட்ட குற்றவாளிகள், மருந்துசரக்கு குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத்தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், பாலியல் குற்றவாளிகள், குடிசைப்பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொளித் திருடர்கள் ஆகியோரின் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் - 1982

## (TAMIL NADU PREVENTION OF DANGEROUS ACTIVITIES OF BOOTLEGGERS, CYBER LAW OFFENDERS, DRUG OFFENDERS, FOREST OFFENDERS, GOONDAS, IMMORAL TRAFFIC OFFENDERS, SAND OFFENDERS, SEXUAL OFFENDERS, SLUM GRABBERS AND VIDEO PIRATES ACT – 1982)

1. பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் கள்ளச் சாராய குற்றவாளிகள், போதைப் பொருள் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள் மற்றும் குடிசைப் பறிப்போரின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த 1982-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டமாகும்.

2. இச்சட்டம் தமிழ்நாடு முழுமைக்கும் பொருத்தும்

3. கள்ளச் சாராய குற்றவாளிகள் என்பவர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களையும், அதற்கான ஏற்பாடுகளை செய்து அதன் மூலம் பொது அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவர்களும் ஆகும்.

குண்டர்கள் என்பவர்கள் இந்திய தண்டனைச் சட்டம், அத்தியாயங்கள் XVI, XVII மற்றும் XXII ஆகியவற்றின் கீழ் உள்ள குற்றங்கள் வழக்கமாக செய்பவர்களையும், செய்ய முயற்சிப்பவர்களையும்

மற்றும் செய்யத் தூண்டுபவர்களையும் குறிக்கும். வனக் குற்றவாளிகள் என்பவர்கள் தமிழ்நாடு வனச் சட்டம் 1882 அத்தியாயங்கள் II, III IV, VI-B மற்றும் வன உயிரினங்கள் பாதுகாப்புச் சட்டம் 1972, அத்தியாயம் VI-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்தை புரிபவர்களையும், குற்றம் புரிய முயற்சிப்பவர்களையும் குற்றம் புரிய தூண்டுபவர்களையும் குறிக்கும்.

இதே போன்று குடிசைப் பறிப்போர், விபச்சாரக் குற்றம் புரிவோர், போதைப் பொருள் குற்றவாளிகள் ஆகியோரும் இச்சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கத் தகுந்தவர்களாவார்கள்.

**பிரிவு – 3:**

இத்தகைய குற்றவாளிகளை பொது அமைதியை காப்பதற்காக அடைப்பு காவலில் வைக்க வேண்டும் என்றால் அக்காரணங்களை எழுத்து மூலமாக அரசுக்கு தெரிவிக்க வேண்டும். இத்தகவலை குற்றவாளியை அடைப்புக் காவல் செய்ய உத்தரவு வெளியிடப்பட்ட 12 நாட்களுக்குள் அரசுக்கு தெரிவிக்க வேண்டும்.

**பிரிவு – 4:**

இச்சட்டத்தின் கீழ் வெளியிடப்படும் அடைப்பும் காவல் உத்தரவினை தமிழ்நாட்டின் எந்தப் பகுதியிலும் பிடியாணையை நிறைவேற்றும் முறையில் நிறைவேற்றலாம்.

**பிரிவு – 5:**

இச்சட்டத்தின் கீழ் ஓரிடத்தில் அடைக்கப்பட்ட குற்றவாளியை மாநிலத்தின் மற்ற எந்தப் பகுதிக்கும் மாற்றி அடைப்புச் செய்ய அதிகாரம் உண்டு.

**பிரிவு – 8:**

அடைப்புக்காவல் உத்தரவினால் பாதிக்கப்பட்ட நபருக்கு அடைப்புக் காவலுக்கான காரணங்களை தெரிவிக்க வேண்டும்.

**பிரிவு – 9: அறிவுரைக் குழுமம் (Advisory Board)**

உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்களாக இருந்த மூன்று நபர்களை முறையே தலைவர்களாகவும் மற்றும் இரு உறுப்பினர்களாகவும் கொண்டு ஒரு அறிவுரைக் குழுமத்தை மாநில அரசு அமைக்க வேண்டும்.

**பிரிவு – 10:**

இச்சட்டத்தின் எந்த ஒரு தலைப்பின் கீழும் அடைப்புக் காவலில் வைக்கப்பட்ட ஒரு நபரை மாநில அரசு மூன்று வாரத்திற்குள் அடைப்புக்கான காரணங்களையும், அக்குற்றவாளியின் விளக்கங்களையும் இக்குழுமத்தின் அறிவுரைக்கென சமர்பிக்க வேண்டும்.

**பிரிவு – 12:**

அறிவுரை குழுமம் தடுப்புக் காவலுக்கான காரணங்கள் போதுமானதாக இல்லை எனக் கருதினால் தடுப்புக் காவலை உடனடியாக ரத்து செய்து அக்குற்றவாளியை உடனே விடுதலை செய்ய வேண்டும்.

**பிரிவு – 13:**

மாநில அரசால் அளிக்கப்பட்ட காரணங்கள் போதுமானது என்று கருதி அறிவுரைக் குழுமம் அடைப்புக் காவலை உறுதி செய்தால் 12 மாத காலத்திற்கு அக்குற்றவாளியை தடுப்புக் காவலில் வைக்க முடியும்.

--------

# 48. தமிழ்நாடு பெண்களை கொடுமை செய்வதை தடை செய்யும் (திருத்தப்பட்ட) சட்டம் 2002

## (TAMIL NADU PROHIBITION OF HARASSMENT OF WOMEN (AMENDMENT) ACT 2002)

**இச்சட்டம் 11.11.2002 முதல் அமலுக்கு வந்துள்ளது.**

**பிரிவு – 2: பொருள் வரையறைகள்:**

இச்சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி.

(அ). 'பெண்களை கொடுமை செய்தல்' என்பது பெண்ணிற்கு பீதியை பயத்தை, அவமானத்தை அல்லது தடுமாற்றத்தை உண்டாக்குகிற அல்லது பெரும்பாலும் உண்டாக்கக் கூடிய வகையில், ஒரு ஆடவரின் கண்ணியமற்ற நடத்தை அல்லது செய்கை என்று பொருள்படும். அதில் ஒரு பெண்ணிடம் தகாத சொற்களைப் பயன்படுத்துவது அல்லது அவளுக்கு காயத்தை உண்டாக்குவது அல்லது தொந்தரவு செய்வது அல்லது தாக்க முனைவது, பலவந்தப்படுத்துவது உள்ளடங்கும்.

(ஆ). 'பொதுப் பணி ஊர்தி' மற்றும் கலம் என்பது 1988-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் 2-ஆம் பிரிவின் (35) ஆம் கூறில் பொருள்வரையறை செய்யப்பட்டவாறு அதே பொருளையே கொண்டிருக்கும்.

(இ). இந்தச் சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆனால் பொருள்வரையறை செய்யப்படாத சொற்களும் சொற்றொடர்களும் 1860-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தில் (மைய சட்டம் 45/2006) அவற்றுக்கு முறையே குறித்து அளிக்கப்பட்டுள்ள அதே பொருளையே கொண்டிருக்கும்.

**பிரிவு – 3:** எந்த இடத்திலும் பெண்களைக் கொடுமை செய்வது தடை செய்யப்படுகிறது.

**பிரிவு – 4: பெண்களைக் கொடுமை செய்தலுக்கான தணடனை:**

கல்வி நிலையம், திருக்கோயில் அல்லது பிற வழிபாட்டிடம், பேருந்து நிலையம், சாலை, இருப்பூர்தி நிலையம், திரை அரங்கு, பூங்கா, கடற்கரை, திருவிழா நடைபெறும் இடம், பொதுப்பணி ஊர்தி அல்லது கலம், பிற இடம் எதிலும் அல்லது அதன் வட்டாரத்திற்குள் பெண்களைக் கொடுமை செய்கிற அல்லது அச்செயலில் பங்குபெறுகிற அல்லது அச்செயலுக்கு உடந்தையாய் இருக்கிற எவர் ஒருவரும் மூன்றாண்டு கால அளவு வரையிலான சிறைத் தண்டனையுடனோ அல்லது பத்தாயிரம் ரூபாய் வரையிலான பணம் தண்டனையுடனோ அல்லது இரண்டும் சேர்த்து விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு - 4(A) கொடுமையால் மரணம் ஏற்பட்டால் :**

1. மரணம் விளைவிக்க வேண்டும் அல்லது மரணம் விளைவிக்கக் கூடிய காயத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் கொடுமை செய்யப்பட்டிருந்தால் ஆயுள் தண்டனை வரையிலும் ரூ. 50,000/- வரையிலான பண தண்டனையும் அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கப்படும்.

2. மரணம் அல்லது மரணம் விளைவிக்கும் காயம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கம் இல்லாமல் செய்யப்படும் கொடுமைகளுக்கு 10 ஆண்டுகள் கால அளவு வரையிலான சிறை தண்டனையும் ரூ. 50,000/- வரையிலான பண தண்டனையும் விதிக்கப்படும்.

3. வேகமாகவும், கவனக் குறைவாகவும் செய்யப்படும் கொடுமைகளுக்கு 10 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் ரூ. 25,000/- வரையிலான பண தண்டனையும் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

**பிரிவு - 4(B) கொடுமையால் தற்கொலை நிகழ்ந்தால்:**

எந்த ஒரு பெண்ணும் தனக்கு இழைக்கப்பட்ட கொடுமையைத் தொடர்ந்து தற்கொலை செய்துக் கொள்ள நேர்ந்தால் அதனை தற்கொலைக்கான துாண்டுதல் என கருதப்பட்டு அத்தகைய கொடுமையைச் செய்த நபருக்கு 10 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் ரூ. 50,000/- வரையிலான பண தண்டனையும் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

**பிரிவு - 5 வளாகத்தின் நிர்வாகிக்குள்ள பொறுப்பு:**

1. கல்வி நிலையம் திருக்கோயில் அல்லது பிற வழிபாட்டிடம், திரை அரங்கு அல்லது பிற வளாகம் எதனையும் பொறுப்பில் கொண்டிருக்கிற நபர் எவரும்.

(அ). அந்த வளாகத்திற்குள் பெண்களை கொடுமை செய்வதைத் தடுக்க தான் தக்கதெனக் கருதக்கூடிய நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஆ). பாதிக்கப்பட்ட நபர் ஒருவரால் செய்யப்பட்ட முறையீட்டின் பேரில் பெண்களை கொடுமை செய்யப்பட்டது குறித்து காவல் துறையினருக்குத் தகவல் கொடுத்தல் வேண்டும்.

2. (1)-ஆம் உட்பிரிவின்படி நடவடிக்கை எடுக்கத் தவறுகிற நபர் எவரும் இரண்டாயிரம் ரூபாய் வரையிலான பணத்தண்டனை விதித்து தண்டிக்கப்படுவதற்கு உள்ளாவார்.

**பிரிவு – 6 பொதுப்பணி ஊர்திப் பணியாளர்களின் கடமை:**

1. பொதுப்பணி ஊர்தியில் பெண்கள் கொடுமை செய்யப்படுகின்ற போது, அத்தகைய ஊர்தியின் பணியாளர்கள் பாதிக்கப்பட்ட அந்நபரால்

செய்யப்பட்ட முறையீட்டின் பேரில் அவ்வூர்தியினை அருகிலுள்ள காவல் நிலையத்திற்கு எடுத்து சென்று காவல் துறையினருக்குத் தகவல் கொடுத்தல் வேண்டும்.

2. (1)-ஆம் உட் பிரிவின்படி நடவடிக்கை எடுக்கத் தவறுகிற பணியாளர் எவரும் ஓர் ஆயிரம் ரூபாய் வரையிலான பணத்தண்டனை விதித்து தண்டிக்கப்படுவதற்கு உள்ளவார்.

**பிரிவு – 7: உடந்தையாக இருந்ததாகக் கொள்ளப்படுதல்:**

1. இச்சட்டப் பிரிவு 4, 4(A) அல்லது 4(B)-ன் படி பெண்களிடம் குறும்பு செய்வதில் ஊர்தி மற்றும் கலம் எதுவும் பயன்படுத்தப்பட்டுள்ள போது, அத்தகைய ஊர்தி / கலத்தின் ஓட்டுநர் இக்குற்றங்களை தூண்டியதாக கருதப்பட்டு மூன்றாண்டு காலம் வரை சிறைத் தண்டனையும் ரூ.50,000/- வரையிலான பண தண்டனையும் விதிக்கப்படும்.

**பிரிவு – 7 (A): நஷ்ட ஈட்டிற்கான உத்தரவளித்தல்:**

சட்டப்பிரிவு 4, 4(A) மற்றும் 4 (B) ஆகியவற்றின் கீழ் தண்டனை வழங்கும் நீதிமன்றம் அத்தகைய கொடுமையை விளைவித்த நபர் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கோ அல்லது அவரது வாரிசுதாரருக்கோ குறிப்பிட்ட தொகையினை நஷ்ட ஈடாக வழங்க வேண்டுமென உத்தரவிடலாம்.

--------

# 49. தமிழ்நாடு இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பு) விதிகள் 2001

# TAMIL NADU JUVENILE JUSTICE (CARE AND PROTECTION OF CHILDREN) RULES – 2001

**இளஞ்சிறார்கள் - 18 வயதுக்கு கீழ் உள்ளவர்களை குறிக்கும்.**

**பிரிவு – 68:**

இளஞ்சிறார் நீதி (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2001 படியான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காக, தமிழக ஆளுநர் அவர்களால் 2001-ம் வருடம் தமிழ்நாடு இளஞ்சிறார் நீதிவிதிகள் இயற்றப்பட்டது. அவற்றுள் காவல்துறைக்கு உள்ள அதிகாரங்கள் பற்றிய விதிமுறைகள் சிலவற்றை பற்றி மட்டும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

**விதி – 93 (1)**

இளஞ்சிறார்களுக்கு எதிரான குற்றங்களை தடுத்து அவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அனைத்து மாவட்டங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பெருநகரங்களில் இளஞ்சிறார் சிறப்பு காவல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**விதி – 93 (2)**

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு குழந்தை நல அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும். அவருக்கு குழந்தை உரிமைகள், இளஞ்சிறார் நீதி பிரிவு, நன்னடத்தை விடுதலை முறை, இது சம்பந்தப்பட்ட இதர சேவைகள், குழந்தையின் உளவியல் மற்றும் விடலைப் பருவம் குறித்து முறையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

**விதி – 93 (3)**

ஒவ்வொரு குழந்தை நல அலுவலரும் இளஞ்சிறார் சிறப்பு காவல் பிரிவு (Special Juvenile Aid Police Unit) உறுப்பினராக இருந்து காவல்துறை நன்னடத்தை விடுதலை முறை அலுவல், NGO மற்றும் நீதித்துறைக்கு ஒரு பாலமாக செயல்பட வேண்டும்.

**விதி – 94: காவல் துறை செயல்பாடுகள்**

காவல் நிலையத்தில் குழந்தையினை ஒரு நண்பர் போன்ற முறையில் பெறப்பட்டு கண்காணிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட வேண்டும். அந்த நேரங்களில் அவர்களுக்கு முறையான ஓய்வு மற்றும் மனமகிழ்ச்சி தரப்பட வேண்டும்.

**விதி – 94 (2)**

அனைத்து காவல்துறை அலுவலர்களும் பெருங்குற்றங்கள் செய்துள்ள இளஞ்சிறார்களையும் நண்பர்களை போல் நடத்த வேண்டும்.

**விதி – 94 (3)**

கைது செய்யப்பட்டவுடன் தொலைபேசி மற்றும் இதர வழி மூலமாக இளஞ்சிறார்கள் தம் உறவினர் உட்பட எவருடனும் தொடர்பு கொள்ள வழிவகுக்க வேண்டும்.

**விதி – 95: முதல் நிலை ஆஜர் படுத்தலுக்கான வழிமுறை**

1. ஒவ்வொரு இளஞ்சிறாரும் தான் செய்த குற்றம் பற்றி சாதாரணமாக புரிந்துக் கொள்ளும் மொழியில் விளக்கப்பட வேண்டும்.
2. எந்த ஒரு இளஞ்சிறாரையும் ஒப்புதல் பெறுவதற்காக கொடுமை மற்றும் வேறு வழிமுறைகளுக்கு உட்படத்தக் கூடாது.

3. இளஞ்சிறார்களின் பலவிதமான தன்மைகள் மீது தனிக்கவனம் செலுத்தப் பட வேண்டும்..

4. முதல் சந்திப்பிலேயே இளஞ்சிறார்கள் குறித்த மதிப்பீடு செய்யப்பட்டு உடனடியாக பதிவு செய்யப்பட வேண்டும்.

**விதி – 96: பொதுவான கடமைகள்:**

1. இளஞ்சிறார் குறித்த வழக்குகளை உடனடியாக இளஞ்சிறார் சிறப்பு காவல் பிரிவு (SJAPU) அல்லது பிரிவு 32ல் தரப்பட்டுள்ள ஏதேனும் ஒரு பிரிவுக்கு மாற்ற வேண்டும்.

2. குழந்தை நல அலுவலர் (காவல்) தன்னார்வ அலுவலர்களை அடையாளம் கண்டு இளஞ்சிறார் சிறப்பு காவல் பிரிவு, அலுவலர்களுக்கு உதவியாக செயல் பட ஏற்பாடு செய்ய வேண்டும்.

3. பிரிவு 32-ல் உள்ளப்படி SJAPU வில் உறுப்பினர் அல்லாத ஒரு காவல் அதிகாரியிடம் குழந்தை வரும்போது அவ்வழக்கினை உடனடியாக SJAPU அல்லது பிரிவு 32-ல் கூறப்பட்டுள்ள அலுவலர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

4. காவல் பொறுப்பில் குழந்தைப் பெறப்பட்ட உடன் அக்குழந்தையானது குழந்தை நல அலுவரிடம் விசாரணைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். அதன் பிறகு அந்த குழந்தை பொறுப்பு அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டும்.

5. விசாரணையின் போதும் மற்றும் சோதனையின் போதும் குழந்தைகள் கண்ணியத்துடனும் கௌரவத்துடனும் நடத்தப்பட வேண்டும்.

6. குழந்தையானது இளம் பெண் குற்றவாளியாக இருந்தால் மற்றொரு பெண் மூலமாகத்தான் சோதனை செய்யப்பட வேண்டும்.

# 50. தமிழ்நாடு சூதாட்டச் சட்டம் - 1930
# (THE TAMIL NADU GAMING ACT – 1930)

சூதாட்டத்தை தடை செய்து சூதாடுபவர்களைத் தண்டித்து. சமுதாயத்தை சீர்படுத்த ஏற்படுத்தப்பட்ட சட்டம், இது பிடிக்க கூடிய, பிணையில் விடக்கூடிய குற்றமாகும்.

ஏதேனும் வீடு, அறை, கூடாரம், அடைப்பு, வாகனம், கப்பல் அல்லது எந்த ஒரு இடத்திலும் அட்டைகள், பகடைக்காய்கள், மேசைகள் மற்றும் சூதாட்டக் கருவிகள் வைத்து அவற்றை சூதாட்டத்திற்குப் பயன்படுத்தி, அதன் மூலமாக அந்த இடத்தின் உரிமையாளருக்கும் ஏதேனும் லாபம் ஏற்பட்டால் இந்த இடத்திற்கு 'சூதாடும் வீடு' என்று பெயர்.

**பிரிவு – 8**

சூதாடும் வீட்டின் உரிமையாளராக இருந்தாலும், சூதாடும் வீட்டை வைத்திருந்தாலும், அந்த வீட்டில் சூதாட்டத்தை அனுமதித்தாலும் குற்றம்.

**பிரிவு – 9**

1. சூதாடினாலும், சூதாடும் வீட்டில் இருந்தாலும் குற்றம்.
2. எந்த விதத்திலாவது சூதாடுவதற்கு உதவி செய்தாலும் குற்றம்.
3. சூதாடுவதற்கு பணம் கொடுத்து உதவினாலும் குற்றம்.

இத்தகைய குற்றங்களுக்கு 3 மாதங்களுக்குக் குறையாமல் சிறைத் தண்டனையும் 500 ரூபாய்க்குக் குறையாமல் அபராதமும் விதிக்கப்படும்.

இரண்டாவது முறையாக அதே குற்றத்தைச் செய்தால் சிறைத் தண்டனை ஆறு மாதங்களுக்குக் குறையாமலும் அபராதம் 700 ரூபாய்க்குக் குறையாமலும் விதிக்கப்படும். பொது மக்கள் போக்குவரத்திற்காக இருக்கும் தெருக்களில் சூதாடினால் அக்குற்றத்திற்கு 3 - மாதங்களுக்குக்

குறையாமல் சிறைத் தண்டனையும், 300 ரூபாய்க்குக் குறையாமல் அபராதமும் விதிக்கப்படும்.

**பிரிவு – 12**

பொது இடங்களில் சூதாடும் கருவிகளை வைத்து சூதாடினாலும், சேவல் சண்டை நடத்தினாலும் இப்பிரிவுகள் கீழ் குற்றம்.

**காவல் அலுவலர்களின் அதிகாரங்கள் :**

1. சார்பு ஆய்வாளர் தகுதிக்கு கீழ் உள்ள அனைத்து காவலர்களும் சூதாட்டம் நடைபெறும் இடத்தைப் பற்றி உயர் அலுவலர்களுக்கு தகவல் கொடுக்கலாம்.
2. நீதிமன்ற நடுவர் அல்லது துணைக் காவல் கண்காணிப்பாளர் இவர்களிடம் சோதனை ஆணை பெற்று சார்பு ஆய்வாளர் அந்த இடத்திற்குள் பிரவேசித்து அங்குள்ளவர்களைக் கைது செய்து சூதாடும் கருவிகளையும் மற்றும் சூதாட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட பணத்தையும் கைப்பற்றலாம்.
3. பொது இடங்களில் நடைபெறும் சூதாட்டத்தைத் தடுக்க அனைத்துக் காவலரும் நடவடிக்கை எடுக்கலாம்.

**சூதாட்டம் பற்றி தகவல் சேகரிக்கும் முறைகள் :**

காவல் நிலையங்களில் சூதாட்டம் பற்றிய தகவல் சொல்வதற்காக தகவல் கொடுப்பவர்களை அந்தந்தக் காவல் நிலைய எல்லைக்குள் வசிப்பவர்களாகப் பார்த்து ஏற்பாடு செய்து கொண்டு அவர்கள் கொடுக்கும் தகவல் மூலம் நடவடிக்கை எடுக்கலாம். தகவல் கொடுப்பவர்களை பற்றிய விவரங்கள் குற்றவாளிகளுக்குத் தெரிய வந்து அவர்களால் எந்தத் தீங்கும் நேரிடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். இச்சட்டத்தின் கீழ் திறமையைப் பயன்படுத்தி விளையாடும் விளையாட்டுகள் குற்றமாகாது. (Games of Skill).

---------

# 51. தமிழ்நாடு பொது கேளிக்கை இடங்கள் சட்டம்-1888
## (THE TAMIL NADU PLACES OF PUBLIC RESORTS ACT – 1888)

தமிழ் நாட்டில் நகராட்சியைச் சேர்ந்த இடங்கள் மற்றும் அரசால் அறிவிப்பு செய்யப்பட்ட ஊர்களில் பொது மக்களுக்காக கேளிக்கைகள் நடத்தப்படும் இடங்கள் அதற்குத் தேவையான உரிமம், நடத்தும் விதிமுறைகள், உரிமம் வழங்க மற்றும் கட்டுப்படுத்த அதிகாரம் உள்ள அலுவலர்கள் பற்றிய சட்டமாகும்.

**பிரிவு – 3 உரிமம் வழங்கும் முறை:**

ஒரு பொது இடத்தில் கேளிக்கை நடத்த விரும்பும் நபர், அதற்கான விண்ணப்பத்தை நகராட்சித் தலைவர் அல்லது மாநகராட்சி ஆணையர் இவர்களுக்கு கேளிக்கை நடத்தவிருக்கும் இடம், அந்த இடம் எவ்வகையான பொருட்களால் கட்டப்படப் போகிறது. எவ்வகையான கேளிக்கை நடத்தப்படப் போகிறது போன்ற விவரங்களைக் குறித்து அனுப்பினால் அதனை அந்த அலுவலர் விசாரணை செய்து இடத்தைத் தணிக்கை செய்து பிறகு சில கட்டுப்பாடுகளை விதித்து உரிமம் வழங்குவார்.

**பிரிவு – 11 தணிக்கை செய்யும் முறை :**

இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உரிமம் செல்லத்தக்கதாக இருக்கிறதா அல்லது உரிமம் பெறாமலே அவ்விடத்தில் கேளிக்கை நடத்தப்படுகிறதா என்பதைத் தணிக்கை செய்ய வட்டாட்சியர் மற்றும் அவருக்கு மேலுள்ள அலுவலர்களும் காவல் துறையில் தலைமைக் காவலருக்கு மேற்பட்ட அலுவலர்களும் உரிமத்தில் கண்டுள்ள கட்டுப்பாடுகள் கடை பிடிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்டறிய தணிக்கை செய்யலாம்.

**பிரிவு – 12 (அ):**

பொது மக்களுக்காகக் கேளிக்கை நடத்தப்படும் இடங்களில், மேடையில் நாடகம் நடைபெறும் போது புகை பிடிக்கும் காட்சியைத் தவிர மற்ற நேரங்களில் கேளிக்கை ஆரம்பிக்க அரை மணி நேரத்திற்கு முன்பிருந்தும் கேளிக்கை நடந்து முடியும் வரையும் எவரும் புகை பிடிக்கக் கூடாது. அவ்வாறு புகை பிடிப்பவரை அவ்வரங்கிலிருந்து வெளியேற்ற காவலருக்கு அதிகாரம் உண்டு. புகை பிடித்த குற்றத்திற்காக 50 ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படலாம்.

---------

# 52. தமிழ்நாடு வழக்கமான குற்றவாளிகள் கட்டுப்பாட்டுச் சட்டம்-1948

## (TAMILNADU RESTRICTION OF HABITUAL OFFENDERS ACT 1948)

வழக்கமாகக் குற்றம் செய்பவர்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட சட்டம், வழக்கமான குற்றவாளி என்பவர் பிரிவு 110 கு.வி.மு.ச. அல்லது இ.த.ச. அத்தியாயங்கள் 12 அல்லது 16 அல்லது 17 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்காக 3 தடவை தண்டனை அளிக்கப்பட்டு அதனை மேல் முறையீடு அல்லது மேலாய்வு (Revision) இவற்றில் தள்ளுபடி செய்யப்படாமல் ஒன்றன் பின் ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ அனுபவிப்பவர் ஆவார் (கா.நி.ஆ.எண்:776).

**பிரிவு – 4:**

மாவட்ட ஆட்சியர் தன்னுடைய மாவட்டத்தில் வசிக்கும் வழக்கமான குற்றவாளிகளை அறிவிக்கப்பட்ட குற்றவாளிகளாக பதிவு செய்ய அதிகாரம் பெற்றவர்.

**பிரிவு – 5:**

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட குற்றவாளி ஒருவர் வசிக்குமிடத்தை மாற்றினாலும் அதற்குரிய தகவல் சேகரிக்க மற்றும் தன்னை சோதனை செய்ய வரும்போது தான் அவ்விடத்தில் இல்லாதிருந்தால் அதற்குரிய சரியான காரணம் ஆகியவற்றை மாவட்ட ஆட்சியரிடம் தெரிவிக்க வேண்டும். (கா.நி.ஆ.782)

**பிரிவு – 6:**

அறிவிக்கப்பட்ட குற்றவாளியின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துகின்றது. (கா.நிஆ.814(2)(3)) (கா.நி.ஆ.779).

**பிரிவு – 7:**

இச்சட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட குற்றவாளியின் வயது, நோயினால் இயலாமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு அரசு அக்கட்டுப்பாடுகளை மாற்றியமைக்கலாம் அல்லது நீக்கி விடலாம்.

**பிரிவு – 8 :**

அறிவிக்கப்பட்ட குற்றவாளிகளை அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட விவசாயம், தொழில் மற்றும் சீர்திருத்தக் குடியிருப்புகளில் குடியமர்த்த மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் உண்டு.

**பிரிவு – 9:**

சீர்திருத்தக் குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்ட குற்றவாளிகளை அங்கிருந்து வெளியே அனுப்பி விடவும் அல்லது வேறு இடத்திற்கு மாற்றவும் மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் உண்டு.

**பிரிவு – 12:**

அறிவிக்கப்பட்ட குற்றவாளி என்பவர் இச்சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட உத்தரவு அல்லது அறிக்கையை மீறி நடந்தாலோ அல்லது இச்சட்டத்தில் கண்டுள்ள விதிகளை அல்லது கட்டுப்பாடுகளை மீறினாலோ முதல் குற்றத்திற்கு ஆறு மாதங்களுக்கு மிகாமல் சிறைத் தண்டனையும் அல்லது 200 ரூபாய்க்கு மிகாமல் அபராதமும் அல்லது இரண்டும் சேர்த்தும் விதிக்கப்படலாம்.

இரண்டாவது மற்றும் அடுத்தடுத்த குற்றங்களுக்கு ஓராண்டுக்கு மிகாமல் சிறைத் தண்டனையோ அல்லது 500 ரூபாய்க்கு மிகாமல் அபராதமோ அளிக்கப்படும். அரசாங்கத்தால் குடியமர்த்தப்பட்ட எந்த

குடியமைப்பிலிருந்தாவது தப்பித்து சென்றாலும் எந்தக் காவல் அலுவலரும் பிடியாணையின்றிக் கைது செய்யலாம். (கா.நி.ஆ.819)

கா.நி.ஆ. 776 வழக்கமான குற்றவாளி என்பவர் இச்சட்டத்தில் வழக்கமான குற்றவாளியாகக் கூறப்பட்டவர். மேலும் கு.வி.மு.ச. சட்டத்தின் 110-வது பிரிவின் கீழ் நன்னடத்தைக்காகப் பிணையம் கேட்கப்படுவது ஒரு நிலையான சிறைத் தண்டனை விதிக்கப்படுவதற்குச் சமமானதாகும்.

இச்சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்கள் பின் வருமாறு

1. அத்தியாயம் 12-ன் கீழ் பிரிவுகள் 231-லிருந்து 235வரையிலும் 239, 240, 242 மற்றும் 243.
2. அத்தியாயம் 16-ன் கீழ் பிரிவுகள் 299, 307, 308, 310, 322, 326, 327, 328, 329, 332, 333 மற்றும் 369.
3. அத்தியாயம் 17-ன் கீழ் பிரிவுகள் 382, 383,387, 385, 390, 391, 393, 394, 397, 398, 399, 402, 457, 458, 459 மற்றும் 460.

**கா.நி.ஆ. 777**

ஒரு வழக்கமான குற்றவாளிக்கு எதிராக இச்சட்டத்தின் 3-வது பிரிவின் கீழ் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள அது அமலில் இருக்கையில் அந்நபர் அறிவிக்கப்பட்ட குற்றவாளி ஆகிறார்.

**கா.நி.ஆ. 779**

இச்சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட குற்றவாளிக்குரிய கட்டுப்பாடுகள் பின் வருமாறு

1. இருப்பிடத்தை தெரிவித்தல், இருப்பிடத்தை மாற்றுதல் அல்லது அதில் இல்லாமை ஆகியவற்றைத் தெரிவித்தல் (பிரிவு – 5)

2. குறிப்பிட்ட வட்டாரத்துக்குச் செல்வதை கட்டுப்படுத்துதல் (பிரிவு – 6)

3. குற்றவாளிகள் குடியமைப்பில் வைத்தல் (பிரிவு – 8)

**கா.நி.ஆ. 780**

அறிவிக்கப்பட்ட குற்றவாளியால் அவருடைய பதிவின் போது கொடுக்கப்பட்ட இருப்பிடமே அவருடைய இருப்பிடமாகக் கருதப்பட வேண்டும்.

**கா.நி.ஆ. 781**

அறிவிக்கப்பட்ட குற்றவாளிகள் ஒவ்வொருவருக்கும் ஓர் அடையாளப் பட்டியல் வழங்கப்பட வேண்டும். இப்பட்டியலைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புதலுடன் குற்றவாளியின் இடது கை பெருவிரல் ரேகைப்பதிவை அக்குற்றவாளியின் குறிப்புத் தாளோடு சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**கா.நி.ஆ. 782**

அடையாளப் பட்டியல் தணிக்கைக்குரியது. அரசாங்கத்தால் அதிகாரம் பெற்ற எவரேனும் தணிக்கை செய்யும் போது அடையாளப் பட்டியல் காண்பிக்கப்பட வேண்டும். தான் வசிக்கும் இடத்தை விட்டு தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ செல்ல விரும்பும் ஒரு குற்றவாளி புறப்படுவதற்கு முன்பு அவ்விடத்தின் கிராம நிர்வாக அலுவலருக்கு அதைப் பற்றித் தெரிவித்து. அவரிடமிருந்து ஒரு சான்றிதழைப் பெற்று. அச்சான்றிதழில் கண்டுள்ள குறிப்புகளின் படி நடந்து கொள்ள வேண்டும்.

**கா.நி.ஆ. 783**

ஒரு அறிவிக்கப்பட்ட குற்றவாளி வயது முதிர்வாலோ அல்லது நோயுற்றோ அல்லது நலிந்தோ அல்லது குற்றம் செய்வதற்குத்

திறமையற்றோ இருந்தாலும் அல்லது அக்குற்றவாளி கடைசியாக சிறையிலிருந்து விடுதலையான பின்பு தொடர்ந்து மூன்று ஆண்டு காலத்திற்கு நன்னடத்தையுள்ளவராய் இருந்து வந்தாலும், நிபந்தனைக்குட்படுத்தியோ, உட்படுத்தாமலோ, கட்டுபாடுகளிலிருந்து விலக்களிக்கலாம்.

**காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் கடமைகளும் அதிகாரங்களும் கா.நி.ஆ. 788:**

(1) காவல் உதவி ஆய்வாளர் தரத்துக்குக் குறையாத எந்தக் காவல் அலுவலரும் ஓர் அறிவிக்கப்பட்ட குற்றவாளியின் இருப்பிடத்தை எந்த நேரத்திலும் தணிக்கை செய்யலாம்.

(2) அறிவிக்கப்பட்ட குற்றவாளி தன் இருப்பிடத்தில் இருப்பதைச் சரிபார்க்கும் பொருட்டு வரும் காவலர் முன் ஆஜராவது அக்குற்றவாளியின் கடமையாகும். அவர் ஆஜரை சரி பார்க்க அவ்வலுவலருக்கு அதிகாரம் உண்டு.

(3) கிராம நிர்வாக அலுவலர் தன் அதிகார வரம்பிற்குள் உள்ள அறிவிக்கப்பட்ட குற்றவாளிகளின் பட்டியல் ஒன்றை வைத்திருக்க வேண்டும். அதனை காவல் நிலைய பொறுப்பு அலுவலரும் சரியானபடி வைக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். உதவி ஆய்வாளர் பதவி நிலைக்கு குறையாத ஒரு காவல் அலுவலர் அப்பட்டியலைப் பார்வையிட்டு, தணிக்கை செய்து, திருத்தலாம்.

(4) காவல் நிலைய பொறுப்பு அலுவலர்கள் தங்களுடைய நிலைய எல்லைகளுக்குள் வசிப்பவர்களின் சிறையிலுள்ளவர்கள் உட்பட ஒரு வழக்கமான குற்றவாளி எனும் வரையறைக்குள் வருபவர்களைப் பற்றி அவ்வப்பொழுது பரிசீலனை செய்து, இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்ய மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்ய வேண்டி மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு கோரிக்கை வைக்க வேண்டும்.

(5) மாவட்ட ஆட்சியரால் விலக்களிக்கப்பட்ட ஒரு அறிவிக்கப்பட்ட குற்றவாளி திரும்பவும் குற்றம் செய்வதற்கு உடந்தையாக இருப்பதாக சந்தேகப் பட்டால் காவல் நிலைய பொறுப்பு அலுவலா் அக்குற்றவாளியின் மீது கட்டுப்பாடுகளை மீண்டும் விதிப்பதற்காக மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்ய வேண்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தெரிவிக்க வேண்டும்.

(6) ஒரு காவல் நிலைய பொறுப்பு அலுவலா் தனது எல்லைக்குள் வசிக்கும் அறிவிக்கப்பட்ட குற்றவாளியின் நடமாட்டத்தை ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் வரையரைப்படுத்த விரும்பினால் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியரிடம் அனுமதி பெற்றுத்தரும்படி காவல் கண்காணிப்பாளரைக் கோரலாம்.

**காவல் வட்ட ஆய்வாளரின் கடமைகள் -**

**கா.நி.ஆ.எண்.789** – காவல் வட்ட ஆய்வாளா் காவல் நிலையத்தில் கால முறை ஆய்வின் போது வழக்கமான குற்றவாளிகள் தம் வரையறைக்குள் வருபவா்கள் அனைவரையும் இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்வதற்காக காவல் நிலைய பொறுப்பு அலுவலா் கோரிக்கை அனுப்பியுள்ளாரா என்று தொடா்புடைய அனைத்துப் பதிவேடுகளையும் ஆராய்ந்து பாா்க்க வேண்டும்.

---------

# 53.தமிழ்நாடு பிச்சை எடுப்பு தடுப்பு சட்டம் 1945
## (THE TAMIL NADU PREVENTION OF BEGGING ACT-1945)

எந்தவிதமான வேலையையும் செய்யாமல், சோம்பேறித் தனத்துடன் பிச்சை எடுத்து அதன் மூலம் பிழைப்பதைத் தடுக்கும் சட்டம்.

**பிரிவு-3**

இச்சட்டத்தின் கீழ் யாரேனும் பொது இடங்களான சாலை, வீதி, புகை வண்டி நிலையம், பேருந்து நிலையம், பொது வாகனங்கள் ஆகியவற்றில் பிச்சை எடுத்தாலும் பிச்சை போடும்படிக் கேட்டாலும் தன் உடம்பிலுள்ள குறைபாடுகளைக் காட்டி பிச்சை எடுத்தாலும் குற்றமாகும்.

காவலர்கள் இவ்விதம் பிச்சை எடுப்பவர்களைக் கண்டால் உடனே கைது செய்து காவல் நிலைய பொறுப்பு அலுவலரிடம் தனி அறிக்கையுடன் சமர்பிக்க வேண்டும். கைது செய்யப்பட்ட நபர் 24 மணி நேரத்திற்குள் நீதிமன்ற நடுவர் முன்பு ஆஜர் செய்யப்பட வேண்டும். வேலை செய்யும் தகுதி படைத்த நபருக்கு ரூ. 50 அபராதம் அல்லது 1 மாதம் சிறையும், வேலை செய்ய தகுதியில்லாத நபருக்கு பிரிவு 10ன் படி 1 வருடத்திற்கு குறையாமலும் 3 வருடத்திற்கு மேற்படாமலும் அவரை பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களுக்கு நீதிமன்ற நடுவர் அனுப்பலாம்.

--------

# 54. தமிழ்நாடு புகைபிடித்தல் மற்றும் துப்புதல் தடை செய்திடும் சட்டம் 2002
# (THE TAMIL NADU PROHIBITION OF SMOKING AND SPITTING ACT 2002)

தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பொதுப் பணி இடங்களில் அல்லது பொதுப் பயன்பாட்டு இடங்களில் மற்றும் பொதுப் பணி வாகனங்களில் புகைப் பிடித்தலுக்கும் மற்றும் துப்புதலுக்கும் தடை செய்வதற்கு மற்றும் அவை தொடர்பான விஷயங்களை வகை செய்தவற்கான சட்டம்.

**பிரிவு 1 –** இது தமிழ்நாடு மாநிலம் முழுமைக்கும் அளாவி நிற்கும்.

**வரம்புரையாக**

**பிரிவு 2 : பொருள் வரையறைகள்**

இச்சட்டத்தில், தருவாய் வேறு பொருள் குறித்தாலன்றி

அ) ‘‘விளம்பரம்’’ எனில் ஏதேனும் அறிவிக்கை, சுற்றறிக்கை, சுவர் தாள், துண்டு வெளியீடு விளம்பரப் பரப்புகளில் காட்சிக்கு வைத்தல் அல்லது ஏதேனும் ஒலி, ஒளி, வாயு அல்லது பிற வழி வகையில் காட்சிக்கு வைப்பதன் மூலம் புகைப்பிடித்தல் அல்லது புகையிலை மெல்லுதல் நேரடியாக அல்லது மறைமுகமாக மேம்படுத்திடும் விளைபயன் கொள்வதை எனப் பொருள்படும் மற்றும் ‘‘விளம்பரம்’’ எனும் சொற்றொடர் அவ்வாறே பொருள் கொள்ளப்படும்.

ஆ) ‘‘அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரம்’’ எனில் பிரிவு 10-ன் கீழ் அதிகாரமளிக்கப் பெற்ற நபர் எனப் பொருள்படும்.

இ) ‘‘அரசு’’ எனில் மாநில அரசு எனப் பொருள்படும்.

ஈ) ‘‘பொதுப் பணியிடம் அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடம்’’ எனில் பிரிவு 3-ன் கீழ் அவ்வாறு சான்றுரைக்கப்பட்ட ஏதேனும் இடம் மற்றும் அதில் அவைக்கூடம், மருத்துவமனை கட்டடங்கள், உடல் நல நிலையங்கள், திரையரங்கம், கருத்தரங்கு அல்லது மாநாட்டுக் கூடங்கள் பொழுதுபோக்கு

மையங்கள், ஓய்வகங்கள், உணவகங்கள், வணிக அமைப்புகள், பொது அலுவலகங்கள், நீதிமன்ற கட்டிடங்கள், கல்வி நிலையங்கள், பூங்காக்கள், நூலகங்கள், விளையாட்டு பல் கட்டங்கள், பேருந்து நிலையங்கள், பேருந்து நிறுத்தங்கள், கடற்கரைகள், கடைத்தெருக்கள், உள்ளாட்சி அமைப்புகள், சட்டமுறைப்படியான அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்கள், பொது மக்கள் கடந்து செல்லும் சமய இடங்கள் உள்ளடங்கும். ஆனால் திறந்த வெளியிடம் இதில் உள்ளடங்காது.

உ) ‘‘பொதுப்பணி வாகனம்’’ எனில் 1988 ம் ஆண்டு மோட்டார் வாகன சட்டம் பிரிவு-2

கூறு (35) ல் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவாறான வாகனம் எனப் பொருள்படும்.

ஊ) ‘‘சமய இடம்’’ எனில் கோயில் தேவாலயம், மசூதி அல்லது யாதொரு பெயரிடப்பட்டு

பொது சமய வழிபாட்டு இடமாக பயன்படுத்தப்படும் இடம் எனப் பொருள்படும்.

எ) ‘‘புகை பிடித்தல்’’ எனில் புகைப்பூஞ்சுருள், சிகரெட்டு, சுருட்டு, பீடி வடிவத்தில் அல்லது வேறு வகையில் குழாய் உதவி கொண்டு அல்லது உறைத்தாள் அல்லது வேறு பிற கருவி மூலம் புகையிலை புகை பிடித்தல் எனப் பொருள்படும்.

ஏ) ‘‘துப்புதல்’’ எனில் புகையிலை, பான் மசாலா, குட்கா, வெற்றிலையுடன் ஏதேனும்

வடிவத்திலான பாக்கு அல்லது ஏதேனும் புகையிலைப் பொருட்கள் (அ) புகையிலை அடங்கிய பொருட்கள் மென்ற பின்னர் வாயிலிருந்து தன்னிச்சசையாக உமிழ்நீரை வெளியேற்றுதல் அல்லது மூக்குப் பொடி நுகர்ந்த பின்னர் மூக்கிலிருந்து சளியை வெளியேற்றுதல் எனப் பொருள்படும்.

**பிரிவு – 4 பொது பணியிடம் அல்லது பொது பயன்பாட்டிற்கான இடத்தில் புகை பிடித்தல் மற்றும் துப்புதல் தடைசெய்தல்.**

எந்த நபரும் பொதுப் பணியிடம் அல்லது பொதுப் பயன்பாட்டிற்கான இடத்தில் புகை பிடித்தல் மற்றும் துப்புதல் கூடாது.

**பிரிவு – 5 பொது பணி வாகனத்தில் புகை பிடித்தல் மற்றும் துப்புதலை தடைசெய்தல்.**

1998ம் ஆண்டு மோட்டார் வாகன சட்டத்தின் காப்புரைகளுக்கிணங்க, எந்த நபரும் பொதுப் பணி வாகனத்தில் புகை பிடித்தல் மற்றும் துப்புதல் கூடாது.

**பிரிவு – 6 புகை பிடித்தல் மற்றம் புகையிலை மெல்லுதல் விளம்பரத்திற்கு தடை.**

தற்போது செயலாற்றலிலுள்ள வேறு ஏதேனும் சட்டத்தில் அடங்கியுள்ளது எது எவ்வாறாக இருப்பினும், எந்த நபரும் ஏதேனும் பொதுப் பணியிடத்தில் (அ) பொதுப் பயன்பாட்டு இடத்தில் மற்றும் ஏதேனும் பொதுப் பணி வாகனத்தில், புகை பிடித்தல் அல்லது புகையிலை, பான் மசாலா (அ) குட்கா அல்லது வேறு ஏதேனும் புகையிலைப் பொருட்களை அல்லது வேறு பெயரினால் வகைப்படுத்தப்பட்ட புகையிலை கொண்ட பொருட்களை மெல்வதை ஊக்குவிக்கும்படியாக விளம்பரம் செய்திட அல்லது விளரம்பரம் செய்ய வைத்திடல் கூடாது.

**பிரிவு – 7 புகைப்பூஞ்சுருள்களை (சுருட்டு) சிகெரட்களை இருப்பில் வைத்தல், விற்பனை மற்றும் பகிர்மானத்திற்கு தடை செய்தல்.**

எந்த நபரும் தானாக அல்லது தன் சார்பாக வேறொரு நபர் மூலமாக, சிகரெட்டுகள், பீடிகள், சுருட்டு, புகையிலையுடன் கூடிய சுபாரி, ஜர்தா, மூக்குப் பொடி அல்லது வேறு ஏதேனும் புகை பிடித்தல் (அ) மெல்லும் பொருட்களை அல்லது புகையிலை கொண்ட பொருட்களை, ஏதேனும் கல்லூரி, பள்ளி அல்லது பிற கல்வி நிலையங்களைச் சுற்றி 100 மீட்டர் பரப்பளவிற்குள், இருப்பில் வைத்திடவோ, விற்பனை அல்லது விநியோகம் செய்திடவோ கூடாது.

**பிரிவு 8 – பலகையினை காட்சிக்கு வைத்தல்:-**

பொதுப் பணியிடம் அல்லது பொது பயன்பாட்டு இடத்திற்கான பொறுப்பில் உள்ள ஒவ்வொரு நபரும் அந்த இடத்தில் உள்ளே (அ) வெளியே பார்வைக்குரிய இடத்தில் பலகை ஒன்றில் ‘‘புகை பிடித்தல் கூடாது மற்றும் துப்புவதற்குறிய இடமல்ல’’ ‘‘புகை பிடித்தல் அல்லது துப்புதல் குற்றமாகும்’’ என தெளிவாக குறிப்பிட்டு காட்சிக்கு வைத்தல் வேண்டும்.

**பிரிவு 9 – தண்டனைகள்:-**

1. பிரிவுகள் 4, 5, (அ) 8ன் காப்புரைகளை மீறும் எந்த நபரும் ரூ.100- வரை நீட்டிக்கத்தக்க பணத் தண்டமும் மற்றும் இரண்டாவது தடவையான அல்லது பின்னிட்ட குற்றத்திற்கு குறைந்த பட்சம் ரூ.200/- ஆனால் ரூ.500/- வரை நீட்டிக்கத்தக்க பணத் தண்டனையும் விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவர்.

2. பிரிவுகள் 6 (அ) 7 ன் காப்புரைகளை மீறும் யாதொரு நபரும் ரூ.500/- வரை நீட்டிக்கத்தக்க பணத் தண்டமும் மற்றும் இரண்டாவது தடவையான அல்லது பின்னிட்ட குற்றத்திற்கு மூன்று திங்கள் (மாதம்) வரை நீட்டிக்கத்தக்க சிறைத் தண்டனை அல்லது குறைந்த பட்சம் ரூ.500/- பணத் தண்டம், ஆனால் ரூ.1000/- வரை நீட்டிக்கத்தக்க பணத் தண்டம் அல்லது இரண்டும் சேர்த்து விதித்து தண்டிக்கப் படத்தக்கவராவார்.

**பிரிவு 11 – பிரிவு 10ன் கீழ் அதிகாரம் அளிக்கப் பெற்றவர் பொது ஊழியர்:-**

பிரிவு 10ன் படி இச்சட்டத்தின் கீழ் செயல்பட அதிகாரம் அளிக்கப்பெற்ற ஒவ்வொரு நபரும், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 21ன் பொருளமைவுக்குள் பொது ஊழியராகக் கருதப்படுவார்

**பிரிவு 12 – காப்புரைகளை மீறுபவர்களை வெளியேற்றுவதற்கான அதிகாரம்:-**

இச்சட்டத்தின் ஏதேனும் காப்புரைகளை மீறும் எந்த நபரையும், அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் அல்லது சார்பு ஆய்வாளர்படி நிலைக்கு குறையாத ஏதேனும் காவல் அதிகாரி பொதுப்பணியிடங்களிலிருந்து அல்லது பொதுப் பயன்பாட்டு இடங்களிலிருந்து வெளியேற்றிடலாம். மற்றும் பொதுப்பணி வாகன ஓட்டுநர் அல்லது நடத்துனர், பொதுப்பணி வாகனங்களில் இச்சட்டத்தின் ஏதேனும் காப்புரைகளை மீறும் எந்த நபரையும் பொதுப்பணி வாகனத்திலிருந்து வெளியேற்றிடலாம்.

# 55. தமிழ்நாடு கேலிவதை தடுப்புச் சட்டம் 1997
## (THE TAMILNADU PROHIBITION OF RAGGING ACT 1997)

தமிழ்நாடு ராகிங் தடுப்புச் சட்டம் 14.02.1999 அன்று தமிழக ஆளுநரின் ஒப்புதல் பெற்றுள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள கல்வி நிலையங்களில் ராகிங் செய்வதை தடுப்பதற்காக இச்சட்டம் இயற்றப்பட்டது.

தமிழக சட்டமன்ற பேரவையினால் நாற்பத்தியெட்டாவது இந்திய குடியரசுதின ஆண்டில் இச்சட்டம் இயற்றப்படுகின்றது.

**1. சிறுதலைப்பும், அதிகார வரம்பு மற்றும் துவக்கம்.**

அ) இச்சட்டம் தமிழ்நாடு ராகிங் தடுப்புச் சட்டம் 1997 என அழைக்கப்படும்.

ஆ) இச்சட்டம் தமிழ்நாடு மாநிலம் முழுவதுக்கும் பொருந்தும்.

இ) இச்சட்டம் 19-12-1996 தேதி முதல் அமலுக்கு வந்து விட்டதாகக் கருதப்பட வேண்டும்.

**2. விளக்கம்:-**

இச்சட்டத்தின் படி ராகிங் என்பது சப்தம் உண்டாக்குவதன் மூலமும், ஒழுங்கற்ற நடத்தையினால் ஏற்படும் எந்த செயலாலும் உடலுக்கோ, மனநலத்துக்கோ கேடு விளைந்தாலோ அல்லது ஏற்படும் நிலை உண்டாக்கினாலோ அல்லது இத்தகைய செயலால் ஏற்படும் எதிர்பார்ப்பு அல்லது பயம் அல்லது கேவலம் அல்லது அதிர்ச்சி எந்த ஒரு கல்வி நிறுவன மாணவனுக்கு ஏற்பட்டாலோ அதோடு.

அ) எந்த ஒரு மாணவியையும் கேலி செய்வது, அவதூறாக பேசுவது, நடைமுறையாக சிரிப்புக் காட்டுவது அல்லது காயம் ஏற்படுத்துவது அல்லது

ஆ) ஒரு மாணவனை அவன் சாதாரண நிலையில் செய்ய விரும்பாத எந்த ஒரு செயலையோ, எந்த ஒரு காரியத்தையோ செய்யக் கோருவது.

**3. ராகிங் குற்றம் தடை செய்தல்:-**

கல்வி நிலையங்களின் உள்ளும், வெளியிலும் ராகிங் செய்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

**4. ராகிங் செய்தலுக்கான தண்டனை:-**

எந்த நபராயினும் நேரடியாக அல்லது மறைமுகமாக இக்குற்றத்தை செய்தால் அல்லது குற்றம் புரிவதில் பங்கெடுத்தால் அல்லது குற்றத்துக்கு உறுதுணையாக இருந்தால் அல்லது ராகிங் செய்வதை கல்வி நிலையத்தின் உள்ளே அல்லது வெளியே பரப்பினால் இரண்டு வருட கடுங்காவல் தண்டனையும், உடன் ரூபாய் பத்தாயிரம் வரை அபராதமும் தண்டனையாக வழங்கப்படும்

**5. மாணவன் நீக்கம்.**

இச்சட்டத்தின் பிரிவு 4-ன் கீழ் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்ட எந்த மாணவனும் கல்வி நிலையத்திலிருந்தும் நீக்கப்பட வேண்டும். அதோடு அம்மாணவனை வேறெந்த கல்வி நிலையமும் சேர்க்கக் கூடாது.

**6. தற்காலிக நீக்கம்:**

அ) இந்த சட்டம் நோக்கத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கல்வி நிலையத்தின் தலைமைக்கோ அல்லது மேலாண்மையை வகிக்கும் பொறுப்புமிக்க நபரிடமோ எந்த ஒரு மாணவன் தான் ராக்கிங் செய்யப்படதாக புகார் செய்யும் பட்சத்தில் அந்த புகார் குறித்து உடன் விசாரணை செய்ய வேண்டும். அதோடு புகார் விசாரணையில் உண்மை தெரியும் போது கல்வி நிலையத்திலிருந்து குற்றம் செய்த மாணவர் தற்காலிகமாக நீக்கம் செய்யப்பட வேண்டும்.

ஆ) உட்பிரிவு (1)-ல் குறிப்பிட்டபடி ராகிங் செய்வதில் ஒரு மாணவன் ஈடுபட்டுள்ளானா இல்லையா என்பதை முடிவு செய்யும் பொறுப்பு கல்வி நிலையத்தின் தலைமை அல்லது மேலாண்மை பொறுப்பு வகிக்கும் நபரையே சாரும். அவர்களது முடிவே இறுதியானதாகும்.

**7. உடந்தையாகக் கருதப்படுதல்:-**

இச்சட்டத்தில் பிரிவு 6 உட்பிரிவு (1) கூறப்பட்டவாறு ராகிங் செய்யப்பட்டது குறித்து புகார் செய்யப்படும் போது கல்வி நிலையத்தின் தலைவரோ அல்லது கல்வி நிலைய மேலாண்மை பொறுப்பை கவனிக்கும் நபரோ அந்த புகார் மீது

நடவடிக்கை எடுக்க தவறினாலோ அல்லது நடவடிக்கை எடுக்க மறுத்தாலோ அவ்வாறு நடவடிக்கை எடுக்க தவறும் அல்லது மறுக்கும் நபர்களும் இக்குற்றத்திற்கு உடந்தையாக இருந்தார்கள் எனக்கருதப்பட்டு பிரிவு 4 –ன் கீழ் தண்டனை வழங்கப்படுவார்கள்.

**8. விதிகள் இயற்றும் அதிகாரம்.**

அ) மாநில அரசுக்கு இந்த சட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்ட விதிகள் இயற்றும் அதிகாரம் உண்டு.

ஆ) இந்த சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள எல்லா விதிகளும் தமிழ்நாடு அரசு பதிவிதழில் வெளியிடப்பட வேண்டும். அதில் இந்த விதிகள் எந்த தேதியில் அமலுக்கு வருகின்றன என வெளிப்படையாகக் குறிப்பிடாத போது பதிவிதழில் பிரசுரமாகும் தேதியிலிருந்து அவை அமலுக்கு வருவதாகக் கொள்ள வேண்டும்.

இ) இந்த சட்டத்தின் கீழ் இயற்றப்படும் விதிகள் அவை உருவாக்கப்பட்ட உடன் எவ்வளவு விரைவில் சட்டப் பேரவை முன் தாக்கல் செய்ய முடியுமோ தாக்கல் செய்ய வேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யும் போது சட்டப் பேரவை கூட்டத் தொடர் முடியும் முன்போ அல்லது அடுத்த கூட்டத் தொடரிலோ சட்டப் பேரவை அந்த விதிகளில் ஏதாவது மாற்றம் செய்தாலோ அல்லது விதிகள் இயற்றப்படக் கூடாது என முடிவு செய்தாலோ, அதன் அடிப்படையில் மாறுதல் செய்யப்பட்ட வடிவத்திலேயோ அல்லது வேண்டாமென்று கருதி ஏற்க வேண்டும். ஆயினும் அவ்வாறு செய்யப்படும் மாற்றம் அல்லது நீக்கம் ஏற்கனவே இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட முந்தைய எந்தவொரு செயலையும் பாதிக்காது.

**9. சீர்திருத்தம் மற்றும் காப்பு:-**

அ) தமிழ்நாடு ராகிங் தடுப்பு அவசரச் சட்டம் 1996, 1996-ம் ஆண்டின் தமிழ்நாடு அவசரச் சட்டம் 10-ன் மூலம் சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

ஆ) இந்த அவசர சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எந்தவொரு செயலும், எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் இந்த சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட செயலாகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கையாகவும் கருதப்படும்.

---------

# 56. தமிழ்நாடு கேலிவதை தடுப்பு விதிகள் 1999
## (THE TAMILNADU PROHIBITION OF RAGGING RULES – 1999)

1997ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதை தடுப்பு சட்டம் பிரிவு 8ன் உட்பிரிவு (1)ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினை செயலுறுத்தி தமிழக ஆளுநர் கீழ்கண்ட விதிகளை வகுத்திடுகிறார் அவையாவன :

**விதி 1- குறுந்தலைப்பும் தொடக்கமும்:-**

1. இவ்விதிகள் 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதை தடுப்பு விதிகள் என அழைக்கப்படலாம்.
2. இவ்விதிகள் 1999 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 26-ம் தேதி முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

**விதி – 2 பொருள் வரையறை :**

இச்சட்டத்தில் தருவாய் வேறு பொருள் குறித்தாலன்றி

அ) ‘‘சட்டம்’’ என்பது 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேலிவதை தடுப்புச் சட்டம் எனப் பொருள்படும்.

ஆ) ‘‘அரசு’’ என்பது மாநில அரசு எனப் பொருள்படும்.

இ) ‘‘மேலாண்மை’’ என்பது கல்வி நிலையத்தின் தலைவர் அல்லது கல்வி நிலைய மேலாண்மை பொறுப்பில் உள்ள நபர் எனப் பொருள்படும்.

**விதி – 3. முறையீடு அளிக்கும் முறை:**

கேலிவதை நிகழ்வு நடந்த 3 நாட்களுக்குள் சட்ட பிரிவு 6ன் உட்பிரிவு 1ன் குறிப்பிடப்பட்ட முறையீட்டை மாணவர் எழுத்துமூலம் மேலாண்மையிடம் அளித்திடுவார்.

**விதி – 4 முறையீடு கிடைக்கப்பெற்ற பின்னர் நடைமுறை :**

விதி 3 ன் கீழான முறையீடு கிடைக்கப் பெற்றவுடன் மேலாண்மையானது 72 மணி நேரத்திற்குள் தானோ அல்லது கல்வி நிலையத்தின் முதுநிலை

கற்பிக்கும் பணியாளரைக் கொண்டோ விசாரணையினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். விசாரணை முடிவுற்ற பின்னர், மாணவர் கேலிவதை குற்றமிழைத்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டால் 24 மணி நேரத்திற்குள் மேலாண்மை எழுத்துமூலமான முறையீட்டில் வழக்கின் முழு வரலாற்றை விவரித்து கல்வி நிலையம் அமைந்துள்ள சரக காவல் நிலையத்திற்கு அறிவிக்க வேண்டும். காவல் நிலைய பொறுப்பு அலுவலர் அவ்வாறான முறையீடு கிடைக்கப் பெற்றவுடன் வழக்கு பதிவு செய்து சட்டத்திற்கிணங்க மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விதி–5 பல்கலைக் கழகத்திற்கு, அரசுத் துறைக்கு மற்றும் அரசினர்க்கு அறிக்கையிடுதல்:-**

விதி 4ன் கீழான விசாரணை முடிவுற்ற 24 மணி நேரத்திற்க்குள், கேலிவதை நிகழ்வு பற்றியும், காவல் துறைக்கு முறையீடு அளிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் மேலாண்மையானது கல்லூரி பல்கலைகழகத்தை சார்ந்திருப்பின் பல்கலைக் கழகத்திற்க்கும், தொடர்பான அரசு துறை தலைமைக்கும் மற்றும் அரசிற்கும் அறிக்கையிட வேண்டும்.

**விதி – 6 – காவல் அலுவலரின் கடமை:-**

சட்ட பிரிவு 4ன் கீழ் குற்ற தீர்ப்புகுற்றாக்கப்பட்ட அனைத்து வழக்குகள் பற்றியும் காவல் நிலைய பொறுப்பு அலுவலர் மேலாண்மையினர்க்கும், பல்கலை கழகத்திற்கும், அரசு துறை தலைமைக்கும் மற்றும் அரசிற்கும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

**விதி – 7 - இடைநீக்க காலத்தை மீட்டமைத்தல்:-**

கேலிவதை முறையீட்டின் பேரில் மாணவர் ஒருவர் இடைநீக்கம் செய்யப்பட்டு இறுதியாக குற்ற தீர்ப்புக்குள்ளாக்கப்படாமல் இருப்பாரேயாயின், மேலாண்மையானது இடைநீக்கத்தினை தள்ளுபடி செய்து இடைநீக்க காலத்தினை மாணவர் வகுப்பறையில் இருந்ததாக கருதப்பட வேண்டும்.

---------

# 57. தமிழ்நாடு வரம்பிகந்த வட்டி விதிப்பு தடுப்புச் சட்டம்-2003

## (THE TAMILNADU PROHIBITION OF CHARGING EXHORBITANT INTEREST ACT – 2003)

**முகவுரை:-**

எவரேனும் நபரால் வரன்முறை இல்லா வட்டி விதிக்கப்படுவதை தடை செய்வதற்கும் மற்றும் அவை தொடர்பான விஷயங்களுக்கு வகை செய்தவதற்கானதொரு அவசரச்சட்டம்.

சட்டமன்ற பேரவை அமர்வில் இல்லாத நிலையில், நிலவி வரும் சூழல்கள் காரணமாக பின்வரும் நோக்கங்களின் பொருட்டு, தமிழக ஆளுநர் உளநிறைவு கொண்டு, உடனடி நடவடிக்கை மேற்கொள்வதற்காக.

இந்திய அரசமைப்பு உறுப்பு 213 ன் கீழான கூறு (1) ன் கீழ் அளிக்கப் பெற்ற அதிகாரங்களை செயலுறுத்தி, கீழ்காணும் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**பிரிவு 1 - குறுந்தலைப்பு, பரவெல்லை, தொடக்கம்.**

1. இது தமிழ்நாடு மாநிலம் முழுமைக்கும் அளாவி நிற்கும்.
2. இது உடனடியாக செயலாற்றத்துக்கு வரும்.

**பிரிவு 2 – விளக்கவுரை:-**

இந்த அவசர சட்டத்தில் தருவாயின் தேவை வேறு பொருள் குறித்தாலன்றி.

1) **தின வட்டி** – எனில் நாள் தோறுமான வட்டி, கணக்கிடப்படுகையில், 1957 ம் ஆண்டு (த.நா.சட்டம் 26-1957) தமிழ்நாடு பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விட கூடுதலானது எனப் பொருள்படும்.

2) **கடனாளி** – என்பவர் வரம்பிகந்த வட்டிக்கு கடன் பெறும் நபர் எனப் பொருள்படும்.

3) **வரம்பிகந்த வட்டி** – என்பது தின வட்டி, மணி நேர வட்டி, கந்து வட்டி மீட்டர் வட்டி மற்றும் தண்டல் உள்ளடங்கியதாக பொருள்படும்.

4) **மணி நேர வட்டி** - எனில் மணிநேரக் கணக்கில் வட்டி, கணக்கிடப்படுகையில் 1957 ம் ஆண்டு (த.நா.சட்டம் 26-1957) பணம் கடன் பொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7 ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விட கூடுதலானது என பொருள்படும்.

5) **கந்து வட்டி** – எனில் வட்டியானது கணக்கிடப்படுகையில் 1957ம் ஆண்டு (த.நா.சட்டம் 26-1957) பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு-7-ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விட கூடுதலானது

6) **கடன்** - எனில் தின வட்டி, மணி நேர வட்டி, கந்து வட்டி, மீட்டர் வட்டி அல்லது தண்டலுக்கு கொடுக்கப்படும் பணத் தொகை எனப்பொருள்படும்.

7) **மீட்டர் வட்டி** – எனில் வட்டியானது கணக்கிடப்படுகையில் கடன் தொகை குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் கொடுக்கப்படாத ஒவ்வொரு நாளுக்கும் வட்டியானது கணக்கிடப்படுகையில் 1957 ம் ஆண்டு (த.நா.சட்டம் 26-1957) பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விட கூடுதலானது என பொருள்படும்.

8) **தண்டல் -** என்பது கடன் தொகை பகுதியுடன் வட்டியும் தினம் வசூலிக்கப்பட்டு, வட்டியானது கணக்கிடப்படுகையில் 1957 ம் ஆண்டு (த.நா.சட்டம்.26-1957) பணம் கடன் கொடுப்போர் சட்டத்தின் பிரிவு 7 ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டியை விட கூடுதலானது என பொருள்படும்.

9) இச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத சொற்கள் மற்றும் சொற்றொடர்கள், 1957ஆம் ஆண்டு தமிழ்நாடு பணம் கடன் கொடுப்போர் சட்டத்தில் அதற்கென உள்ள பொருளையே கொண்டிருக்கும்.

**பிரிவு 3 – வரம்பிகந்த வட்டி விதிப்பதை தடை செய்தல்:**

நபர் எவரேனும் அவரால் கொடுக்கப்பட்ட கடன் தொகைக்கு வரம்பிகந்த வட்டி விதிக்ககூடாது.

**பிரிவு 4 – தண்டனை:-**

1957 அம் ஆண்டு தமிழ்நாடு கடன் கொடுப்போர் சட்டத்தில் கண்டுள்ளது. எது எவ்வாறு இருப்பினும், எவரொருவர் பிரிவு 3-ன் காப்புரைகளை மீறுவாராயின் அல்லது கடன் தொகையினை வசூல் செய்திட எவரேனும் கடனாளியை தொந்தரவு அல்லது தொந்தரவு செய்திட உடந்தையாக இருப்பாராயின் 3 ஆண்டுகள் வரை ஒரு காலத்திற்கு நீட்டிக்கத்தக்க சிறை தண்டனையுடன் மற்றும் ரூ.30000 வரை நீட்டிக்கத்தக்க அபராதமும் விதித்து தண்டிக்கப்படத்தக்கவராவார்.

**பிரிவு 8 – வட்டியினை சரிகட்டல்:-**

கடன் தொகையினை வட்டியுடன் தீர்வு செய்திட வேண்டி கடனாளியால் தாக்கல் செய்யப்படும் மனுவின் பேரில் தமிழ்நாடு பணம் கடன் கொடுப்போர் சட்டம் பிரிவு 7-ன் கீழ் அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வட்டிக்கு மேல் கொடுக்கப்பட்ட தொகையினை கடன் தொகைக்கு சரிகட்ட உத்தரவு பிறப்பிக்கலாம்.

**பிரிவு 9 - தற்கொலைக்கு உடந்தை:-**

கடனாளி அல்லது அவரது குடும்ப உறுப்பினர் தற்கொலை செய்து கொண்டால் மற்றும் அவ்வாறான தற்கொலைக்கு முன்னர் கடனாளி அல்லது அவரது குடும்ப உறுப்பினர் எவரேனும் தொந்தரவு செய்யப்பட்டிருப்பின் மாறாக மெய்ப்பிக்கப்பட்டாலன்றி கடன் கொடுத்த நபர் அவ்வாறான தற்கொலைக்கு உடந்தையாக கருதப்படுவார்.